"பாரதியார் என்ற வித்திலிருந்து முளைத்தது பாரதிதாசன் என்ற செடி. அச்செடியில் தழைத்தது முடியரசன் என்ற கொடி.

புரட்சிக் கவிஞர் பரம்பரையில் புத்துலக உணர்வு படைக்கும் பகுத்தறிவுச் சிந்தனைகளை வடிப்பதில் தேர்ந்தவர் கவிஞர் முடியரசனார். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா வழியில் தன்மானச் சுடராகத் திகழ்ந்தவர். அவர் இயற்றிய கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கு ஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும். கவிஞர்களிடையே ஓர் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர் கவியரசர் முடியரசனார்."

- பேராசிரியர் க. அன்பழகன்

தமிழ்மண் பதிப்பகம்

2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

முடியரசன் படைப்புகள் - 8

கவியரசர்

# முடியரசன் படைப்புகள் - 8

## ஊன்றுகோல்
## இளம்பெருவழுதி



தமிழ்மண்

கவியரசர்

# முடியரசன் படைப்புகள்

## 8

உன்றுகோல்

இளம்பெருவழுதி

*ஆசிரியர்*

கவியரசர் **முடியரசன்**

**தமிழ்மண் பதிப்பகம்**

*சென்னை - 600 017*

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **கவியரசர் முடியரசன் படைப்புகள் - 8** |
| ஆசிரியர் | : | முடியரசன் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 2008 |
| தாள் | : | 16 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 24 + 312 = 336 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **315/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 6. |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர், சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030<br>மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in<br>இணையதளம் : www.tamilmann.in |

# தொகுப்புரை

"கவியரசர் **முடியரசன்** கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கு ஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும்" என்பார் **பேராசிரியர் அன்பழகன்**. அச்செல்வங்களை நாட்டுடைமை ஆக்கினார் தலைவர் **கலைஞர்**. அவற்றில் மூன்றில் ஒரு பங்கே எம் தந்தையார் காலத்தில் நூல்வடிவம் பெற்றன. எஞ்சிய பெரும் பகுதி பெட்டகத்துள் கட்டுண்டு கிடந்தன. அவற்றின் சிறப்புகள் அப்போது எமக்குத் தெரியவில்லை. எந்தையும் ஏதும் கூறவில்லை. அவரின் இறுதிக்காலத்தில் தான் அதை உணர்ந்த நான், அச்செல்வங்களைத் தொகுத்து வெளியிட முயற்சி மேற்கொண்டேன். எனினும் அவரின் மறைவுக்கப் பின்னரே அவற்றிற்கு நூல்வடிவம் தர எம்மால் இயன்றது. அச்செல்வங்களைத் தமிழுலகிற்கு வழங்கியதன் மூலம், மகன் தந்தைக்காற்றும் கடமையை, கவின் கலைச்செல்வியாம் தமிழ் அன்னைக்கு ஆற்றும் தொண்டினை நிறைவேற்றிய மனநிறைவும் கொண்டேன். தொடர்ந்து அப்பணியை எம் வாழ்வின் இலக்காகக் கொண்டு, ஒல்லும் வகையெல்லாம் செயலாற்றி வருகின்றேன்.

இவ்வகையில், தந்தையின் அனைத்துப் படைப்புகளையும் ஒரே நேரத்தில் முழுத் தொகுப்பாகப் பதிப்பிக்க எண்ணியிருந் தேன். இந்நிலையில், 1999-இல் முனைவர் இளவரசு வழி, மொழிக்காவலர் கோ.இளவழகன் நட்பினைப் பெற்றேன். **தமிழ்மண்** பதிப்பகத்தின் முதல் வெளியீடு முடியரசன் நூல்களே. முழுத் தொகைப்பையும் தமிழ்மண் வெளியிடும் என அப்போது அவர் கூறினார். இப்போது அது கனிந்தது. முடியரசனார் படைப்புகளை முழுமையாகத் தொகுத்துத் தருமாறு அவர் கூறியதற்கிணங்க தொகுத்துத் தந்துள்ளேன்.

முந்தையரின் அரிய தமிழ்ச்சீர்களைத் தமிழர்க்களித்து வரும் அன்னார்க்கு என் பாராட்டு; அவ்வழி எந்தையாரின் செம்மொழிச் செல்வங்களையும் வழங்கும் அவர்க்கு என் நன்றி; தமிழ் மண்ணுக்கு என் வணக்கம்.

**முடியரசன்**

> **' காணாது ஈத்த இப்பரிசிலுக்கு யான்ஓர்**
> **வாணிகப் பரிசிலன் அல்லேன்........**
>
> **.................**
>
> **முற்றிய திருவின் மூவரே ஆயினும்**
> **பெட்பின்றி ஈதல் யாம் வேண்டலமே'**

*என்னும் சங்கப் புலவர்களின் வைர வரிகளுக்குச் சான்றாகப் பெருமித வாழ்வு வாழந்தவர். சலுகை போனால் போகட்டும்; என்றன் தமிழ் வெல்லட்டும், ஆண்ட தமிழர் உயரட்டும் எனப் போராடியவர் வளையா முடியரசர்; வணங்கா முடியரசர்; தெய்வத் தமிழை வணங்கியவர். எந்தச் சபலத்துக்கும் முடிசாய்க் காத ஆண்மையாளர். இலக்கிய உலகில் சிங்கமென உலவியவர். இருபதாம் நூற்றாண்டின் கவிதையுலகில் புதுமை பூத்த மரபுக் கவிஞர்*

*அழகும், இனிமையும், புதுமையும் கொஞ்சிக் குலவும் கவிதைகள் படைத்துத் தமிழுக்குப் புதிய அணிகலன்களைச் சூட்டியவர். தமது கவிதைகள் மூலம் சமூக அநீதிகளை - மனிதரிடையே பேதங்களைக் கற்பிக்கும் ஏற்பாடுகளை - குருட்டுப் பழக்க வழக்கங்களைச் சாடியவர். மனிதநேயத்துக்கும் சமத்துவத்துக்கும் எதிரான கருத்துகளை எதிர்த்து அறிவுப்போர் நடத்தியவர். ஒப்புரவும் மனிதநேயமுமே தமிழரின் பண்பாடு என முரசறைந்தவர்.*

*தமிழை இகழ்வார் தன்னுயிர்ப் பகையாய், அல்மொழி திணிப்பார் வல்வரவெதிர்த்துத் தொடுமொழிப் போரில் தும்பை சூடிய, குடியரசோச்சும் கொள்கை கொண்ட மொழியரசோச்சிய முதல் முடியரசன். தமிழ்த் தேசியக்கவி; தமிழுலகின் அபூர்வப் படைப்பாளி; செந்தமிழ் ஊற்று; பைந்தமிழ்ப் பொழில்; திராவிட நாட்டின் வானம்பாடி; தமிழ்நாட்டின் பாடுங்குயில்;* ***அப்பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம்*** *முழுதும் தமிழே உயிர்; கவிதையே மூச்சு.*

*ஆதித்தமிழரில் சாதிகள் இல்லை; பாதியில் புகுத்திய சாதியை ஒழிக்க ஓதினார் கவிதைகள்; ஓதியவாறே ஒழித்தார் வாழ்க்கையில். வள்ளுவ நெறியை வாழ்வில் நாட்டி, பெரியார் வழியை ஒளியாய்க் காட்டி, புத்தன் புகட்டிய பகுத்தறிவூட்டி, சாதி, சமய, சாத்திரம் அறுத்து, வாக்கின்படியே வாழ்ந்து காட்டி வரலாறானவர்.*

**முடியரசன் நூல்கள்:–**

***முடியரசன் கவிதைகள்*** - *ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவரேனும் ஆள்க எனத் துஞ்சாமல், தாய்மொழியின் ஆட்சிக்கும் தமிழகத்தின் மீட்சிக்கும் பாடிய போர்ப்பரணிகள். மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது, காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளப் பாய்ச்சிய கூர்வேல்கள். கயமைகள் வீழ வீசிச் சுழற்றிய கைவாள்கள். காசுக்கும் கைம்மாறு பெறுதற்கும் மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை மறைத்துவிட்டும் கெஞ்சாத தன்மான வரிகள். தமிழ் மானம் மீட்டெடுக்கப் பாடிய படைக்கலன்கள். வீழ்ந்த தமிழர் வாழ்ந்த வரலாறு மீள விழித்தெழப் பாடிய வீரக்கனல்கள்.*

*திராவிட எழுச்சிக் காலத்தில்* ***கவியரங்கில் முடியரசன்*** *முழங்கிய கவிமுழக்கம், முத்தமிழ்த் தோழர்க்கு முரசொலி முழக்கம்; அயலார்க்கோ இடிமுழக்கம்.* ***தாய்மொழி காப்போம்*** *எனுமவர்* ***தமிழ்முழக்கம்****. வீரத் தமிழரை வீறு கொண்டெழைத்த வேங்கை முழக்கம். திராவிடத் திருவிடத்திற்கு ஒளிதந்த* ***ஞாயிறும் திங்களும்****. அரங்குகளில் ஆர்ப்பரித்த அயன்மொழிப் பாடல் களை அடக்கவந்த* ***காவியப்பாவை.*** *தமிழிலே இசையில்லை என்ற கூகைகளின் கூக்குரரை நெறிக்கக் கூவிய* ***பாடுங்குயில்****. சிந்தை உருக்கும் தெய்வத் தமிழ்ப் பாசுரங்கள். குறள்நெறி கூறிய, தமிழ் மறை போற்றிய* ***வள்ளுவர் கோட்டம், மனிதரைக் கண்டுகொண்டேன்*** *என நற்சான்றோர் போற்றிய சொற்பூ மாலை. புரட்சி வெடிக்க, புதுமை பூக்க, பொதுமை மலர, சாதி ஒழிய, சமயம் அழிய, சாத்திரம் மறைய, சமத்துவம் தழைய, உழைப்போர் உயர, ஒடுக்கப்பட்டோர் விடுதலை பெற* ***புதியதொரு விதி செய்வோம்*** *எனப் புகன்ற சிவப்புப் பிழம்புகள், குமுகாயத்தில் பண்பாடு புண்பட்டு, ஒப்புரவு கரவு பட்டு, கொடுமைகள் மலிந்து, குறைகள் நிறைந்ததை கண்டு, உள்ளம் கொதித்து* ***நெஞ்சு பொறுக்க வில்லையே*** *எனக் குமுறியும், மாந்தரிடையே கயமை, இழிமை, நேர்மையின்மை, ஒழுங்குமீறல் பரவியதையறிந்து, மனம் நொந்து,* ***மனிதனைத் தேடுகிறேன்*** *எனத் தேடி, பண்பாடு காக்க, கொடுமைகள் மாய, குறைகள் களைய, தீயவை தீய வெடித்துக் கிளம்பிய எரிமலைக் கவிதைகள்.*

*உலக மொழிகளில் தேசீயக் காப்பியங்கள் எனக் கூறத்தக்க மூன்றனுள் ஒன்று* ***பூங்கொடி*** *- மொழிக்கொரு காப்பியம், கண்ணனைய மொழிகாக்கக் கடிமணத்தைத் துறந்த ஒரு பெண்ணணங்கின் போராட்டம், மொழிப்புரட்சி வரலாறு.*

*காதல், வீரம், கையாற்றவலம், முப்பெருஞ்சுவைகளும் முகிழ்த்தெழும்; காதலும், வீரமும் கரையென நிற்க, வீரப்பேராறு வீறிட்டுப் பாயும்* ***வீரகாவியம்.***

*பண்டைத் தமிழே, தமிழர்க்கு* ***ஊன்றுகோல்*** *எனப் பண்டிதம் பாடிய பைந்தமிழ்க் காப்பியம்.*

*'உண்டாலம்ம இவ்வுலகம்' எனப் பாடிய, பழந்தமிழ்ப் பாண்டியன், போர்வாள் எறிந்த* ***இளம்பெருவழுதி*** *கடலுள் மாய்ந்த நாடகக் காப்பியம்.*

***எப்படி வளரும் தமிழ்?*** *எனச் சிந்திக்க வைக்கும் கட்டுரைகள். மாணாக்கர்களை நல்வழிப்படுத்த* ***அன்புள்ள பாண்டியனுக்கும், இளவரசனுக்கும்*** *எழுதிய கடித இலக்கியங்கள்.*

***எக்கோவின் காதல்*** *கொண்டு, இச்* ***சீர்த்திருத்தச் செம்மல்****, பார் திருத்தப் படைத்த சீர்த்திருத்தச் சிறுகதைகள்.*

*முடியரசன் படைப்புகள், படிப்போர் தம் தசைநார்களைப் புடைக்க வைக்கும்; தோள்களை நிமிர வைக்கும்; வீறு கொண்டு எழ வைக்கும்; உள்ளம் உருகி அழ வைக்கும்; பண்பாடு காக்க வைக்கும்; தமிழுணர்ச்சி ஊட்டவைக்கும்; சங்க நூல்களைச் சுவைத்தது போன்று சிந்தை இனிக்கும்.*

*தாம் எழுதுகின்ற கருத்தை உணர்ச்சியோடு உரைத்துப் பிறர் உள்ளத்திற் குடிகொள்கின்ற பெற்றியாளரே கவிஞர் என்ற இலக்கணத்திற்கேற்ப, தம்* ***நெஞ்சிற்பூத்தவை*** *எனும் கவித்துவம் திகழும் செம்மொழிச் செல்வங்களைத் துய்ப்போர் உண்மையில் பெறும்பேறு பெற்றவரே.*

***தமிழ் வெல்லட்டும்! தமிழர் உயரட்டும்!***

***தமிழ்மண் சிறக்கட்டும்!***

**முடியரசர் கவிபரப்பி முத்தமிழுலகுக்கு முடிசூட்டுவோம்!**

***- பாரி முடியரசன்.***

*முடியரசன் குடில்*
*569, சூடாமணி நகர்,*
*காரைக்குடி - 630 003.*

# பதிப்புரை

கவியரசர் முடியரசன் 1920இல் பிறந்தவர். 1998இல் மறைந்தவர். வாழ்ந்த ஆண்டுகள் 78. எழுதிய நூல்கள் 25 இந்நூல்கள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்து பொருள் வழிப் பிரித்து 13 தொகுதிகளாக **கவியரசர் முடியரசன் படைப்புகள்** எனும் தலைப்பில் ஒரே வீச்சில் வெளியிடுகிறோம். கவியரசர் முடியரசன் பாவேந்தர் பாரதிதாசன் வழிநிலை அறிஞர். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற பெருமக்களின் கொள்கையை தம் நெஞ்சில் தாங்கியவர்.

தன்னலம் கருதாது தமிழ்நலம் கருதியவர். தன்னை முன்னிறுத்தாது தமிழையும் தமிழரையும் முன்னிறுத்தியவர். இவர் எழுதிய நூல்கள் அனைத்தும் தமிழுக்கு வளமும் வலிவும் பொலிவும் சேர்ப்பன. தமிழர்களுக்குப் படைக்கருவிகளாக அரண் சேர்ப்பன.

நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் உயர்ந்த அறிவுச் செருக்கும் கொண்ட பாரதியின் பாடலுக்கு சான்றாக வாழ்ந்து காட்டியவர்.

**புதுநூற்கள் புதுக்கருத்தால்,**
**பொதுவகையால் தரவேண்டும்**
**புலவ ரெல்லாம்**

எனும் பாவேந்தர் பாரதிதாசன் வரிகளுக்கு இலக்கியமாகவும் இலக்கணமாகவும் வாழ்ந்து மறைந்தவர். இருபதாம் நூற்றாண்டில் **'பா'** உலகில் புதுமைப் பூத்த மரபுக் கவிஞர். இவர்தம் நூல்களை ஒருசேர வெளியிடுவதில் பெருமை அடைகிறோம்.

நன்றி

**கோ. இளவழகன்**

# ஏக்கம் தீர்க்க எழுந்த நூல்!

**‘ வானம்தான் பாடிற்றா?**
**வான்நிலவு பாடிற்றா?’ - என**

*வானம்பாடியின் இசைகேட்ட மகிழ்ச்சியில் கிறங்கிப் போய்க் கேட்பார் பாவேந்தர் பாரதிதாசனார்.*

*அந்த ‘வானம்பாடி’ யாகப் பாவலர் முடியரசனாரைப் பார்த்தவர் அறிஞர் அண்ணா! ‘திராவிடர் நாட்டு வானம்பாடி’ என அவர் பாவலரைப் போற்றினார்.*

*தமிழின மேம்பாட்டிற்குத் தமது எழுத்தாற்றலால் உரம் சேர்த்துப் புகழ் பெற்றவர் முடியரசனார். இலக்கிய வடிவங்கள் எல்லாவற்றிலும் மூழ்கி எழுந்த அவருக்கு, நாடகக் காப்பியம் எழுத வேண்டும் என்ற ஏக்கம் மட்டும் நிறைவேறாமல் இருந்தது. ‘இளம்பெருவழுதி’ அக் குறையைக் குறைத்தது.*

*பேராசிரியர் தமிழண்ணல் முயற்சியும் துணைவேந்தர் இராமச்சந்திரனார் உறுதுணையும் அறிஞர் வசுபமாணிக்கனார் வழிகாட்டலும் - மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற் புலத்தின் வழி பாவலர் முடியரசனார் இந்நாடகக் காப்பியத்தை உருவாக்கும் வாய்ப்பை வழங்கின. ‘இளம்பெருவழுதி’ 1985-ஆம் ஆண்டிலேயே பிறந்தபோதும், நம் கைகளில் தவழ இருபதாண்டுகளுக்கு மேல் காத்திருக்க நேர்ந்து விட்டது.*

*‘இளம்பெருவழுதி’ நாடகக் காப்பியம் எழுவதற்கு மூல காரணம், முடியரசனாரே ‘போர்வாள்’ (25.09.1948) இதழில் எழுதிய ‘ இளம்பெருவழுதி’ என்னும் சிறுகதைதான்! (அந்தக் கதையும் இந்நூலில் தனியே இணைக்கப்பட்டுள்ளது. அந்தச் சிறுகதை எழுவதற்குக் காரணமானவர் புலவர் தில்லை தா.அழகுவேலனார்.)*

*சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் 1947 முதல் ஈராண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றினார்*

முடியரசனார். (பள்ளிப் பெயர் கா.சு. துரைராசு. அதன் தமிழ் வடிவம் முடியரசன்) அப்போது உடன் பணியாற்றியவர் புலவர் தா.அழகுவேலனார். முடியரசன் இவரை அண்ணன் என்று மதிப்போடு அழைப்பார்.

வழக்கம்போல் கடற்கரை சென்று இருவரும் உரையாடிக் கொண்டு இருந்தபோது, "போரில் தோன்று இளம்பெருவழுதி கடலில் விழுந்து இறந்திருப்பானோ" என அழகுவேலனார் ஓர் ஐயத்தை எழுப்பினார்.

முடியரசனார் சிந்தனை வயப்பட்டு நின்றார். அவர் மனத்தில் மின்னியதைச் சொற்களால் அளந்து சொன்னார். "தமிழன் வீரத்தை அவ்வாறு இழிவாகக் கருதல் வேண்டா. தற்கொலையாக இருப்பின் 'கடலில் மாய்ந்த' என்றுதான் அமைந்திருக்கும். 'கடலுள் மாய்ந்த' என்றிருப்பதால் எதிர்பாராமல் நிகழ்ந்த நிகழ்ச்சியாகத்தான் இருக்கக் கூடும்".

முடியரசனார் தந்த விளக்கத்தில் அழகுவேலனார்க்கு அளவற்ற மகிழ்ச்சி! "அட! நீ சொல்வது நன்றாக இருக்கிறது. இதை வைத்து ஒரு கதை எழுது"

அவர் கூறியதற்கிணங்க எழுதிய கதைதான், போர்வாள் (25.9.1948) இதழில் வெளிவந்த 'இளம் பெருவழுதி' அதன் விரிவாக உருவெடுத்ததே 'இளம்பெருவழுதி' நாடகக் காப்பியம்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தமிழண்ணல் முயற்சியால், அங்குள்ள தமிழியற் புலத்தில் ஓர் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் 1985ஆம் ஆண்டு இந்நாடகக் காப்பியம் உருவானது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத் துறையால் பாதுகாக்கப்பட்டு வந்த இதன் கையெழுத்துப் படியை அரிதின் முயன்று பெற்று, அச்சேறும் வாய்ப்பை உருவாக்கியவர் திரு.மு.பாரி.

முடியரசனாரின் மூத்த மைந்தர் **மு.பாரி** அவர்களின் விடா முயற்சியும், தமிழ்மண் பதிப்பகம் **கோ.இளவழகனார்** அவர்களின் பேருழைப்பும், பாவலரின் அனைத்துப் படைப்புகளும் ஒருசேரக் கிடைக்கும் நல்வாய்ப்பை உருவாக்கியுள்ளன.

*தமிழக* **முதல்வர் கலைஞர்** *அவர்கள், அறிஞர் பலரின் படைப்புகளை நாட்டுடைமையாக்கி நல்ல சூழலை அறிவுலகில் மலரவைத்துள்ளார். முடியரசனார் படைப்புகள் முழுமையாகக் கிடைக்கும் சூழல் மலர்ந்ததற்கும் அவரே காரணம்!*

*தாளில் உறங்கிக் கிடந்த 'இளம்பெருவழுதி' நம் மடியில் தவழும் நல்வாய்ப்பை உருவாக்கியோர் - நம் நன்றிக்குரியோர்.*

> *"தனக்கென வாழும் தன்னலவாதிகள் எங்கும் இருக்கிறார்கள்! பிறர்க்கென வாழும் பொதுநல வாதிகள் அரிதாய் இருக்கிறார்கள்! ஆனால், அவர்கள் வாழ்வதால்தான், இவ்வுலகம் இன்னும் அழியாமல் வாழ்ந்து கொண்டுள்ளது."*

*இந்த வரிகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டவை என்றால் நம்ப முடிகிறதா? நம்ப முடியாத வியப்புடன் உலகம் தமிழர்களை மதிப்புடன் பார்க்கிறது.*

> **" உண்டா லம்மஇவ்வுலகம்...**
> **தமக்கென முயலா நோன்தாள்**
> பிறர்க்கென முயலுநர் உண்மையானே." **(புறம்)**

*இந்தப் புறநானூற்று வரிகள் தமிழினத்தின் சிந்தனை முதிர்ச்சிக்கு முகவரியாகிவிட்டன.*

*புறநானூற்றில் இப்பாடலை எழுதிய புலவன் யார்? புலவனும் அவனே, அரசனும் அவனே! பாண்டிய அரசமரபைச் சேர்ந்த இளம்பெருவழுதி எழுதியது அப்பாடல்! அவன் சிந்தனை வியப்படையச் செய்கிறது. வாழ்வோ துயரத்தைத் தூண்டுகிறது. கடலுள் மூழ்கி இறந்து போனான் அந்த அரசப் புலவன்! அதனால் வரலாறு அவனுக்குப் பெயரிட்டது 'கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி'.*

*அவனது புறநானூற்றுப் பாடல் எல்லோரையும் கவர்ந்தது போலவே முடியரசனாரையும் கவர்ந்துள்ளதில் வியப்பில்லை.*

*இளம்பெருவழுதிக்கு ஒரு நாடகக்காப்பிய மாளிகை எழுப்பி, அந்தப் புலமை வேந்தனைத் தனிவெளிச்சத்தில் அவர் நிறுத்த நினைத்ததுதான் வியப்பு! நினைத்ததை முடியரசனார் நிறைவேற்றி விட்டார்.*

'போரில்லா உலகம் வேண்டும்' என்னும் மையச் செய்தியை நோக்கி, இளம்பெருவழுதியின் வாழ்க்கை நிகழ்ச்சிப் படிகளின் வழியாக நம்மை நடத்திச் செல்கிறது இந்த நாடகக் காப்பியம்.

மனோன்மணீயம் பெசுந்தரனாருக்குப் பின் **புலவர் குழந்தை, புலவர் ஆ.பழனி, பாவலர் ச.பாலசுந்தரம்** முதலியோரால் வளப்படுத்தப்பட்ட நாடகத்தமிழுக்கு முடியரசனாரும் 'இளம்பெருவழுதி' யால் அணி சேர்த்துள்ளார்.

கிடைத்தது ஒருபாடல்தான் என்றாலும், முடியரசனார் தம் கற்பனையாற்றலால் இளம் பெருவழுதியின் முழுவாழ்வையும் நமக்குக் இந்நூலால் கிடைக்கச் செய்துவிட்டார்.

வழுதிக்குப் பெற்றோராக வலந்திரு பாண்டியன் - மாறன்மாதேவி இருவரையும் காட்டுகிறார். அறிவு புகட்டும் ஆசிரியராக கோட்புலி மறவன் வருகிறார். வழுதியின் வாழ்வில் சுரும்பார்குழலி, எழிலி எனும் இருபெண்கள் குறுக்கிடுகின்றனர். நெறிகாட்டி நிலைப்படுத்தும் அமைச்சராக வெண்டலை நாகனார் திகழ்கிறார். வஞ்சிநாட்டரசன் மலைக்கோன், கடாரத்தரசன் பெருந்திறற்சீயன் இருவரும் எதிரிகளாக நிற்கின்றனர். உடனிருந்தே சூழ்ச்சிவலை விரிக்கிறான் கணியன்நம்பி. வழியமைப்பது போல குழியமைக்க முயல்கிறான் படைத்தலைவன் வெல்போர்க் கடம்பன்.

இத்துணைத் தூண்களையும் இழுத்து நிறுத்திக் கட்டிய மாளிகைக்குள் நம்மை நடமாட வைக்கிறது 'இளம்பெருவழுதி' நாடகக் காப்பியம்!

இலக்கிய நுட்பம், காப்பிய உத்தி முதலிய ஓவியத் தூரிகைகளை ஏந்தியிருந்தாலும் - தமிழ் மேம்பாட்டுக் கருத்துணர்ச்சி சுவர் எழுப்புவதில் தான் முடியரசனார் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார்.

சமகாலச் சூழலைத் தொட்டுக் காட்டும் அவர், ஈழ உரிமைப் போர் நெருப்பும் நம் நெஞ்சில் கனலற வைத்து விடுகிறார். கருத்துச் சோலைகளைக் காட்டியபடியே கதைப்பாதை நீள்கிறது.

*சிலையாக நிற்கிறான் இளம்பெருவழுதி! அவன் வாழ்வைக் கதையாக விவரிக்கிறார் முதியவர் ஒருவர். காதால் இளைஞன் ஒருவன் கேட்டுக் கொண்டிருக்கிறான். நாமும் கண்ணால் கேட்டபடிக் கதையோடு நகருமாறு காப்பியம் அமைக்கப்பட்டிருக்கிறது.*

*நகர முடியாதபடி, ஆங்காங்கே கருத்துச் சோலைகள் குறுக்கிட்டு நம் மனத்தை மணத்தால் நிரப்புகின்றன.*

*வீரம், கல்வி இரண்டில் எது சிறந்தது? வழுதி கேட்கும் வினாவிற்கு விளக்கம் தருகிறார் அமைச்சர் நாகனார்.*

**“ ஆண்மை பெண்மை ஆயிரு தன்மையுள்
மேன்மையென் றொன்றை விளம்பல் தகுமோ?
செறிதரும் அறிவு செங்கள வலிமை
விரிநீர் வைப்பிற்கு இரண்டும் வேண்டும்.
மறுவறு கல்வி மனநலம் காக்கும்
நிறைவுறு மறமோ நீணிலம் காக்கும்.”**

**அவ்வளவு முகாமையான கல்வி பெண்களுக்கு மறுக்கப்படுவது ஏன்? வழுதியின் இந்தக் கேள்வி, முதற்கேள்வியின் நோக்கத்தை இப்போது புரியவைத்துவிடுகிறது. புரிந்து கொண்ட நாகனாரும் ஆண் பெண் சமத்துவத்தின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறார்.**

**“ மண்ணும் ஒளியும் மழையும் பொதுமை
எண்ணும் எழுத்தும் இருபாற் பொதுமை
கண்கள் இரண்டும் காண்டற் குரித்தென
ஒன்றுவிட் டொன்றை உரைப்பார் உளரோ?
செவிகள் இரண்டுள் கேட்டற் குரிய
செவியீ தென்று செப்புநர் உளரோ?”**

*சமத்துவ விளக்கைக் குமுகாயத்தின் ஒவ்வொரு துறைக்கும் உயர்த்திப் பிடித்து, வெளிச்சக் கதிர்களை விரிக்கிறது இக்காப்பியம்.*

*‘வடமொழியில் வழிபாடு செய்வதுதான் இறைவனுக்குப் பிடிக்கும்’ என்று கடவுளின் மனத்தை நகலெடுத்தவன் போல் வாதாடுகிறான் கணியன் நம்பி. தமிழ்மானம் காக்கும் ஓடும் நாகனாரிடமிருந்து கருத்துக்கணைகள் சீறிப்பாய்கின்றன.*

**“ பிறமொழி வெறுப்பன் இறைவன் என்பது**
**அறமும் அன்றே; அறிவும் அன்றே!**
**சீனர் யவனர் சிங்களர் சாவகர்**
**சோனகர் முதலோர் கோநகர் ஈண்டு**
**வாணிகம் பொருட்டா வைகினர் ஈண்டி**
**பேணி அவர்தொழூஉம் பெரும்பெயர்க் கடவுளர்**
**திருச்செவி மாந்தித் திளைப்பது எம்மொழி?**
**திருத்தகும் அம்மொழி தேவ மொழியோ?**
**எந்நாட் டுறையும் இறைவன் அவரவர்**
**அந்நாட் டம்மொழி அகமுற உவப்பர்**
**தென்னா டுடையன் தென்மொழி வெறுப்பனோ?”**

*இனஎழுச்சிப் பெருவெள்ளம் இந்நாடகம் முழுவதும் இடையிடையே குமிழியிட்டுப் பாய்கின்றன.*

*சொல்விளக்க நுட்பங்களால் சுவையேற்றுவதிலும் முடியரசனாரின் தனித்திறம் பளிச்சிடுகிறது.*

*ஒற்றுமை, ஒருமை இரண்டும் ஒன்றா? இரண்டுக்கும் உள்ள நுட்பமான வேறுபாட்டைப் பாவலர் கூறுகிறார்:*

**“ ஒன்றுடன் மற்றொன்று இணைவது ஒற்றுமை.**
**ஒன்றினுள் ஒன்று பொன்றுவது ஒருமை**
**இணைந்தும் தனித்தும் இயங்குவது ஒற்றுமை**
**அணைந்தபின் ஒன்றாய் அமைவது ஒருமை**
**அடுக்குத் தொடர்போல் அமைவது ஒற்றுமை**
**இரட்டைக் கிளவியென் நிருத்தல் ஒருமை.”**

*சொல் விளக்கச் சுவை வழங்குவதோடு, சொல்வளப் பெருக்கத்திற்கும் தமது ஆழ்ந்தகன்ற கல்விப்பரப்பால் நூல் முழுதும் வழியமைத்துள்ளார் முடியரசனார்.*

‘***உதுக்காண், அரத்தம், பொந்திகை***’ *எனப் பழந்தமிழ்ச் சொற்கள் பலவும் இந்நூலுள் உயிர்கொண்டு உலவுகின்றன.*

*கதைப்போக்கில்பாடற்போட்டி ஒன்றுவருகிறது.‘உண்டாலம்ம’ பாடலை இளம்பெருவழுதி எழுதி முதற்பரிசு பெறுவதாகக் கதையோடு புறநானூற்றைப் பொருத்திவிடுகிறார் பாவலர்.*

*இரண்டாம் பரிசு பெறும் சுரும்பார்குழலியின் பாடலாகச் சங்க இலக்கியச் சாயலில் முடியரசனார் வழங்கும் பாடல் நடைமுறை வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறது.*

“ மரக்கலம் நடுக்குற அலைக்கும் மாகடல்
புரக்கும் எனினும் பொங்குங் காலை
அழிப்பன பலவே! அகல்வான் மிசையெழில்
கொழிக்கும் பாலொளி அளிக்கும் வெண்மதி
புணர்ந்தார்க் கின்பம் புரியும் அதுதான்
தணந்தாக் குறுதுயர் தரூஉம் மறுநாள்
நல்லன யாவும் நல்லன அல்ல
ஒருகால் இனிதென உணரும் ஒன்றே
மறுநாள் துனிதரும் அறிகதில் மனனே”

*சுரும்பார் குழலியின் குரலாக முடியரசனார் தரும் இப்பாடல், பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் ‘நூறாசிரியம்’ பாடல்களோடு ஒப்பிட்டு மகிழத் தூண்டுகிறது.*

*போர்க்களக் காட்சியைப் பாவலர் விவரிக்கும் இந்நூலின் காட்சிகள், போர்வீரருள் ஒருவராய் நாமும் நிற்கும் உணர்வை ஊட்டுகின்றன:*

‘ பண்ணோடு பணியாடப்
படர்வானில் கொடியாடப்
பரியோடு வந்து பொருதேர்’

*எனத் தேர்ப்படைக் காட்சி நம்கண்முன் விரிகிறது.*

நெட்டுமதில் முற்றுகையில்
நின்றபகை கண்டவர்கள்
நெஞ்சம் அழிவார்

கட்டுமரம் இட்டகத
வைக்கடிதில் மூடியொரு
காதம் அகல்வார்.

*எனும் **யானைப்படைக் காட்சி** நமக்கே அச்சமூட்டுகிறது.*

“ முறுகுசி னத்துடன் அடிகள்பெ யர்த்தொரு
முனைமுகம் முற்றிலுமே
உறைகுரு திக்கறை படியம தர்த்தெழும்
ஒலியெழு போர்க்களமே”

*எனக் **குதிரைப் படைக் காட்சி** அவற்றின் ஓட்டத்தோடு நம்மையும் ஓடவைக்கிறது.*

‘ வீரர் நெஞ்சில் வேல்கள் பாய
மேவும் புண்ணின் வேதனை

**நேரும் புண்ணில் மெல்ல மெல்ல**
**நெய்கள் பூசி ஆற்றுவார்'**

*எனும்* ***காலாட்படைக்காட்சி****யில் வீரர் நடக்கும் ஓசை நம் காதில் கேட்கும்.*

*கடலில் அணிவகுக்கும் கப்பல் படையில் வங்கம், அம்பி, மதலை, பாறு, பஃறி, தோணி, தொள்ளை எனப் பல்வகைக் கப்பல்களும் போருக்குப் புறப்படுகின்றன.*

**" வங்கம் அம்பி மதலை என்பன**
**எங்கும் கடலலை எதிர்ந்து செல்க.**
**பாறு பஃறி தோளி தொள்ளை**
**கூறு கூறாக் கூடிச் செல்க**
**பாதை முதலாப் பாய்மரக் கலங்கள்**
**போதம் பலவும் புணையொடு புகுக"**

*போருக்குச் செல்லும் இளம்பெருவழுதி வெற்றி பெற்று விட்டான் என்ற செய்தி வருகிறது. கூடவே இன்னொரு செய்தியும் வந்து இடிபோல் நெஞ்சில் இறங்குகிறது. காற்றில் சிக்கிய கப்பல் கவிழ்ந்துவிடுகிறது. கப்பலோடு இளம்பெருவழுதியின் வாழ்வும் கடலில் மூழ்கிவிடுகிறது. உயிரிழந்தான் என்னும் செய்தியே அது!*

*ஒரே மகனைப் பறிகொடுத்ததால் துயரக்கடல் பெற்றோரைச் சூழ்ந்து கொள்கிறது.*

**" பாண்டியனார் குலக்கொழுந்தே! பாடல் சான்ற**
**பைந்தமிழின் தவக்கொழுந்தே! பண்ப னைத்தும்**
**ஈண்டியவோர் செயலகமே! எடுக்கும் போரில்**
**இணையில்லாப் புறப்பொருளே! எழிலின் தோற்றம்**
**பூண்டிருந்த நல்லுருவே! எனது நெஞ்சுள்**
**பூத்திருந்த பொன்மலரே! புலம்ப விட்டு**
**மாண்டனையோ நன்மகனே!"**

*ஆறாத் துயருடன் புலம்பும் பெற்றோரின் அழுகையொலி நம்நெஞ்சை உருக்குகிறது.*

*மகனை இழந்த துயரின் கடுமையே, மன்னன் பாண்டியனுக்குப் போரின் கொடுமையைப் புரிய வைக்கிறது.*

**' இறந்தோர் உடலில் பிறந்ததே வெற்றி.**
**பரந்தடு போரில் பிறந்ததே கொற்றம்**

**மற்றவர் அழிவில் பெற்றஇக் கொற்றமும்**
**வெற்றியும் புகழும் வேண்டுந கொல்லோ?**

*இழப்பின் துயரம், மன்னனைப் போரில்லா உலகமைக்கும் உறுதி பூணச் செய்கிறது.*

**‘ இனத்தின் ஒற்றுமை மனத்தில் கொள்க!**
**முனைப்பினை விடுக! முரணுதல் தவிர்க!**
**அழிவுகள் தொலைக! அமைதி நிலவுக!**
**பழிசெயும் போர்இனிப் பரவா தொழிக!**

*அழிவை அழிக்கத் தீர்மானிக்கும் பாண்டியன் மனம், அமைதி உலகம் அமைய வழி கூறுகிறது.*

**“ ஒருவருக் கொருவர் உதவுதல் அன்றித்**
**திறையெனக் கோடல் தீர்தல் வேண்டும்**
**உடன்பிறப்பு உணர்ச்சி ஒவ்வோர் உளத்தும்**
**இடம்பெறின் அழிபோர் எழுதல் உண்டோ?**
**மக்கள் பற்றும் மக்கள் பண்பும்**
**மிக்க மனத்தில் மேவும்நல் அமைதி.**
**அழிவெலாம் தொலைக! அமைதி நிலவுக!**
**ஒழிக போரே! ஒழிக போரே!”**

*இந்த நாடகக் காப்பியம் உணர்த்தும் செய்தியாய், போர் இல்லா உலகத்தை முடியரசனார் முன்நிறுத்துகிறார்.*

*அவரின் இலக்கிய நெஞ்சம் இளம்பெருவழுதிக்கு எழுப்பிய இந்த வரலாற்று மாளிகை, இன எழுச்சிக் கருத்து விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.*

*இந்த நாடகக் காப்பியம் வழங்கும் கருத்து வெளிச்சம், பாதையையும் கால்களையும் மறந்து விடாமல் தமிழினம் தன்னையுணர்ந்து பயணம் செய்ய வழிகாட்டுகிறது. பயணம் செய்தால் பயன் அடையலாம்.*

**-ந.கவுதமன்.**

*‘தாயகம்’ எசு.வி.எல்.நகர்*
*சூலூர், கோவை 641 402*
*23.10.2008*

# நூலாக்கத்திற்குத் துணை நின்றோர்

*நூல் கொடுத்து உதவியோர்*

மு.பாரி

*நூல் உருவாக்கம்*

*நூல் வடிவமைப்பு*
செல்வி ச. அனுராதா

*மேலட்டை வடிவமைப்பு*
செல்வி வ.மலர்

*கணினிக்கோப்பு*
மு.ந.இராமசுப்ரமணிய ராசா,
சு. நித்தியானந், செல்வி சு. ரேகா

*மெய்ப்பு*
மு. பாரி, சுப. இராமநாதன், புலவர். இராசவேலு,
கி.குணத்தொகையன், அரு.அபிராமி,

---

*உதவி*
அரங்க. குமரேசன், வே. தனசேகரன்,
இல.தர்மராசு, ரெ. விஜயகுமார்,

---

*எதிர்மம் (Negative)*
பிராசசு இந்தியா (Process India)

*அச்சு மற்றும் கட்டமைப்பு*
ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்

---

**இவர்களுக்கு எம் நன்றியும் பாராட்டும் . . .**

# வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | துரைராசு |
| பெற்றோர் | : | சுப்புராயலு - சீதாலெட்சுமி |
| பிறந்த ஊர் | : | பெரியகுளம். |
| வாழ்ந்த ஊர் | : | காரைக்குடி |
| தோற்றம் | : | 7.10.1920 - இயற்கையடைவு : 3.12.1998 |
| கல்வி | : | பிரவேசபண்டிதம், மதுரைத் தமிழ்ச் சங்கம் (1934 - 39)<br>வித்துவான், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி (1939-43) |
| பணி | : | தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை, (1947 - 49).<br>மீ.சு.உயர்நிலைப்பள்ளி, காரைக்குடி (1949 - 78) |
| திருமணம் | : | 2.2.1949 (கொள்கை வழிக் கலப்புத் திருமணம்) |
| துணைவியார் | : | கலைச்செல்வி |

| **மக்கள்:** | | **மருமக்கள்:** | | **பேரப்பிள்ளைகள்:** |
|---|---|---|---|---|
| குமுதம் | + | பாண்டியன் | = | அருள்செல்வம், திருப்பாவை |
| பாரி | + | பூங்கோதை | = | ஓவியம் |
| அன்னம் | + | சற்குணம் | = | செழியன், இனியன் |
| குமணன் | + | தேன்மொழி | = | அமுதன், யாழிசை |
| செல்வம் | + | சுசீலா | = | கலைக்கோ |
| அல்லி | + | பாண்டியன் | = | முகிலன் |

# இயற்றிய நூல்கள்

**கவிதைத் தொகுதி**

| | | |
|---|---|---|
| 1. | முடியரசன் கவிதைகள் | 1954 |
| 2. | காவியப் பாவை | 1955 |
| 3. | கவியரங்கில் முடியரசன் | 1960 |
| 4. | பாடுங்குயில் | 1983 |
| 5. | நெஞ்சு பொறுக்கவில்லையே | 1985 |
| 6. | மனிதனைத் தேடுகின்றேன் | 1986 |
| 7. | தமிழ் முழக்கம் | 1999 |
| 8. | நெஞ்சிற் பூத்தவை | 1999 |
| 9. | ஞாயிறும் திங்களும் | 1999 |
| 10. | வள்ளுவர் கோட்டம் | 1999 |
| 11. | புதியதொரு விதி செய்வோம் | 1999 |
| 12. | தாய்மொழி காப்போம் | 2000 |
| 13. | மனிதரைக் கண்டு கொண்டேன் | 2005 |

**காப்பியம்**

| | | |
|---|---|---|
| 14. | பூங்கொடி | 1964 |
| 15. | வீரகாவியம் | 1970 |
| 16. | ஊன்றுகோல் | 1983 |
| 17. | இளம்பெருவழுதி (நாடகம்) | 2008 |

**சிறுகதைத் தொகுப்பு**

| | | |
|---|---|---|
| 18. | எக்கோவின் காதல் | 1999 |

**கடித இலக்கியம்**

*19. அன்புள்ள பாண்டியனுக்கு* *1999*

*20. அன்புள்ள இளவரசனுக்கு* *1999*

**கட்டுரைத் தொகுப்பு**

*21. தமிழ் இலக்கணம்* *1967*

*22 பாடுங் குயில்கள்* *1975*

*23. சீர்த்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார்* *1990*

*24. எப்படி வளரும் தமிழ்?* *2001*

*25. பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் (தன்வரலாறு)* *2008*

# பொருளடக்கம்

தொகுப்புரை ........................................................ iii
பதிப்புரை ............................................................ vii
வாழ்க்கைக்குறிப்பு ................................................ ix
இயற்றிய நூல்கள் .................................................... x

## ஊன்று கோல்

பண்டிதமணி வரலாற்றுக் குறிப்பு .............................. 3
விழாப் பதிப்புரை .................................................... 4
முதுபெரும்புலவர் செம்மல் அறிஞர் .......................... 5
வ.சுப.மாணிக்கம் பாடிய சிறப்புப் பாயிரம் ................. 5
முன்னுரை ............................................................ 6
காப்பியச் செய்யுள்கள்-அடிவரையறை ........................ 9
தமிழ்க் கதிர் ......................................................... 11
'தமிழண்ணல்' ...................................................... 11
காப்பியப் பண்புகள் மிளிரும் கலைச்செல்வம் ............ 12
ஊன்றுகோல் ........................................................ 13
காப்பியத் தொடக்கம் ............................................ 17
காப்பியநலன் ...................................................... 18
காப்பிய நாயகர் பண்பு நலன்கள் .............................. 22
நகரத்தார் மரபு ..................................................... 23
படைப்பாளி இடம்பெறும் பாங்கு ............................ 27
கவிஞரைப்பற்றி .................................................... 30

தமிழ்வாழ்த்து ........ 36
1 கதிரெழு காதை ........ 37
2 கலைபயில் காதை ........ 43
3 சபைகாண் காதை ........ 54
4 மணம் புணர் காதை ........ 63
5 நெறியுணர் காதை ........ 70
6 மயக்குறாக் காதை ........ 74
7 வழக்காடு காதை ........ 83
8 சொல்வல்ல காதை ........ 88
9 நட்புவளர் காதை ........ 101
10 பேராசிரியக் காதை ........ 111
11 பொதுப்பணிபுரி காதை ........ 118
12 விருதுபெறு காதை ........ 125
13 நூல்தரு காதை ........ 128
14 மணிவிழாக் காதை ........ 135
15 பிணியுறு காதை ........ 139
16 கதிர்மறை காதை ........ 144
17 சிலைகாண் காதை ........ 151

## இளம்பெருவழுதி

முன்னுரை ........ 173
தமிழ் வாழ்த்து ........ 175
கதைச் சுருக்கம் ........ 176
நாடகமாந்தர் ........ 179
இளம்பெருவழுதி ........ 180

# ஊன்று கோல்

# ஊன்று கோல்

# பண்டிதமணி வரலாற்றுக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பிறப்பிடம் | : | மகிபாலன்பட்டி, சிவகங்கை மாவட்டம் |
| பிறந்தநாள் | : | 16-10-1881 விசு புரட்டாசி 22 - வெள்ளி |
| பெற்றோர் | : | முத்துக்கருப்பன் செட்டியார்; சிவப்பி ஆச்சி |
| திருமணம் | : | 1912 |
| மனைவி | : | மீனாட்சி, மக்கள் : ஆண் 5 பெண் 2 |
| கல்வி | : | அரசஞ் சண்முகனாரிடம் தமிழ்கற்றார்<br>தருவை நாராயண சாத்திரியாரிடம்<br>வடமொழி கற்றார்<br>காரைக்குடி சொக்கலிங்க ஐயாவிடம்<br>சமயவறிவு பெற்றார். |
| பணி | : | சன்மார்க்க சபைத் தோற்றம் 1909<br>ஈழச் செலவு 1933<br>அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர்<br>பணி 1934 -46<br>மணிவிழா 1941<br>வள்ளல் அண்ணாமலையரசர் தலைமை |
| பட்டங்கள் | : | பண்டிதமணி 1925 சன்மார்க்க சபை<br>வழங்கியது. மகாமகோபாத்தியாய<br>1942 நடுவணரசு சைவசித்தாந்த வித்தகர்.<br>முதுபெரும்புலவர் 1951<br>குன்றக்குடி ஆதீனம் |
| விடுபெற்ற நாள் | : | 24-10-1953 வயது 73 விசய ஐப்பசி 8ம் நாள் |

# விழாப் பதிப்புரை

பண்டிதமணியின் வாழ்க்கை வரலாறு வித்துவான் விசு.திருநாவுக்கரசு, உலகஞ்சுற்றிய தமிழர் சோமலெ, புலவர் சோமசுந்தரனார் முதலிய பெருமக்களால் சுவையாக உரைநடையில் எழுதப் பட்டுள்ளது.இவ்வரலாறு தனிக்கட்டுரை களாகவும் பலரால் வரையப்பட்டுள. ஒரு காப்பியத்துக்கு வேண்டிய கூறுகள் இவ்வாழ்க்கை வரலாற்றில் மிளிர்ந்து கிடப்பதை எளிதில் உணரலாம். செய்யுட் சோலைகளில் திளைத்துக் குளிர்ந்து இலக்கிய நயங்கண்ட பண்டிதமணியார் வரலாறு செய்யுளுருப் பெறுவதே சிறப்பாம் என எனக்குத் தோன்றியது. புலவனைப் பொருளாகக் கொண்ட தமிழ்க்காப்பியம் இதுவரை தோன்றிய தில்லை. பண்டிதமணி வரலாறு காப்பியமாகு மேல், பல தமிழுணர்ச்சிக்கும் புதிய தமிழ் வளர்ச்சிக்கும் உரங்கிடைக்கும் என்றும் எண்ணினேன்.

**கவியரசுப்** புகழ் பெற்ற **முடியரசன்** என் மனக்கண் முன்னே தோன்றினார். பண்டிதமணி தோற்றி வளர்த்த சபையிற் புலமை பெற்ற மாணவர்; காப்பிய நாயகனை நேரிற் கண்டும் கேட்டும் தொழுதவர்; தமிழின் புறந்தொழாத் தன்மானக் கவிஞர்; காப்பியம் பாடிப் பழுத்த முதுபுலவர். அத்தகு கவியரசை வேண்டினேன். தமிழன்னைக்கு ஊன்றுகோல் வடித்துத் தந்தார். ‘இழுக்கலுடையுழி ஊற்றுக்கோல்’ என்ற பொய்யா மொழிக்கேற்ப, இன்று தமிழ்படும் பாட்டில் வல்லிய ஊன்றுகோல் ஒருவந்தம் வேண்டும். நாடெங்கும்சென்று தமிழ் நயம் பரப்பிய பண்டிதமணியை எழுபதாண்டுகள் தாங்கிய ஊன்றுகோல் என்றால், அதன் நேர்மையும் திண்மையும் ஒண்மையும் சொல்லுந்தரமோ? ஆம் உரைநடையிற் சொல்லுந்தரமில்லை, கவி நடையில் வெல்லுந் தரமுண்டு என்று காப்பியம் பாடுகின்றார் கவியரசு. சில்லறையாகக் கவிபாடும் இன்றைய இளங்கவிஞர்கட்கு இவ்வாழ்க்கைக் காப்பியம் புதிய கவிமுனை காட்டும் என்று நம்புகின்றேன்.

வ.சுப. மாணிக்கம்

கதிரகம், காரைக்குடி

17.7.1983

# முதுபெரும்புலவர் செம்மல் அறிஞர்

## வ.சுப.மாணிக்கம் பாடிய சிறப்புப் பாயிரம்

ஊன்றுகோல் என்னும் ஒண்கதிர்க் காப்பியம்
சான்றுநூ லாகச் சடுதியிற் பாடினன்
பாடப் பிறந்த பழஞ்சபை மாணவன்
மூடப் பழக்கஞ் சாடிய பாவலன்
தூண்டுகை போலும் தொடர்பின் எனது
வேண்டுகை ஏற்று விருந்தியம் படைத்தனன்;

இலக்கியம் நிலமா இலக்கணம் அரணாக்
கவிதை கோலாக் கற்பனை கொடியா
வெல்க தமிழெனும் விறற்கொடி பொறியா
யாப்புப் படையா நல்லணி துணையாப்
புரட்சி முரசாப் புதுமை துடியாத்
தமிழை இகழ்வார் தன்னுயிர்ப் பகையா
அல்மொழி திணிப்பார் வல்வர வெதிர்த்துத்
தொடுமொழிப் போரில் தும்பை சூடியோன்
மொழியர சோச்சும் முதல்முடி யரசன்
குடியரசு போற்றுங் கொள்கை யோனே

*__ஊன்றுகோல்__ என்னும் ஒண்கதிர்க் காப்பியம் சான்று நூலாகச் சடுரிதயிற் பாடினன் பாடப் பிறந்த பழஞ்சபை மாணவன் மூடப் பழக்கஞ் சாடிய பாவலன் தூண்டுகை போலும் விருந்தியம் படைத்தனர்;*

*இலக்கிய நிலமா இலக்கணம் அரணாக் கவிதை கோலாக் கற்பனை கொடியா வெல்க தமிழெனும் விறந்கொடி பொறியாத யாப்புப் படையா நல்ணி துணையாப் புரட்சி முரசா புதுமை துடியாத் தமிழை இகழ்வார் தன்னுயிர்ப் பகையா அல்மொழி திணிப்பார் வல்வர வெதிர்த்துத் தொடுமொழிப் போரில் தும்பை சூடியோன் மொழியர சோச்சும் முதல் __முடியரசன்__ குடியரசு போற்றுங் கொள்கை யோனே.*

கதிரகம். காரைக்குடி
17-7-1983

வ.சுப.மாணிக்கம்

# முன்னுரை

வலம்புரியில் நண்பர் ஒருவர் இல்லத்தில் நடைபெற்ற திருமணத்திற்கு யான் சென்றிருந்த காலை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர்.வ.சுப. மாணிக்கனாருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அவ்வமயம் அவர் 'நம் பண்டித மணியவர்களின் நூற்றாண்டு விழா வருகிறது. அவர்தம் வரலாற்றைக் காப்பியமாக்கித் தருக' என என்பாற் கூறினர். யான், முதலில் இசைந்தேனல்லேன். பண்டிதமணியவர்கள் தலைசிறந்த தமிழ்ச் சான்றோர் மட்டுமல்லர்; சிவநெறிச் செல்வருங்கூட. ஆதலின் அவர்தம் வரலாற்றை நம்மால் எழுத இயலுமா? என்ற ஐயவினா என்னுள் எழுந்ததே அதற்குக் காரணம்.

குறிப்பிற் குறிப்புணர வல்லராய மாணிக்கனார் என் தயக்கத்தை உணர்ந்தவராய் 'இதனைக் கருவியாக் கொண்டு மீண்டும் நம் மக்களுக்குத் தமிழுணர்வை யூட்டலாமன்றோ?' என வழி மொழிந்தார். தமிழ் என்றவுடன் தலை வணங்கும் இயல்பினனாகிய யானும் இசைந்தேனாகினும் கண் தொல்லையால் எழுத இயலாத நிலையையும் சுட்டிக் காட்டினேன். என் நிலைமையை நன்குணர்ந்த அவர் அனைத்து வகையானும் உதவத் தாம் ஏற்பாடு செய்வதாக மறுமொழி தந்தனர்.

பண்டிதமணியவர்களின் திருவுளப் பாங்கால், மேலைச் சிவபுரி, வ.பழ.சா.குடும்பத்தாரின் துணையுடன் உருவாக்கப்பட்ட சன்மார்க்க சபையில், பள்ளிக்கல்வியும் தமிழ்க் கல்வியும் பயின்றவன் யான். அந்நாளில் அடிக்கடி பண்டிதமணியவர்கள் சபைக்கு வருகை தருவார்கள். அப்பொழுதெல்லாம் யானும் என் உடன் பயின்றாரும் அப்புலவர் மணிக்கு அனைத்துப் பணிவிடைகளும் செய்யும் பேறு பெற்றுள்ளோம். மேலும் சபை ஆண்டு விழாவிற்காக எழுந்தருளிய விபுலாநந்த அடிகள், கரந்தைக் கவியரசு, ரா.பி.சேதுப்பிள்ளை,

தெ.பொ.மீ, இரா.இராகவய்யங்கார் போன்ற பெருமக்களுக் கெல்லாம் தொண்டு செய்து மகிழ்ந்ததை இன்று நினைப்பினும் மெய்சிலிர்க்கிறது.

பண்டிதமணியவர்கள், சபையில் வந்து தங்கியிருக்கும் பொழுது, பெருமக்கள் புடை சூழப் பெரிய விரிப்பில் சாய்ந்து அமர்ந்திருப்பார்கள். அவர்களைச் சுற்றி நாங்கள் நின்ற வண்ணம் இருப்போம். அப்பொழுது அவர்கள், எங்கெங்கு எவ்வெந் நிகழ்ச்சிகள் நடந்தனவோ அவ்வந் நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்றுவிடாது சொல்லிச் சொல்லி மகிழ்வார்கள். நகைச்சுவை ததும்ப, மலர்ந்த முகத்துடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது இடையிடையே எம்மையும் பார்த்துக் கொள்வார்கள். அப்பார்வை 'நீங்களும் இவற்றை மனத்திற்கொளல் வேண்டும்' என அறிவுறுத்து மாபோ லிருக்கும். ஆம், நாங்களும் நன்கு பதிய வைத்துக் கொண்டோம் என்பது போல முறுவலிப்போம்.

அந்நாநலம் படைத்த செம்மல், சபை விழாக்களில் நிகழ்த்திய ஒவ்வொரு சொற்பொழிவையும் ஊன்றிக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். ஆன்றோர் வாய்ச் சொற்களைக் கேட்பது அப்பருவத்திலேயே எனக்குப் பேரின்பமாக இருந்தது.யான் தமிழிற் பெரும்புலமை பெற்றிலே னெனினும் தளராத தமிழ்ப்பற்றாளனாக இன்றும் இருந்து வருகிறேன் என்றால், அஃது அக்கேள்விப் பயனேயாம். அப்புலவர் மணிக்குத் தொண்டு செய்தும் அவர்தம் சொன் மழையில் தோய்ந்து தோய்ந்து இன்பங் கண்டும் யான் அறிந்து கொண்ட செய்திகளை அடிப்படையாக வைத்தே இதனை எழுதப் புகுந்தேன். கண்ணிற் படலம் படர்ந்து பார்வை குறைந்துள்ளமை யால் அவர்தம் நூல்களை இன்று படித்தறிய இயலவில்லை. யான் அறிந்த செய்திகள் சில; கிடைத்த செய்திகளும் சில, அறியாத வையும் கிடைக்காதவையும் பல.ஆதலிள் இது முழுமை பெற்ற நூலெனக் கோடல் பொருத்தமின்று.

எழுதுங்கால் யான்பட்டபாடு எழுதுதற்கரியது.படலம் படர்ந்துள்ளமையான் ஒருகண் அறவே தெரியாது. மற்றொன்றும் அரைப்பார்வை.அதுவும் மங்கிய பார்வை. ஒருகண்ணை மூடி, மற்றொன்றைச் சற்றே திறந்து பூதக் கண்ணாடியின் துணையால் ஒவ்வோரெழுத்தாக எழுதுவேன். சிலவரிகள் எழுதியதும் மங்கி

விடும். இடக்கை விரல்களைச் சுருட்டி வைத்து அவ்விடை வெளியில் பார்த்து எழுதுவேன். பின்னர் அதுவும் மங்கும்; வேதனை யுடன் நிறுத்திவிட்டு, இடைவேளைகொடுத்துப் பின்னர் எழுதுவேன். இக்கவியுலக ஆட்சி இரவுநேரத்திலேதான் நடைபெறும்; இரவு ஒரு மணியிலிருந்து மூன்று மணிவரை. சிலநாளிற் பகலிலும் செங்கோல் செலுத்துவ துண்டு. பகலை இரவாக்கிக் கொள்ள அப்போது கதவுகள் சாத்தப்பட்டிருக்கும். பண்டிதமணிபற்றி உலகஞ் சுற்றிய தமிழர் திரு.சோம. லெ. எழுதிய நூலும் பெருமழைப்புலவர் திரு. சோமசுந்தரனார் எழுதிய நூலும் என்னாட்சிக்குச் செங்கோலும் வெண்கொற்றக் குடையுமாய் விளங்கின. வித்துவான் திரு வி.சு. திருநாவுக்கரசு எழுதிய நூல் அமைச்சராக நின்று உதவிற்று. அற்றை நாளில் மகிபாலன்பட்டிக்குச் செல்வோர் வழியிடை எத்துணைப் படருழந்தனரோ அத்துணைப் படர் யானும் அடைந்தேன் எனினும் குறிக்கோளை நோக்கியே நடந்தேன். எப்படியோ என் தாய்க்கு ஓர் அணிகலன் செய்துமுடித்தேன் என்ற பெருமிதவுணர் வால் படர் மறந்து தளர்வுதுறந்து நிமிர்ந்து நிற்கின்றேன்.

இந்நூற் பாடல்களுள் உணர்ச்சிப் பெருக்கால் உந்தி வந்தன சில; கண்தொல்லையாற் பிந்தி வந்தன சில; உடற்றளர்வாலும் புறச் சூழலாலும் இடர்ப்பட்டு இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தியன சில; கனவிற் பிறந்தனவுஞ் சில. நயங்கூறும் நாயகன் வரலாறாதலின் ஆங்காங்கே நயங்களின் சாயல் விரவிக் கிடக்கும்; தொனிப் பொருளும் தோன்றக் கூடும். பயில்வோர் பார்வைக்கு அவை தென்படுமேல், பார்த்துப் படித்துப் படித்துச் சுவைத்து மகிழ்க.

இந்நூலுக்கு "ஊன்றுகோல்" எனப் பெயருந்தந்து தாமே மனமுவந்து சிறப்புப் பாயிரமும் அளித்துப் பெருமை தந்த துணை வேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் அவர்களின் தமிழ் நெஞ்சத்தை நன்றிப் பெருக்குடன் நினைந்து நினைந்து மகிழ்கின்றேன். தமது நுண்மாண் நுழைபுலங்கொண்டு அணிந்துரை நல்கிய அறிஞர் தமிழண்ணலைப் போற்றி மகிழ்கின்றேன்.

அன்பன்
முடியரசன்

## காப்பியச் செய்யுள்கள்-அடிவரையறை

| | | | |
|---|---|---|---|
| 1.கதிரெழு காதை | : | அறுசீர்விருத்தம் 22க்கு அடிகள் | 88 |
| 2.கலைபயில் காதை | : | அறுசீர் விருத்தம்41க்குஅடிகள் | 164 |
| 3.சபைகாண் காதை | : | எழுசீர் விருத்தம் 18க்குஅடிகள் | 72 |
| | | என்சீர்விருத்தம் 17க்குஅடிகள் | 68 |
| 4.மணம்புணர்காதை | : | அறுசீர் விருத்தம் 16க்குஅடிகள் | 64 |
| | | அறுசீர்விருத்தம் (வேறு) 1 க்குஅடிகள் | 4 |
| | | எண்சீர்விருத்தம் 2 க்குஅடிகள் | 8 |
| | | அறுசீர்விருத்தம் 5க்குஅடிகள் | 20 |
| | | அறுசீர்விருத்தம் (வேறு)1க்கு அடிகள் | 4 |
| 5.நெறியுணர்காதை | : | எண்சீர்விருத்தம் 14க்குஅடிகள் | 56 |
| 6.மயக்குறாக் காதை | : | நிலைமண்டில ஆசிரியப்பா அடிகள் | 285 |
| 7.வழக்காடு காதை | : | அறுசீர் விருத்தம் 5க்குஅடிகள் | 20 |
| | | அறுசீர் விருத்தம் (வேறு) 12க்குஅடிகள் | 48 |
| 8.சொல்வல்லகாதை | ; | எண்சீர் விருத்தம் 31க்கு அடிகள்; | 124 |
| | | நிலைமண்டில ஆசிரியப்பாஅடிகள் | 143 |
| 9.நட்புவளர்காதை | : | எண்சீர் விருத்தம் 5க்குஅடிகள் | 20 |
| | | நிலைமண்டில ஆசிரியப்பாஅடிகள் | 56 |
| | | எண்சீர் விருத்தம் 25க்குஅடிகள் | 100 |
| 10. பேராசிரியக்காதை | : | எண்சீர் விருத்தம் 20க்கு அடிகள் | 80 |
| | | அறுசீர் விருத்தம் 6க்குஅடிகள் | 24 |
| 11. பொதுப்பணிபுரிகாதை | : | எண்சீர் விருத்தம் 17க்குஅடிகள் | 68 |
| | | கட்டளைக்கலித்துறை 4க்குஅடிகள் | 16 |
| | | அறுசீர் விருத்தம் 1க்குஅடிகள் | 4 |
| | | கலிவெண்பாஅடிகள் | 28 |
| 12.விருது பெறுகாதை | : | நிலைமண்டில ஆசிரியப்பாஅடிகள் | 71 |
| 13. நூல்தருகாதை | : | நேரிசை ஆசிரியப்பாஅடிகள் | 115 |

| | | | |
|---|---|---|---|
| | | எண்சீர் விருத்தம் 1க்குஅடிகள் | 4 |
| | | அறுசீர் விருத்தம் 1க்கு அடிகள் | 4 |
| | | எண்சீர் விருத்தம் 3க்குஅடிகள் | 12 |
| | | நிலைமண்டில ஆசிரியப்பாஅடிகள் | 8 |
| | | அறுசீர் விருத்தம் 4க்கு அடிகள் | 16 |
| 14. மணிவிழாக்காதை | : | அறுசீர் விருத்தம் 12க்குஅடிகள் | 48 |
| | | நிலைமண்டில ஆசிரியப்பாஅடிகள் | 19 |
| 15. பிணியுறு காதை | : | எண்சீர் விருத்தம் 16க்கு அடிகள் | 64 |
| 16. கதிர்மறை காதை | : | நேரிசை ஆசிரியப்பா அடிகள் | 46 |
| | | அறுசீர் விருத்தம் 2க்குஅடிகள் | 8 |
| | | எண்சீர் விருத்தம் 1க்குஅடிகள் | 4 |
| | | அறுசீர் விருத்தம் 1க்குஅடிகள் | 4 |
| | | கொச்சகக் கலிப்பா 4க்குஅடிகள் | 16 |
| | | அறுசீர் விருத்தம்7க்குஅடிகள் | 28 |
| | | எணிசீர் விருத்தம் 2க்குஅடிகள் | 8 |
| 17. சிலைகாண் காதை | : | எண்சீர் விருத்தம் 6க்குஅடிகள் | 24 |
| | | அறுசீர் விருத்தம் 11க்குஅடிகள் | 44 |

# தமிழ்க் கதிர்

**‘தமிழுண்ணல்’**

**டாக்டர் இராம. பெரியகருப்பன்,**

தமிழியல் துறைத் தலைவர்,மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

தமிழ் மொழியை ஐயந்திரிபறக் கற்று, நல்லாசிரியராய் விளங்கி, செழுந்தமிழின் சுவைதேரும் பாவலராய்ச் சான்றோராய் விளங்கி வருபவர் *கவியரசு முடியரசர்.* ‘பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட’ எண்ணும் இம் முடியரசர் ‘நமக்குத் தொழில் கவிதை, நற்றமிழ்க்கு ஆக்கம் தேடுதல்’ என வாழ்ந்து வருபவர். தமிழ்நலம் கருதித் தன்னலம் விடுத்தவர்.சிந்துபாடும் சிற்றாறு போலும் செந்தமிழ் நடை வல்லவர். தமிழ்த்தாய்க்கு வாய்த்த, மறந்தும் புறந்தொழாத ஆழ்வார்; பாமலர்கள் கொண்டு நாளும் அவளை அருச்சிக்கும் நாயன்மார்; தமிழ்ப்பிழை செய்வாரை மனமுருக வைத்துத் தினமவரைத் திருத்தும் மணிவாசகர். கண்ணொளி மங்கினும் தமிழ் நலத்தைக் கூர்ந்து கண்டு,காட்டத் தளராதவர். தலைமுடி நரைப்பினும், தமிழைப் பாடும்போது இளமை பெற்று மீசையை முறுக்கும் தமிழ் மறவர்.தமிழாசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். ஆயினும் தமிழ்த்தாயைப் பாடும் பணியில் ஓய்வு காணாதவர்.

பண்டிதமணி மகாமகோபாத்தியாய மு.கதிரேசனாரின் வாழ்க்கை வரலாற்றைக் காப்பியமாகப் புனைய, இவரினும் பொருத்தமானவர் வேறு எவருமிலர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வ.சுப மாணிக்கம் அவர்கள். பண்டிதமணி நூற்றாண்டு விழா நினைவாகப் பண்டித மணியைப் பற்றிப் பல் படைப்பு இலக்கியங்களையும் திறனாய்வு களையும் தக்கார் பலரைக் கொண்டு எழுத வைத்தனர். அம் முயற்சியுள் முடியரசனார்க்குக் காப்பியப் பணியை ஒப்படைத்த தொன்றே இவர் தம் ஒப்பரும் திறமைக்குச் சான்றாகும் எனலாம்.

## காப்பியப் பண்புகள் மிளிரும் கலைச்செல்வம்

பெருங் காப்பியப் பண்புகள் பல நிறைந்த சிறு காப்பியம் இது. கதிரெழுகாதை முதலாகச் சிலைகாண் காதை ஈறாகப் பதினேழு காதைகளை உடையது. அறுசீர்,எழுசீர், எண்சீர் விருத்தங் களையும், கட்டளைக்கலித்துறை, கொச்சகக் கலியினையும்கொண்டு, இடையிடை மிடைந்த நிலைமண்டில நேரிசையாசிரியங் களுடன் யாக்கப் பெற்றது.

வாழ்க்கை வரலாற்றைப் புனைவுமிகுதியின்றி அவ்வாறே காப்பியமாக எழுத முடியும் என்பதற்கு இஃது ஒரு தக்க சான்றாகத் திகழ்கிறது. சோமலெ எழுதிய பண்டிதமணி என்ற நூல், இதற்குரிய பல கருத்துகளை நல்கியுள்ளது. எனினும் ஆசிரியர் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் படித்துப் பண்டிதமணியை அறிந்தவர் என்பதனால், தாமறிந்த பல செய்திகளையும் இதில் இணைத்துப் பாடியுள்ளார். பொதுவாகக் காப்பியங்களில் மிகைப் புனைவு களையும் புராணப் போக்கினையும் நம்பவியலாக் கூறுகளையும் இணைத்துப் பாடுதல் அதன் இலக்கணமென்பர். இதில் அக் கூறுகட்கிடமில்லை. எனவே, செம்பாதிக்குமேல் படித்துக்கொண்டே செல்லும் பொழுது. உரைநடை வரலாறொன்றுக்குக் கொடுக்கப் பட்ட செய்யுள் வடிவமோ என்ற நினைவு எழுகிறது. எனினும் நடையோட்டமும் கருத்துச்செறிவும் தடைபடாக் குருதியோட்டம் போல் காப்பியத்தை உயிர்ப்புடையதாக்குகிறது. கவிஞர் பிழையற்ற முறையில், யாப்பு வடிவத்துடன் பாப் புனையவேண்டும்; தமிழைப் பிறமொழிகட்காகப் புறக்கணித்துவிடக்கூடாது; சொற்பொழிவு, எழுத்துப் போன்ற துறைகளில் ஈடுபடுவோர் முதற்கண் நல்ல தமிழ்ப் புலமையுடையராதல் வேண்டும்; கடவுளின் திருமுன்னர்த் தமிழ் வழிபாடே தழைக்க வேண்டும்; எங்கும் எதிலும் தமிழுக்கு முதன்மை நல்க வேண்டும் என்றினைய கோட்பாடுகளில் நெஞ்சார்ந்த உறுதியுடையவர். மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் பல்லாண்டுகள் பயின்றதால் காப்பிய வரலாறு பற்றிய சொந்த அனுபவமுடையவர். இவையனைத்தும் இக் காப்பியத்து விரவிக் கிடந்து, மணமூட்டக் காணலாம். வருணனை, உவமை, பல்வகைச்சுவை, உட்பொருள் எனக் காப்பிய நலன்கள் பொதுளிய கலைப்பெட்டகமாகவும் இந்நூல் திகழ்கிறது.

## ஊன்றுகோல்

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல் (415)

என்பது திருக்குறள். 'ஊன்றுகோல்' ஊற்றுக் கோலாக வலித்தமை அஃது உறுதிப்பாட்டோடும் திண்ணிதாகவும் இருத்தல் வேண்டும் என்பதையும் நினைப்பூட்டுகிறது. பண்டிதமணி கையகத்தே எப்பொழுதும் விளங்கி, அன்னாரது இயக்கத்திற்குத் துணைநின்ற அரிய ஊன்றுகோலினையே காப்பியப் பெயராகக் கொண்டமை இதற்கொரு தனிச் சிறப்பாகும். 'ஊன்றுகோல் போல உதவுதலாவது தளர்ந்துழி அதனை நீக்குதல்' எனப் பரிமேலழகர் விளக்குவார். தமிழுக்குத் தளர்வு வராது எழுத்து, பேச்சுச் செம்மைகளை வற்புறுத்தி அம் மொழிவளர்ச்சிக்கு ஓர் ஊன்றுகோலென விளங்கியமை யாலும்,எப்பொழுதும் செவ்விய பேரரசரின் கையகத்தே விளங்கி அவர்தம் நடுவுநிலை, நல்லாட்சிகளை விளக்கி நின்ற செங்கோல் போல் கதிரேசர் கையில் விளங்கி யமையாலும் இக்காப்பியம் அச் சொல்லாட்சியில் அக்கறை காட்டிப் பலவிடத்தும் நன்கு புனை கின்றது.

கவிஞரின் கருத்துப்படி கதிரேசற்கு ஏற்பட்டது 'காற்குறை' யேயாகும் (1 :22). கதிரேசர் கையகத்தே கண்ட ஊன்றுகோல்; கதிர்காமத்துக் கடவுள் கதிரேசன் கையில் தண்டுகொண்டு (தண்டா யுதம்) நிற்பதுபோல இருந்ததைப் பகுத்தறிவு நெறிப்பட்ட பண் பாளராம் முடியரசர் சொல்லாமற் சொல்கின்றார்.

'ஊன்றுகோல் ஒன்று பற்றி
உரத்துடன் நிமிர்ந்து நின்றான்
சான்றவர் போற்று மாறு
தண்டுகொண் டங்கு நின்றான்' (2:18)

இளம்பிள்ளை வாதத்தால் பண்டிதமணியாரின் 'நவையுறு கால்கள் எங்கும் நடந்திட இயலவில்லை' என்றாலும் அன்னாரின் 'குவிதரும் புகழோ யாண்டும் குலவிட நடந்த தங்கே' என்கிறார் கவிஞர் (2:25).

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி. (618)

என்பார் திருவள்ளுவர். இதற்குப் பரிதியார் ஐம்பொறிகளில் ஒன்று குறையினும் குற்றமின்று: முயலாமையே குற்றம் எனவுரைத்தார். முடியரசர் விதியை நம்பி அழிவாரைக் கண்டு வேதனைப்படுபவ ராதலின், பரிதியார் உரையை மேற்கொண்டு பாட்டிசைக்கின்றார்.

'பொறியின்மை கண்டு நெஞ்சம்
புழுங்கிலர் நாளும் நாளும்
அறிவறிந் தொழுகல் வேண்டி
ஆள்வினை உடைய ராகி
நெறியிலே நடந்து வந்தார்' (2:26)

என்று பண்டிதமணியையும் நடக்கவைத்துக் காப்பியத்தை யும் நடத்துகிறார் பாட்டரசர். காப்பிய நடையுடன் திருக்குறளும் பிறபல நன்னூற் கருத்துகளும் விரவிநடக்கும் பாங்கு, இக் காப்பியத்தே ஆங்காங்கு இனங்கண்டு மகிழத்தக்கதாகும்.

பண்டிதமணியவர்கள் ஏழாம் ஆண்டிற் பள்ளிபுக்குச் சில மாதங்களே பயின்றனர். அப்போது அவர் கற்ற ஆத்திசூடி, உலகநீதி முதலிய சிறுசிறு நீதி நூல்களே அவரைப் பெரிதும் கவர்ந்தமையால், அவற்றை ஓதிஓதி மகிழ்ந்து, பிறகு சிறுகச் சிறுகப் பெருநூல்களை யெல்லாம் தாமே கற்றுத்தேரும் திறமையுடையவரா யினார்.

ஓதிய ஆத்தி சூடி
ஊன்றுகோல் ஆகக் கொண்டே
நீதிநூற் படிகள் ஏறி
நெடியகாப் பியங்கள் என்னும்
வீதிசேர் ஊர்கள் சுற்றி
வீறுகொள் சங்கச் சான்றோர்
ஓதிய இலக்கி யத்தின்
உலகெலாம் உலவி வந்தார்' (2:39)

ஆத்திசூடியில் தொடங்கிய புலமை, அதனையே ஊன்று கோலாகக் கொண்டு, அளவிலா வளர்ச்சி பெற்றமை ஓர் அரிய நிகழ்ச்சியன்றோ? இங்ஙனம் பண்டிதமணிய வர்களின் வாழ்வில் நேர்ந்த அரிய நிகழ்ச்சிகளை மட்டுமே இந்நூல் தொகுத்துரைக்கிறது.

சன்மார்க்க சபையைத் தோற்றுவித்து, வளர்த்த பெருமை பண்டிதமணிக்கு உண்டு, அதுபோலவே பண்டிதமணியின் புகழ்

பெருகி வளர்ந்ததற்கு அச் சபையே உறுதுணையாயிற்று. ‘பொன் குன்ற நகருறையும் புலவருக்குப் புகழ்விளைக்கும் சபையொன்று கிடைத்ததையா’ (3:21) என்றும் ‘சாலவுணர் இவராலே சபையும் அந்தச் சபையாலே இவருமுடன் வளரக் கண்டோம்’ (3;25) என்றும் ஆசிரியர் இதனைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அதனால்தான் ‘தழைத்துவரும் அருள்மனத்தர் பழநியப்பர் அமைத்த சபை இவருக்கோர் ஊன்றுகோல் அமைந்திருக்கத் தமிழ்பரவிச் செழிக்கக்கண்டோம்’ (3:31) எனப் பாவலர், பண்டிதமணியின் கையில் இலங்கிய ஊன்றுகோற்கு நிகராகக் கருத்தில் துலங்கிய சபையாகிய ஊன்றுகோலையும் நமக்கு நினைவுபடுத்துகிறார்.

பிறிதோரிடத்தில் பண்டிதமாமணியைத் ‘தளர்ந்நிருந்த தமிழ்மாந்தர் செயலாற்ற ஊள்றுகோலாய் வருபவர்தாம் இவர்’ (4:5) என அறிவுறுத்துவது, நெஞ்சை நெகிழ்விக்கின்றது. இங்ஙனம் நூன் முழுமையும் இவ்வூன்றுகோற் செய்தி வெளிப்படையாகவும் குறிப்பாகவும் இடம்பெற்றுக் காப்பியத்திற்கேற்ற பாவிகமாகி நிற்கின்றது. தமிழுணர்வும் தமிழறிவும் தளருமிடத்தெல்லாம் அதனை மீண்டும் நிமிர்ந்து நிறுத்த, இவ் ‘வூன்றுகோலைக்’ கவிஞர் பயன்படுத்திக் கொள்கிறார். பண்டிதமணியின் வரலாறு அதற்கு நன்கு கைகொடுத்து உதவுகிறது. தமிழ்மொழியைக் கையாள்வோர் ஏதும் பிழைசெய்யின், அவர் மனத்திற்பதியும் வண்ணம் அதனைச் சுட்டிக்காட்டுவது மணியாரின் செயலாகும். பீமகவி போன்ற போலிப் புலவர்களை அவர் அயராது சாடிநின்றார். அவர் தலைமையில் யாரும் பேச அஞ்சுவர் என்பதே, அவர் உடனுக்குடன் முகத்திலறைந்தாற்போல் குற்றங்குறைகளைச் சுட்டிச் சாடியதனாலே யாம். இதில் பலர் நெளிவு சுளிவு பார்த்து, விட்டுக் கொடுத்துப் போவதனாலேதான் இன்று பயிரையே களைகள் சூழ்ந்து மூடி விட்டன. எனவே பண்டிதமணியின் இத்திருவுளக் கருத்தை மனங்கொண்டு, இந் நூலாசிரியர் தாமும் அதே கருத்தினராதலின் அவ்வகையான் ஆற்றல் மிக்க கருத்துரைகளை, அறையவேண்டு மிடங்களிலெல்லாம் அடித்துக்கூறி நூலுணர்வை அந்நெறிப் படுத்தியுள்ளார்.

இலங்கையிலிருந்து வந்த கதிரேசரைத் ‘தமிழெனும் தாயைக் காக்க வந்திவண் தங்கிவிட்டான்’(2:16) என்பார். பண்டிதமணியாருடன் பழகிய முன்னோடியாம் அரசன் சண்முகனாரும் ‘அடித்துரை

*யாற்ற வல்லர்' (2:18). பண்டிதமணி வடமொழி கற்றாரேனும் 'தம்மொழி மறந்தாரல்லர்; தமிழராய் வாழ்ந்து நின்றார்' (2;34) . வருமொழி கற்றுத் தாய்மொழி பழிக்கும் நாய்மனங் கொள்வாரைக் கவிஞர் கடிகின்றார். 'பெற்றதாய் மொழியிற் பற்றும் பிறமொழி தனில் மதிப்பும் உற்றிடல் வேண்டும் ' (2:37) என்பதே மணியார் உணர்த்திய உண்மை. நெறியுணர் காதை'யில், சமயநெறியில் பொய்ம்மை பூண்டு நின்றவர்களை இவர் விளக்கிக் காட்டுகின்றார்.*

'முற்றுறக் கல்லார் தாமும்
முயல்கிறார் பாடல் யாக்க
வெற்றரைத் தட்டிக் கேட்க
வீறுகொள் புலவரில்லை' (7:5)

*எனக் கவிஞர் 'நெறிபிறழாத பாடல் நெய்திடும் திறமை யில்லாரைக்' கடிகின்றார்.*

*இன்றைய சொற்பொழிவாளர் குறைகளையும் சுட்டுகிறார் கவிஞர்.*

'இலக்கியங்கள் பயிலாமல் இலக்கணத்தின்
இயல்பொன்றும் அறியாமல் நுனிப்புல் மேய்ந்து
சொலக்கருதும் ஒருபொருளைச் சிந்தித் தாய்ந்து
சொலுமுறையாற் சொல்லாமல், முழக்கமிட்டுக்
கலக்கிவரும் பேச்சாளர்' (8:1)

*பெருகிவருவதை வருத்தத்துடன் புகல்கின்ற கவிஞர், ஒரு நல்ல பொழிஞனின் திறன்களையும் நன்கு வகுத்துரைக்கிறார். இலக்கணத்தை வெறுக்கின்ற இக் காலத்தைக் கடிந்து, 'நிகழ்காலம் இகழ்காலம் ஆயிற்றந்தோ' (10:9) என இரங்குகின்றார். பாட்டரங்கில் பிறமொழிப் பாடல்களையே இசைப்பவர்க்கு இவர் தக்கவாறு இடித்துரை கூறித் 'தமிழை மீண்டும் பூக்கவிடா தொழிப்பதுதான் அவர்தம் நோக்கம்' என அவருள்ளத்தையும் புலப்படுத்துகிறார்.*

*தமிழில் பிறமொழிச் சொற்கலந்து எழுதும் சிலரை மிகவும் இடித்துக்கூறிப் பிறமொழி கற்றும் நல்ல தமிழ் நடையிலெழுதும் கதிரேசரின் திறமையை விதந்தோது கிறார். 'நன்மொழி இதனுள் நாணம் இலராய்ப் பன்மொழிச் சொற்கள் பரவிடக் கலந்து, புன்மைச் செயலாற் பொருந்தாது எழுதும்' பன்மொழிப் புலமைப்*

பயிற்சியரை அவர் நகையாடுகின்றார். எனவே பண்டிதமணியின் செம்மையும் செழுமையும் வாய்ந்த சொல்லும் செயலும் தமிழ்மக் கட்கு ஊன்றுகோலாய் உதவும். இழுக்கல் உடையுழி ஊன்றுகோல் போல, நாமும் அவர் தந்த ஊன்றுகோலைக் கொண்டு பயன்பட வாழ்வோமாக என்று இக் காப்பியம் நிறைவுறுகிறது. ‘பண்டித மணியார் தந்த பயன் தரும் ஊன்றுகோலைக் கொண்டுளம் தளரா வண்ணம் கூடியே நடப்போம் வாரீர்’ (17:17) என்று, நம் நெடிய பயணத்தை நமக்கு நினைவூட்டி அமைகிறது இக் காப்பியம், இவ்வாறு ‘பாவிகம் என்பது. காப்பியப் பண்பே’ என்பதற் கொப்ப இந்நூல் முழுதும் இக் கருத்துப் பல்வேறு முறைகளிலும் துறை களிலுமாக இழையோடுவது மேலும் ஆராய்ந்து மனங்கொள்ளுதற் குரியதாகும்.

**காப்பியத் தொடக்கம்**

‘உலகெலாம் உணர்ந்து’ ‘உலகம் யாவையும்’ என இவ்வாறு உலகை முன்வைத்து முறையே சேக்கிழாரும் கம்பரும் தொடங்கி யதற்கு இணங்க, இவர் ‘உலகெலாம் உய்ய’ எனத் தொடங்குகிறார். முதல் பாட்டு தமிழ்த் தெய்வ வணக்கமாக அமைகிறது.

‘உலகெலாம் உய்ய வைக்கும்
உயரிய கொள்கை யாவும்
நிலவிய தொகையும் பாட்டும்
நிகழ்த்திய சங்கம் ஏறி
அலகிலாப் பெருமை பூண்டாள்
அன்னையாம் தமிழணங்கின்
மலருலாம் அடிகள் வாழ்த்தி
மகிழ்வுற மனத்துள் வைப்பாம்’.

கவிஞர் முடியரசனாரின் தமிழ்வாழ்த்துகள் எதுவும் சோடை போவதில்லை, அதற்கவர் உள்ளத்துணர்வே காரணம். ‘கரந்தைக் கட்டுரைகள் ’ என்னும் நூலில், முதற்கண் நீ. கந்தசாமியார் பாடிய தமிழ்வாழ்த்து ஒன்றுண்டு. அதனை அற்றைநாளில் யாமனைவரும் பத்திமைப் பாசுரம் போல் பாடிப் பாடி மகிழ்வதுண்டு. அதனையே இறைவணக்கமாகக் கொண்டு கூட்டங்கள் தொடங்குவதுண்டு.

‘வையம் ஈன்ற தொன்மக்கள் உளத்தினைக்
கையினாலுரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பழந்தமிழ்
ஐயை தாள்தலை கொண்டு பணிகுவாம்!’

*இப்பாட்டு அன்றுதொட்டு எம் நெஞ்சைவிட்டு அகன்ற தில்லை. ஒரு நூல் எழுதித்தான் பெரும்புகழ் பெறவேண்டும் என்பதில்லை. ஒரு சிறுபாடல்கூட ஒருவருக்கு நிலைத்த புகழைத் தரமுடியும். பாவலர் முடியரசர்,*

'எழிலொழுகும் தமிழ்வாழ்த்து 'வையம் ஈன்ற'
சீரணியும் கலிவிருத்தம் பாடித் தந்து
சிறப்படைந்த கரந்தையுறு கந்தசாமி'' (9:19)

*என்று, இதனைக் குறிப்பிடுவதிலிருந்து, இவருக்குத் தமிழ் வாழ்த்துப் பாடுவதிலுள்ள ஆர்வமும் புலப்படுகிறது.*

'தாயே உயிரே தமிழே நினைவணங்கும்
சேயேன் பெறற்கரிய செல்வமே - நீயே
தலைநின்றாய் இவ்வுலகில் தாள்பணிந்தேன் நீஇங்கு
இலைஎன்றால் இன்பமெனக் கேது'

*என்று, கவிஞர் முடியரசனார் பாடிய தமிழ்வாழ்த்தொன்றும், ஒருகால் கற்றவர்க்கு மனத்தைவிட்டு அகலாத மாண்புடையது.*

**காப்பியநலன்**

*ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம் முதலிய வற்றைக் கோடிட்டுக் காட்டிச் சுருங்கவுரைக்கும் திறம் குறிப்பிடற் பாலது. அங்கு வளக் குறைவுண்டெனினும் வாழ்வோரின் மனவளங் காட்டி நிறைவுசெய்யும் பாவலர் 'வெளிப்படை' எனும் அணி நலத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்.*

'குளங்களில் நிறையும் நீர்தான்
குறையினும் ஆங்கு வாழ்வோர்
உளங்களில் நிறையும் ஈரம்
உலருதல் என்றுங் காணார்
வளங்களிற் சுருங்கு மேனும்
வழங்கலிற் சுருங்காக் கையர்
களங்களில் பதர்க ளுண்டு
காளையர் மணிகள் போல்வர்' (1:11)

*வருணனைகளில் இந்நூல் அருமையில் எளிய அழகைக் காட்டுகிறது. பண்டிதமணி அழகான தோற்றப் பொலிவு உடையவர். அதற்குக் கண்ணேறு கழித்தல் போலவே, அவருக்குக் காற்குறை*

அமைந்திருந்தது. மேடையில் அவர் அமர்ந்திருந்து பேசும்போது, பரியவுடலும் பொன்னிற மேனியும் புன்னகை முகமுமாய் யாரையும் வயப்படுத்தும் தோற்றம் கண்ணையும் கருத்தையும் கவரும். அதை ஓவியம் தீட்டுகிறார் பாவரசர்:

'சிரிப்பிருக்கும் அவர்வாயில்;பேசும்காலை
சிந்தனையின் தெளிவிருக்கும் அவர்முகத்தில்;
விரித்திருக்கும் ஒளியிருக்கும் விழியிரண்டில்;
விரிநெற்றி பொலிவுபெற நீறிருக்கும்;
பருத்திருக்கும் கழியினைக்கை பிடித்திருக்கும்;
பளபளக்கும் அக்கழியில் பூணிருக்கும்;
விரித்திருக்கும் நீள்விரிப்பில் அமர்ந்திருப்போர்
விழிகளுக்குள் வியப்பிருக்கும் களிப்பிருக்கும்.'

'பொன்விசிறி மடிப்பொன்று தோளின்மீது
புரண்டிருக்கும் வடமொழியும் பயின்றா ரேனும்
மின்முகிலிற் பொழியுங்கால் அயன்மொழிச்சொல்
மேவாத தமிழிருக்கும்; பிறர்கருத்தை
முன்னியல்பின் எள்ளலொடு மறுக்குங்காலை
முனைமழுங்காக் கூர்ப்பிருக்கும் இனிதமர்ந்து
நன்மணியார் நிற்காது பேசுகின்ற
நாவன்மை கண்டுலகம் போற்றி நிற்கும்'. (8:6,7)

வெறும் தோற்றத்தைவிடப் பேசிக்கொண்டிருக்கும் இயங்கு நிலையில் சித்திரித் திருப்பது உயிரோவியமாகிறது. இடையிடையே மறுப்புரை, எள்ளல், நகையாடல், கைதட்டு இருப்பதனால் மின்னலுடன் மழை பொழிவதை உவமை கூறுகிறார். 'நிற்காது பேசுகின்ற' என்பது, காலூன்றி நின்று பேசுதற்கியலாத நிலையில் எப்போதும் அமர்ந்து பேசுதலை மட்டுமின்றி, இடையே தட்டுத்தடு மாறி நிற்காமல் சரமாரியாகப் பேசுதலையும் குறிக்கிறது. அவருடைய கண்ணின் ஒளியும் கருத்தின் ஒளியும் காண்போரையும் ஊடுருவி நிற்கும் எனக்காட்டுவது, பொலிவிற்குப் பொலி வூட்டும் சித்திரத் திறனாகும். பற்பல புதிய உவமைகள் இடம்பெற்று ஆசிரியரின் அனுபவத்தையும் இலக்கியக் கலைத்திறனையும் விளக்குகின்றன.

காப்பியக் கதையே நம்பவியலாப் புராணத்தன்மை பெற்ற தாயிருக்குமெனல் அதன் பழையநிலை. எனினும் அழுத்தம்பெறப் புனைதலில், முடியரசர் பாவியத்திலும் அக்கூறு தலைநீட்டுகிறது.

பண்டிதமணியவர்களே கூறியாங்கு, பழம்பெரு நூல்களை யெல்லாம் பயில்கின்றபொழுது, அவற்றை முன்கூட்டியறிந்திருந்தது போன்ற நினைவும் தெளிவும் அவருக்கு ஏற்பட்டனவாம்.

'படித்தனன் எங்கோ முன்னர்ப்
படித்தது போன்றுணர்ந்தான்' (2:22)

'கற்பிக்கும் ஆசான் இன்றித்
தனிமையில் அனைத்தும் கற்றுத்
தக்கதோர் புலமை பெற்றான்' (2:23)

'சொல்லிய ஆசான் பாடஞ்
சொல்லுமுன் உணர்ந்து கொண்ட
நல்லியற் புலமை கண்டு
நயந்தவர் வியந்து நின்றார்' (2:29)

இவ்வாறு மணியார்க்குக் கல்வி கைவரப் பெற்றதன் காரணத்தைக் காப்பியப் புலவர் நடுநிலையோடு நவில்கின்றார்.

'ஒருமையில் கற்ற கல்வி
உதவிடும் எழுமை என்ற
மறைமொழி புகன்ற வாய்மை
மறைமொழி யாகா தன்றோ?
தெரிதரும் முன்னை நூல்கள்
தெளிவுறக் கற்கும் போது
பரிவுடன் பழைய பாடம்
படிப்பபோல் இருந்த தென்றார்' (2:9)

இங்ஙனம் நிகழ்ந்தமை புனைந்து கூறப்பட்டதன்று, காப்பிய நாயகரே வெளிப்படுத்திய உண்மையாகும். தமிழன்னையே தலைமகற்குற்ற குறைகண்டு மனம் நொந்து இக் கொடையினை நல்கினாள் என்னும்போதுதான், புலவர் காப்பியப் புலவராகின்றார்.

'தலைமகன் இவனுக் குற்ற
தாழ்வினைக் கண்டு நொந்தாள்
இலைநிகர் இவனுக் ' கென்ன
இவனைநான் உயர்வு செய்வேன்
கலைமலி புலமை ஈவேன்
கதிரொளி பரவ என்று

தலையளி சொரிந்து நின்றாள்
தமிழன்னை அவனை நோக்கி' (2:19)

*ஒரு காப்பியப் புலவன் கதைநிகழ்ச்சிகளையெல்லாம் கூறுவ தோடுமட்டும் அமையானாய், தன் கருத்துகள், சிந்தனைகளை யெல்லாம் பெய்துவைக்கும் பேழையாகவும் காப்பியத்தைப் பயன்படுத்திக் கொள்வான் என்பர். அதற்கொப்ப இவ் வாசிரியர் பேச்சாளன் இலக்கணம், மொழிபெயர்ப்பின் இலக்கணம், நூலா சிரியன் இலக்கணம், கவிஞன் இலக்கணம், ஈகை இலக்கணம் என்றினைய பல வரன்முறை விதிகள் போன்ற சிந்தனைகளை ஆங்காங்கு பெய்து வைத்துள்ளார். ஈகை என்பது எது?*

'சொலக்கேட்டு விழியிமைகள் இமைப்பதிலை
தூண்டுவதால் ஈகைமனம் பிறப்ப தில்லை
மலைக்காட்டில் திரிமயில்கள் தோகை தனை
வற்புறுத்திக் கூறுவதால் விரிப்ப தில்லை
மலைக்கோட்டு மாமுகிலும் பிறர்சொல்லை
மதித்தெழுந்து மழைநீரைப் பொழிவ தில்லை
தலைக்கொள்ளும் இயல்புணர்வால் மனங்குளிர்ந்து
தானுவந்து வழங்குவதே ஈகை யாகும் '

*பண்டிதமணியாரின் நட்புச் சிறப்பைப் பாடுமுகத்தான் குன்றக்குடி அடிகளின் சிறப்பைக் குன்றின் மீதிட்ட விளக்காகப் புனைந்துள்ளார். மறைமலையடிகள், நாட்டாரையா போன்ற பலரை விளக்கும் திறன், கவிஞரின் உணர்வு, ஈடுபாடு ஆகிய வற்றைப் புலப்படுத்துகிறது.*

*முருக பத்தர் ஒருவர் பண்டிதமணியின் சமயப்பற்றை நினைத்து, அவரை ஏமாற்றி ஐயாயிரம் ரூபாய் பெறலாம் என எண்ணி வந்து நாடகமாடியபோது, தாமும் அதனையே பின்பற்றி அவரைச் சொல்லாமல் ஓடவைத்த செய்தி நகைச்சுவை மிளிர்வதாகும்.' மயக்குறாக் காதை' படிப்படியாக, நகைச்சுவையை வளர்க்கும் பான்மை படித்து இன்புறத்தக்கது. கையில் காசில்லாதபோது 'பணமுடை'என்பது ஒரு வழக்காறு. அதனைப் 'பணம் உடையார்' என்றும் 'பண முடையார்' என்றும் பிரித்து, இரட்டுற மொழிதலாக நயந்தோன்றக் கூறலாம். பண்டிதமணி குடும்பத்தார் பண முடையார் என்று மகட்கொடை நேர்ந்தோர் சற்றே மறுதலித்தபோது, மேலைச்சிவபுரி வ. பழ. சா. பழநியப்பர் பணம் உடையாரா*

தலினால் அக்கவலையைத் தவிர்க்க உதவினாராம். இத்தகைய சுவையான, இலக்கிய நயந்தோற்றும் பகுதிகள் இதிற்பலவுள. இலக்கிய நயம் பாராட்டுதலில் ஈடும் எடுப்புமற்றவரென மதிக்கப் பெற்ற ஒருவரது வரலாற்றுக் காப்பியமும் இத்தகைய நயங்களால் பொதுளப் பெற்றிருத்தல் சாலச்சிறப்பேயன்றோ?

**காப்பிய நாயகர் பண்பு நலன்கள்**

காப்பிய நாயகராம் கதிரேசரின் குணநலன்களும் இயல்புகளும் ஆற்றலும் அறிவும் இந் நூலுள் நடப்பியலாக நன்கு எடுத்தோதப் பட்டுள்ளன. இவ் வகையில் மிகைப் புனைவைத் தவிர்த்திருப்பது பாராட்டுக்குரியது. எப்பொழுதும் எதிலும் திருத்தமும் செம்மையுமே மணியாரின் குறிக்கோள்கள். உணவும் சுவையாக. நன்றாக அமைய வேண்டுமென அவர் விரும்புவர்.

'பாச்சுவையில் குறைகாணின் எடுத்துச்சொல்லிப்
பாங்குபெற வழியுரைக்கும் ஆற்றல்போல
நாச்சுவையிற் குறையிருப்பின் சுட்டிக்காட்டி
நன்கடிசில் அமைவதற்குப் பக்குவத்தை
ஆச்சியிடம் எடுத்துரைக்கும் அழகுகாணிள்
அடடாஓ எனநமக்கு வியப்புத் தோன்றும்.' (4:19)

பண்டிதமணியின் உலகியலறிவும் நிகரற்றது. நூலறிவுடைய பலர் உலகியலில் யாதுமறியா இயல்பினராய் இருப்பர். கதிரார் அதற்கு மாறாக இருதுருவங்களும் இணையுமாறு வாழ்ந்தவர். அறிவிலும் பதவியிலும் உயர உயரச் செல்வத்திலும் உயர்ந்து விளங்கினார் அவர். வீடு கட்டுவது முதல், வரவுசெலவுக்கணக்குப் பார்ப்பது வரை நன்கறிந்த பல்கலைச் செல்வராக அவர் வாழ்ந்த மையைப் பாவியம் விரித்துக் கூறத் தவறவில்லை. 'இருவேறு உலகத்தியற்கை'என்ற நூற்கணக்கை மாற்றி வைத்தது இவர்திறம் (4:25).

தலைவரை நூன்முழுதும் பாராட்டும் இந்நூல் அவருக்கேற்ற வாழ்க்கைத் துணை, எங்ஙனம் அவர் உயர்வுக்கெல்லாம் உதவிய அரிய துணையாக அமைந்தது என்பதையும் சுருங்கக்கூறி விளங்க வைக்கின்றது.

'கண்ணகியைக் கண்ணெதிரே கண்டதில்லை கதிர் மணியார் வீட்டிற் கண்டோம்' என்று மதிக்கப்படும் மீனாட்சி அன்னை, கண்ணிறைந்த கணவனெனக் கதிராரின் மதிவிளைத்த மெய்பார்த்து

மணந்துகொண்ட மாட்சி, மனம்நெகிழுமாறு விளக்கப்பெற்றுள்ளது. அவ்வன்னையைப் பலவாறு மனமுவந்து பாராட்டும் பாட்டுப் புலவர், ‘பெண்மைக்கும் இல்லறத்தின் பெருமைக்கும் மதிப்பளித் தார்; உண்மைக்கும் கதிரேசர் உயர்வுக்கும் வாழ்வளித்தார்’ என முத்தாய்ப்பு வைத்துரைப்பது குறிப்பிடற்பாலதாகும்.

**நகரத்தார் மரபு**

பண்டிதமணியார் நகரத்தார் சமுகத்தில் பிறந்ததனால், இடையிடையே நகரத்தார் நலன்களைப் பாராட்டிக் குறைகளைச் சுட்டும் போக்குக் காப்பியத்தில் நிழலாடுகிறது. மேலும் காப்பியப் பாவலர் செட்டிநாட்டில் பல்லாண்டுகள் வாழ்ந்து, நகரத்தாரோடு நகரத்தாராகக் கலந்துறை வாழ்க்கை கொண்டவர். எனவே இவர் வாக்கில் இவ்வட்டார வழக்குகளும் இவர்தம் பழக்கவழக்கங்களும் வெளிப்படுதல் இயல்பேயாம். சிலசமயங்களில் இவர் பாடும் போது, நகரத்தாராய்ப் பிறந்தவர்க்குத் தலையைச் சற்றே நிமிர்த்திக் கொள்ளலாம் போலத்தோன்றும்.

‘இலக்கியப் பண்பா டின்னும்
இருக்கிற தென்றுகூறித்
துலக்கிடச் செட்டி நாடே
துணையெனச் சொல்லலாகும்’ (1 :4)

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்க, நாளும் பணிபுரியும் நகரத்தாரைப் பின்புலமாகக் கொண்ட வரலாறு இது. எனவே மகிபாலன்பட்டியில் வாழ்வோர், ‘பொருளினால் மிகுந்த மேலோர், புலமையிற் சிறந்த நூலோர்’ என்று போற்றப்படுகின்றனர். ‘திரைவழி கடந்து சென்று, திறமையால் ஈட்டுவார்’ காட்டப் படுகின்றனர். உருவினால் சிறிய தவ்வூர், உளத்தினால் சிறந்த மாந்தர் எனப் பாராட்டி, வளரிளம் காடு சூழ்ந்து வனப்பினில் பொலிந்து தோன்றும், குளமெலாம் மீன்கள் துள்ளிக் குதித்திடும் இயற்கை யைக் காட்டி,

‘மனமதில் அமைதி காட்டி
மதிவளர் புலமை கூட்டும்
கனவுல கொன்று காட்டிக்
கவிதையும் படைத்துக் காட்டும்’ (1 :10)

என அவ்வூரைச் சிறப்பிக்கின்றார் ஆசிரியர். ஆனால் அவ்வூர் பண்டித மணியார் பொதுப்பணியிலீடுபட்டு நன்மை சில செயு முன்னர் எவ்வாறு இருந்ததென எடுத்துரைக்குமிடத்து, அதன் மழைக்காலச் சேற்றுநிலை படம்பிடித்துக் காட்டப்படுகிறது. அவ்வூருக்குப் போகும் வழிதான் பெரிதும் இடர்ப்பாடானது. திருமணம் முடித்தவர் பெண்ணழைத்துப் போகுமுன் மழைவந்து, ஆற்றில் வெள்ளம் வந்துவிட்டால் மூன்று நாளானாலும் காத்திருந்து தான், வெள்ளம் வடிந்து பின் தம்மூர் போக வேண்டுமாம். இதனால் அவ்வூரில் சம்பந்தம் வைத்துக்கொள்ளப் பெரிதும் தயங்குவராம். இந் நிலைமையை நீக்க அரும்பாடுபட்டுப் பண்டிதமணியார் முயன்றார். பாலம் கட்டுவித்துப் பாதையைச் செப்பனிட்டார்; ஊருக்குள் அஞ்சலகம், பள்ளிக்கூடம் வரச்செய்தார். இவற்றைப் பாட்டில் வடிக்குமழகு படித்தின்புறத்தக்கது.

'ஒருநாள் மகிபாலன் பட்டிக்குள் உற்றார்
மறுநாளும் வந்துசெல மற்றும் மனம்விழையார்
கற்றாழை கள்ளி கருநாகம் புக்குவரும்
புற்றாலே எங்கும் பொலிந்திருக்கும்; வான்முகில்தான்
சற்றே பொழியின் சகதி நிறைந்திருக்கும்
பற்றாக் குறைக்கங்குப் பள்ளம் படுகுழிகள்
ஆற்றில் புனலும் அடித்துத் திரண்டுவரும்
சேற்று நிலமாய்அச் சிற்றூர் விளங்கும்,
பகடு தனைப்பூட்டிப் பண்டியில் ஊர்வோர்
சகடு தனையிழுக்கத் தாங்குதித்து நிற்பார்;
சுடுகாடும் அங்கேசுடர்விட்டுக் கண்ணிற்
படுமாறு தோன்றிப் படர்வாரை அச்சுறுத்தும்,
கள்வர் சிலரும் கரந்து திரிந்திடுவர்;
பேருந்து செல்லாப் பெருமை உடையதோர்
ஊரந்த ஊரேதான்; யாரங்குச் செல்வார்கள்?'

இத்தகைய ஊரினைச் சீர்திருத்திய மணியாரின் முயற்சி, பொதுப்பணிபுரி காதையில் எடுத்துரைக்கப்படுகிறது. இத்தகைய பின்புலமான செட்டிநாட்டில் அன்று பலவூர்கள் இவ்வாறே இருந்தன. வெளிநாடு செல்வதே குறிக்கோளாகக் கொண்டவரா தலின் தத்தம் ஊர் நலனை அவர்கள் கருதிலர். எழுதப்படிக்கத் தெரிந்தால் போதும்; அப் பையனை வெளிநாட்டிற்கனுப்பிவிடுவர்.

'திண்ணையில் அமைந்த பள்ளி
திருத்திடும் ஆசாற் சார்ந்தங்கு
எண்ணுடன் எழுத்தும் கற்கும்
இளையநற் பருவத் தாரைக்
கண்ணெனும் வணிக நோக்கில்
கலத்தினிற் செலவி டுத்தல்
பண்ணுயர் செட்டி நாட்டுப்
பழங்குடி வழக்க மாகும்' (2 :10)

*அதற்கேற்பப்பண்டித மணியாரும் இலங்கைக்கு அனுப்பப் பட்டார். அங்கே அவர் துணிக்கடை வாணிகத்தில் அமர்த்தப் பட்டார். அவர் புத்தகம் எழுதுங்கையால், புதுத்துணி முடித்துத் தந்தார். கவிஞர் கருத்துப்படி, பிற்காலத்தில் பத்துடன் சங்கத் தொகையைச் சொல்வார், பணத்தொகை விலையைச் சொல்லி வாழ்ந்து வந்தார். துணிநயத்தை விரல்கள் தொட்டுப் பார்த்தாலும் சொல்நயத்திலேயே சிந்தை தோய்ந்து நின்றதாம்.*

*நகரத்தார்கள் முயற்சிமிக்கவர்கள். ஒன்று பெற்றாலும் அதனையே தம் முயற்சியால் பத்தாகப் பெருக்கிக்கொள்ள வல்ல வர்கள். மற்றவர்கள் பத்தைப் பெற்றாலும் ஒன்றோ இரண்டோதான் மீத்துவைப்பர். நகரத்தார்க்கும் பிறர்க்கும் இஃதொரு அடிப்படை வேறுபாடாகும். இத் திறமையைக் கதிரேசர் கல்வியிற் காட்டித்தம் புலமையைப் பெருக்கிக் கொண்டார் என்பது கவிஞரின் மதிப்பீடு.*

'பெற்றிடும் ஒன்றைக் கொண்டே
பத்தெனப் பெருக்கிக் காட்டக்
கற்றவர் குடியில் வந்த
கதிரேசச் செம்மல் -' (2 :41)

*என்று ஒரு சமுதாயச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.*

*ஈட்டுதல், சேமித்தல், வழங்குதல் என்பன அண்ணாமலை அரசர் கண்ட குறிக்கோள்கள். இது செட்டிநாட்டவர் அனைவரின் குறிக்கோள்களே எனப் பொதுவகையில் கூறலாம். இவற்றை நகரத்தார் பண்பில் தோய்ந்த நலன்கள் எனவும் சுட்டலாம். ஒருசாதி, ஒருசமூகம் என்ற உணர்வு குறுகியதே. ஆயின் அவ்வுணர்வே நாட்டுநலனும் மொழிநலனுமாகிய பொதுநலனை வளர்க்கப் பயன்படுமாயின் அது சாலச் சிறந்ததன்றோ? நகரத்தார்கள் என்றும் நகரத்தார்க்குமட்டுமே என நலன்நாடி உழைத்ததில்லை. உண்மை*

*யிற் சொல்லப்போனால், நகரத்தார் எவரும் மற்றொரு நகரத்தார்க்கு மனமுவந்து உதவ முன்வருவதில்லை. அங்ஙனம் யாரும் உதவினர் களாயின், அதற்குத் தவிர்க்க முடியாத காரணமுண்டென்பதே உண்மை. எனினும் உலகு வாழ உதவும் அவர்கள் மனப்போக்கு உவகைதருவதேயாம். பாவலர் ஏறு முடியரசர் பெருமிதத்தோடு புனையும்போது, நெஞ்சம் கிளுகிளுக்கத்தான் செய்கிறது.*

*திருக்கோயில்* பலஎழுப்பச் சிதைவிடத்துத்
*திருப்பணிகள்* எனும்பேரால் திருத்திக்கட்ட
வெருக்கொள்ளும் வெயில்நாளில் வேட்கையுடன்
வருவார்க்கு விழைந்தெழுந்து *தண்ணீர்ப்பந்தர்*
உருக்கொள்ளு மாறமைக்க, உணவுதரும்
*அறச்சாலை* உண்டாக்கக் *குளங்கள்* தோண்டப்
பெருத்தநிதி எடுத்தெடுத்து வழங்குவது
பெருமை எனப் பேணுவது வணிகர்நாடு
'கடல்கடந்து நெடுந்தொலைவு *சென்றிடுவர்*
கணக்கிலநாள் அங்கிருந்து *கொண்டுவிற்பர்;*
மடல் வரைந்து மனைக்கிழத்தி மனம்மகிழ
மறவாமல் உய்த்திடுவர்; நெடுநாள் தொட்டுத்
தொடர்ந்தெழுந்த ஆள்வினையால் தொகை மிகுத்துத்
தாய்நாட்டுத் துறைமுகத்தை நோக்கிவந்து
படர்ந்துவரும் ஆர்வத்தாற் கால்வைப்பர்
பலபலநல் லறஞ்செய்யக் கால்கோள் வைப்பர்' (3 :1, 2)

*குலவிவரும் செல்வத்தைப் பெட்டகத்துட் குவித்தெடுத்துப் பார்ப்பது ஒரு வழக்கம் (3:7). 'ஆண்டு பதின் மூன்றானால் ஆடவர்தம் திருமணத்தை அதற்கப்பாலும் தாண்டவிட மாட்டார்கள்; தனவணிகர் வழக்கமிது; மரபின் கொள்கை பூண்டொழுகும் குலம்' (4:1.) தமிழர்களே பழம்மரபில் பற்றுடையவர்கள்* (CONSERVA-TIVES). *நகரத்தார்களோ அதனிலும் ஆழமான மரபுபோற்றும் மனத்தினர்.*

*இங்ஙனம் நலம்பாராட்டினாலும், திருமணத்தில் அவர்கள் பணமே பெரிதென்று பகட்டித் தம் பண்புக்கு மாறாகப் பிடிவாதத் துடன் செயற்படுவதைத், தலைமேலடித்துக் கண்டிக்கவும் அவர் தயங்கவில்லை.*

'குலம்பார்ப்பர், குவிசெல்வ வளம்பார்ப்பர்,
குடிபார்ப்பர், சீரும் பார்ப்பர்,
நலம்பார்ப்பர், கலன்பார்ப்பர் நடந்துவரும்
நடைபார்ப்பர், உடையும் பார்ப்பர்,
நிலம்பார்ப்பர், நாகரிக மனைபார்ப்பர்,
நிகழ்மணத்தில் அறிவு, பண்பு'
நலம்பார்க்கும் நிலைமட்டும் மறந்திடுவர்
நதரத்தார் நிலைதான் என்னே' (4:3)

இங்ஙனம் இந்நூலுட் காணும் நகரத்தார் நிறைகுறைகள் பற்றிய பல கருத்துகள் தொகுத்துக் காணுதற்குரியனவாம். இது நகரத்தார் ஊடே இருந்து பார்த்த பிறரொருவர் பார்வையாக இருப்பதனால் கூர்மையாகவும் சீர்மையாகவும் பதியத்தக்கதாக வுளது.

**படைப்பாளி இடம்பெறும் பாங்கு**

சிலப்பதிகாரத்தில் இளங்கோ தாமே ஒரு பாத்திரமாக இடம்பெற்றுத் தம்மைப் பற்றிக் கூறிக்கொள்வதுடன், பத்தினித் தெய்வத்தின்பால் தமக்குரிய பத்திமையையும் வெளிப்படுத்திக் கொள்கிறார். கவிஞர் முடியரசன் பண்டிதமணியின் தூண்டுதலால் மேலைச்சிவபுரி வ.பழ. சா. பழநியப்பர் உருவாக்கி, அவர் தம்பி அண்ணாமலையாரால் புறந்தரப்பட்டு. இன்று வரை அவர்களின் மக்கள் சாமிநாதர், சிதம்பரனார் மற்றும் பெயரர் சீனி என்ற பழநியப்பர் போல அனைவராலும் காக்கப்பட்டுவரும் சன்மார்க்க சபையில் தொடக்கக்கல்வி முதல் புலமைப்பட்டம் வரை பயின்றவர். மேலைச் சிவபுரிக்கு வந்த தமிழ்ச்சான்றோர்களின் உரைநலன் களைக் கேட்டுணர்ந்தவர். பண்டிதமணியின் சொற்பொழிவுகளைக் கேட்டும், சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா அவர்களுடன் பண்டிதமணி நோயுற்ற போது சென்று கண்டும் இத்தகைய நிகழ்ச்சிகளால் இவ்வரலாற்றிலும் சிறிது இடம்பெற்றவர். எனவே அவர் தம் உள்ளத் துணர்வுகளை வடிக்கும்போது தம்மை மறந்து பாடுகிறார். சன்மார்க்கசபைத்தாயை நினைந்து போற்றுகிறார். வ. பழ. சா. குடும்பத்தாரை வாயார, மனதாரப் புகழ்கின்றார்.

'செழுநிதியை வகுத்தளிக்க வல்லார் தம்முள்
வாழ்த்தெடுத்துப் பாடுதற்குத் தகுதியுளார்
வ. பழ. சா. பழநியப்பர் ஒருவ ராவர்' (3:8)

என்று பழநியப்பரையும் அவர் தம்பி அண்ணாமலையையும் பெருமிதம் தோன்றக் குறிப்பிடுகிறார்.

பழநியப்பரின் பண்பு நலங்களை அடுக்கியுரைத்துவிட்டு,

'கற்றுணர்ந்தார் நல்லுறவும் கலந்தாடிக்
களிக்கின்ற செவியுணர்வும் வல்லார்வந்து
சொற்றதிரு முறைநூல்கள் செவிமடுத்துச்
சுவைக்கின்ற புலனுணர்வும் ஒருங்குசேரப்
பெற்றொளிரும் பழனியப்பர்.......' (3:10)

என்று இயல்மொழியாய் இசைக்கின்றார் முடியரசர். சன்மார்க்க சபையில் கற்றவர்கள் துலக்கமுறக் கற்றதனால் இன்று நாடறிந்த பேராசிரியர்களாய், கவியரசர்களாய்த் திகழ்கின்றமையையும் அவர் எடுத்துரைக்கும்போது, அவரது புகழுரை அவருக்கே சென்று சேர்வதும் புலனாகிறது. அவர் படிக்கிற காலத்தில் , அவருக்கு ஆசிரியராக, வழிகாட்டியாக இருந்த பலரை நினைவு கூர்கின்றார்.

'நலந்தந்த சங்கரரும் ஆட்டு வித்த
நடேசருமென் தெய்வங்கள்! நாளும் நாளும்
வலம்வந்தே அருள்பெற்ற கோவிலுக்குள்
மல்லிங்க சாமியொரு சாமி எற்குக்
குலம்தந்த தமிழ்தந்த முத்து சாமி
கும்பிட்டு நான்மகிழ்ந்து நத்துஞ் சாமி
உளம்தந்து பாருலகின் இயல்புங் காட்டி
உய்வித்த செல்லப்பர் மற்றோர் தெய்வம்' (3:33)

மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபை போன்றவை தோன்றி, இளமை முதல் தாய்ப்பால் ஊட்டி வளர்ப்பது போல் தாய்மொழிப் பற்றையும் அறிவையும் ஊட்டி வளர்க்குமானால், இங்கு தமிழ் வளர்ச்சிக்குத் தடைகளே எழா எனலாம். நாடு முழுவதும் இத்தகைய சபைகள் கழகங்கள் எழாவா என்ற ஏக்கத்தைக் கவிஞர் உரை தோற்று விக்கிறது.

'உள்ளத்துள் உணர்வூட்டிப் பற்றுண் டாக்கி
உண்மைபெறும் பத்தியுடன் தொண்டு செய்ய
மெள்ளத்தன் னாளாக்கிப் பாடல் வல்ல
மேலவர்தம் கூட்டத்துள் ஒருவனாக்கி
அள்ளித்தன் அருளெல்லாம் என்மேற் பெய்தாள்

அழியாத வரமளித்தாள் தமிழ்த்தாய், அந்தத்
தள்ளைக்கு நானடினைம யான திந்தச்
சன்மார்க்க சபையென்னும் கோவிலிற்றான்' (3:32)

கதிர் எழுந்து மறைந்த ஒருநாள் நிகழ்ச்சி போல ஒரு வாழ் நாளைச் சொல்லும் இக்காப்பியம் கதிராரை மட்டும் காட்டிடிற்றிலது. அவர் காலத் தமிழகத்தின் ஒரு பகுதியையே காட்டி நிற்கிறது. சொல்வளமும் நடைநலமும் மிக்க இக் காப்பியம் பொருள் நிறைவும் உணர்வுச் செறிவும் மிக்கதாக, மிளிர்கிறது; என்றுமுள தென்றமிழ் இன்றும் வளர்கிறது; இனியும் வளரும் என்பதைக் காட்டும் காலத்துக்கேற்ற காப்பியம் இதுவாகும்.

## கவிஞரைப்பற்றி

பெரியகுளம் ... ... மதுரை மாவட்டத்தின் எழில் கொஞ்சும் நகரம் மட்டுமன்று இருபதாம் நூற்றாண்டின் இலக்கியப் பசியைத் தணிக்கத் தமிழ் விருந்து படைத்த கவியரசு முடியரசனாரை ஈன்றெடுத்த நகரமும் ஆகும்.

*7-10-1920* தமிழ் நெஞ்சங்களில் நிலைபெற்றுவிட்ட நாள். ஏனெனில், அதுதான் கவியரசு முடியரசனார், சுப்பராயலு சீதா லெட்சுமி என்பார்க்கு மகனாகப் பிறந்த நல்ல நாள். "பிறப்பினா லேயே பெருமை வந்து விடுமா?" என்று சிலர் வினவுவர். வாழ்வின் சிறப்பினால் பெருமை வளர்கின்ற பொழுது அது பிறப்பையும் பெருமைப்படுத்திவிடுவது உண்மைதானே!

உரிய வயதில் தொடக்கக் கல்வி கற்பிக்கப்பட்டது. தாய் மாமன் துரைசாமி பிற்கால இலக்கியங்களில் பெரும் ஈடுபாடு கொண்டவர். இதனால் "இலக்கியச் சாறு" பருகும் பழக்கம் இளமையிலேயே இவருக்குக் கிட்டிற்று. அது இந்தக் கவிதை மீனுக்குப் பெரியகுளத்தை நல்ல நீச்சற்களமாக ஆக்கிற்று.

வளைந்து கிடக்கும் மேற்குமலைத் தொடரும் அதில் மேய்ந்து திரியும் மேகக்காட்சியும்-இசைபாடும் புள்ளினமும் இறங்கிவரும் சிற்றாறும்-வெள்ளிக் காசை சுண்டிவிட்டாற் போலத் துள்ளிக் குதிக்கும் கெண்டை மீன்களும் வெடித்துச் சிரித்துக் காண்பவர் விழியைக் கவரும் வாசமலர்க் குளமும் துரைராசுவின் இதயத்தைக் கவர்ந்தன; என்னவோ செய்தன; தாய்மாமன் துரைசாமி ஊட்டிய இலக்கியச் சாறு தன்வேலையைத் தொடங்கிவிட்டது.

விளைவு...? இளைஞர் துரைராசு கவிஞர் முடியரசன் ஆனார். மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி தமிழறிவைத் தந்து சிறப்பித்தது. அக்கல்லூரியில் நிகழும் அறிஞர் பெருமக்களின் உரைகள், அப்போது நிகழ்ந்த உரையாடல்கள் கவிஞரின் உள்ளத்தில்

ஆழ்ந்த மொழிப் பற்றையும் இனப்பற்றையும் கிளர்ந்தெழச் செய்தன.

1940ஆம் ஆண்டில் தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்தில் தொடர்பு கொண்டார். இத்தொடர்பு அவருடைய ஆளுமையை வெற்றிபெறச் செய்தபோதிலும் 1943ஆம் ஆண்டு வித்துவான் தேர்வில் தோல்வியுறச் செய்தது. அவர் தோல்லியுறவில்லை; தோல்வியுறுமாறு செய்யப்பட்டார்.

இடையிலே நவாபு டி. எசு. இராசமாணிக்கம் நாடகக்குழு தம்பால் பணியாற்ற வருமாறு அழைத்தது; சென்றார். அங்கிருந்த "சிறைவாழ்க்கை" யும் மதவழிபாட்டு முறைகளும் வெறுப்பை விளைத்தன. எனவே போன சுவடு அழியுமுன்னரே திரும்பி வந்துவிட்டார். பின்னர்த் தம்மைத் தோல்வியுறச் செய்தவர்களைத் தோற்கடிப்பதற்காகத் "தலைமறைவாக" இருந்து படித்து 1947 இல் வித்துவான் பட்டம் பெற்றார்.

1947-1949 வரையிலான இரண்டாண்டு காலம் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இக்காலம் அவர்தம் எழுத்து வன்மை உரம் பெற வாய்ப்பாக அமைந்தது மட்டுமின்றி அறிஞர் பலரோடு தொடர்பு கொள்ளவும் ஏற்றதாக இருந்தது. போர்வாள், கதிரவன், குயில், முருகு, அழகு முதலிய இதழ்கள் இவர்தம் சிறுகதைகளையும், கவிதைகளையும், கட்டுரைகளையும் தாங்கி வந்தன. அப்பொழுது புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த "பொன்னி" எனும் இலக்கிய இதழ் "பாரதிதாசன் பரம்பரையில்" முன்னணியில் நிற்பவராக அறிமுகம் செய்து வைத்தது.

சென்னையில் பேராசிரியர் மயிலை. சிவமுத்து, தமிழ்த் தென்றல் திரு.வி.க., கவிஞர் வாணிதாசன் ஆகிய புலமைச் சான்றோர் களுடன் இவர் இடையறாத் தொடர்பு கொண்டிருந்தார்.

1949ஆம் ஆண்டு பேராசிரியர் மயிலை. சிவமுத்து அவர் களின் சீரிய தலைமையில் கலைச்செல்வி என்னும் நலத்தகை யாரைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார்.

அப்பொழுது நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தனியாக எதிர்ப்பதைக் காட்டிலும் துணையோடு சென்று எதிர்ப்பது தான் வெற்றிக்குரிய போராட்ட முறை என்பதனால் தக்க துணை யோடு (துணைவியாரோடு) ஈடுபட்டார்.

திருமணம் முடிந்த பின்னர்ச் சென்னையிலிருந்து விலகி வந்து காரைக்குடி மீ.சு. உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்து 28 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். "ஆணும் பெண்ணும் சரிநிகர்" என்ற பாரதியின் வாக்கை நிலைநிறுத்துவது போல் மகள்மார் மூவரையும் மகன்மார் மூவரையும் பிள்ளைச் செல்வங் களாகப் பெற்றுள்ளார்.

1955 ஆம் ஆண்டில் குருதி உமிழும் கொடு நோய்க்கு இலக்கானார். "பிழைப்பது அரிது" என்ற நிலை வந்துற்ற போது புதுக் கோட்டை அண்ணல் சுப்பரமணியானார் தாயினும் சாலப் பரிந் தெழுந்து நோய்நீங்கி நலம் எய்த மருத்துவர் வி.கே. இராமச் சந்திரனார் துணையோடு எல்லா வகையானும் உதவி புரிந்தார். அவ்வுதவி இயம்பத் தீரா ஏற்றமுடையது. புத்துயிர் கொடுத்த அவ்வித்தகரைத் தந்தையாகவே கருதி வருகிறார். காலத்தினால் செய்த ஞாலத்தின் பெரிதாகிய அவ்வுதவியை நாடொறும் எண்ணி உருகுகின்றார்.

இடையிலே ஓராண்டு திரைப்படத்தின் ஈர்ப்புக் கவர்ச்சிக்கு ஆளாகிச் சென்னை சென்றார். ஆங்கு நிகழும் நிகழ்ச்சிகள் தம் இயல்புக்கு "ஏலாதன" என்பதைக் கண்டு மறு ஆண்டே தமிழாசிரியப் பணிக்கு மீண்டார்.

1966இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதாகக் கல்வித் துறையினரால் இவர்மீது வழக்கொன்று கொண்டு வரப் பட்டது. "விசாரணை" நடைபெற்றது. அப்போது "இந்தியை எதிர்ப்பவன்தான் நான். அதற்கு என் பாடல்களே சான்று. ஆனால் இப்பொழுது சாற்றப்பட்டிருக்கும் குற்றங்கள் பொய்யானவை. என்மீது பழிசுமத்துவதற்காக இட்டுக் கட்டப்பட்டவை" என்று வாக்குமூலம் கொடுத்தார். ஆய்வுக்குப் பின்னர் வழக்கு, தள்ளுபடி செய்யப்பட்டது.

இளமைக் காலத்தில் முருகனைப் பாடுவதே முத்தமிழ் கற்றதன்பயன் என்றிருந்த இவர் 1940- க்குப் பிறகுசமுதாயச் சூழல்-நாடு-மொழி இவற்றையே பாடிவருகின்றார். சூழ்நிலையின் தாக்கமும், சுயமரியாதை இயக்க வேட்கையும், பாவேந்தர் பால் கொண்ட பற்றும் கடவுள் மேலிருந்த கருத்தை மாற்றிக் காலத்தின் தேவையைப் பாடவந்த கவிஞராக ஆக்கிவிட்டன.

கலப்பு மணத்தின் தேவையைப் பற்றிக் கவிதைபல பாடிய இவர் தாமும் கலப்பு மணம் செய்து கொண்டு தம் பிள்ளைகட்கும் கலப்பு மணம் செய்வித்துத் தம் கொள்கைக்கு வெற்றிதேடித் தந்துள்ளார். "அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" என்னும் வள்ளுவன் வாக்கைத் தோல்வியுறச் செய்த பெருமை இவர்க்குண்டு

சாதிசமயங்களுக்குள் ஆட்படாமை - நன்றி மறவாமை - நட்பைப் பேணல் - கொள்கைப் பிடிப்பு - குறிக்கோள் வாழ்வு - உதவும் உள்ளம் - ஒட்டார் பின் செல்லாமை - ஆசிரியர்ப் போற்றல் - ஆகியன இவர்தம் இயல்பிற் சில.

"சங்கப் புலவர் தம் பாடலே பாடல்" என்பதில் அழுத்தமான நம்பிக்கை உடைய இவர் பாட்டுலகில் பாரதியாரைப் பாட்டனா கவும், பாரதிதாசனாரைத் தந்தை - யாகவும் கருதிக் "குலமுறை கிளத்தும்" கொள்கையுடையராக விளங்குகிறார்.

பெரும்பாலும் "தன்னை மறந்த லயம் தன்னில்" இருக்கும் இயல்பினர். "புட்டி"களின் துணையால் அன்று; எட்டியவரை சிந்திக்கும் இயல்பினால். கனவிலும் கவிதைபாடுவது என்பது இவருக்கே உள்ள தனித் திறனாகும். கனவிற்பாடிய கவிதையை மறுநாள் காலையில் எழுந்து வரிமாறாமல் எழுதிவிடும் இவரது ஆற்றல் வியப்புக்குரியது. இஃது இயற்கை வழங்கிய அருட் கொடை என்றே கூறல் வேண்டும்.

"அழகின் சிரிப்பு" என்ற இவர்தம் கவிதை 1950ஆம் ஆண்டு கோவையில் நடந்த முத்தமிழ் மாநாட்டில் முதற் பரிசுக்குரிய தெனப் பாவேந்தர் பாரதிதாசனால் தேர்ந்தெடுக்கப்பெற்ற சிறப்பினை யுடையது. 1966இல் "முடியரசன் கவிதைகள்" என்ற நூலும், 1973இல் "வீரகாவியம்" என்ற நூலும் தமிழக அரசின் பரிசிலைப் பெற்றன. சிறப்புக்குரிய பலபாடல்கள் சாகித்திய அகாதெமியால் இந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

1966இல் பறம்பு மலையில் நடந்த பாரிவிழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் இவர்க்குக் "கவியரசு" என்னும் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தார். 1979ஆம் ஆண்டு பெங்களூர் உலகத் தமிழ்க் கழகத்தினர் இவரை அழைத்துப் பொன்னாடை அணிவித்துப் பொற்பேழையும் வழங்கினர். இதுபோலவே இவர்பாற் பயின்ற மாணவர் சிலர் இவர்தம் மணிவிழா நாளன்று (7-10-1979) பொன்னாடை போர்த்துப் பொற்கிழி வழங்கி மகிழ்ந்தனர்.

*1980 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக மாநில இலக்கிய அணி, கவிஞரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவினை நடத்தியது. அப்பொழுது கழகத்தின் சார்பில் டாக்டர் கலைஞர் அவர்கள் பத்தாயிரம் வெண்பொன் பொற்கிழி வழங்கிப் பாராட்டிச் சிறப்புச் செய்தார் 1983 ஆம் ஆண்டு தமிழகப் புலவர் குழு 'தமிழ்ச் சான்றோர்' என்னும் விருது வழங்கிச்சிறப்பித்தது.*

*எல்லா நம்பிக்கைகளிலும் மேலானதாக அவர் கொண்டிருப்பது "என்றும் நானோர் இளைஞன்" என்ற நம்பிக்கையே. இந்த நம்பிக்கை சுவையும், பயனும் முதிர்ந்த பல கவிதைகளை மேலும் தரும் என்று நம்புவோமாக.*

## தமிழ்வாழ்த்து

ஆழமாப் பயின்றே னல்லேன்
அகலமும் அற்றே யாகும்
யாழநின் னருளா லம்மே
யாப்பென ஒன்று கட்டிச்
சூழும்நின் னடிக்கே சூட்டிச்
சொக்கிநான் வணங்கு கின்றேன்
ஏழையேன் இளகும் நெஞ்சில்
என்றும்நீ இருத்தல் வேண்டும்

-முடியரசன்

# 1
# கதிரெழு காதை

உலகெலாம் உய்ய வைக்கும்
உயரிய கொள்கை யாவும்
நிலவிய தொகையும் பாட்டும்
நிகழ்த்திய சங்கம் ஏறி
அலகிலாப் பெருமை பூண்டாள்
அன்னையாம் தமிழ ணங்கின்
மலருலாம் அடிகள் வாழ்த்தி
மகிழ்வுற மனத்துள் வைப்பாம் 1

யாதும்நம் ஊரே யாகும்
யாவருங் கேளிர் என்னும்
கோதிலாக் கொள்கை முற்றுங்
குறித்திடும் பாட லொன்றை,
ஓதுவார் உள்ள மெல்லாம்
உவந்துவந் தேத்தும் வண்ணம்
ஓதினான் [1]கணியன் என்னும்
ஒப்பிலாச் சங்கச் சான்றோன் 2

விரிமனக் கொள்கை யெல்லாம்
விரித்திடுஞ் சங்கப் பாட்டுக்
குரியவன் கணியன் என்னும்
ஒருதனிப் புலவ னான
குரிசிலை உலகம் போற்றக்
கொடுத்தது தமிழ்ப்பூங் குன்றம்
சிறியதே எனினும் மிக்க
சிறப்பினாற் பெரிய தாகும் 3

[1] கணியன் பூங்குன்றனார்.

இலக்கியப் பண்பா டின்னும்
இருக்கிற தென்று கூறித்
துலக்கிடச் செட்டி நாடே
துணையெனச் சொல்ல லாகும்
நலத்தகும் அந்நாட் டுள்ள
நமதுபூங் குன்றுக் கின்று
சொலப்படும் பெயரோ நல்லோர்
சூழ்மகி பாலன் பட்டி 4

பொருளினால் மிகுந்த மேலோர்
புலமையிற் சிறந்த நூலோர்
அருளினால் இரங்கும் நல்லோர்
அன்புடன் பண்பும் உள்ளோர்
குறளினால் உரைத்த கொள்கை
குறிக்கொளும் இல்ல றத்தார்
மருளினால் திரியா மாந்தர்
மதியினார் வாழும் நல்லூர் 5

திரைவழி கடந்து சென்று
திறமையால் ஈட்டு வாரும்
[1]செறுவழி உழுது செல்வம்
சேர்த்ததை உதவு வாரும்
தருவழி யறிந்து செல்வம்
தக்கவர்க் கருளு வாரும்
ஒருவழி அறமே யாக
உலவிடும் நல்லூர் அவ்வூர் 6

இளஞ்சிறார் பயிலும் பள்ளி
இருப்பதங் கொன்றே ஒன்று
புழங்குவார் இருவர் மூவர்
போய்வரும் தெருவி ரண்டு
வழங்கிடும் கடைகள் மூன்று
வடிவினிற் சிறிய வாகும்
அளவுவார் மக்க ளீட்டம்
ஆயிரத் தைந்நூ றாகும் 7

[1] வயல்.

உருவினிற் சிறிய தவ்வூர்
    உளத்தினாற் சிறந்த மாந்தர்
மருவியங் குறைத லாலே
    மதிப்பினில் உயர்ந்த தாகும்
[2]உருவுகண் டெள்ளல் வேண்டா
    ஓதுவ தறநூல் அன்றோ?
[3]உரியவர் நல்ல ரானால்
    ஒருநிலம் நல்ல தாகும்

வளரிளங் காடு சூழ்ந்து
    வனப்பினிற் பொலிந்து தோன்றும்;
[4]அளறிடை விளைந்து நிற்கும்
    அணிவயல் அழகு கூட்டும்;
[5]களமர்கள் சென்று சென்று
    கடமைகள் ஆற்றி மீள்வர்;
குளமெலாம் மீன்கள் துள்ளிக்
    குதித்திடுங் காட்சி யுண்டு. 9

புனல்தரு மணிமுத் தாறு
    புறத்தினிற் சூழ்ந்து நிற்கும்;
இனமலர் பூக்குஞ் சோலை
    எழில்தரும் இயற்கைக் காட்சி
மனமதில் அமைதி காட்டி
    மதிவளர் புலமை கூட்டும்;
கனவுல கொன்று காட்டிக்
    கவிதையும் படைத்துக் காட்டும் 10

குளங்களில் நிறையும் நீர்தான்
    குறையினும் ஆங்கு வாழ்வோர்
உளங்களில் நிறையும் ஈரம்
    உலருதல் என்றுங் காணார்
வளங்களிற் சுருங்கு மேனும்
    வழங்கலிற் சுருங்காக் கையர்
களங்களிற் பதர்க ளுண்டு
    காளையர் மணிகள் போல்வர் 11

[2]குறள் 667, [3]புறம் 187
[4]சேறு, [5]உழவர்

நிழல்களே சாயும் அன்றி
நிலையினிற் சாயா நெஞ்சர்
கழனியில் வரம்பு செய்வர்
கற்பதில் வரம்பு செய்யார்
உழவினிற் களைகள் தோன்றும்
உறவினிற் களைகள் காணார்
அழல்களே சுடுவ தன்றி
அவர்மொழி சுடுவ தில்லை 12

உழுகலங் குழிகள் செய்யும்;
ஒருவர்மற் றொருவர்க் காகக்
குழியகழ் வினைகள் செய்யார்
கூடியே வாழ்ந்து நிற்பர்,
புழுங்குதல் அரிசிக் கன்றிப்
புந்தியில் அதனைக் கொள்ளார்
பழகுதற் கினியர் அந்தப்
பகுதியில் வாழும் மாந்தர் 13

குலவுவார் நடந்து செல்லக்
குறுவழி கொண்ட தேனும்
உலகுளார் நடந்து செல்ல
உயர்வழி பலவுஞ் சொல்லி
அலகிலாப் பெருமை பூண்ட
அரும்பெரும் [1]பாடல் தந்து
நிலமெலாம் புகழ்வி ரித்து
நிலவுவ தவ்வூர் ஆகும் 14

சிலவிதை தூவி விட்டுச்
செந்நெலாற் களஞ்சி யத்தைக்
குலவுற நிறைத்துக் காட்டுங்
குடியினர் வாழுஞ் சிற்றூர்
உலகினர் வியக்கும் [2]பாடல்
ஒன்றினைக் கொடுத்து விட்டுப்
பலபல பாடல் கொண்டு
பல்கிடுஞ் சிறப்பிற் றாகும் 15

2. 'யாதும் ஊரே'

பெருமைசேர் பூங்குன் றத்துப்
பீடுயர் வணிகர் தம்முள்
கருணைவாழ் மனத்தர் முத்துக்
கருப்பனென் றொருபேர் தாங்கும்
திருவினார் துணைவி யான
சிவப்பியார் மணிவ யிற்றுள்
கருவிலே உருவ மான
கதிரவன் எழுந்தான் அம்மா! 16

பெற்றவர் உள்ளம் பொங்கப்
பிறந்தநல் வீடும் ஊரும்
பெற்றொளி விளங்கப் பண்டை
இலக்கியம் பிறங்கித் தோன்றக்
கற்றவர் நெஞ்ச மெல்லாம்
கதிர்விடத் தமிழ வானில்
உற்றெழு கதிரைக் கண்டாள்
உவந்தனள் தமிழ்த்தாய் அங்கே 17

விசுபுரட் டாசித் திங்கள்
வெள்ளியாம் இரண்டாம் நாளில்
பசுபதிக் குரிய தென்று
பகருமா திரைநன் னாளில்
பசுமையிற் பொலியும் அந்தப்
பதியினர் பெற்றோர் மற்றோர்
நசைமிகு தமிழ்த்தாய் செய்த
நற்றவப் பயனைக் கண்டார் 18

கதிரொளி தரும்பிள் ளைக்குக்
கதிரேசன் எனும்பே ரிட்டார்
மதியொளி முகத்திற் கண்டு
மகிழ்ந்தனர் உற்றார் பெற்றார்
எதிரென எவரு மில்லா
இளம்பிள்ளை இரண்டாண் டாகப்
புதுமெரு குடனே நாளும்
பொலிவுற வளர்ந்த தங்கே 19

வரும்பகை யனைத்துந் தாங்கி
வளர்தமிழ் மொழிக்கோர் ஆக்கம்
அரும்புதல் காணின் ஆங்கே
அல்லலும் அணுகு மாபோல்
பெருங்கதிர் மணியைப் பாழ்நோய்
பிடித்தது மூன்றாம் ஆண்டில்
[1]இரும்படர் தந்த நோயை
இளம்பிள்ளை வாதம் என்றார் 20

செஞ்சுடர்ப் பரிதி கண்டோர்
சிந்தையுள் மகிழுங் காலை
அஞ்சிடு மாறு வாழ்வில்
ஆரிருள் படர்ந்த தம்மா!
பிஞ்சினைப் பற்றும் நோயாற்
பெற்றவர் நைந்து நொந்த
நெஞ்சின ராகி நாளும்
நெடிதுயிர்த் தங்கு வாழ்ந்தார் 21

காற்குறை யதனைக் கண்டு
கலங்கின ரேனும் பெற்றோர்
மேற்குறை நேரா வண்ணம்
விழிப்புடன் காத்து வந்தார்
பார்க்குரை செய்ய வல்ல
பண்டித மணியா வாரென்
றார்க்கது தெரியும்? காலம்
ஆக்கிடும் செயல்தான் என்னே! 22

[1]பெருந்துயர்,

## 2

# கலைபயில் காதை

திண்ணையிற் பள்ளி வைத்தே
　　தெளிவுறக் கற்கக் கல்விப்
பண்ணையென் றதனைக் கொண்டே
　　பயின்றனர் அற்றை நாளில்;
எண்ணுடன் எழுத்தும் மண்ணில்
　　ஏட்டினில் எழுதி ஓதிக்
கண்ணென மதித்துப் போற்றிக்
　　கல்வியை ஓம்பிக் காத்தார் 1

பலர்புகழ் கல்வி கற்கப்
　　பச்சிளஞ் சிறுவர் எல்லாம்
புலருமுன் விழித்துக் கொள்வார்
　　புள்ளெனப் பறந்து செல்வார்;
மலர்விரல் கொண்டு மண்ணில்
　　வடிவுற எழுதிக் காட்டி
அலர்சிறு வாயால் ஓதி
　　அவரவர் முறைவைப் பாரே 2

எழுத்தறி வித்த ஆசான்
　　இறைவனென் றெண்ணி வந்தார்
பழுத்தநல் லறிவும் அன்பும்
　　பண்புடன் கருணை நெஞ்சும்
வழுத்திடுந் தோற்ற முங்கொள்
　　வானவன்[1], பயில வந்தோர்
தழைத்திடல் ஒன்றே கொண்டு
　　தண்ணளி சுரப்பன் நன்றே 3

[1]கொள்வான் அவன்.,

மூவிரண் டாண்டு செல்ல
முதன்முதல் தொடங்குங் கல்வி
நாவினில் ஓதி ஓதி
நலம்பெற விழைந்து பள்ளிக்
கோவிலுட் புகுந்த தந்தக்
குலக்கதி ரேசப் பிள்ளை
பூவினுள் மணிவண் டொன்று
புகுந்தது தேனை மாந்த 4

பழுதற எழுதக் கற்றுப்
படித்தனன் நெடுங்க ணக்கை
அழகிய ஆத்தி சூடி
அறஞ்சொலும் உலக நீதி
விழைவுடன் ஓதி ஓதி
விரைவினிற் கற்றுத் தேர்ந்து
தொழுதகும் ஆசா னுக்குத்
தொடுத்தனன் புகழின் ஆரம் 5

படித்தனன் ஏழு திங்கள்
பயின்றது போதும் என்று
தடுத்திட எண்ணி முற்றுப்
புள்ளியும் தந்தை வைத்தார்
அடிக்கடி படித்த பாடல்
அடிமனத் தெழுந்து நின்று
நடித்ததோர் இன்பக் கூத்து
நாளெலாம் நினைந்து பார்த்தான் 6

பள்ளியில் ஏழு திங்கள்
பயில்கதி ரேசப் பிள்ளை
தெள்ளிய மதிய ராகித்
தேர்ந்தநற் புலவ ராகி
அள்ளிய புகழாம் செல்வம்
அளப்பில பெற்றான் என்றால்
உள்ளவும் படுமோ அந்த
ஓய்விலா உழைப்பை அம்மா! 7

இருமொழி வல்ல ரானார்
இனியசொல் வல்ல ரானார்
உரைசெய உரிய ரானார்
உயர்கவி தருவ ரானார்
பொருள்நயம் தெரிய லானார்
புகழும்நூல் வரைய லானார்
வருமிவை திங்கள் ஏழில்
எவ்வணம் வாய்த்த வம்மா! 8

ஒருமையிற் கற்ற கல்வி
உதவிடும் எழுமை என்ற
மறைமொழி புகன்ற வாய்மை
மறைமொழி யாகா தன்றோ?
[1] 'தெரிதரும் முன்னை நூல்கள்
தெளிவுறக் கற்கும் போது
பரிவுடன் பழைய பாடம்
படிப்பபோல் இருந்த' தென்றார் 9

திண்ணையில் அமைந்த பள்ளி
திருத்திடும் ஆசாற் சார்ந்தங்
கெண்ணுடன் எழுத்துங் கற்கும்
இளையநற் பருவத் தாரைக்
கண்ணெனும் வணிக நோக்கில்,
கலத்தினிற் செலவி டுத்தல்
பண்ணுயர் செட்டி நாட்டுப்
பழங்குடி வழக்க மாகும் 10

வணிகர்தம் குலத்து வந்த
வழக்கினால் இலங்கை யென்னும்
அணிநகர்க் குய்த்து வைத்தார்
அக்கதி ரேசன் தந்தை;
பணியினை ஏற்ற பிள்ளை;
பதினோராண் டகவை கொண்டான்,
துணிபகர் கடையில் அந்தத்
துய்யவன் பணிமேற் கொண்டான் 11

[1] பண்டித மணியார் கூற்று

முத்தமிழ் அளக்க வல்ல
　　முழுமதி பெறுவான் அங்கே
அத்துணி அளந்து விற்றான்
　　அவன்நிலை யாரே கண்டார்
புத்தகம் எழுதுங் கையால்
　　புதுத்துணி மடித்துத் தந்தான்
[1]பத்துடன் தொகையைச் சொல்வான்
　　பணத்தொகை விலையைச் சொன்னான் 12

தொகைஎனும் நூல்சொல் வாயால்
　　துணித்தொகை பகர்ந்த போதும்
தகுதியின் மிக்க சான்றோர்
　　தம்முடன் பழகி வந்தான்
வகைபடு துணிக ளெல்லாம்
　　வாணிகம் செய்யும் போதும்
அகமொரு தனித்த போக்கை
　　அவாவியே சென்ற தங்கே 13

துணிகளைக் கைகள் பற்றும்
　　தூய்மையை நெஞ்சம் பற்றும்
[1]அணிகலை விழிகள் நோக்கும்
　　[2]அணிகளை உள்ளம் நோக்கும்
துணிநயம் விரல்கள் பார்க்கும்
　　சொல்நயம் சிந்தை பார்க்கும்
மணியவன் நினைவு முற்றும்
　　மற்றுமோர் உலகிற் செல்லும் 14

நடந்தன ஆண்டு மூன்று
　　நயந்துணி விலைகள் பேசித்
தொடர்ந்தது விற்கும் செய்கை
　　துணிபடு மாறு, தந்தை

---

[2]. பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்.

[1]. அணியும் ஆடை (யை), [2]. உவமை முதலான அணிகளை

கடந்தனர் வாழ்வை என்ற
    கடுந்துயர் தருஞ்சொற் கேட்டுப்
படர்ந்தனன் விரைந்து தன்னைப்
    படைத்ததாய் நாட்டை நோக்கி 15

தந்தைதாம் பிரிந்தார், ஆனால்
    தமிழெனும் தாயைக் காக்க
வந்திவண் தங்கி விட்டான்
    வாழ்வுக்கு வழியைத் தேடிச்
சிந்தையைப் பறக்க விட்டான்
    சிலபகல் கழிந்த பின்னர்
வந்தது மீண்டும் வாதம்
    பறந்திட வழியே யில்லை 16

முற்றிய வாத நோய்தான்
    முழுவலி கொண்டு தாக்க
வற்றிய காலைப் பெற்றான்
    வளர்கதி ரேசன் அந்தோ!
பெற்றவள் அதனைக் கண்டு
    பெருந்துயர் உற்றா ளேனும்
பற்றுளங் குறைய வில்லை
    பரிவினைச் சொரிந்து நின்றாள் 17

ஈன்றவள் மனத்திற் கொண்ட
    இடரினைப் போக்கு தற்கோ
[1]நான்றகால் தளர்ச்சி போக்கி
    நன்கனம் நடப்ப தற்கோ
ஊன்றுகோல் ஒன்று பற்றி
    உரத்துடன் நிமிர்ந்து நின்றான்
சான்றவர் போற்று மாறு
    தண்டுகொண் டங்கு நின்றான் 18

1. தொங்கிய.

தலைமகன் இவனுக் குற்ற
தாழ்வினைக் கண்டு நொந்தாள்
'இலைநிகர் இவனுக் கென்ன
இவனைநான் உயர்வு செய்வேன்
கலைமலி புலமை ஈவேன்
கதிரொளி பரவ' வென்று
தலையளி சொரிந்து நின்றாள்
தமிழன்னை அவனை நோக்கி 19

தன்னுளே தங்கி நின்று
தனிநடம் புரியும் எங்கள்
அன்னையாம் தமிழ ணங்கின்
[1]அடிகளை எண்ணுந் தோறும்
இன்பெலாம் ஒருங்கு கண்டான்
இவன்மனம் உருகக் கண்டான்
அன்பெலாந் திரண்டு தாயின்
ஆரமு துண்டு வந்தான் 20

பள்ளியில் ஆத்தி சூடி
படித்ததை நினைந்து பார்த்தான்;
தெள்ளிய இன்பம் இந்தச்
சிற்றடி தருமேல் மற்றை
உள்ளுறை இலக்கி யங்கள்
ஊற்றெனச் சுரந்து நெஞ்சை
அள்ளுமே எனநி னைந்தான்
ஆய்ந்தனன் ஏடு தேடி 21

கிடைத்தது கம்ப நாடன்
கிளத்திய காப்பி யந்தான்
படித்தனன்; எங்கோ முன்னர்ப்
படித்தது போன்று ணர்ந்தான்;
முடித்திடத் தடைக ளில்லை
மூழ்கினன் இலக்கி யத்துள்;
அடித்தளத் தூறி வந்த
அவாவினால் வளர்ந்து விட்டான் 22

[1]திருவடி, பாடல்வரி.

இனியநல் லார்வம் விஞ்ச
இனுஞ்சில தேடிப் பெற்றான்;
கனிவுடன் விளக்கிக் கூறிக்
கற்பிக்கும் ஆசா னின்றித்
தனிமையில் அனைத்துங் கற்றுத்
தக்கதோர் புலமை பெற்றான்
தனிமொழி தமிழே யன்றோ
தனித்திருந் ததனைக் கற்றான் 23

அரும்பிய புலமை யாற்றல்
அழகிய மொட்டும் ஆகி,
விரும்பிய போதும் ஆகி,
விளைந்திடும் நறவம் மாந்தச்
சுரும்பினம் மொய்க்கும் வண்ணம்
தூயநன் மலரும் ஆகி
விரிந்தது; மணமும் சற்றே
வீசிடத் தொடங்கிற் றங்கே 24

கவர்மணம் நுகர்ந்த மாந்தர்
களித்தனர் புகழ்ந்து நின்றார்;
அவனெனும் சொல்லை மாற்றி
அவரென அழைக்க லுற்றார்;
நவையுறு கால்கள் எங்கும்
நடந்திட இயல வில்லை;
குவிதரும் புகழோ யாண்டும்
குலவிட நடந்த தங்கே 25

பொறியின்மை கண்டு நெஞ்சம்
புழுங்கிலர். நாளும் நாளும்
அறிவறிந் தொழுகல் வேண்டி
ஆள்வினை உடைய ராகி
நெறியிலே நடந்து வந்தார்;
நிலைபுகழ்க் கலைகள் கற்கும்
குறியிலே குறையா ராகிக்
கூடிய ஆர்வங் கொண்டார் 26

கசடற மொழியில் தேற
இலக்கணங் கற்க எண்ணும்
நசையின ராகி நாளும்
நயந்தது பயின்று வந்தார்
அசைவிலா ஊக்கங் கொண்டே
ஆசானை அணுகிக் கற்க
இசையுநர் ஒருவர்த் தேடி
இருந்தன ராக அந்நாள் 27

படித்தநல் லிலக்க ணத்திற்
பழுத்ததோர் புலமை யாலே
அடித்துரை யாற்ற வல்ல
அரசன்சண் முகனார் நட்புக்
கிடைத்தது கதிரே சர்க்குக்
கிளர்ந்தெழும் உணர்வு பொங்கப்
படித்தனர் அவர்பால் நன்கு
பழையதொல் காப்பி யத்தை 28

சொல்லிய ஆசான் பாடஞ்
சொல்லுமுன் உணர்ந்து கொண்ட
கல்லியற் புலமை கண்டு
நயந்தவர் வியந்து நின்றார்
முல்லையின் மணத்தைக் காட்ட
முன்வருந் தென்ற லானார்;
கல்வியின் மணியைத் தீட்டிக்
கடைந்தொளி நல்கி நின்றார் 29

தன்னுணர் வுந்தித் தள்ளத்
தணிவிலா ஆர்வத் தாலே
தென்மொழி தேர்ந்த பின்னர்
வடமொழி தெளிவான் வேண்டி
நன்னய மொழியில் வல்ல
நல்லவர்த் தேடி நின்றார்;
பன்மொழி கற்றுத் தேறல்
பைந்தமிழ்க் காக்கந் தானே 30

சாத்திரங் கற்றுத் தேர்ந்த
　　[1]நாரணன் என்று சாற்றும்
சாத்திரி ஒருவர்க் கண்டார்
　　தம்முளக் கருத்தைச் சொன்னார்,
பாத்திரம் ஏற்ற தென்று
　　பயிற்றிட அவரும் நேர்ந்தார்;
ஏத்திடும் வண்ணங் கற்றார்;
　　இருமொழி வல்ல ரானார் 31

வடமொழிப் பயிற்சி முந்நூல்
　　வகுப்பினர்க் குரிய தென்பார்
அடஇது வியப்பே யன்றோ?
　　அப்படி மொழிதான் உண்டா?
இடமுடை ஞாலத் துள்ளார்
　　எம்மொழி விழைவ ரேனும்
திடமுடன் முயல்வ ராகின்
　　தெள்ளிதின் உணர லாகும் 32

துளிர்த்தெழும் ஆர்வம் ஒன்றே
　　துணையெனக் கொண்டார்; ஆற்றல்
பளிச்சிடும் வண்ணம் தொன்மைப்
　　பழமொழி கற்றுத் தேர்ந்தார்;
அளித்திட ஈட்டு கின்ற
　　அக்குடிப் பிறந்த செம்மல்
கொழித்திடுங் கல்விச் செல்வம்
　　குவித்தனர் வழங்கு தற்கே 33

அம்மொழி வல்லார் தாமும்
　　ஆவென வியந்து நிற்கச்
செம்மையிற் றெளிந்து தேர்ந்து
　　செழும்புலம் மிளிரப் பெற்றார்;
எம்மொழி பயின்றா ரேனும்
　　[1]இரும்புலம் பெற்றா ரேனும்
தம்மொழி மறந்தா ரல்லர்
　　தமிழராய் வாழ்ந்து நின்றார் 34

---

[1]நாரணன் - தருவை நாராயண சாத்திரியர் இவரிடம் ஐந்தாண்டுகள் கதிரேசர் வடமொழி பயின்றார். [1]பெரும்புலமை.

வாய்மொழி கல்லா ராகி
வருமொழி மட்டுங் கற்றுத்
தாய்மொழி பழித்து வாழ்ந்து
தமிழரென் றிருப்பா ருள்ளார்;
ஆய்மொழி பயின்றும் மற்றை
அயன்மொழிக் கடிமை யாகும்
நாய்மனங் கொள்வார் தாமும்
நந்தமிழ் நாட்டில் உள்ளார் 35

அறிவினை வளர்க்க வேண்டி
அயன்மொழி ஒன்றைக் கற்றார்;
செறிதரும் அறிவைக் கொண்டு
செந்தமிழ் பேணி நின்றார்;
நெறிதடு மாற வில்லை
நெடும்புகழ்த் தமிழை என்றும்
குறைபடப் பேச வில்லை
குலக்கதி ரேசர் மாதோ 36

பெற்றதாய் மொழியிற் பற்றும்
பிறமொழி தனில்ம திப்பும்
உற்றிடல் வேண்டு மென்னும்
உளக்குறிப் புணர்த்தல் போலப்
பெற்றதம் பெயரின் முன்னர்ப்
பிறங்குதல் தமிழே யாக
மற்றது வடமொ ழிக்கண்
மருவிய [1]பெயரர்ஆனார் 37

இருமொழி நூல்கள் தேடி
எப்பொருட் டாகக் கற்றார்?
பொருள்வரும் புகழும் வந்து
பொலிந்திடும் என்றா கற்றார்?
ஒருசிறி தேனும் அவ்வா
றுளத்தினிற் கருத வில்லை;
இருள்படர் வாழ்வில் இன்பம்
எய்துதல் குறித்தே கற்றார் 38

[1]பெயர் - கதிரேசன். கதிர் + ஈசன்.

ஓதிய ஆத்தி சூடி
    ஊன்றுகோ லாகக் கொண்டே
நீதிநூற் படிகள் ஏறி,
    நெடியகாப் பியங்க ளென்னும்
வீதிசேர் ஊர்கள் சுற்றி,
    வீறுகொள் சங்கச் சான்றோர்
ஓதிய இலக்கி யத்தின்
    உலகெலாம் உலவி வந்தார் 39

சமயநூற் பொய்கை மூழ்கிச்
    சாத்திரக் கரைகள் கண்டார்;
அமைவுறும் வடமொ ழிக்கண்
    ணாறுகள் கடந்து வந்தார்
இமிழ்கடல் இலக்க ணத்தில்
    எழிலுற நீந்தி வந்தார்;
தமிழ்மொழிப் பெருமை யெல்லாம்
    சாற்றியே உலவி வந்தார் 40

பெற்றிடும் ஒன்றைக் கொண்டே
    பத்தெனப் பெருக்கிக் காட்டக்
கற்றவர் குடியில் வந்த
    கதிரேசச் செம்மல் தாமும்
பெற்றதைக் கொண்டே நாளும்
    பெருக்கினர் கல்விச் செல்வம்
சுற்றமும் நட்புந் தம்மைச்
    சூழ்ந்திட வாழ்ந்து வந்தார் 41

## 3
# சபைகாண் காதை

திருக்கோயில் பலஎழுப்பச் சிதைவிடத்துத்
திருப்பணிகள் எனும்பேரால் திருத்திக் கட்ட,
வெருக்கொள்ளும் வெயில்நாளில் வேட்கையுடன்
வருவார்க்கு விழைந்தெழுந்து தண்ணீர்ப் பந்தர்
உருக்கொள்ளு மாறமைக்க, உணவுதரும்
அறச்சாலை உண்டாக்கக் குளங்கள் தோண்டப்
பெருத்தநிதி எடுத்தெடுத்து வழங்குவது
பெருமைஎனப் பேணுவது வணிகர் நாடு! 1

கடல்கடந்து நெடுந்தொலைவு சென்றிடுவர்
கணக்கிலநாள் அங்கிருந்து கொண்டு விற்பர்;[1]
மடல்வரைந்து மனைக்கிழத்தி மனமகிழ
மறவாமல் உய்த்திடுவர்; நெடுநாள் தொட்டுத்
தொடர்ந்தெழுந்த ஆள்வினையால் தொகைமிகுத்துத்
தாய்நாட்டுத் துறைமுகத்தை நோக்கி வந்து
படர்ந்துவரும் ஆர்வத்தாற் கால்வைப்பர்
பலபலநல் லறஞ்செய்யக் கால்கோள் வைப்பர் 2

வழங்குதலை வழக்காக்கி வாழ்ந்திருந்த
வணிகர்சிலர் புதியஅறஞ் செயநி னைந்தார்
முழங்குதிரைக் கடல்கடந்து முயன்றுபெறுஞ்
செல்வமெலாம் ஈந்துவக்க முனைந்து வந்தார்;
எழுங்கலைகள் பலவளருங் கழகங்கள்
எழிலறிவுக் கலைக்கோவில் எழுப்பி நின்றார்;
பழங்கலைகள் பதிப்பித்தார் தமிழிசைக்குப்
பயன்பட்டார் மாறிவருங் காலம் நோக்கி 3

[1] வெளிநாட்டு வாணிகத்தைக் குறிக்கும் செட்டி நாட்டு வழக்குச் சொல்.

கணக்கிட்டுச் செட்டோடு வாழுமவர்
    கல்விக்குக் கணக்கின்றி வழங்கி வந்தார்;
பணக்கட்டுப் பாடின்றி வழங்கியதால்
    பாரிலுளார் வள்ளலென அவரைச் சொன்னார்;
மணக்கட்டும் அறிவுமணம் மலரட்டும்
    கலைமலர்கள் எனவிழைந்து செல்வ நீரை
அணைக்கட்டுப் போடாமல் திறந்துவிடும்
    அழகுளத்தைப் பெருமனத்தை வியவார் யாரே? 4

நல்லறத்தை விலைகொடுத்து வாங்குவது
    நாகரிகச் செயலன்று, நாளும் ஓங்கும்
பல்வளங்கள் பெற்றவர்தாம் ஊருணிபோல்
    பழமரம்போல் மருந்துமரம் போல நின்று
நல்குதலை இயல்பாகக் கொளல்வேண்டும்
    நல்லவர்கள் ஒப்புரவென் றதைத்தான் சொல்வர்;
இல்லறத்தாள் மனமகிழத் தலையளித்தல்
    இயல்பன்றோ? விலைகொடுத்துப் பெறுவா ருண்டோ 5

சொலக்கேட்டு விழியிமைகள் இமைப்பதிலை
    தூண்டுவதால் ஈகைமனம் பிறப்ப தில்லை;
மலைக்காட்டில் திரிமயில்கள் தோகைதனை
    வற்புறுத்திக் கூறுவதால் விரிப்ப தில்லை,
மலைக்கோட்டு மாமுகிலும் பிறர் சொல்லை
    மதித்தெழுந்து மழைநீரைப் பொழிவ தில்லை;
தலைக்கொள்ளும் இயல்புணர்வால் மனங்குளிர்ந்து
    தானுவந்து வழங்குவதே ஈகை யாகும் 6

குலவிவருஞ் செல்வத்தைப் பெட்டகத்துட்
    குவித்தெடுத்துப் பார்ப்பதிலே என்ன கண்டோம்?
செலவுசெயத் தன்னலந்தான் வழியென்று
    தனித்துண்டு வாழ்வதிற்றான் என்னகண்டோம்?
பலவிருந்தும் உண்பதுவும் உடுப்பதுவும்
    [1]ஓரளவே; பகுத்துணர்ந்தால் உண்மை தோன்றும்;
உலவிவரும் [2]இயல்பினதை ஒடுக்காமல்
    ஊர்நலத்துக் குதவிவரல் இன்ப மன்றோ? 7

1. ‘உண்பது நாழி உடுப்பன இரண்டே’ (புறம்), 2. செல்வத்தை

ஈத்துவக்கும் இன்பத்தை நன்குணர்ந்த
இயல்புடையார் பலருண்டு செட்டி நாட்டில்;
சேர்த்தமைத்துத் தொகுத்திருந்து காத்துவரும்
செழுநிதியை வகுத்தளிக்க வல்லார் தம்முள்
வாழ்த்தெடுத்துப் பாடுதற்குத் தகுதியுளார்
வ. பழ. சா. பழநியப்பர் ஒருவ ராவர்
ஏத்துமவர்க் குடன்பிறந்து பின்னிற்கும்
இளையவரண் ணாமலையும் ஒருவ ராவர் 8

அடியவர்பால், அருந்தமிழை யுணர்ந்தவர்பால்
அளப்பரிய பற்றுடையார், அணுகி வந்த
மிடியவர்பால் இரங்குமனம் மிக்குடையார்;
மேலவரோ டுரையாடி மகிழுங் கொள்கைப்
பிடியுடையார், நெறியுடையார், பிறர்க்குதவும்
பேறுடையார், சிவமுடையார்; நாளும் இந்த
நடையுடையார் பழநியப்பர்; பின்வந்த
நல்லவரும் அவ்வணமே ஒழுகி வந்தார் 9

கற்றுணர்ந்தார் நல்லுறவும், கலந்தாடிக்
களிக்கின்ற செவியுணர்வும், வல்லார் வந்து
சொற்றதிரு முறைநூல்கள் செவிமடுத்துச்
சுவைக்கின்ற புலனுணர்வும் ஒருங்கு சேரப்
பெற்றொளிரும் பழநியப்பர் பெரிதுவந்து
பெரும்பொருள்கள் வழங்கிவரும் உணர்வும் கொண்டார்,
பெற்றபொருள் பிறர்மகிழத் தாம்மகிழப்
பிரிப்பதுதான் இன்பமென உணர்ந்து கொண்டார் 10

சிவநெறியும் பொதுநலமும் செவியுணர்வும்
சேர்ந்துறையும் பழநியப்பர் வாழும் மேலைச்
சிவபுரிக்குக் கதிரேசர் செலுந்தோறும்
தெள்ளியரைச் சந்திப்பார் நல்லநல்ல
கவிதருவார் பொருள்தருவார்; சமயத்தின்
கருத்துரைப்பார்; பழகியஅந் நல்லார் நட்புக்
கவரிலதாய்ச் செறிவினதாய் வளர்ந்ததனால்
கலைமகளும் திருமகளும் இணையக் கண்டோம் 11

கலைமகளின் திருவுளத்துக் குறிப்பறிந்து
களிநடஞ்செய் திருமகளும் இயங்கி வந்தாள்;
நிலைபெறுமோர் திருப்பணியை நிலையாத
உலகத்தில் நிகழ்த்துவது நிதிபெற் றார்க்குத்
தலையாய பணியாகும் எனுமுணர்வைத்
தகுபொழுதில் கதிரேசர் விதைத்து விட்டார்;
கலையாத ஆள்வினையர் பழநியப்பர்
கருத்துக்குள் முளைத்தெழுந்து கதிர்க்கக் கண்டார். 12

அரசன்சண் முகனார்தாம் தலைமை பெற
அவ்வூரில் அவையொன்று கூடிற் றாகப்
பரசுபுலஞ் சான்றோரும் வந்திருந்து
பற்பலநற் கருத்தெடுத்துப் பகர்தல் கேட்டுப்
பரிவுகொடு நன்காய்ந்து பாராட்டும்
படியாக முடிபொன்று படைத்து நின்றார்;
தரிசுநிலம் விளைநிலமாய்ப் பயனளிக்கச்
சபையொன்று காண்பதெனத் தீர்வு செய்தார் 13

நன்றாய்ந்து சீர்தூக்கி அவர்கண்ட
நலம்பயக்கும் முடிபதனால் நானி லத்து
நின்றார்ந்த புகழ்பரப்புஞ் சன்மார்க்க
சபையொன்று நெடிதோங்கி நிற்கக் கண்டோம்;
வென்றாரும் அறியாத தமிழ்தழைக்க
விளைநிலம் போற் கல்லூரி யொன்று கண்டார்;
சென்றாரும் எளிமையில்நூல் பயிலுதற்குச்
செந்தமிழ்நூல் நிலையமொன்றும் தொடங்கி வைத்தார். 14

தமக்காகத் தமிழ்வளர்ப்பார் சிலருண்டு
தமிழ்காக்கத் தமைவளர்ப்பார் சிலரும் உண்டு
நமக்கோஇவ் வுண்மைநிலை தெரியாது
நாவலிமை கொண்டவர்தாம் மயக்கி நிற்பர்;
தமிழுக்கே தமிழ்வளர்த்தார் தமைமறந்தார்
தம்பியையும் பழநியப்பர் பிணைத்துக் கொண்டார்
நமக்காக வாழ்ந்துவரும் பரம்பரையை
நாளெல்லாம் நினைந்துளத்தால் வாழ்த்து வோமே 15

கல்வியுடன் ஒழுக்கங்கள் பரவிவரக்
 கற்றுணர்ந்த சான்றோராற் பொழிவு செய்தல்,
பல்வகையில் துண்டறிக்கை அவைபற்றி
 அச்சிட்டுப் பலருக்கும் பயன்கொ டுத்தல்,
சொல்வளமை கொண்டிலங்கும் ஆசானைத்
 துணைக் கொண்டு மாணவர்க்குப் பயிற்று வித்தல்,
நல்லுணவும் உறைவிடமும் பயில்பவர்க்கு
 நல்கி உயர் தமிழ்கொடுத்தல் சபையின் நோக்கம், 16

எங்கெங்கே தமிழ்ச்சான்றோர் தமிழ்நாட்டில்
 இருக்கின்றார் அவரெல்லாங் குழுமி வந்து
சங்கங்கள் மொழியாய்ந்த செயல்போலத்
 தமிழாய்ந்து நூலாய்ந்து கண்ட வற்றை
இங்கெங்கள் செவிகுளிர மனங்குளிர
 இனிதளித்தார் மகிழ்வித்தார் ஏற்றந் தந்தார்;
பொங்குங்கள் மலர்மணம்போல் இச்சபையின்
 புகழ்மணமும் பரவிற்றுப் பூமி எங்கும். 17

இலக்கணநூல் வல்லுநரும் இலக்கியநூல்
 சொல்லுநரும் ஆசான்மா ராக நின்று
துலக்கமுற விளக்கமுறப் பயிற்றிய நற்
 றொண்டதனாற் பயன்பெற்றோர் அளவைச் சொல்ல
இலக்கமிலை, பல்கலைசேர் கழகங்கள்
 கல்லூரி பள்ளியெனும் இவற்றி லெல்லாம்
தலைக்கொளும்பே ராசிரியப் பொறுப்பினராய்ச்
 சான்றோராய்க் கவியரசாய்த் திகழு கின்றார். 18

தொடுவதெலாந் துலங்கவைக்குங் குடியில் வந்த
 தொடர்பதனால் பழநியப்பர் தொடங்கி வைத்த
நெடியபுகழ்ச் சன்மார்க்க சபைவ ளர்ந்து
 நிலைத்திருந்து துலங்குவதைக் காணு கின்றோம்;
விடுகதிர்போல் விளங்குகதி ரேசர், நெஞ்சின்
 விழைவிலுரு வானசபைத் தொடர்பால் குன்றில்
இடுவிளக்கின் ஒளிபோலத் தமிழ்நா டெங்கும்
 இசைபரப்பித் தமிழ்பரப்பி விளங்க லுற்றார். 19

நிலைத்தபணி புரிந்திருக்கும் பழநி யப்பர்
நிலையாமை தமக்குவரல் உணர்ந்து கொண்டார்
களைத்துடலம் பிணியுற்று வருந்தும் போதும்
கவலையெலாம் சபையின்மேல் வைத்தி ருந்தார்;
அலைத்தகடல் சூழிலங்கை சென்றி ருந்த
அண்ணாம லைக்குமடல் எழுதி வைத்தார்;
மலைக்காமல் சன்மார்க்க சபையை என்றும்
வளர்ப்பதுநின் கடமையென வரைந்தி ருந்தார் 20

பின்வந்த அவ்விளவல் தலைமை யேற்ற
பிறகுசபைப் பொறுப்பனைத்தும் கதிரே சர்க்கு
முன்வந்து சேர்ந்தமையால் தாமே நின்று
முழுநோக்கும் அதனிடத்துச் செலுத்தி வந்தார்,
வன்குன்றத் தோளுடையான், உழைப்புக் கஞ்சான்,
உழவனுக்கு வயலொன்று வாய்த்த தைப்போல்
பொன்குன்ற நகருறையும் புலவ ருக்குப்
புகழ்விளைக்குஞ் சபையொன்று கிடைத்த தையா. 21

பேருந்து முதலான ஊர்தி காணாப்
பெருமைத்தாம் அவ்வூரில்[1] ஆண்டு தோறும்
சீருந்தச் சிறப்புந்த விழாந டக்கும்;
செந்தமிழில் வல்லரெனச் செப்பு கின்ற
பேருந்துஞ் சான்றோர்தாம் பெரிது வந்து
வழியருமை பேணாது குழுமி வந்து
காருந்திப் பொழிவதுபோற் பொழிந்தி ருப்பர்,
களித்ததனுள் நனைந்திருப்பர் அவையோர் கேட்டு 22

ஒருவாரத் திருநாள்போல் சபையின் சார்பில்
ஊர்மகிழ நிகழ்வுறுமவ் விழாவுக் காக
வருவார்க்கும் ஆய்வுரைகள் அள்ளி யள்ளித்
தருவார்க்கும் நல்லுணவு வழங்குஞ் சாலை,
பொருள்வார்க்கும் அப்புலவர் தங்கு தற்குப்
பொலிவுதரும் உள்ளறைகள், கேட்க வந்து
நிறைவார்க்குப் பூம்பந்தர் அனைத்துந் தென்னை
நெடுங்கீற்றால் ஒப்பனையால் விளங்கச் செய்வர் 23

[1] மேலைச் சிவபுரி

எளிதாகச் சென்றுவரும் வாய்ப்பே யின்றி
இலங்கிடுமவ் வூருக்கு விழவு காண
வெளியூரில் வாழ்பவர்கள் சகடு கட்டி
விழைந்தோடி வந்தங்குக் குழுமு வார்கள்;
ஒளிகாலும் மணியெருதுக் கூட்டம் உண்ண
உருவாகும் முன்கூட்டி வைக்கோற் குன்றம்;
அளியாளர் ஒவ்வொன்றும் எண்ணி எண்ணி
அழகுறவே விழாநடத்தி வந்தார்அன்று. 24

நூலறிவும் நுண்மதியும் மாட்சி யுற்ற
நுழைபுலமும் நிறைசான்றோர் விழாவில் வந்து
வாலறிவுத் திறங்காட்டி உறைவர் பன்னாள்
வளர்பயிர்க்கு மழைபோல வாய்த்த தங்கே,
காலமுணர் கதிரேசர் புலவர் தம்பால்
கலந்துசவி மனமகிழ்ந்து செழித்து நின்றார்,
சாலவுணர் இவராலே சபையும், அந்தச்
சபையாலே இவருமுடன் வளரக் கண்டோம். 25

தாங்கற்ற வடமொழியிற் சிலநூல் தேர்ந்து
சபையுதவத் தமிழ்மொழியிற் பெயர்த்த ளித்தார்;
ஈங்குற்ற அவற்றையெலாம் வெளியீ டாக்கி
எம்சபைதான் உலகுக்குக் கொடுத்த தன்று,
வீங்குபுகழ் யாங்கணுமே கதிரே சர்க்கு
விரைந்ததனற் பரவியது; சபையின் பேரும்
ஓங்கியது; நாளுக்கு நாள்ம லர்ந்தே
ஒன்றற்கொன் றுதவியென வளரக் கண்டோம் 26

பதினாறாம் ஆண்டுவிழா சபைந டத்தும்
பருவத்தில் விரிவுரைகள் ஆற்ற வந்த
மதிவாணர் பலர்கூடிச் சிந்தித் தாய்ந்து
மகிபாலன் பட்டியெனும் பூங்குன் றத்துக்
கதிரேசர் சபைவளர ஆற்றுந் தொண்டும்
கற்றுணர்ந்த நற்புலமைப் பெருக்குங் கண்டு
பதிவான பெயராகி விளங்கும் வண்ணம்
பண்டிதமா மணியென்னும் பட்டம் தந்தார் 27

பலசிறப்புப் பெயரிவர்க்குக் கிடைத்த பின்பும்
பண்டிதர்க்குள் மணியென்னும் பட்டம் மட்டும்
உலகினர்க்குத் தெரிதருமா றுயர்த்திக் காட்ட
ஒளிநல்கும் மணியாகித் தமிழ்நா டெங்கும்
ஒலியெழுப்பும் மணியாகி ஓங்கி நின்றார்;
உவந்தளித்த விருதுக்கு மதிப்பும் தந்தார்;
புலமைக்குக் கிடைத்தபெயர் நிலைக்கும் வண்ணம்
போற்றியதைக் காத்தோம்பித் துலக்கிக் கொண்டார். 28

தனியரசாய்த் தமிழரசாய் விளங்கி வந்த
தகவுடைய [1]புதுக்கோட்டை மன்னர் தம்மை
இனியதமிழ்க் கல்லூரி தொடங்க வேண்டி
எடுத்துரைத்தார், கல்விதருங் கூட மெல்லாம்
இனியுரிமை தமிழுக்குத் தருதல் வேண்டும்
வடமொழியை எடுத்தியம்பும் நிலைய மெங்கும்
கனிதமிழைக் கற்பிக்க வேண்டும் என்று
வடமொழியுங் கற்றவர்தாம் சாற்றி வந்தார் 29

புலமிக்க கதிரேசர் தாய்மொ ழிக்குப்
புரிந்துவருந் தொண்டெல்லாம் சபையார் கண்டு
நலமிக்க அப்பணிக்குச் சிறப்புச் செய்ய
நாட்டமிகக் கொண்டவராய்ச் செட்டி நாட்டு
வளமிக்க மன்னரண்ணா மலையைக் கொண்டு
மணிப்புலவர் படமொன்றைத் திறந்து வைத்தார்;
தலைமைக்குத் தகுமணியார் நன்றி சொல்லிச்
'சபைக்குமுதல் மாணாக்கன் நான்தான்' என்றார் 30

எமக்கெல்லாந் தமிழமுதை ஊட்டி யூட்டி
எமதறிவை வளர்த்துநலந் தந்த தாயாம்
இமைக்குநிகர் எனநின்று தமிழைக் காக்கும்
இயல்புடைய நற்சபைக்கோர் ஊன்று கோலாய்த்
தமக்குநிகர் இலாமணியார் விளங்கி நிற்கத்
தழைத்துவரும் அருள்மனத்தர் பழநி யப்பர்
அமைத்தசபை இவருக்கோர் ஊன்று கோலாய்
அமைந்திருக்கத் தமிழ்பரவிச் செழிக்கக் கண்டோம் 31

[1]புதுக்கோட்டை மன்னர் அன்று வடமொழிக்கு ஆக்கந் தந்து வந்தார்.

உள்ளத்துள் உணர்வூட்டிப் பற்றுண் டாக்கி,
    உண்மைபெறும் பத்தியுடன் தொண்டு செய்ய
மெள்ளத்தன் னாளாக்கிப், பாடல் வல்ல
    மேலவர்தம் கூட்டத்துள் ஒருவ னாக்கி,
அள்ளித்தன் அருளெல்லாம் என்மேற் பெய்தாள்
    அழியாத வரமளித்தாள் தமிழ்த்தாய்; அந்தத்
தள்ளைக்கு நானடிமை யான திந்தச்
    சன்மார்க்க சபையென்னுங் கோவி லிற்றான் 32

நலந்தந்த சங்கரரும் [1]ஆட்டு வித்த
    நடேசருமென் தெய்வங்கள், நாளும் நாளும்
வலம் வந்தே அருள்பெற்ற கோவி லுக்குள்
    மல்லிங்க சாமியொரு சாமி, எற்குக்
குலந்தந்த தமிழ்தந்த முத்து சாமி
    கும்பிட்டு நான்மகிழ்ந்து நத்துஞ் சாமி;
உளம்தந்து பாருலகின் இயல்புங் காட்டி
    உய்வித்த செல்லப்பர் மற்றோர் தெய்வம் 33

கதிர்மணிபாற் கற்றுணர்ந்த தலைமா ணாக்கர்
    கான்முளையாய் அவர்க்குப்பின் விளக்குஞ் செம்மல்
புதுமுறையாற் றமிழாயும் புலமை யாளர்
    போதுமெனும் மனங்கொண்டு வாழும் நல்லர்
இதுசரியென் றவர்மனத்திற் கொள்வ ராயின்
    எப்பொருட்டும் பிடித்தபிடி விடாத நெஞ்சர்
முதுபுலவர் ஏற்றிருந்த சபைப்பொ றுப்பை
    முற்றுணர்ந்த மாணிக்கம் [2]ஏற்றுக் கொண்டார் 34

பொருட்டுறையில் சபைதளரும் நிலைய றிந்து
    பொறுப்பேற்ற மாணிக்கம் 'கல்விக் கீயும்
அருட்கொடையோர் இவ்வுலகில் இன்று முள்ளார்
    ஆதலினால் திரட்டுதும்யாம்' எனத்து ணிந்து
மருட்கடலுங் கடந்துபொருள் தொகுத்து வந்து
    வளர்க்கின்றார் மாணிக்கத் தூணாய் நின்று;
திருச்சபையும் சீனிதுணை [3]யாகி நிற்கத்
    திருக்குறள்போல் தன்னிறைவாற் பொலிதல் கண்டோம் 35

[1]க.சங்கரநாராயணப்பிள்ளை, நடேசஐயர், மல்லிங்க சாமி, முத்துசாமிப்புலவர், வீர.செல்லப்பனார் இவர்கள் ஆசிரியர்கள். [2]துணைவேந்தர் வ.சுப.மா. [3]பழநியப்பர் பெயரர் சீனிவாசன்

# 4
# மணம் புணர் காதை

ஆண்டுபதின் மூன்றானால் ஆடவர்தம்
திருமணத்தை அதற்கப் பாலும்
தாண்டவிட மாட்டார்கள் தனவணிகர்
வழக்கமிது; மரபின் கொள்கை
பூண்டொழுகும் குலத்துவரும் பூங்குன்றப்
புலவருக்கோ முப்பான் ஆண்டு
தாண்டியுமப் பேற்றுக்குத் தகுதிதர
அக்குலத்தார் தள்ளி நின்றார் 1

நூலொன்றும் பொருளுணர்ந்து நயமுணர்ந்து
நுவல்கின்ற நிறைபு லத்தார்
காலொன்றுங் குறையறிந்து பெண்கொடுக்கக்
கருதுபவர் எவரு மில்லை;
வேலொன்று தருபுண்ணில் வெந்தழல்தான்
வீழ்வதுபோல் வெந்து நொந்து
நாளொன்று வாராதோ எனக்கலங்கி
நலிந்துழன்றார் அவரை ஈன்றார் 2

குலம்பார்ப்பர், குவிசெல்வ வளம்பார்ப்பர்,
குடிபார்ப்பர், சீரும் பார்ப்பர்,
நலம்பார்ப்பர், கலன்பார்ப்பர், நடந்துவரும்
நடைபார்ப்பர், உடையும் பார்ப்பர்,
நிலம்பார்ப்பர், நாகரிக மனைபார்ப்பர்,
நிகழ்மணத்தில் அறிவு, பண்பு
நலம்பார்க்கும் நிலைமட்டும் மறந்திடுவர்
நகரத்தார் நிலைதான் என்னே! 3

மகனுக்குத் திருமணநாள் வாராதோ
எனஈன்றார் வருந்தி நிற்க,
தொகைமிக்க நூல்வல்லார் அதையுணர்ந்து
'துயர் விடுக என்பின் வந்தார்
மகிழ்வுக்கு வழிசெய்க மணஞ் செய்க
மற்றெனக்குத் தேவை யில்லை;
[1]பகலுக்கும் பயின்றிடுவேன் சபைவளரப்
பணிசெய்வேன்' எனப்ப கர்ந்தார் 4

உறுபிணியாற் கால்தளர்ந்த கதிரேசர்
உளந்தளரார், ஊன்று கோலின்
பெருவலியால் நாடெங்கும் நடந்துலவித்
தமிழ்பரப்பி, அதனைப் பேணாச்
சிறுசெயலால் தளர்ந்திருந்த தமிழ்மாந்தர்
செயலாற்ற ஊன்று கோலாய்
வருபவர்தாம் இவரென்று தெளியார்தாம்
மகட்கொடைக்கு மறுத்து வந்தார். 5

கல்விவளம் பரப்புவதாற் கதிரேசர்
புகழ்மணந்து காணும் செவ்வி
செல்வவளங் குறியாகக் கொண்டோர்க்குச்
செவ்வையுறத் தெரிய வில்லை;
அவ்வளவில் ஒருமணத்தைப் பொருட்டாக
அவர்மனத்திற் கொள்ளா ராகி
எவ்வகையில் தமிழ்மணக்கச் செய்வமென
எந்நாளும் எண்ணி நின்றார் 6

செல்வாக்குப் பரவிவரப் புகழ்ச்செல்வம்
சேர்ந்துவர அத்தை வீட்டார்
நல்வாக்குக் கொடுத்தார்கள் மகட்கொடைக்கு
நாளடைவில் மாறி விட்டார்
இல்வாழ்க்கைத் துணைவியென முதன்மகளை
ஈவதென்று சொன்ன சொல்லை
அல்வாக்கென் றாக்கியவர் வேறிடத்தில்
அம்மகளைக் கொடுத்து விட்டார். 7

[1]நாள் முழுமைக்கும்

முன்னவள்பேர் கலியாணி; அம்மகளை
மொய்த்தமலர் சூட்டு தற்குச்
சொன்னமொழி மாறியது நெஞ்சத்தைச்
சுட்டதனால் திருந்தி வந்து,
மின்னுமெழில் முகத்தாளைக் குணமிகுந்த
மேலாளைக் கலியா ணிக்குப்
பின்னவளை மீனாட்சி எனப்பகரும்
பேராளைத் தரநி னைந்தார். 8

மணியுடையார் உடற்குறையைக் கருதிலராய்
மகட்கொடைக்கு முன்வந் தார்தாம்
[1]பணமுடையார் இவரென்று சற்றுமனம்
பரிதவிக்க அதனைக் கண்டு
பணமுடையார் சபைகண்ட பழநியப்பர்
பரிவுடையார் 'மணத்திற் கென்ன
பணந்தடையா? கவலற்க ஈப்போவில்[2]
பங்காளி யாக்கிக் கொள்வேன் 9

மலைத்திடுதல் கைவிடுக மணஞ்செய்க
வழிசெய்வேன்' என்று கூறிக்
கலைத்துறையில் வல்லகதி ரேசர்க்குக்
கடையிலொரு பங்குந் தந்தார்
நலத்தக்க மீனாட்சி, கதிரேசர்
நல்லறத்தில் துணைவரானார்
நிலைத்தக்க சபைத்தொடர்பால் மதிபெற்றார்
நிதிபெற்றார் மணமும் பெற்றார். 10

கைநிறைந்த பொருள்பார்ப்பர் பெண்பெற்றார்
கண்ணிறைந்த கணவ னைத்தான்
மைவரைந்த விழியுடைய பெண்பார்ப்பாள்
மாநிலத்தில் ஈதி யற்கை
[1]ஐவிளைந்த கொடியிடையார் மீனாட்சி,
அன்பரவர் மெய்யைப் பாரார்
[2]தைநிறைந்த மதிவிளைந்த மெய்பார்த்துத்
தரம்பார்த்து மணந்து கொண்டார். 11

---

[1]பணம் + முடையார். [2]ஈப்போ - மலேசியாவில் உள்ள கடையில்.

[1]அழகு. [2]தைமாதமுழுநிலவுபோன்ற பேரறிவு.

பெண்ணணங்கின் பெருந்துணிவை [3]ஈகமிகு
    பேருளத்தை இரக்கப் பண்பை
எண்ணினிங்குப் புல்லரிக்கும் இருவிழிகள்
    புனல்மல்கும் இறும்பூ தாகும்;
அண்ணலிங்குப் பெற்றதுணை மனவளத்தை
    அளந்துரைக்க யாரே வல்லார்?
கண்ணகியைக் கண்ணெதிரே கண்டதில்லை
    கதிர்மணியார் வீட்டிற் கண்டோம் 12

கொண்டான்றன் குறிப்புணர்ந்து நடந்தொழுகுங்
    குலமகளாய்க் கூடி வந்து
கண்டாரை விருந்தோம்பிக் காக்கின்ற
    கலைமகளாய் எவரை வீட்டிற்
கண்டாலும் பணிந்துரைத்துக் கனிந்தமொழி
    தருமகளாய் எளிமை பூண்டு
கண்டாரும் தொழத்தக்க திருமகளாய்க்
    கற்பரசி வாழ்ந்து வந்தார் 13

'கலைவாழ்வின் விளக்கமெனக் கதிரேசர்
    காண்பரெனிற் கற்பின் செல்வி
கலைவாழ்வின் அமைதியெனத் திகழ்ந்திடுவர்;
    கனிவாயில் மூர லொன்று
நிலையாகக் குடியிருக்கும் களங்கமிலா
    நெஞ்சிருக்கும்; அங்கி ருந்து
விளைவாகும் மொழியெல்லாம் மழலையென
    இனிமையினை விளைத்து நிற்கும்' 14

'அயர்வின்றி விருந்தோம்பும் பண்பிருக்கும்;
    அவர்பிறந்த செட்டி நாட்டின்
உயர்வொளிர அமைதிமிகும் கோலத்தில்
    உடலிருக்கும்; கணவர்க் கென்றே
உயிர்வாழும் பெருமையுடன் மெல்லுடலில்
    உரமிருக்கும்; காணுந் தோறும்
உயவந்த தமிழன்னை போல்வ' ரென,
    [1]தெ.பொ. மீ உரைத்தார் அன்று 15

[3]ஈகம் - தியாகம்    [1]பன்மொழிப்புலவர். தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்.

பெண்மைக்கு மதிப்பளித்துப் பேணிவரும்
வணிகர்குலம் பெருகும் நாட்டில்
தண்மைக்கு மனந்தந்த மீனாட்சி
ஆண்மைக்குத் தாம்ப ணிந்து
பெண்மைக்கு மதிப்பளித்தார், இல்லறத்தின்
பெருமைக்கும் மதிப்ப ளித்தார்
உண்மைக்கும் கதிரேசர் உயர்வுக்கும்
வாழ்வளித்தார் அதுவே வாழ்க்கை. 16

பேணிய குழலில் தோன்றும்
பிசிரிலா இசையைப் போலக்
காணும்நல் வாழ்வு கண்டார்;
கனிவுறும் இனிமை அன்பு
பூணுநல் லழகு தூய்மை
பொலிசுவை அமைதி யாவும்
மாணுற அமைந்த வாழ்வு
மணிபெறும் வாழ்வே யாகும் 17

பாவமுதின் எண்சுவையும் தோய்ந்தெ டுத்துப்
பகர்கின்ற வாயுடையார்; படைத்து வைத்த
நாவமுதின் அறுசுவையும் நன்கு கண்டு
நுகர்கின்ற நாவுடையார்; வடித்துத் தந்த
பூவமுதின் வாசகத்தைத் தூய்க்குங் காலைப்
புனல்மல்கும் விழியுடையார்; மணியார் நாளும்
காவமரும் மலர்சூழும் சுரும்பு போலக்
காலமெலாம் சுவைவாழ்வு வாழ்ந்து வந்தார் 18

பாச்சுவையிற் குறைகாணின் எடுத்துச் சொல்லிப்
பாங்குபெற வழியுரைக்கும் ஆற்றல் போல
நாச்சுவையிற் குறையிருப்பின் சுட்டிக் காட்டி
நன்கடிசில் அமைவதற்குப் பக்கு வத்தை
[1]ஆச்சியிடம் எடுத்துரைக்கும் அழகு காணின்
அடடாஓ எனநமக்கு வியப்புத் தோன்றும்;
நூற்சுவையார் எச்சுவையும் ஆழ்ந்து நோக்கும்
நுண்ணறிவுப் புலனுணர்வுத் திறந்தான் என்னே! 19

[1]பெண்டிரை ஆச்சியென்பது செட்டிநாட்டு வழக்கு.

கற்பனை படைத்துக் காட்டும்
    கலையுல கதனில் வாழ்வோர்
முற்படும் உலக வாழ்வின்
    நடைமுறை முற்றுந் தேறார்;
கற்பனை ஏடு வேறு
    காண்குறும் நாடு வேறு
சொற்பொருள் உண்மை உண்மை
    தொன்றுதொட் டியற்கை யாகும் 20

கண்முனம் படரா ஒன்றைக்
    கருத்தினுள் படைத்துக் கொண்டு
நண்ணுமவ் வுலகிற் புக்கு
    நலிவெலாம் மறந்தே இன்பப்
பண்ணுயர் பாடல் பாடிப்
    பறந்தவண் திரிவா னுக்கு
[1]மண்படும் வாழ்வா வந்து
    மனத்தினில் தோன்றி நிற்கும்? 21

தான்படுந் துயர்ம றப்பான்
    தன்னினந் தனைநி னைப்பான்
வான்படு பொருளை யெல்லாம்
    வாரிவந் தவர்கள் வாழ்வு
மேம்படக் கொடுப்பான் போல
    மேவுமப் பித்தன் கண்ணில்
ஏன்படும் உலக வாழ்க்கை?
    ஈதவன் இயற்கை யாகும் 22

கற்பனைப் பித்தன் போலக்
    கதிர்மணி வாழ்ந்தா ரல்லர்;
பிற்படும் புலவ ரெல்லாம்
    பெருமையே கொள்ளு மாறு
நற்புகழ் அரசர் போற்ற
    நண்பரும் ஆகி நின்று
பற்பலர் போற்றும் வண்ணம்
    பாரினைத் தெரிந்து வாழ்ந்தார் 23

[1]மண்ணுலக வாழ்வு, மண்ணான வாழ்வு.

உலகியல் நன்கு தேர்ந்தார்
இவரைப்போல ஒருவ ரில்லை;
கலைபயில் அறிவும் அந்த
உலகிய லறிவுங் கண்டோர்
துலையினில் தூக்கிப் பார்ப்பின்
மிக்கது தோன்றா ராக
அலைபடும் மனத்த ராவார்;
அவ்வணம் தெளிந்து நின்றார் 24

மேற்கணக்காய்க் கீழ்க்கணக்காய் மேவுபதி
னெண்கணக்குங் கற்றுத் தேர்ந்தார்;
பார்த்தலத்தில் வரவுபற்றுப் பார்க்கின்ற
பணக்கணக்குங் கற்றுத் தேர்ந்தார்;
மேற்புலத்தாற் றெளிவுபெறல், மிகுதிருவால்
மேம்படுதல் வெவ்வே றென்ற
[1]நூற்கணக்கை மாற்றிவைத்த இவர்திறத்தை
நுண்ணறிவை வியவார் யாரோ? 25

[1] இருவேறுலகத்தியற்கை என்ற குறளின் கருத்தை.

# 5
# நெறியுணர் காதை

போராடிச் செங்கதிரோன் தோன்று முன்னர்ப்
    புலர்காலைப் பொழுதத்துக் கடமை யாற்றி,
நீராடி வெள்ளியமெல் லாடை பூண்டு,
    [1]நீறாடி மலரடியை நினைந்து, நெற்றி
நீறாடி மெய்யெல்லாம் பொலிந்தி ருக்க,
    நிறைமொழிகள் சிலசொல்லி வணங்கிப் பின்னர்
யாரோடும் உரையாடல் முதலாம் செய்கை
    யாவையுமே செய்துவரல் அவர்வ ழக்கம் 1

தேவாரம் ஓதுபவர்க் காணின் மூவர்
    திருமுறையுள் அப்பர்தரும் 'மாசில்வீணை'
நாவாரப் பாடுகவே பாடு கென்று
    நயந்துரைப்பார், அப்பாடல் இசைக்குங் காலை
மீவானில் வெண்மதியம் ஊர்ந்து செல்ல
    வேனிலிளம் பருவத்துத் தென்றல் வீசப்
பூவாரும் பொய்கையினுட் குடைந்து வந்த
    புத்துணர்வு கொண்டவர்போல் திளைத்தி ருப்பார் 2

சமயத்தை நன்குணர்ந்து திளைத்துத் தோய்ந்து
    தளராத செம்பொருளைக் கண்ட சைவர்;
உமைநத்தும் இறைவனடி மலரை என்றும்
    ஒருமையுடன் நினைந்துருகும் தூய நெஞ்சர்;
தமைமுற்றித் துயரங்கள் சூழ்ந்த போதும்
    தண்புனல்சேர் சடையான்பால் முறையிட் டாங்கண்
சுமைமுற்றுந் தவிர்ந்ததுபோல் இன்பங் காண்பார்,
    சுடர்மணியார் மெய்ச்சமய நெறியில் நின்றார் 3

[1]திருநீறுபூசும் சிவன்.

அன்புவளர் சமயத்தை விழைந்த தன்றி
ஆர்ப்பாட்டச் சமயத்தை விரும்ப வில்லை;
என்புருக இறைவனடி தொழுத லன்றி
ஏமாற்று வேலைக்குக் கொள்ள வில்லை;
பொன்பொருள்கள் வருமென்று பற்ற வில்லை
பொலிமனத்து தூய்மைக்கே பற்றி நின்றார்,
புன்மையென வாழ்க்கையினை வெறுக்க வில்லை
புணையாக அதைப்பற்றி வாழ்ந்து வந்தார் 4

உள்ளத்தாற் பொய்யாது சிவனை எண்ணும்
உயர்சமயம் இவர்கொண்ட சமய மாகும்;
கள்ளத்தார் கயமையினார் கரந்து வாழக்
கண்டமதம் இவர்கொண்ட மதமே யன்று;
வெள்ளைத்தூள் பொடிபூசும் மெய்ய ரேனும்
வேடத்தைத் திருவுளத்தும் நினைந்தா ரல்லர்;
எள்ளித்தான் சமயத்தை நகைக்கும் பாங்கில்
எச்செயலும் என்றுமவர் கொண்ட தில்லை 5

புறப்பொருளாச் சமயத்தைக் கொண்டா ரல்லர்
புந்திமகிழ் அகப்பொருளென் றெண்ணி வாழ்ந்தார்
மறச்செயலுக் குற்றதென நினைந்தா ரல்லர்
மனத்துக்கண் அறத்துக்கே துணையாக் கொண்டார்
பிறர்க்குரிய சமயத்தைப் பகைத்து வாழும்
பேதைமையைக் கனவகத்தும் எண்ண வில்லை
மறப்பரிய மனையாள்மாட் டவர வர்க்கு
மதிப்பிருக்கும் அன்பிருக்கும் அதனா லென்ன? 6

கொண்டவன்பால், தன்னோடு பிறந்த வன்பால்
குலமங்கை செலுத்திவரும் அன்பி னுக்குள்
கண்டறியும் இருதன்மை இருத்தல் போலக்
கடைப்பிடித்து நடப்பதற்குச் சிறந்த தாக
அண்டியதன் சமயத்திற் சிறப்பு நோக்கும்
அடுத்தபிற சமயத்திற் பொதுவின் நோக்கும்
கொண்டொழுகல் யாவர்க்கும் கடமை என்பார்
கூடாராய்ப் பகைமைகொளல் மடமை என்பார் 7

கல்லானும் செம்பானும் வடித்து வைத்த
கடவுளெனும் வடிவங்கள் கண்டு வந்தே
எல்லாரும் நிற்பதுபோல் நில்லா ராகி
இணைந்துமனம் உவந்துருகிக் கசிந்து நின்று
சொல்லாலும், பொருளாலும், துய்க்கும் இன்பப்
பயனாலும் சொலற்கரிய பெருமைத் தாய
நல்லோர்தம் அருண்மொழிகள் நிறைந்த நூலுள்
நாயகனைக் கண்டுவப்பார் அருளின் செல்வர் 8

கற்கோவில் வலம்வந்து சிலையில் நிற்கும்
கடவுளரை வணங்கலினும் அடியார் செய்த
சொற்கோவில் வலம்வந்து, தடையே யின்றித்
துணிந்தெழுந்து கருவறைக்குட் புகுந்து சென்று
முற்காணுஞ் செம்பொருளைக் கண்டு கண்டு
மூழ்குவதில் வணங்குவதில் இன்பங் கண்டார்;
தெற்கோதும் திருமுறையுட் பேறு பெற்ற
திருவுடையார் அருளுடையார் இவரே யாவர் 9

கடையிரவு கழிந்தபினர் விழிம லர்ந்து
கனிவுதரும் வாசகத்தை விரித்து நெஞ்சில்
இடையறவு படாவகையில் ஓதி ஓதி
இறைவனடி நினைந்துருகி மகிழ்ந்து பின்னர்
மடலெழுதும் மெய்யன்பர் மகிழு மாறு
மறவாமல் அவ்வவர்க்கும் ஏற்ற பாங்கில்
விடையெழுதும் இயல்பதனைக் கடமை யாக
விடையுடையன் அடிபரவும் தொழும்பர் கொண்டார் 10

ஒருபாதி உமையவட்குத் தனது மெய்யில்
இடமளித்த ஒருவனடி உளத்திற் கொண்டார்,
ஒருபாதி தமதுளத்திற் செந்த மிழ்க்கும்
ஒருபாதி சிவநெறிக்கும் இடம ளித்தார்,
இருவேறு மொழியுணர்ந்தும் உளத்திற் றோய்ந்த
இனியதமிழ் மொழியாலே தொழுது வந்தார்;
திருவாத வூரர்மொழி மூவர் ஓதும்
திருமொழிகள் இவர்நெஞ்கை யுருக்கி நிற்கும் 11

வான்கலந்த மாணிக்க வாச கர்தாம்
வாய்மலர்ந்து பொழிந்ததிரு வாச கத்தைத்
தாங்கலந்து பாடுங்காற் செங்க ரும்பின்
செழுஞ்சாறு வடித்தெடுத்துக் குறிஞ்சி தந்த
தேன்கலந்து பால்கலந்து முற்றி நின்ற
தீங்கனியின் சுவைகலந்து பிறந்து வந்த
ஊன்கலந்தும் உயிர்கலந்தும் பருகுங் காலை
உவட்டாமல் இனிப்பதுபோல் இன்பங் காண்பார் 12

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வண்ணம்
குளிர்மரங்கள் சூழமகி பாலன் பட்டி
மேடையிலும் ஓடையிலும் மற்று முள்ள
வீதியிலும் தமையொத்த சிறுவ ரோடும்
ஆடையிலே இவருளத்தைக் கவர்ந்து கொண்ட
அரியதமிழ் மொழிதந்த நீதி நூலின்
பாடலினாற் பெறுமின்பம் தழைத்தெ ழுந்து
படர்ந்துவர மெய்யுணர்வாய் மிளிரப் பெற்றார் 13

கொலைகளவு பொய்யொடுகள் காமம் என்ற
குற்றங்கள் தவிர்த்துமனம் தூய்மை யாக்கி,
மலையளவு துயர்வரினும் நெறியில் நின்று
மாறாது மற்றவர்க்குத் துயர்த ராது
நலமருவு செயல்செய்யும் அன்பு பூண்டும்
நம்முயிர்போற் பிறவுயிரை மதித்தல் செய்தும்
உலகுபுகழ் மாந்தரென வாழ்தல் ஒன்றே
உயர்சமயம் அச்சமய நெறியில் நின்றார் 14

**6**

# மயக்குறாக் காதை

மெய்ம்மைச் சமயம் விழைபவர் ஆயினும்
பொய்ம்மைச் சமயப் போர்வையுள் நடக்கும்
கயமைச் செயலைக் கடிவதிற் சற்றும்
தயக்கங் காட்டார்;தமிழ்மணி வாழ்வில்
நடந்த சமயப் போலியின் நடிப்பும்
தொடர்ந்திவர் கொடுத்த படிப்புஞ் சொல்லுவாம்;
காற்றும் வெளிச்சமும் கலந்து விரவும்
கீற்றுக் கொட்டகைக் கீழமர்ந் திருந்து
பயிலுதல் எழுதுதல் பண்டிதர் வழக்கம்;
துயிலெழுந் தொருநாள் தொன்னூல் ஒன்றைப்
படித்துச் சுவைத்துப் பழநூ லதனுள்
தொடுத்த விழியொடு தோய்ந்தினி திருக்க,
குளிர்புன லாடித் தளிர்புரை மேனியில்
ஒளிபெறு திருநீ றொருங்குறப் பூசி
உருத்தி ராக்க உயர்வடம் பூண்டு
பருத்துயர் மேனியர் பத்தர் ஒருவர்
முருகா முருகாஎன் றுருகும் வாயர்
அருகே வந்தவர் அன்பின் வடிவாய்

முகிழ்த்த விழியொடு முருகா எனக்கை
குவித்து நின்றனர் கோலம் பொலிவுற;
கோலப் பொலிவாற் சீலத் தவர்போற்
காணப் படுமவர் காட்சியின் மயங்கிப்
பண்டிதர் எழுந்து பணிவுடன் வணங்கி
'அண்டர் போல்வரும் அடியீர் இருக்கையில்
அமர்ந்தருள் செய்க' என் றன்புரை கூறியும்

அமர்ந்திலர், அடியவர் அன்பின் பெருக்கால்
தம்முகம் மாறிக் கண்புனல் மல்கி
மும்முறை வாயால் முருகா என்றனர்;
பத்தியின் பெருக்கைப் பார்த்த புலவர்
உத்தியால் இயல்பை உணரா ராகிப்
பொய்த்தவ வேட முத்த நாதப்
பத்தனைக் கண்ட மெய்ப்பொரு ளார்போல்
தாமும் மாறித் தம்முளம் நெகிழ்ந்து,
பெரியோர் இயல்பின் பெற்றிதான் என்னே!
அருளாற் பெரியீர் அமர்ந்தினி திருந்து
கட்டளை யிடுக' என்று கழறிப்
பெட்டவர் பன்முறை வேண்டிய பின்னர்
உற்றவண் அமர்ந்தனர் உறுதவ வேடர்;
'எத்தகு பத்தி! எத்தகு காட்சி!
ஆ! ஆ! முருகா அருளல் வேண்டும்'
என்ன மணியார் பன்னிய பின்னர்த்
தென்முகக் கடவுள் சின்முத் திரைபோற்
கையை அமைத்துக் காட்டி யதன்பின்
பைய வாயாற் பத்தர் பேசினர்;
'முருகா முருகா கருதிய பயனைப்
பெறுவான் வந்திலன்; பேணிய அன்பனைத்
தரிசித்து வாவெனத் தணிகை முருகன்
கட்டளை யிட்டனன்; கந்தன் ஆணையைத்
தலைமேற் கொண்டிவன்[1] வருகை தந்தனன்;
எனுமுரை கேட்ட இப்பெரும் புலவர்
நனிமிக மகிழ்ந்து 'நல்லீர் உலகில்
எத்தனை எத்தனை அன்பர் இருக்கப்
பத்தியில் எளியேன் பக்கல் வருகென
முருகன் பணித்தது முன்னைப் பிறவியின்
வருபெரும் பேறே! வாய்மலர்ந் தின்னும்

1. அடியவர், தம்மைத் தாமே இவன் எனக் குறிப்பிடுகின்றார்.

உத்தர வாக வேண்டு'மென் றோதினர்;
'சற்றுப் பொறுக்க' எனக்கை காட்டி
முற்றிய வேடர் மோனங் கொண்டுபின்
'முருகா முருகா' என்று மொழிந்தனர்,
'அருளுக முருகா அருளுக' எனக்கனிந்
திருமொழிப் புலவர் இயம்பக் கேட்டுக்
'கடம்பன் கட்டளை கதிர்செலும் மாலை
வெளியிடப் படு'மென விளம்பினர் பத்தர்;
பகலுண வுண்டு பத்தர் உறங்கி
மிகமகிழ்ந் தெழுந்து மேலவர் கோலம்
தாங்கி வந்து தரிசனம் தந்தனர்
ஆங்கவர் வருங்கால் ஓங்குயர் வடமொழி
பாங்குடன் அறிந்தவர், பண்டித மணியுடன்
கலந்துரை யாடி யிருத்தலைக் கண்டே
உளந்திறந் தாட அவர்இடை யூறாய்
இருத்தலைக் குறிப்பால் உணர்த்தினர் பத்தர்;
வடமொழி யாளர் படர்ந்ததற் பின்னர்
தடநுதல் நீற்றினர் தனித்துப் பேசினர்;
'முருகா முருகா முகவை நகருக்
கருகே அமைந்த சிற்றூர் இவனூர்;
நெடுநா ளாக இவன்மனம் நினைந்து
படருமோர் ஆசை பற்றி யுள்ளான்;
இரந்து பெறாமல் இருக்கும் பொருளால்
உரங்கொளும் வேலற் கொருபெருங் கோவில்
எழுப்பும் ஆசையால் இருந்தஐ யாயிரம்
முழுக்கத் தீர்ந்தும் முற்றுப் பெற்றிலாச்
செயலால் வருந்திச் சேவற் கொடியோன்
செயலே யாக எனஇவன் நினைந்து
முருகன் தலைமேற் பொறுப்பை ஏற்றி
வரும்நாள் ஒருநாள் வடிவேல் முருகன்
கனவில் தோன்றிக் 'கவலை கொள்ளேல்
எனக்கோர் ஆலயம் எடுக்க நினைந்தனை
மனத்தெழும் ஆசைக்கு மற்றவ ரிடத்தே
இரந்து பொருள்பெறல் இழுக்கென எண்ணினை
உறுதிப் பாட்டினை உளத்தாற் போற்றினேன்;

உன்போல் அன்பன் ஒருவன் ஆங்குளன்
அன்பன் அவன்பொருள் உன்பொரு ளாகும்
வேறென நினைத்தல் வேண்டா, நாளையே
[1]சேறி மகிபால புரிக்கெனச் செப்பிக்
கதிரேச அன்பனைக் கண்டென் கட்டளை
இதுவெனக் கூறு; புதுவகை அன்பால்
ஐயா யிரமவன் அளிப்பான் நின்னிடம்
மெய்யான் அவன்தரும் ஐயா யிரமும்
பெற்று வந்து முற்றா திருக்கும்
நற்றிருப் பணியை முற்றுறச் செய்க'
கட்டளை யிதனைக் கந்தன் அருளினன்
ஆங்கவன் கட்டளை தாங்கி வந்ததை
ஈங்குய்ப் பதுவே இவன்கட னாகும்'
எனுமொழி இயம்ப, இருமொழிப் புலவர்
நனிமிக மகிழ்ந்து பனிவிழி ததும்ப
மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கைம்மலர் குவித்து
'முருகா நின்பெருங் கருணைதான் என்னே!
உருகா நின்றுளம் உன்பெயர் ஓதிப்
பெருகும் அடியவர் எத்தனை பேருளர்!
அவரெலாம் இருக்க அடியேன் மாட்டுக்
கட்டளை யிட்ட கருணையே கருணை!
கிட்டரும் புண்ணியச் செயல்செயக் கிளத்தி
அடியனை ஆளா ஆக்கிய அருட்குப்
படிமிசை எங்ஙனம் பாராட் டுரைப்பேன்?
என்ற மொழியால் எழுந்தருள் பத்தர்க்
கிரட்டிப் பாக எழுந்தது நம்பகம்;
மீண்டுங் கூறினர்; 'ஆண்டவன் முருகன்
ஈண்டருள் ஆணையை ஏற்று முடிப்பேன்;
எளியேன் எனையும் பொருட்டென எண்ணி
அளியீர் கனவிடை அருளிய கந்தன்
கட்டளை பற்றிஎன் கனவிலும் தோன்றிச்
சுட்டி யருளுதல் ஆகா தோ?அம்

1. செல்வாய்.

முருகன் அருட்கியான் முழுத்தக விலனோ?
நெடுந்தொலை வென்றும் நினையா னாகிப்
படர்ந்திவண் உமைவரப் பணித்த முருகன்
எளியேன் கனவிலும் வாரா திருப்பனோ?
அளியன் அவன்தான் அடியேன் கனவிடை
இற்றை இரவில் எழுந்தருள் செய்குவன்
மற்றைநாள் விடியல் கட்டளை நிறைவுறச்
செய்குவன்' என்று செப்பின ராக;
உருகும் புலவர் உரையால் அவர்க்கு
பெருகும் நம்பிக்கை பிறந்தது; பின்னர்
முருகன் அடியவர் முகத்தில் ஐயமும்
மறுகித் தோன்றி மறைய, 'முருகா
அவ்வணம் ஆகுக' எனுமொழி அருளிக்
கவ்விய இரவு கழிந்தபின் மறுநாள்
தண்புன லாடி வெண்பொடி பூசி
முன்பொலி வேடம் மும்மடங் காகப்
புனைந்து வந்தஅப் புண்ணியர் 'முருகா
முருகா' என்று மொழிந்துகை கூப்பி
இருந்தனர்; இருந்தவர் வரவெதிர் நோக்கிப்
புனலும் ஆடிப் பொடியும் ஆடி
முனமுறு நிலையினும் முகப்பொலி வுடனே
புலவர் இருத்தலைப் புண்ணியர் நோக்கி
அலைவுறும் ஐயம் அகன்றன ராகி
உருகி யெழுந்த உள்ளத் தன்பின்
முருகிய நிலைபோல் 'முருகா' என்றனர்;
புலவர் மணியும் புன்னகை பூத்தே,
'அலகிலா விளையாட் டாறு முகனாம்
முருகன் திருவருட் பெருமைதான் என்னே!
வேண்டுவார் வேண்டுவ தீவதோ டன்றி
மும்மடங் குதவுவான் வள்ளல் முருக'னென்
றிம்மொழி கூறி; 'அம்மநும் பத்தியால்
எளியேன் எனக்கும் எழில்மிகும் முருகன்
அளிய னாகி அருளினன் காட்சி

எத்தகு கோலம்! எத்தகு காட்சி!
ஆ ஆ! அளப்பரும் பேரொளிப் பிழம்பு
நீல மயிலில் நேரிழை யாருடன்
கோலக் காட்சி கொடுத்தருள் புரிந்தனன்
இரவிடைக் கண்ட காட்சிதான் என்னே!
முருகன் அருளே அரு'ளென மொழிந்தனர்;
கேட்ட துறவி, வேட்டது பெற்றோம்
போட்ட திட்டமும் பொய்த்தில தாகி
ஐயா யிரமும் மெய்யாம் என்று
செய்யான் அடிகளைச் சிந்தை செய்தனர்;
முருகனார் மகிழ்வை முகத்தான் உணர்ந்த
திருவினார் சிலசொல் செப்பினர் 'ஐய,
உள்ளிய தொகையோ ஓரைந் தாயிரம்
வள்ளல் முருகன் காட்டிய வழியால்
மும்மடங் காகி நம்மிடம் வருமாம்
அம்முதல் பெற்றதும் அதிலொரு பங்கை
நீவிர் விழைந்த கோவில் எழுப்பவும்
மேவும் முருகனை நாளும் வழிபட
மற்றொரு பங்கை வழங்கவும் பணித்தனன்;
எஞ்சிய ஐந்தை இவண்எழும் நும்போல்
வஞ்சமில் லன்பர் வருவ ராயின்
அவர்தமக் குதவ அருளினன்;அதுகேட்
டுவகை மீக்கூர்ந் தொள்வேல் முருகா
அருட்பெருங் கடலே ஆண்டவா நின்னுளக்
கருத்தினை முடிக்குங் கடப்பா டுடையேன்
ஆயினும் அடியேன் அத்தனைப் பெரும்பொருள்
ஈயும் நிலையில் இன்றிலேன் நின்றன்
ஆணையை எவ்வணம் ஆற்றுவேன்? என்னக்
காணும் வழியுங் காட்டினன் முருகன்'
என்ற மொழிகேட் டிடிலா மகிழ்வில்
ஒன்றிய உளத்தால் உறுதவ வேடர்
'வடிவேல் முருகா வாய்த்தநின் ஆணையை
அடியர் இவர்க்கும் அருளினை என்னே!'

என்றுபா ராட்டி இருமொழிப் புலவரின்
ஒன்றும் முகத்தை உற்று நோக்கி'
'முழுமுதற் பொருளாம் முருகன் பொருள்பெற
வழிசொலா திருப்பனோ? அவன் சொலும் வழியை
அடியன் இவனுக் கறைதல் ஒல்லுமோ?'
என்னலும், புலவர் 'எழில்வேல் முருகன்
சொன்ன மொழிகள் தூய மறையெனப்
போற்றத் தக்கன; பொருந்திய நெஞ்சம்
ஏற்றுளோம் ஆதலின் இசைத்தநல் வழியை
நும்மிடம் புகல இம்மியுந் தடையிலை'
என்று கூறி எதிர்வெளி நிலத்தில்
நின்ற வெள்வேல் மரத்தினைச் சுட்ட,
ஒன்றும் தோன்றா உளத்துட னிருந்த
சாமியை நோக்கிச் சாற்றினர் புலவர்;
வெள்வேல் முருகற்கு மிகவும் உகந்தது
வள்ளல் கைவேல் வெள்வே லன்றோ?
இம்மரம் அதன்பேர் ஏற்றுள தாதலின்
அம்மரம் விரும்பினன், அதனைக் காட்டி
அதன்கீழ்த் திசையில் ஆறு முழத்தில்
பதமுற ஆழந் தோண்டிப் பார்ப்பின்
பசும்பொன் அங்கே பதுங்கிக் கிடக்கும்
எடுத்ததைத் திருப்பணி இயற்றத் தருகவென்
றருளிச் செய்தனன் ஆறு முகத்தான்'
என்றதும் மகிழ்ச்சி ஏகிய முகத்தில்
துன்றும் வருத்தந் தோன்ற இருந்த
துறவியை நோக்கித் 'தொழுதகு பெரியீர்!
அருளிய ஆணையை ஐயுறல் வேண்டா
கந்தன் நமக்கருள் கட்டளை பொய்க்குமா?
இந்தப் பணியில் இன்னுமேன் தாழ்வு?
தொடுகுழி அமைத்தல் தொண்டர் நமக்கே
இடுபணி யாகும் ஆதலின் ஐய,
ஊரார் அரவம் ஒடுங்கிய பின்னர்
ஈராறு கையன் இட்ட பணியை

இன்றிராப் பொழுதே இருவருந் தொடங்குதும்'
என்றனர் புலவர்; இரங்கிய குரலில்
வந்தவர் திருவாய் மலர்ந்தனர் 'செய்யலாம்
தொடுகுழி யதனுட் படுபொருள் ஒருகால்
அடைதல் இயலா தாகினென் செய்வோம்!'
என்னுமோர் ஐயம் எழுப்பலும் 'ஆஆ!
இன்ன வகையில் எண்ணுதல் தகுமா?
நெடுந்தொலை விருந்திவ் விடந்தனில் வரஉமைக்
கடம்பன் அருளினன்; இருவர் கனவிலும்
மயில்மிசை ஏறி மனைவி மாரொடும்
அயில்வேல் முருகன் காட்சி யருளினன்;
பொன்னின் புதையல் பொருந்தும் இடமும்
சொன்னவன் அவனே, சொலும்அம் மொழியில்
ஐயம் உறுதல் அடாத பாதகம்;
ஐய நும்போல் அறியாத் தனத்தால்
மெய்யன் மொழியில் ஐயம் உற்றுநான்
ஆண்டவா முருகா அக்குழி யதனைத்
தோண்டிய பின்னர்ச் சொலும்பொன் இலையேல்
யாமென் செய்குவோம்?' என்று வினவ,
'பூமென் முகத்திற் புன்னகை அரும்பி,
ஆறு முகத்தான் சீறுத லின்றித்
தேறுதல் மொழியுஞ் செப்பினன்; அந்தக்
கலியுக வரதன் கருணைதான் என்னென
மலியும் உவகை மனத்தன் ஆகினேன்';
எனுமொழி கேட்டவர் இக்குழி தோண்டுதல்
இன்றியே அப்பொருள் எளிதிற் கிடைக்கலாம்
அன்றித் தோண்டினும் அப்பொருள் கிடைக்கலாம்
என்று நினைந்துளம் ஆறுதல் எய்தி,
'வழிபடும் முருகன் வழிதரா திருப்பனோ?
வழியென எதனை வாய்மலர்ந் தருளினன்?
எளியன் இவனுக்கியம்புக' என்றனர்;
அடியவர் அவாவின் விரைவினைக் கண்டு,
'பொடிசேர் மேனியீர் 'புதையற் பொருள் பெற

ஆறு முழத்தின் ஆழம் அமையச்
சோருத லின்றித் தோண்டுக, அதனுட்
செம்பொன் இலதேல் செய்தஅக் குழியுள்
அன்பின் வந்த அடியவன் அவனைச்
சீவன் முத்தி சேர்பயன் என்று
யாவரும் போற்ற ஆவியோ டிறக்கி
முறையாற் சமாதி முற்றுறக் கட்டி
இறையோற் கெழுப்பும் கோவிலும் எடுத்து
நினது கையால் நித்திய பூசையும்
இயற்றுக' என்றோர் ஆணை யிட்டனன்;
முருகன் ஆணையை முடிமிசைக் கொண்டு
கருதி நடக்குங் கடப்பா டுடையேன்;
ஐய நீவிரும் ஐயுறல் விடுத்தும்
தளர்ந்து பின் வாங்குதல் தவிர்த்தும் இதனை
அங்கீ கரித்துடன் அருளுதல் வேண்டும்'
இங்ஙனம் புலவர் இசைத்தது கேட்டுத்
துங்க முகமும் துவண்டது; வாயும்
மலரா திருந்தது; மற்றவர் நிலையை
நோக்கிய புலவர், 'நோன்பிற் பெரியீர்!
ஆக்கிய தவப்பயன் வாய்த்தது போலும்,
ஒள்வேல் முருகன் உகந்த வெள்வேல்,
தலத்தின் விருட்சம் ஆகித் தழைக்க அந்
நிலத்திடைக் கோவிலும் நிமிர்ந்தெழு மாகின்
அளப்பில் தவமே! ஆர்க்கது வாய்க்கும்?
மலைத்தல் தவிர்க மற்றுண வுண்டு
மாலைப் பொழுதில் வந்தருள் புரிக;
என்றதும் சாமிகள் எழுந்து நடந்தனர்,
மாலை வந்தது மாதவர் வந்திலர்,
கந்தன் பெயரால் கயிறு திரித்தவர்
'அந்தர்த் தியானம்' ஆகினர் அன்றே!

## 7

# வழக்காடு காதை

‘கலையறி வார்ந்த நெஞ்சிற்
கருவுறும் கவிதை எண்ணம்,
புலமையிற் செறிந்த பாடல்
புதல்வனாய் வந்து தோன்றும்,
கலையது கருக்கொள் ளாராய்க்
கருவினை உயிர்க்க எண்ணின்
நலமுறும் மகவா தோன்றும்?
நகைப்பன்றோ வந்து தோன்றும்!’ 1

‘நிறைபுலம் செழிக்கப் பெற்றோர்
நிலையுறும் பாடல் யாக்கும்
முறைகளும் தெரிதல் வேண்டும்
முற்றிய புலமை என்றால்
நெறிபிற ழாத பாடல்
நெய்திடுந் திறமை வேண்டும்,
நெறிபெறுந் தமிழ்த் தொண் டாக
நினைத்திதைச் செய்க’ என்பார், 2

பிழைபடப் பாடல் யாத்தல்
பீடுயர் தமிழ்மொ ழிக்கே
அழிவிலாப் பழியை ஆக்கும்
ஆதலின் நண்ப ரேனும்
வழுவுறும் பாடலொ ன்றை
வடிப்பினும் வெகுண்டு ரைப்பார்
‘இழிவுறும் செயலைச் செய்ய 3
இனியும்நீர் முயலேல்’ என்பார்.

பிறதுறை வல்லா ராகப்
பிறங்குதல் உடையார் இந்தத்
துறையிலும் இறங்கி நின்று
தூய்மையைக் கலக்கு கின்றார்;
நிறைவுறுங் கைகால் இல்லார்
நெடும்புனல் நீந்த வந்தால்
கரைதனை அடைதல் உண்டோ?
கையறு நிலைதான் உண்டு. 4

முற்றுறக் கல்லார் தாமும்
முயல்கிறார் பாடல் யாக்க,
வெற்றரைத் தட்டிக் கேட்க
வீறுகொள் புலவ ரில்லை
மற்றைநாள் வாழ்வைச் சற்றும்
மனத்தினுட் கொள்ளா ராகிப்
புற்றுறை ஈயல் போலப்
புறப்படல் காணு கின்றோம் 5

**(அறுசீர் விருத்தம்-வேறு)**

முற்றாத கல்வி நலம், முழுமைபெறாக்
கவிதைவளம், முனைப்பில் நின்று
வெற்றாக ஆர்ப்பரிக்கும் பேச்சுவளம்,
வீமகவி என்ற பேரும்
பெற்றார்தாம் தனவணிகர் நாட்டகத்துப்
பெருங்கவிஎன் றெடுத்துக் கூறிச்
சுற்றாத இடமில்லை, அப்புலவர்
சுடர்மணிக்கு நண்ப ரானார் 6

"கலைமகளின் அருள்பெற்ற கவிஞன்யான்
கண்ணசைத்தால் என்முன் நிற்பாள்;
சொலுமொழிகள் கேட்டேவல் செய்திடுவாள்;
சொன்னதுதான் பலிக்கச் செய்வாள்;
புலவனென துளமகிழப் பொருள்தந்தால்
பூரித்துப் பாடல் சொல்வேன்
அலைமகளின் அருள்கிடைக்கும் தராவிடினோ
அறம்பாடித் தொலைப்பேன்' என்பார் 7

சொன்னவெலாம் உண்மையென நம்பிநின்று
　　தொண்டுசெயல் தொன்று தொட்டு
மன்னிவரும் இயல்பன்றோ? அவ்வியல்பு
　　மாறாத செல்வர் எல்லாம்
பன்னிவரும் வீமகவி சொல்லெல்லாம்
　　பலிக்குமென அஞ்சி அஞ்சி
என்னபொருள் கேட்டாலும் அவர்மகிழ
　　இலைஎன்னா தீந்து வந்தார் 8

பொருள்பெற்று நலம்பெற்றுப் புவியெங்கும்
　　புகழ்பெற்றுக் கலையின் அன்னை
அருள்பெற்றேன் எனவுரைக்கும் வீமகவி
　　அங்கங்குத் தலபு ராணம்
மருள்பெற்ற மக்களிடம் பாடிவரு
　　மானங்கள் பெருக்கி வந்தார்;
இருளுற்ற உலகத்தில் விழியற்றோன்
　　ஏறுநடை போடு மாபோல்! 9

தனக்குரிய தளையன்றிப் பிறதளைகள்
　　தட்டாத வெண்பா யாப்பால்
மனக்குரிய நீதிவழி எனும்நூலை
　　வடித்தெடுத்துத் தேவ கோட்டைத்
தனப்பெரியார் இரட்டித்த அருசோம
　　சுந்தரனார்[1] தலைமை ஏற்க
நினைத்தபடி அரங்கேற்ற வீமகவி
　　நிகழ்ச்சியினை அமைத்தி ருந்தார். 10

அரங்கேறும் அழைப் பேற்ற நம்மணியும்
　　அங்கிருந்தார்; பாடல் கேட்டுத்
தரங்கூற வல்லஇவர் அதுகேட்டுத்
　　தலைவலியைப் பொறுத்துக் கொண்டார்;
இரங்காது நிற்பாரோ நற்புலவர்?
　　என்செய்வ தெனநி னைந்தே
அரங்கேறி முடிகாறும் அமைதியுடன்
　　அவ்வவையில் வீற்றிருந்தார். 11

[1] இரட்டித்த அரு - அரு. அரு. சோம. சோமசுந்தரஞ் செட்டியார்.

வீமகவி என்பாரைத் தனித்தழைத்து
நீதிவழி வெண்பா நூலின்
தாமறியும் வழுவனைத்தும் எடுத்துரைத்துத்
'தமிழுக்குத் தீங்கு செய்யுங்
காமமினி வேண்டற்க இத்தொழிலைக்
கைவிடுக' என்று ரைக்க,
ஊமையின்முன் மூக்கதனை வருடுங்கால்
உறுசினத்தை அவர்தாம் பெற்றார். 12

திருந்தமனங் கொள்ளாராய்த் தேவையிலாச்
சினமுற்று, நீதி நூலிற்
பொருந்தவழி புகலாத வீமகவி
புழுக்கத்திற் கடிமை யானார்;
பெருந்திறமை கொண்டிலங்கும் நன்மணியைப்
பெருஞ்சொற்கள் பேசி நின்று
வருந்தும் வணம் பழிதூற்றத் தலைப்பட்டார்;
வருங்காற்றில் மணியார் கேட்டார். 13

நன்செய்நிலத் துறுகளைகள் வளர்வதனால்
நலமொன்றும் வாய்ப்ப தில்லை;
புன்கவிகள் வளர்வதனால் நற்றமிழ்க்குப்
புகழொன்றும் வாய்ப்ப தில்லை;
பின்பதனாற் கேடுகள்தாம் சூழுமெனப்
பெரும்புலவர் நினைந்தா ராகிச்
சின்மொழிகள் மிடைந்ததல புராணத்தின்
சீர்கேட்டை விளக்கி விட்டார். 14

மேடைகளில் துணிந்தேறி முழக்கிவரும்
வீமகவி பேச்சிற் காணும்
சோடைகளை இதழ்களிலே எடுத்தெழுதிச்
சொத்தையெனச் சுட்டிக்காட்டப்
பாடுவதைக் கண்டஞ்சி வந்தோரும்
பதரிதுவென் றுணர்ந்து கொண்டார்;
கூடிவருஞ் செல்வமுடன் செல்வாக்குங்
குறைந்தனவே வீம ருக்கு. 15

'என்கவியில் என்பேச்சில் குறைதேடி
எழுதியதால் நாடி வந்த
என்வருவாய் நன்மானம் இழந்தே'னென்
றொருவழக்குத் தொடர்ந்தா ராகத்
தென்மொழியும் ஆங்கிலமுந் தேர்ந்துணர்ந்த
வழக்குரைஞர் யாரோ என்று
நன்மணியார் தஞ்சார்பில் வழக்காடும்
நல்லவரைத் தேடி வந்தார். 16

நற்றமிழில் வல்லவராய் வழக்குரைக்கும்
நாவலராய்ச் சிங்கம் என்று
பற்றுடனே சொலநிற்கும் பசுமலையார்
பாரதியார் இவர்க்கு வந்தார்;
சொற்றவறும் வீமகவி இடுவழக்கில்
தோற்றோடச் செய்து விட்டார்;
அற்றைமுதல் இவ்விருவர் [1]நண்பானார்
அந்நண்பர் [2]பகைவ ரானார். 17

[1]இருவர் - பண்டிதமணியும் பாரதியும், [2]அந்நண்பர் - வீமகவி.

# 8

# சொல்வல்ல காதை

இலக்கியங்கள் பயிலாமல், இலக்க ணத்தின்
இயல்பொன்றும் அறியாமல், நுனிப்புல் மேய்ந்து
சொலக்கருதும் ஒருபொருளைச் சிந்தித் தாய்ந்து
சொலுமுறையாற் சொல்லாமல், முழக்க மிட்டுக்
கலக்கிவரும் பேச்சாளர் இற்றை நாளில்
கணக்கிலராய்ப் பெருகிவரல் காணு கின்றோம்;
இலக்கவர்க்குப் பொருள்வருவாய் ஒன்றே யன்றி
இலக்கியத்தின் வளர்ச்சியன்று; யாது செய்வோம்? 1

பழுதறநூல் பயில்வார்பின் அதனுள் தோய்ந்து
பயன்பெறுவார் இன்புறுவார் சிந்தித் தாய்ந்து
முழுமதியாற் பகுத்துணர்ந்து முடிபு காண்பார்
மொழியுங்கால் நிரல்படுத்தி அவையில் நின்று
வழுவகல நன்மொழியாற் கேட்போர் நெஞ்சம்
மகிழ்ந்துகொள எடுத்துரைப்பார் அற்றை நாளில்;
தொழுதகையார் பெறுமின்பம் பிறரும் பெற்றுத்
துய்ப்பதையே காமுறுதல் தொன்மைக் கொள்கை. 2

தென்மொழியும் வடமொழியும் தேர்ந்த நெஞ்சர்;
தெளிவுபெற இருமொழியின் நூல்க ளெல்லாம்
அன்புறவே கற்றுணர்ந்து சுவைக்குஞ் செல்வர்;
ஆய்ந்தறியும் கூர்மதியர்; தெளிந்த சொல்லர்;
தென்பொதியத் தென்றலென மெல்லப் பேசித்
தெரிந்தவையின் நிலைக்கேற்பக் கொள்ளும் வண்ணம்
சின்மொழியால் விளக்கிடுவார் மகிழவைப்பார்
செப்பரிய திறத்ததுவாம் மணியார் பேச்சு! 3

நூலுக்குள் அவர்நுழைந்து திளைத்து வந்து
நுவலுங்காற் சொல்லுக்குச் சொல்லி னிக்கும்
பாலுக்குள் மறைந்திருக்கும் நெய்யைப் போலப்
பாட்டுக்குட் புதைந்திருக்கும் நயங்க ளெல்லாம்
மேலுக்கு வந்தின்பம் நல்கும் வண்ணம்
மேடையிலே சொன்மழையைப் பொழிந்தி ருப்பார்
[1]தாலுக்குள் தமிழ்எழிலின் நடனங் கண்டு
தமைமறந்து செவிமடுப்பார் அவையோர் நன்றே. 4

பல்வரிசை யில்லாத வாய்ம லர்ந்து
பாட்டுரைத்துப் பொருளுரைத்து நயமு ரைக்கும்
சொல்வரிசை, நூலுக்குள் தோய்ந்து தோய்ந்து
சுடர்விடும்நற் றமிழ்ப்புலமைப் பெருக்கைக் காட்டும்;
சொல்லியநல் வாயிதழில் தவழ்ந்து மின்னித்
தொடர்ந்திருக்கும் புன்னகைதான், பாட்ட ணங்கின்
மெல்லியநல் லிதழ்சுவைத்துச் சுவைத்துக் கண்ட
மேலான இன்பத்தின் களிப்பைக் காட்டும். 5

சிரிப்பிருக்கும் அவர்வாயில் பேசுங் காலை
சிந்தனையின் தெளிவிருக்கும் அவர்மு கத்தில்;
விரித்திருக்கும் ஒளியிருக்கும் விழியி ரண்டில்;
விரிநெற்றி பொலிவுபெற நீறி ருக்கும்;
பருத்திருக்கும் கழியினைக்கை பிடித்தி ருக்கும்;
பளபளக்கும் அக்கழியில் பூணி ருக்கும்;
விரித்திருக்கும் நீள்விரிப்பில் அமர்ந்தி ருப்போர்
விழிகளுக்குள் வியப்பிருக்கும் களிப்பி ருக்கும். 6

பொன்விசிறி மடிப்பொன்று தோளின் மீது
புரண்டிருக்கும்; வடமொழியும் பயின்றா ரேனும்
மின்முகிலிற் பொழியுங்கால் அயல்மொ ழிச்சொல்
மேவாத தமிழிருக்கும்; பிறர்க ருத்தை
முன்னியல்பின் எள்ளலொடு மறுக்குங் காலை
முனைமழுங்காக் கூர்ப்பிருக்கும்; இனித மர்ந்து
நன்மணியார் [1]நிற்காது பேசு கின்ற
நாவன்மை கண்டுலகம் போற்றி நிற்கும். 7

---
[1]தால் - நா. [1]தடையின்றி. (நின்று பேசாமையையும் குறிக்கும்.

தங்குதடை யின்றியவர் பேசுங் காட்சி
தமிழ்பயிலும் அந்நாளிற் கண்ட துண்டு
பொங்குநரை முதுமையொடு பெற்ற பின்பும்
புதுமையுடன் பசுமையுடன் எமது ளத்தில்
தங்கிளமை மகிழ்வுறுத்தும் வழியுங் காட்டும்;
தணியாத தமிழ்க்காதல் ஊட்டி நிற்கும்;
சங்கத்துப் பாடலுக்கு நயங்கள் சொல்வார்
அடடாஅச் சான்றோர்போல் யாரு ரைப்பார்? 8

எப்பொருளும் எடுத்துரைக்கும் ஆற்றல் மிக்கார்
எனினுமவர் சங்கத்துப் பாடல் என்றால்
ஒப்பெதுவும் இலைஎன்ன உவகை கொள்வார்;
உள்ளூறி வருமொழியாற் பொழிந்து நிற்பார்;
எப்பொருளும் கல்லாரும் விளங்கிக் கொள்ள
எளிதிலதை விளக்குவதை வியவார் யாரே?
அப்பெருநூ லவற்றிடையே அகப்பொ ருட்பா
அரங்கமர்ந்து கொடுப்பதிலே அவரே ஒப்பார். 9

கேட்டாரை வயப்படுத்தி மகிழ வைத்துக்
கேளாரும் விழைந்துவர மொழியுஞ் சொல்லர்;
பாட்டாரும் நாநலத்தால் வகைப்ப டுத்துப்
பயன்விளைய முறைப்படுத்து விளக்குஞ் சொல்லர்;
ஏட்டாலும் பேச்சாலும் மறுத்து ரைக்க
இயலாத படியுரைக்கும் வெல்லுஞ் சொல்லர்;
நாட்டாரை விரைந்து தொழில் கேட்கச் செய்யும்
நகரத்தார் குலத்துதித்த இனிய சொல்லர். 10

நாவசையும் மணியொலியைக் கேளா ஊர்கள்
நமதுதமிழ் நாட்டிலிலை; கரையை நோக்கித்
தாவலைகள் படர்ந்துவருங் கடல்க டந்தும்
தமிழ்மணியின் ஓசையது கேட்ட துண்டு;
பாவமுது படைக்குமிசை செவிம டுத்தார்
பாராட்டிப் பாராட்டி அழைப்ப துண்டு;
கோவலர் வாய்க் குழல்போலக் கேட்டார் நெஞ்சைக்
குளிர்விக்கும் இயல்பிற்றே சொல்லின் வன்மை. 11

கதிரேசர் எனும்பெயரைச் சுருக்க மாகக்
கதிஎன்று கூறுவது வழக்க மாகும்
எதிரேதும் இல்லாத சொல்லின் செல்வர்
எழிலொழுகுந் தனிநடையர் ரா. பி. சேது
மதிசேரும் பிள்ளையவர் பண்டி தர்க்கு
மனமுவந்தே பாராட்டு வழங்கும் போது
'கதிரேச மாமணியார் தமிழ்மொ ழிக்குக்
கதியாவார்' எனமகிழ நயமு ரைத்தார். 12

"கனிமொழியால் நாவசைத்துப் பேசுங் காலை
காப்பியத்துள் இரண்டறவே கலந்து நிற்பார்;
மனமகிழும் காப்பியமே அவரா யிற்று
மணிமொழியார் காப்பியத்தின் வடிவ மானார்;
தனியுயர்வுக் காப்பியத்தின் அருவித் தோற்றம்
தனிநடையில் சொற்பொழியும் இவர்தம் தோற்றம்"
எனமொழிந்தார் திரு.வி.க. முருக னுக்கு
முருகுசெயும் இயல்புடையார் மேலுஞ் சொன்னார். 13

"வண்டிசைக்கும் யாழோசை, குயிலின் பாட்டு,
வண்ணமயில் எழிலாட்டம், அருவி வீழ்ந்து
கொண்டெழுப்பும் நன்முழவு, பிறவுங் கூடிக்
கொழிக்கின்ற இன்பத்தைத் தமிழில் தோய்ந்த
பண்டிதரின் மணிமொழியில் நாவு திர்க்கும்
பாநயத்திற் பெற்றுணர லாகு" மென்று
பண்டையநற் றமிழ்மொழியின் அழகு ணர்ச்சிப்
பாட்டுக்குப் பொருளான பெரியார்[1] சொன்னார். 14

அவையறிந்து பேசுங்கால் பொருள்வி ளங்க
அளப்பரிய உவமைகளை வழங்கி நிற்பார்;
சுவைபெருக இரண்டுபொருள் கொள்ளும் சொல்லைச்
சொலிமகிழ்ந்து மகிழ்வளிப்பார்; அந்தப் பேச்சில்
எவர்மனமும் இசைந்திருக்கும்; மறுப்பி ருக்கும்;
இனிப்பிருக்கும்; எள்ளலுடன் கலந்தி ருக்கும்;
அவர்பேச்சில் தமிழ்மொழியின் மணமி ருக்கும்;
அவர்மூச்சில் இலக்கியத்தின் நயமி ருக்கும். 15

[1] பெரியார் - திரு.வி.க.

பாட்டுக்கு நயமுரைக்குந் திறமே யன்றிப்
பழையபரி மேலழகன் உரைக்குங் கூடக்
கேட்டுவக்க நயமுரைக்குந் திறமை கொண்டார்;
கிளர்ச்சிதரும் இவர்பேச்சைச் சுவைத்து ணர்ந்து
கூட்டெழுந்த வேட்கையினால் அரங்கந் தோறும்
கொலுவிருந்து தலைமையுரை நல்கும் வண்ணம்
நாட்டவர்தாம் நிரல்படவே வேண்டி நிற்பர்;
நாளெல்லாம் புகழ்பரப்பும் தலைமைப் பேச்சு. 16

கதிரேசர் தலைவரெனுஞ் சொல்லைக் கேட்டால்
கற்றவரும் பேசுதற்குத் தயங்கி நிற்பர்;
மதிவாணர் பேசுங்கால் தவறு காணின்
மறுப்புரைக்கக் கண்ணோட்டஞ் சிறிதுங் காட்டார்;
அதனாலே எழுவாரை மட்டந் தட்டல்
அவர்கொள்கை எனக்கருதல் வேண்டா; பேச்சில்
எதுவேனுங் குறைநேரின் தமிழுக் கன்றோ
இழிவுவரும் எனுங்கருத்தால் மறுப்பு ரைப்பார். 17

புலவர்தமை இகழ்ந்துரைப்பார் எவரே யாகப்
பொறுமைகொளார் மறுத்திடுவார் அச்சங் கொள்ளார்;
பொலிவுதரும் பதவியினால் ஓர மைச்சர்
புலவர்தமை இகழ்வுரையால் எள்ளல் செய்தார்;
'இலகுதமிழ் ஆசிரியர், [1]க.கா. என்ற
இரண்டுக்கும் மேலொன்றும் அறியார்' என்றார்;
பலருமவண் கைதட்டி ஆர்ப்ப ரித்தார்;
பண்டிதமா மணியுமதைப் பார்த்தி ருந்தார். 18

'அமைச்சர்தரும் மதிப்புரைகள் உண்மை; ஆனால்
அதற்குமேல் இவர்தெரிந்த பொருள்தான் என்ன?
நமக்குலகில் கடவுளொடு காதல் என்ற
நற்பொருளை விஞ்சுகிற பொருள்தான் உண்டா?
தமிழ்ப்புலவர், அரசியலில் ஆங்கி லத்தில்
தனிப்புலவர், இவ்வகையில் யாரும் ஒன்றே;
அமைப்பிதன்மேல் அறியாதார் கூட்டத் துள்ளே
அமைச்சருந்தாம் ஒருவ'ரெனத் துணிந்து ரைத்தார் 19

[1]க - கடவுள். கா- காதல்.

பண்டிதமா மணிமொழியைக் கேட்ட மக்கள்
பாராட்டிக் கைதட்டி ஆர்ப்ப ரித்தார்;
தண்டமிழைப் பழித்தாலும் கைகள் தட்டித்
தமிழ்மாந்தர் ஒலியெழுப்பி மகிழ்ந்தி ருப்பர்;
விண்டவரை மறுத்துரைத்துத் தாக்கும் போதும்
வேகமுடன் கைதட்டி ஆர்ப்ப ரிப்பர்;
கண்டபடி கைதட்டிக் களித்தல் ஏனோ?
கையிருக்குங் காரணத்தால் தட்டித் தீர்ப்பர். 20

கற்றார்க்குக் களிப்பருள அரங்கில் ஏறிக்
கதிரேசர் பேசுங்கால் குழப்பஞ் செய்ய
உற்றார்க்கும், பொருள்பலவும் எடுத்து வீசி
உடைத்தார்க்கும் கலங்கிலராய் அவரை நோக்கி
சொற்போர்க்கே யாம்[1] அணியம்! வல்லீ ராயின்
துணிந்தெழுக அமர்செய்வோம்; அல்லீ ரென்றால்
மற்போர்க்குத் தகுதியொன்றும் இல்லேம் என்று
மதிகொடுத்த உரப்பெருக்கால் உரைத்தார் அன்று 21

கனன்றெழுந்து தமையீன்ற தாய கத்தின்
கால்விலங்கை உடைப்பதற்குக் கல்லு டைத்தார்;
முனைத்தெழுந்து வெள்ளையரை ஓட்டு தற்கே
முந்நீரில் மரக்கலத்தை ஓட்டி நின்றார்;
சினந்தெழுந்து தந்நாட்டைச் சிறையின் மீட்கச்
சிறைபுகுந்தார்; செக்கிழுத்தார்; தெக்க ணத்தார்
மனம் விழைந்து தாய்மொழிக்குந் தொண்டு செய்தார்
மானமுள்ள தமிழனுக்குத் தெரியும் நன்கு. 22

இலக்கணநூல் பதிப்பித்தார், இலக்கியங்கள்
இனிதாய்ந்து தெளிந்திருந்தார், குறளை நன்கு
துலக்கமுறக் கற்றுணந்தார், ஆங்கி லத்தில்
தோய்ந்தெழுந்து மொழிபெயர்த்தார், பாடல் யாத்தார்,
குலத்தமிழர் வ.உ.சி. மனந்தி றந்து,
'கூர்மதியர் மணிப்புலவர் தலைமை ஏற்றால்
விளக்குகிறேன் குறள்பற்றி' என்றார்; என்றால்
வியத்தக்க கதிரேசர் தலைமை என்னே! 23

[1] ஆயத்தமாகவுள்ளோம்.

இசைவளர்க்கும் மாநாடு, சமயக் கொள்கை
எடுத்தியம்பும் மாநாடு, தமிழைக் காத்து
நசைவளர்க்கும் மாநாடு, சங்க நூல்கள்
நயமுரைக்கும் மாநாடு, கடல்க டந்தார்
இசைவளர்க்கும் மாநாடு, புகழ்ம ணக்க
எங்கெங்கு நடந்தாலும் தலைமை ஏற்கத்
திசைமுழுக்க இவரைத்தான் அழைத்துச் செல்வர்
திருமொழியார் 'தலைமைக்குத்' தலைமை செய்தார். 24

புலமைக்கு வடிவமெனத் திகழ்ந்த செம்மல்
போற்றிகொளும் எம் 'அருணா சலனார்[1] ஓர்நாள்
கலைமிக்க ஈழத்துத் திருநாட் டிற்குக்
கதிரேசர் தம்முடனே சென்றி ருந்தார்
'புலமைக்குக் கடலிவர்பால் மூழ்கி நின்றும்
புல்லறிவால் அப்புனலுட் சிறிதே ஏற்றேன்
அலைகடற்குள் நாழியினை அமுக்கி மொண்டால்
அதுநான்கு நாழிநீர் முகவா தன்றோ?' 25

என்றுதம தடக்கத்தைப் புலப்ப டுத்த,
இதுகேட்டு மணிவாயாற் சிலசொற் சொன்னார்;
'நன்றிசைத்தார் பேச்சாளர் நாழி கொண்டு
நம்மிடத்து முகந்ததுவுங் கடல்நீர் தானே'
என்றுரைத்தார்; கடற்குரிய தகுதி முற்றும்
எடுத்தபுனல் தானுமுறும் எனவும் என்பால்
அன்றெடுத்த அப்புனலும் உவர்நீர் என்றும்
அவர்பெருமை இவர்எளிமை இரண்டுங் கண்டோம். 26

பழையதமிழ் நூலெனினும் சமயம் பற்றிப்
பகர்கின்ற நூலெனினும் எதுவென் றாலும்
பிழையறவுந் தெளிவுறவும் அவையோர் உள்ளம்
பீடுறவும் பதிவுறவும் தேர்ந்த சொல்லின்
மழைபொழிவார்; நெடுநேரம் நனைந்தி ருப்போர்
மனத்தகத்துச் சலிப்பொன்றும் தோன்றா வண்ணம்
நுழைபுலத்தால் நகைச்சுவையுங் குழைத்தெ டுத்து
நுவன்றிடுவார்;அஃதில்லாப் பேச்சே யில்லை. 27

[1]பேராசிரியர் மு.அருணாசலம் பிள்ளை

இழிகதைகள் புன்மொழிகள் இவற்றைக் கூறல்
இலக்கியமா? நகைச்சுவையா? புலமை தானா?
அழிசெயலே வேறன்று; பண்பு போற்றி
அறிவுக்கு விருந்தாகக் கேட்போ ருள்ளம்
கழியுவகை மீதூர உயர்ந்த வற்றைக்
கற்றவரும் வியந்துரைக்கச் சிரிப்புத் தோன்றப்
பொழிவதுதான் சுவையாகும் முயன்று பெற்ற
புலமைக்கும் அழகாகும் சால்பும் ஆகும். 28

மண்டியவர் மனமகிழ மணியார் ஓர்நாள்
மாமுகில்போற் சொன்மழையைப் பொழியுங் காலை
பெண்டிர்சிலர் பேசியிடை யூறு செய்யப்
பேரவையிற் சிலரெழுந்து தடுத்துப் பார்த்தார்;
கண்டஇவர் 'பெண்மணிகள் அவர்பே ராகும்
கலகலவென் றம்மணிகள் ஒலியெ ழுப்பிக்
கொண்டிருத்தல் இயல்பன்றோ' எனவு ரைத்தார்;
கையொலிகள் அடங்கியபின் அமைதி கண்டார். 29

கற்றவர்கள் மெச்சுமரு ணாச லப்பேர்க்
கவிவாணர் கதிரேச மாம ணிக்குச்
சொற்பொருளால் நலமிக்க பாடலொன்று
சொல்லிவர வேற்பளித்தார்; அந்தப் பாட்டில்
'சொற்பொழிவு நிகழ்த்திவருங் கூட்டந் தன்னிற்
சுடர்மணியார் அரங்கிருந்து தொடங்கி விட்டால்
பற்பலரும் அங்காந்து செவிம டுத்துப்
பாவையென அமர்ந்திருப்பர்' என்று சொல்ல 30

செவிமடுத்த மாமணியார் முறுவ லித்துச்
சிரித்தவையோர் மகிழ்ந்திருக்கப் 'பலரும்' என்று
கவிகொடுத்த சொல்லை இடைக் குறையாக் கொண்டு
கற்பித்தார்; 'பல்லுடையார் வாய்தி றந்து
செவிமடுப்பர் என்பதனால் எனக்குப் பற்கள்
இல்லாத செவ்விதனைச் சிந்தை வைத்துக்
கவிதொடுத்தார் போலும்' எனச் சொன்ன போது
கையொலியும் வாயொலியும் நிரம்பிற்றங்கே. 31

□ கருத்து வேற்றுமை பெருத்துள நாளில்
கறுத்தெழுந் தார்சிலர் கம்பன் யாரெனக்
கிளர்ச்சிகள் நடத்தினர்; கிழவர் இவர்தாம்
நகைச்சுவை மொழியால் நவின்றனர் சிலசொல்
'கம்பை யுடையவன் கம்பன் அதனால்
கம்பன் யானே' கழறினர் இவ்வணம்;
அவையில் இருந்தோர் அனைவரும் அந்நகைச்
சுவையால் மகிழ்ந்தனர்; சோர்ந்தன கையே.

□ தமிழ்மணிப் புலவர் தலைமை தாங்க
வழக்கில் வல்லவர் முழக்கினர் ஒருநாள்
நற்றமிழ்ப் புலவர் பற்பல குற்றம்
உற்றவர் என்று குற்றஞ் சாற்றிக்
'காலம் பொன்னெனக் கருதார் அவர்தாம்
காலங் கடந்தே வருதல் கண்டுளேம்'
என்று பற்பல எடுத்து மொழிந்தவர்
நேரங் கடந்து நிறுத்தினர் பேச்சை;
கூறும் குற்றச் சாற்றினைக் கேட்டு
முடிவுரை ஒன்று மொழிந்தனர் தலைவர்
'ஏதிலார் குற்றம் எடுத்துரைப் பதுபோல்
ஓதுவோர் தம்பாற் குற்றம் உறுவதை
ஓர்ந்து காண்பரேல் ஒருதுய ரிலையே'
என்றதும் அவையில் எழுந்தது நகைப்பே,

□ சுவைமணி சிதம்பர நாதர்[1] ஒருநாள்
அவையிற் பேச எழுமுன் அறிமுகம்
செய்ய எழுந்த துய்ய மணியார்,
'பாட்டின் சுவையிற் பழகிய மணியிவர்
கம்பன் பாடற் காசுகள் எடுத்துக்
கொட்டுவார் தட்டுவார் கூடிய பாடலில்
கம்பன் முத்திரை காணாக் காசிவை
செல்லாக் காசெனச் செப்பி எறிவார்;
படலம் பலவும் திடமுடன் எறிவார்
இடைஇடைச் செருகல் என்றெடுத் தெறிந்திட
ஒருவர் போதும்; பலரிவண் தோன்றின்
கம்பனைத் தேடிக் கற்றுத் தொலைக்கும்

[1]டி.கே.சிதம்பரநாத முதலியார்

வம்பே யில்லை' என்றுரை வழங்க
அன்றவ ரிருவரும் சிரித்தனர் ஆங்கே.
□ மற்றொரு மேடையில் சொற்ற மொழியில்
உற்றநகைச் சுவையை ஓர்ந்து தெரிக;
'ஒருநாள் இரவில் உறுதுயில் கொள்ள
அரவணி பெருமான் கனவிடை வந்தார்;
பெருமகிழ் வுற்றுநான் ஒருவரங் கேட்டேன்;
இறைவன் என்பால் இன்முகங் காட்டித்
'தந்தம்[1] உமக்குப் போமெனச் சாற்றினர்;
தந்தோம் உமக்கெனச் சாற்றினர் என்று
சிந்தையில் மகிழ்ந்தேன்; வந்தது விடியல்
கனவும் வரமும் பலித்திடக் கண்டேன்
ஆம்ஆம் பற்கள் அனைத்தும் விழுந்தன;
எனலும் அவையோர் எழுப்பினர் நகையே
□ தமிழோ டாங்கிலந் தக்கவா றுணர்ந்தோர்
அமிழ்தெனப் பொழியும் ஆற்றலர் ஒருவர்
'அமெரிக்க நாட்டில் ஆங்கிலக் கவிஞர்என்
றெமருக் குரைப்பேன்' என்றொரு மேடையில்
சொற்பெருக் காற்றினர்; மற்றது முடிந்ததும்
முடிப்புரை தொடுக்கும் வழக்கினை விடுத்துத்
தமிழறி புலவர் தக்கவா றுரைத்தனர்;
இன்றுநான் கேட்க இன்னுரை வழங்கியோர்
இடைவேளை படைக்கும் [2]இடைவேலை எனக்குத்
தராது முடித்துத் தந்தனர் என்றுதாம்
ஆங்கிலம் பயிலா அத்தகு நிலையைப்
பாங்குடன் குறிப்பாற் பகர்ந்தது கேட்டு
நினைந்து மகிழ்ந்தது நீடிய அவையே.
□ ஊன்றிய கோலின் உறுதுணை யதனால்
ஆன்றவர் தளர்வுடன் அவர்தம் மனையில்
ஈண்டிய படிகளில் இறங்குங் காலை

[1] தந்தோம் (பல்எனவும் பொருள்படும்.
[2] இடையில் முடிவுரை வழங்கும் வேலை.

ஆண்டுடன் வருவோர் அவர்நிலை யறிந்து
படிபடி என்றுரை பகருதல்கேட்டுப்
'படிபடி எனுமொழி பலகாற் பகர்வீர்
படிப்பதே தொழிலேன்' என்பர் பண்டிதர்
நகைச்சுவை ததும்பத் தொடரும் நடையே.
□ நற்குணம் நிறைதரு நாட்டார் ஒருநாள்
கற்குடிக் கோவில் காண விழைந்த
செவ்விய மணியுடன் சேர்ந்தவண் சென்றார்
ஒவ்வோ ரிடத்தும் உறுநிலை சுட்டி
அழைத்துச் செல்பவர் அவ்வுழைக் கால்கள்
பிழைத்திடா வண்ணம் பேருளங் கொண்டு
படிகள் இல்லா இடங்களை யுணர்த்தப்
'படியிலை படியிலை பார்த்து வரு'கெனத்
தொடரும் நாட்டார் சொல்லின ராக
'அடியவர்க் கருளும் ஆண்டவன் முன்னர்ப்
படியிலை எனமொழி பகருதல் நன்றோ?
படிமிசை எவர்க்கும் படியளப் பவன்யார்?
இறைவன் அன்றோ?' என்றனர் மணியார்
நிறைமகிழ் வுடனே தொழுதனர் நெடிதே.
□ வீர சைவத் திருமடம் ஒன்றில்
சீரிய விழாவொன் றோர்நாள் நடந்தது
தலைமை ஏற்றனர் தமிழ்மணிப் புலவர்
நலமுடன் விழாவும் நடந்து முடிந்தபின்
விழாவினை நடத்தியோர் விருந்து வைத்தனர்
குழாத்துடன் உண்டுபின் குறித்த இடத்தில்
துயிலச் சென்றனர் துணைவந் தவர்பால்
'அயின்ற உணவின் ஆன்ற சுவைதான்
எப்படி அப்பன்?'என்று வினவத்
'தப்பிலை எனினும் வெந்தது சரியிலை'
இப்படி யுரைத்தனர்; இவரோ 'ஆமாம்
சமயமும் வீர சைவம் ஆதலின்
சமயலும் வீர சைவம்' என்றனர்
காரம் மிகுந்த குறிப்பைக் காட்ட
வீர சைவமென விளம்பினர் இவரே.
□ அரியக் குடியிற் சொற்பொழி வாற்ற

வரும்இப் பண்டித மணியார் பருகக்
குவளையிற் பசுப்பால் கொடுத்தன ராகக்
குவளையுட் பாலைக் கூர்ந்து நோக்கிச்
'சிறுபாற் கடலில் சீனி வாசன்
அறிதுயில் கொள்கிறான்' என்றனர் அவர்தாம்;
உடனிருந் தோரெலாம் ஒன்றும் அறியா
திருந்திடப் பாலில் எறும்பு கிடந்ததை
அருந்தமிா புலவர் விளக்கிச் கூறினர்
சீனியில் வாசஞ் செய்யும் எறும்பைச்
சீனி வாசன் என்று செப்பிட
வியந்து நகைத்தனர் வீற்றிருந் தோரே.

□ திருவா வடுதுறைத் திருமட மதனில்
அருள்மிகு தலைவர் அம்பல வாணர்
இவருடன் பழகிய இனிய கேண்மையர்
அவரைத் தொழஎழும் ஆர்வம் கூர்ந்தொரு
நாளிற் சென்று நயப்புடன் அணுகித்
தாளில் வீழத் தலைப்படுங் காலை
தழுவிய பிரம்பு நழுவிடத் தவறி
விழும்நிலை எய்தினர் வெருவிய தேசிகர்
தாவி யெழுந்து தாங்கி அணைத்தனர்
பாவில் உறுநயம் பயின்றிடும் நாவால்
'எளியேம் தவறுவ தியற்கை அதுபோல்
அளியீர் எம்மை அணைத்துத் தாங்கலும்
இயல்பே யா'மென இருபொருள் தருமொழி
இயம்பினர் புலவர் எழுந்தது நகையே.

□ பாவால் ஒருநூல் பாடி ஒருவர்
தேவாரம் என்றொரு தெரிபெயர் சூட்டிப்
பண்டித மணியைக் கண்டொரு பாயிரம்
பெற்றிடும் ஆவலால் உற்றனர் இவர்பால்
கற்ற கல்வியில் முற்றுதல் இல்லா
மற்றவர் தமக்கு மதிப்புரை நல்க
விழைதல் இலரால் விடையிது கூறினர்;
புதிய தேவாரப் புத்தகந் தன்னைப்

பழையஒள் அறையிற் படுத்துதல் வேண்டும்
முதலிற் கறையான் சுவைத்து முடிக்க
எஞ்சிய பகுதியே இனியதே வாரம்
பழந்தே வாரம் வந்த முறையிது
அந்த முறையால் வந்தால் நுமது
பாடலும் பெருமைப் பாடுடைத் தாகும்
இவ்வணம் செய்தபின் எஞ்சிய பகுதியைக்
கொணரின் பாயிரங் கொடுக்கத் தடையிலை
என்று மொழிதலும் ஏகிய அவர்தாம்
என்றும் வந்திலர் இக்குறிப் புணர்ந்தே.

**9**

# நட்புவளர் காதை

புலமிக்கார் மாசற்றார் கேண்மை போலப்
பூதலத்தில் யாவுளவோ? ஒன்று மில்லை
வலமிக்க வாழ்வுக்கு நட்பைப் போல
வழிசெய்யும் பொருளொன்று கண்ட தில்லை;
நலமிக்க நண்பரிலா வாழ்க்கை பாழாய்
நனிவறண்ட பாலைநிலம் போல வாகும்;
உளமிக்க நண்பருடன் பழகும் வாழ்க்கை
உயிராறாய் மலர்வனமாய்த் திகழ்ந்து தோன்றும். 1

பெரும்புலமை மிகுநெஞ்சில் தம்மோ டொத்த
பிறருக்கும் மதிப்பளித்துப் புகழ்ந்து போற்றி
விரும்புவது சற்றருமை; ஆனால் எங்கள்
பீடுநிறை மணிப்புலவர் தமிழ கத்துப்
பெரும்புலவர் எவருளரோ அவரை யெல்லாம்
பேணியவர் நட்பனைத்தும் பெற்றி ருந்தார்;
கரும்புநிகர் நூல்நயமும் நல்லார் நட்பும்
கதிரேசர் வளர்பிறைபோல் வளர வாழ்ந்தார். 2

சங்கங்கள் பலவைத்துப் பெருமை பூணத்
தமிழ்காத்த பாண்டியர்கள் சென்ற பின்னர்
இங்கெங்கள் தமிழ்காக்கப் புலவர் என்ற
இனங்காக்க இனியதொரு சங்கங் கண்டு,
துங்கமுற அதைவளர்த்து நின்ற பாண்டித்
துரைத்தேவர், இவர்புலமைத் திறத்தைக் கண்டு
பொங்கிவரும் மகிழ்வதனாற் சங்கங் காக்கும்
புலவர்க்குள் ஒருவரென ஆக்கிக் கொண்டார். 3

தொடுக்கின்ற சொற்போரில் தோல்வி நேரின்
    'துணித்தெனது தலையெடுத்து வைப்பேன்' என்று
விடுக்கின்ற அறைகூவல் உடையார், நெஞ்சில்
    விளைபுலத்துப் பெருக்குடையார், வறுமை வாழக்
கொடுக்கின்ற வாழ்வுடையார், எனினும் என்றும்
    குன்றாத பெருமிதமே உடையார், எங்கும்
அடுக்கின்ற பணிவுடையார், சோழ வந்தான்
    அழகியநல் லூருடையார், உடையார் என்றும் 4

எளியவர்க்குள் எளியரென விளங்குந் தோற்றம்
    இலக்கணத்தில் நிகரில்லா திலங்கும் ஏற்றம்
துளியனைத்து மஞ்சாத புலமை வீரம்
    துயர்கண்டு மனமிரங்கி அருளும் ஈரம்
வழிவகுக்கும் திருக்குறளின் பாட்டுக் கிங்கு
    வளமான விருத்தியுரை தந்த செல்வர்
அளிமிகுத்த மலர்சூழும் சோழ வந்தான்
    அரசஞ்சண் முகனாரின் தொடர்பும் பெற்றார். 5

உரைசால் மணியார் ஓங்குயர் புலவர்
அரசன் சண்முகர் ஆருயிர் நட்பைப்
பெற்ற முறையோ பெருவியப் பாகும்
முற்றுமந் நட்பை முறையாற் கூறுதும்;
அணிமையில் அமைந்துள மருத்துவ மனைக்கு
மணியார் ஒருநாள் வந்தா ராக,
மருத்துவர் அங்கிலர் ஆதலின் வந்தவர்
பொறுத்தவண் இருந்தார்; புல்லிய குடுமியும்
[1]மெய்ப்பை யணியா மேனியும் உடையார்
[2]எய்ப்புடன் ஒருவர் இருந்தார்; அவ்வுழை
அடிமைப் பணியாள் அவரென நினைந்து
'குடிநீர் கொஞ்சம் கொணர்க' என்றனர்;
அவரும் இவர்நிலை அறிந்துளம் இரங்கிக்
குவளையில் தண்ணீர் கொடுத்தனர்; பின்னர்ப்
பண்டித மணியார் பசித்தவ ராகி,

[1]சட்டை. [2]இளைப்புடன்

‘உண்டி வாங்கித் தரலும் ஒல்லுமோ?’
என்றதும் எளியவர் எழுந்துடன் விரைந்து
சென்றது வாங்கித் திரும்பினர்; அவ்வயின்
மருத்துவர் வந்தவர் மகிழ்ந்தனர் கண்டு,
‘பொருத்தம் பொருத்தம் புலவர்தம் தொடர்பு!
நானே அறிமுகஞ் செய்ய நயந்தேன்
தானே நடந்தது தனிப்பெரு மகிழ்ச்சி’
என்றன ராக, இதுவரை ஈங்கு
நின்றுறு பணிகள் நெஞ்சினில் உவந்து
நன்றுறப் புரிந்தவர் யாரென வினவ
அரசன் சண்முகர் ஆமெனல் அறிந்து
பெருமையின் பணிவைப் பெரிதுவந் தனரால்
பெருகி வளர்ந்தது பெட்புறு நட்பே.
கைப்பொருள் வற்றிய காலையும் புலவர்
கற்பனை வற்றுதல் காணார்; அவருள்
அரசன் சண்முக னாரும் ஒருவர்;
வறுமைத் துயரினை வடித்தல் காண்மின்!
‘கடனெனுந் துரியனால் கைப்படும் ஊக்கமாம்
இடம்படும் நாட்டை இழந்து சஞ்சல
வனத்தில் மதியெனும் மனையுடன் ஐம்பொறி
எனப்படும் பஞ்சவர் கூட்ட மானயான்
அலைந்து திரிந்ததை அறிவீர்! நும்மைப்
பிரிந்திவண் வந்தபின் கரந்துறை வாழ்வில்
திரிந்த நேரம் திண்டுக் கல்லெனும்
விராட நகரத்து மகமதியர் எனைத்துயர்
உறாவணங் காத்தனர்; உயரிய செல்வர்;
இருந்த நன்செயை ஈடு வைத்துக்
கரந்துறை வாழ்வைத் துறந்து வந்தபின்
உத்தி யோக பருவமும் உஞற்றினேன்,
உரிய பதினெண் நாட்போர் ஓய்ந்தது
துரியனும் ஆங்கே துடைமுரிந்து வீழ்ந்தான்
ஆயினும் உயிர்தான் அகன்றிலன் எனினும்
வீயும் அந்நாள் விரைவினில் வந்துறும்
அந்நாள் வந்தபின் நன்னூல் ஆய்வெனும்
பொன்முடி சூட்டு விழாவும் பொலிவுறும்

இழந்த ஊக்க எழில்நா டெனதாம்;
ஒல்காச் செங்கோல் ஓச்சுங் காலை
தொல்காப் பியப்பயிர் தழைத்துத் தோன்றும்'
எனஒரு மடலில் எழுதினர் மணிக்கு;
துயர்தருந் துரியன் உயிரது தொலையக்
கதிர்மணிக் கண்ணன் காட்டினர் வழியே.

பழமைக்கும் புதுமைக்கும் பால மிட்டுப்
பகுத்தறிவாற் சமயத்தை நோக்கு கின்றார்;
கிழமைக்கு மனந்தருவார்; மொழிப்போர் என்றால்
கிளர்ச்சிக்கும் இடந்தருவார்; உள்ளம் ஒன்றித்
தொழுகைக்குக் கடவுளிடம் தமிழே வேண்டித்
தொண்டுசெயும் மறுமலர்ச்சிப் புதுமை கொண்டார்;
எளிமைக்கோர் இலக்கியமாய் மக்கள் தொண்டிற்
கிலக்கணமாய் வளர்குன்றக் குடியில் வாழ்வார். 1

திருமடத்திற் குள்ளிருந்து துறக்கம் என்று
செப்புகிற உலகுக்கு வழிகாட் டாது
பெருமடமைக் காட்பட்டுக் கல்வி யின்றிப்
பிரிவுதருஞ் சாதிசொலித் தாழ்ந்து கெட்டுத்
திரிபவர்க்கு வையத்துள் வழிகள் காட்டத்
தீண்டாமைப் பிணியகற்ற வெளியில் வந்த
அருள்மனத்தர் நமதுளத்தர் அடிகள் தம்மை
அகங்குளிரக் கேளிரென ஏற்றுக் கொண்டார். 2

அமிழ்தனைய தமிழ்மொழியும் அதனோ டொப்ப
அரனடியும் நினைந்துருகும் அடிகள் தம்மைத்
தமிழரறி திருக்குன்றக் குடியில் வாழும்
தவமுனியைக் கண்டுவந்து வணங்க எண்ணித்
தமிழ்மொழியும் சிவநெறியும் தழைத்து வாழத்
தமதுளத்தில் அசைவில்லா உறுதி பூண்ட
தமிழ்மணியாம் பண்டிதமா மணியார் ஓர்நாள்
தண்டூன்றித் திருமடத்துட் புகுந்தி ருந்தார். 3

தெங்கின்காய் உடைக்குமொலி கேட்டு விட்டால்
　　திரண்டோடி வந்தன்னை சீலை பற்றி
இங்கந்நீர் எனக்கெனக்கென் றடம்பி டிக்கும்
　　இளஞ்சிறுவ ரிடைநிற்பாள் ஒவ்வோர் வாய்க்கும்
பங்காக்கி ஊற்றுதல்போல் தம்பால் வந்து
　　பணிபவர்க்குத் திருநீறு வழங்கி வாழ்த்திச்
சங்கத்து முத்தமிழ்க்கும் சங்க ரற்கும்
　　சமமாக உளமளித்த அடிகள் நின்றார். 4

மேன்மாடத் தினிதிருந்த அடிகள் தம்பால்
　　வீறுபெறு தமிழ்ப்புலவர் வருகை கூற
மான்தாவித் துள்ளுதல்போல் உவகை கூர்ந்து
　　மாமுனிவர் எழுந்தோடி இறங்கி வந்தார்;
"கான்மாறி யிருப்பதனாற் படிகள் ஏறிக்
　　கண்டுவர இயலவில்லை; அடிகள் தம்மை
நான்பாவி வரவழைத்தேன்; பொறுத்துக் கொள்க"
　　நாநடுங்கக் கண்பனிப்ப மனம்தி றந்தார். 5

செந்தமிழ்மா மணிமொழிந்த பணிவு கண்டு
　　சிவசிவவென் றடிகளவர் தொழுதி ருந்தார்;
உந்திஎழும் ஆர்வத்தாற் பொங்கி நின்ற
　　உணர்ச்சியினால் ஒருவர்முகம் ஒருவர் கண்டு
கொந்தவிழ்ந்து விரிமலர்போல் முறுவ லித்தார்;
　　கொழிதமிழும் சிவநெறியும் கூடிற் றங்கே;
சிந்தைமகிழ் தொண்டுபுரி நாவின் வேந்தர்
　　சீகாழிச் சம்பந்தர் சந்திப் பாகும். 6

சங்கரனார் உமையவளைக் குமரன் என்னும்
　　தம்மகனை உடனழைத்து மதுரை மூதூர்ப்
பொங்குதமிழ்ச் சுவைமாந்தும் வேட்கை பூண்டு
　　பூதலத்து மாந்தரென இறங்கி வந்தார்;
எங்கள்தமிழ்க் குருபரனார் இந்த வண்ணம்
　　இனியதமிழ்ப் பெருமையினை இயம்பு கின்றார்;
இங்கரனார் அடிபரவும் அடிகள் தாமும்
　　இறங்கிவரல் முறைதானே தமிழைக் காண. 7

சமயத்துத் துறையிலவர் தலைமை பூண்டார்
தமிழ்த்துறையில் மணிப்புலவர் தலைமை பூண்டார்;
இமயத்துப் புகழ்முடியில் நிற்கும் அந்த
இருதலைவர் தலைக்கூடி மகிழ்ந்த அந்த
அமையத்துத் தலைமையெலாம் மறந்து போனார்
அடியவர்க்குள் அடியவராய்த் திளைத்தி ருந்தார்;
இமைமுற்றும் விழிமலர்கள் பனிப்ப நின்றார்
எழுமன்புக் கடைக்குந்தாழ் இல்லை யன்றோ? 8

ஆன்றமைந்து தலைமைபெறும் பெரியார் தம்முள்
ஆணவமோ தலைச்செருக்கோ அரும்பா தன்றோ?
சான்றவர்கள் தலைக்கூடும் பொழுது தம்முள்
தலைவணங்கி மற்றவரை மதித்து நிற்பர்;
ஏன்றபிற தகுதியெலாம் மறைந்து நிற்கும்
ஈருளத்தும் எழுமுணர்ச்சி ஒன்றே நிற்கும்;
போன்றவரில் லாத்தலைவன் தலைவி கூடும்
பொழுதத்துப் பிறமறைந்தன் பொன்றே தோன்றும். 9

தன்மானங் கருதாமல் இனத்தின் மானம்
தமிழ்மானம் இவையிரண்டுங் கருதல் ஒன்றே
பொன்மாலை, புகழ்மாலை, மலர்ந்து தோன்றும்
பூமாலை சூடுகிற தலைமைப் பண்பாம்
தன்காலை வருடிவரும் சிலரைக் கொண்டு
தருவிலையாற் பெறுவதுவா தலைமை யாகும்?
எந்நாளும் தன்னைவியந் தணியா தென்றும்
எவரிடத்தும் பணிவதுதான் பெருமை யாகும். 10

இருவருமே தமிழுணர்ந்தோர் குறள்ப யின்றோர்
இயல்புடையோர் தமிழ், சைவம் என்று சொன்னால்
உருகுகிற மனமுடையோர் அதனால் நெஞ்சத்
துணர்ச்சியெனும் கொடுமுடியில் நின்றி ருந்தார்;
ஒருவருடன் ஒருவர்விழி கொண்டு பேசி
உவகையினால் உள்ளத்துள் மாறிப் புக்கார்
உருவமது வெவ்வேறு பெறினும் அங்கே
உள்ளங்கள் ஒன்றாகி மகிழ்தல் கண்டோம். 11

துறவுலகில் ஞானியார்? என்ற ஐயம்
தோன்றிவரும் நாளிற்றான், சுரும்பு சூழும்
நறவுமலி பாதிரிசேர் புலியூர் தன்னில்
நலம்பெருக்குஞ் செம்பொருளின் வளம்பெ ருக்கி
அறவுரைகள் நிறைதமிழின் சுவைபெ ருக்கி
அவாவறுக்கும் ஞானியார்[1] அமர்ந்தி ருந்தார்;
நிறைவுகொளும் மதிப்புலவர் அவர்தம் கேண்மை
நெஞ்சுவந்து தமிழ்சிவம்போற் பேணிக் கொண்டார் 12

அன்புக்கு மனமளித்தார் எளிய வாழ்வில்
அமைதிக்கு வடிவளித்தார் இனிய சொல்லின்
தன்மைக்கு நாவளித்தார் முதுமை வாழத்
தமையளித்தார் வறுமைக்குப் புகல ளித்தார்
மென்மைக்கு மெய்யளித்தார் வாழ்நாள் முற்றும்
மேலான தமிழ்வளர உழைப்ப ளித்தார்
வன்மைக்குத் துணைபோகாப் பொதுமைக் காக
வாழ்வளித்தார் திரு. வி. க. இவர்க்கு நண்பர். 13

பலமொழிகள் படருமலை குறிஞ்சிப் பூப்போல்
பைந்தமிழே மண்டுமலை நூல்கள் என்னும்
குலமுகில்கள் தவழுமலை அருவி யாகக்
குலவிவரும் பேச்சுமலை சைவம் என்னும்
இலகுமுடி கொண்டமலை எங்கள் நெஞ்சில்
இனியதமிழ் தனிநடையில் இயங்கும் வண்ணம்
நலவழியைத் தந்தமலை பகைவர் யாரும்
நண்ணவொணா மறைமலையை நண்ணி வாழ்ந்தார். 14

இசையிலையாம் தமிழ்மொழியில் என்று சொல்லி
இந்நிலத்தே வாழ்பகைவர் வாய டங்க
நசையுடனே ஆண்டுபதி னான்கு முற்ற
நன்காய்ந்தே யாழ்நூலொன் றளித்த வள்ளல்
அசைவில்லாத் துறவுநெறி ஒழுகுஞ் செம்மல்
அலைகடல்சூழ் இலங்கைமகன் விபுலா நந்தர்
இசையுடையார் வசையில்லார் நட்பும் பெற்றார்
ஏழிசையாய் இசைப்பயனாய்த் திகழ வாழ்ந்தார். 15

1. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள்.

இலக்கணத்தொல் காப்பியமும் அதற்குச் சான்றோர்
எழுதிவைத்த உரைகளுமோர் கடல்கோள் தன்னால்
கலக்கமுற அழியினுமே கந்த சாமி[1]
யாரிருந்தாற் போதுமொரு கவலை யில்லை
சொலச்சொல்லி மீண்டுமவை எழுதி வைத்துத்
துயர்தவிர்வோம் எனப்புகழும் நூல்வல் லாரின்
உலப்பிலதாம் தோழமையை நன்கு பெற்றார்
உயர்நட்பிற் கிலக்கணமாய் வாழ்ந்து வந்தார். 16

நாவிரிக்கும் புகழ்மணக்கும் பொன்னி பாயுஞ்
சோழவள நாட்டாரைச் சைவம் என்னும்
பூவிளைக்கும் செழுந்தேனில் திளைப்ப தன்றிப்
புறத்துமனம் நாட்டாரைத் தமது நெஞ்சில்
பாவிசைக்குந் தமிழன்றி மற்றும் ஒன்றைப்
படரவிட மாட்டாரைப் பொய்ம்மைக் காக
நாவசைக்க மாட்டாரை அமைதி சான்ற
ந. மு. வே. நாட்டாரை நட்பாக் கொண்டார். 17

பகைமருள மேல்நோக்கித் திருகும் மீசை,
படைத்தலைவர் எனநிமிர்ந்து பார்க்கும் பார்வை,
இகலறியா அரியேறு, பேசுங் காலை
இடிமுழக்கம் அவர்பேச்சு, தமிழைத் தாழ்த்தப்
பகைவருமேல் விழிசிவந்து கனலைக் கக்கப்
பாய்ந்துவரும் புலிப்போத்து, சட்ட நூல்கள்
பகர்புலவர் பாரதியார் என்று கூறும்
பசுமலையார் இவர்க்கினிய நண்ப ரானார். 18

பேரரசர் நிகர்தோற்றம் சிவந்த மேனி,
[1]பெ. ராம. சித. எனும்பெயரர்; நீறு பூசி
ஏரொழுகும் விரிநெற்றி யுடைய அன்பர்;
எழிலொழுகுந் 'தமிழ்வாழ்த்து' வையம் ஈன்ற
சீரணியுங் கலிவிருத்தம் பாடித் தந்து
சிறப்படைந்த கரந்தையுறு [2]கந்த சாமிப்
பேருடையார் இருவரையும் தமது வாழ்விற்
பெற்றஇரு கண்களெனப் பேணி வந்தார் 19

[1]கந்தசாமியார் - இலக்கணத்தில் வல்லாராகிய கிண்ணிமடங் கந்தசாமியார்.

[1]நச்சாந்து பட்டி பெ.ராம.சித.சிதம்பரம் செட்டியார். [2]கரந்தை நீ.கந்தசாமிப்பிள்ளை.

உரந்தழுவுந் தமிழ்மறவர் அஞ்சா தென்றும்
உரைநிகழ்த்தும் சொற்செல்வர் படர்ந்த டர்ந்து
நிரந்துவரும் எழில்மீசை யுடைய வீரர்
நிலத்துயர்ந்த செந்தமிழின் வளர்ச்சிக் காகக்
கரந்தைதனில் தமிழ்ச்சங்கம் கண்ட சோழர்
கனிவுடையார்[3] உமாமகே சுரனார் என்று
சிறந்தபெயர் கொண்டவரை நயந்து போற்றிச்
செயற்கரிய நட்புளத்திற் பொலிய வாழ்ந்தார். 20

கொண்டொழுகும் பண்பாட்டில் இனிமை யுண்டு;
கொழித்துவரும் நன்பாட்டில் எளிமை யுண்டு;
தண்டமிழில் நீங்காத நெஞ்சம் உண்டு;
தருபொருளை வாங்காத கையும் உண்டு;
பண்டையநற் புகழேந்தி போன பின்வெண்
பாவிற்குப் புகழேந்தித் தந்த துண்டு;
கண்டுநிகர் கவிமணியார் நெஞ்சில் நின்று
களிநடஞ்செய் கதிரேசர் ஆன துண்டு. 21

பாட்டின்பஞ் சுவைப்பதிலே தனித்த ஆற்றல்
படைத்துயர்ந்த சுவைமணியார்,[1] இனிய பாட்டைக்
கேட்டவர்க்குச் செவிகுளிரப் பாடிப் பாடிக்
கிளக்கின்ற சொல்வல்லார்; கம்பன் தந்த
பாட்டின்கண் பலவற்றைச் சுண்டிப் பார்த்துப்
பதர்களிவை எனத்தூற்றும் செயலார்; அக்கோட்
பாட்டுக்கு மாறுபடும் நிலையி ருந்தும்
பண்டிதமா மணி,மணியார் [2]நண்ப ரானார். 22

சேதுசமத் தானத்துப் புலவ ரான
செந்தமிழ்தேர் இராகவையங் கார்க்கு நண்பர்;
ஏதமொரு சிறிதுமிலாக் கா.சு பிள்ளை
என்றபெரு மகனார்க்கும் இனிய நண்பர்;
ஓதுமொழிச் சுந்தரனை ஆரூர் தந்த
ஒள்ளியனைத் தோழமையால் அணைத்துக் கொண்ட
மாதுசுமக் குஞ்சடையான் அடிவ ணங்கும்
மாமணியார் பண்பாளர் தொடர்பு கொண்டார். 23

---

[3]. தமிழவேள் த.வே.உமாமகே சுரனார்.    [1.2.] இரசிகமணி. டி.கே.சி.

நிலத்தடியில் அமைந்திருக்கும் பொன்னும் மற்றும்
    நீர்க்கடலில் கிடக்கின்ற துகிரும் முத்தும்
மலைப்புலத்தில் விளைந்துயர்ந்த மணியுங் கூடி
    மாநிலத்தார் அணிகலன்கள் அமைக்குங் காலை
[1]கலத்தினிடை ஒருசேரத் தோன்றியாங்குக்
    கலைபலவுங் கற்றுணர்ந்த சான்றோர் சேய்மை
நிலத்தவர்தாம் என்றாலுங் கல்வி கேள்வி
    நிறைந்தொளிரும் மணியின்பாற் கலந்தி ருந்தார். 24

கூடெடுத்த பயன்முழுதுந் துய்த்த நூலோர்;
    குழந்தைமுதல் பெரியர்வரை அறியும் மேலோர்;
கேடுடுத்த கடல்கோளும் கறையான் வாயும்
    கெடுமதியர் சூழ்ச்சிகளும் தப்பி நின்று
ஏடெடுத்து நமதுதமிழ் நூல்கள் வாழ
    இனிதளித்தோர் பணிபுரிந்தோர் சாமி நாதப்
பீடுடுத்த பெருங்கிழவர்; அவர்தம் நட்பும்
    பெரும்புலமைக் கிழவரிவர் பூண்டி ருந்தார். 25

[1] அணிகலனில்

# 10
# பேராசிரியக் காதை

மடைகாட்டும் வெள்ளமென வந்த செல்வம்
மற்றெதற்கோ செலவழித்துப் பயின்ற நாட்டில்
நடைகாட்டுங் கல்விதரக் கழகம் காண
நற்றமிழ்க்குக் கோவில்செய முந்தி முந்தி
நடைபோட்டு வந்தமகன் அரசர் என்று
நாடெல்லாம் போற்றுமகன் எதையும் தூக்கி
எடைபோட்டுப் பார்ப்பதிலே வல்ல மைந்தன்
எழில்மிகுமண் ணாமலையார் போல்வார் யாரே? 1

காடாய வேட்களத்தைக் கல்லும் முள்ளும்
கலந்திருந்த நிலப்பரப்பைச் சீர்தி ருத்தி
நாடாக உருவாக்கித் தம்பேர் தாங்கும்
நகராக்கிப் பல்கலைதேர் கழக மாக்கி
ஏடாள வல்லார்யார் என்று தேடி
இணையிலரைத் துறைதோறும் ஆசா னாக்கிப்
பீடாள வந்தவரைத் தமிழர் கண்ட
பெருநிதியை என்சொல்லி வாழ்த்து வோமே. 2

சங்கத்துத் தமிழ்பரப்பிப் புகழ்ப ரப்பித்
தனியொளிபெற் றிலங்குமணி புகழைக் கேட்டுத்
தங்கத்தில் மணிவைத்துப் பார்க்க வல்ல
தனவணிக மரபரசர் தாம மைத்த
சங்கத்தில் நம்மணியை வைத்துப் பார்க்கத்
தனியார்வம் மிக்கவராய் அணுகிப் பார்த்தார்
அங்குற்றுப் பணிசெய்ய விரும்பா ராகி
அதற்கிவர்தாம் இசைவுதர மறுத்து விட்டார். 3

எதுவெனினும் இதுவரையில் வெற்றி ஒன்றே
ஏந்திவரும் அரசரிதை விட்டா ரல்லர்
இதைஇதனால் இவன்முடிக்கும் என்ற வண்ணம்
இயற்றுவதிற் கைவந்த கலைஞ ரன்றோ?
கதிரவரின் உறவினர்யார்? எவர்தம் சொல்லுக்
கிவர்பணிவார்? என்றாய்ந்து காண வல்ல
[1]மதுகையினால் தாமுயன்று வெற்றி கண்டார்
மணிப்புலவர் அதன்பின்னர் ஒப்புக் கொண்டார். 4

மீனாட்சி கல்லூரி என்று தோன்றி
மேல்வளர்ந்து பல்கலைசேர் கழக மாகித்
தானாட்சி செய்துவரும் நிறுவ னத்தில்
தமிழாட்சி செய்வதற்கு மனமி சைந்தார்
மீனாட்சி பங்காளர்;[2] ஏற்ற பின்னர்
மேலாட்சி ஒன்றில்லை என்று போற்றத்
தேனாட்சி செய்கின்ற தமிழ்வ ளர்த்தார்
திசையெல்லாம் பேராட்சி செய்யக் கண்டார். 5

குலனுடையார் அருளுடையார் தெய்வம் போற்றுங்
கொள்கையிலும் மனமுடையார் மேன்மை கொண்டார்
கலைபயிலும் தெளிவுடையார் விரும்பிக் கேட்கக்
கட்டுரைக்குந் திறனுடையார் நிறைகோ லன்னார்
நிலமனையார் மலையனையார் மலரும் ஒப்பார்
நிகரில்லா ஆள்வினையும் இயல்பான் வந்த
உலகியலோ டுயர்குணமும் ஒருங்கு பெற்றார்
ஒருகுறையும் இல்லாத ஆசான் ஆனார். 6

காலமறிந் திடனறிந்து நூலெ டுத்துக்
கற்பிக்கச் சிறந்துழியுந் தேர்ந்தி ருந்து
நீலமணி மிடற்றானை நெஞ்சால் வாழ்த்தி
நிரந்தினிது சொலும்பொருளைப் படித்துப் பார்த்து
மேலுமதை உளத்தமைத்து முகம லர்ந்து
விரையாது வெகுளாது விரும்பி நின்று
பாலமுதம் ஊட்டுதல்போல் கொள்வோன் கொள்ளும்
பாங்கறிந்தே உளங்கொள்ளப் பாடஞ் சொல்வார். 7

[1]வலிமையால். [2]மீனாட்சி ஆச்சியின் கணவர் கதிரேசர்.

சொல்லுரைசே னாவரையம் கற்ப தற்கும்
சொல்லுதற்கும் அரிதென்று வல்லார் சொல்வர்;
வல்லவரந் நல்லுரையை வடித்துக் காட்டி
மாணவர்க்கு விளக்குங்கால், [1]மறைந்து நின்று
பல்லமயம் அவ்விளக்கங் கேட்டுக் கேட்டுப்
பாராட்டி ரா.ராக வையங் காரும்
சொல்லியது கேட்டுள்ளோம்; வசிட்டன் வாயாற்
புகழ்ந்ததற்பின் சொல்லுதற்கும் உண்டோ சொற்கள்? 8

இலக்கணத்தை உலைக்களமென் றிரும்பு லக்கை
என்றெல்லாம் எள்ளிநகை செய்வா ருண்டு;
விலைக்கரும்பைப் பிழிந்தெடுக்கும் ஆலை என்றும்
விளையாட்டு மொழிபேசும் சிலரும் உள்ளார்
உளக்கருத்தைச் சொலுமுரிமை எவர்க்கும் உண்டால்
ஓரளவே தெரிந்தவர்தாம் உளற லாமோ?
நிலைக்கிரங்கி நிற்பதலால் வேறென் செய்வோம்?
நிகழ்காலம் இகழ்காலம் ஆயிற் றந்தோ! 9

இவரிடத்துக் கற்றவர்தாம் இலக்க ணத்தை
எள்ளிநகை செய்ததையாங் கண்ட தில்லை;
எவரிடத்துக் கேட்டாலும் வியந்து நின்றே
ஏற்றமுற மொழிவதைத்தான் கேட்ட துண்டு;
தவறிழைக்கத் துணிவாரோ தமிழை ஆய்ந்தோர்?
தமிழிவர்பாற் பயில்கின்ற பேறு பெற்றோர்
உவகைக்கோர் எல்லையில்லை; அரிய ஒன்றிங்
குற்றதுபோல் அவருளத்தில் நிறைவு காண்பார். 10

மாணவன்போல் ஆசான்றன் திறத்தை யெல்லாம்
அளந்தறிய வல்லவொரு கருவி இல்லை
காணுமிவர் ஆற்றலுக்குச் சான்று காட்டக்
கற்றவர்தாம்[1] தருமொழியில் ஒன்று போதும்;
பேணிஅவர் தருமொழிகள், பாடஞ் சொல்லும்
பெருமையினை நன்கெடுத்து விளக்கிக் காட்டும்;
பூணுமுயர் அன்புணர்த்தும்; அவர்தம் வாழ்வு
பொலிவுபெற வழியுரைத்த அழகுங் காட்டும். 11

[1]பண்டித மணி வகுப்பறையிற்பாடஞ் சொல்லுங்கால் இரா,இராகவையங்கார் பக்கத்தறையில் மறைந்திருந்து கேட்டு மகிழ்ந்து பாராட்டியதுண்டு. [1]மாணவர் (இவரிடம் கற்றவர்)

மீதான உயர்குணமும் இனிய பண்பும்
மேவிவரும் உயர்மனிதர்; 'நினது எத்தைத்
தாதாவென்' றன்பரெலாம் இரந்து நிற்கும்
தனிநட்புக் குரியமையினர்; தமிழுக் காக
வாதாடுங் கிளர்மனத்தர் உதவும் உள்ளம்
வாய்த்தசிதம் பரநாதப் பெயரர்[2]; ஈர்ந்தண்
போதான நகைமுகமும் கவருந் தோற்றப்
பொலிவதுவுங் கொண்டிலங்குந் தூய நெஞ்சர் 12

அல்லதொன்றும் செயநினையார், நல்ல தொன்றே
அணுகுசிதம் பரநாதர், ஆங்கி லத்தும்
வல்லமைசேர் பேச்சாளர், ஆயி னுஞ்செந்
தமிழுக்குக் காவலராய் வாழ்ந்த செம்மல்
நல்லதமிழ்ப் பெருமைஎலாம் விளக்கிக் காட்ட
நாடுபல சென்றுபறை சாற்றி வந்த
நல்லவரும் வல்லவரும் எங்கள் அன்பை
நயந்தவரும் பண்டிதர்பாற் பயின்றோ ராவர். 13

'உரையின்றிக் கிடக்கின்ற கடுமை யான
உயர்நூல்கள் பலவற்றை நடத்துங் காலை
உரைசொல்லி நயஞ்சொல்லி அவற்றிற் கான
ஒப்புமையும் மேற்கோளும் எடுத்துக் காட்டி
வரைவின்றி வழங்குவதில் அவரை யொப்பார்
வாழ்நாளிற் கண்டதில்லை புலமை யாற்றல்
நிறைகண்டு வியந்திருப்போம்' என்றெம் நெஞ்சில்
நின்றசிதம் பரநாதர் நிமிர்ந்து சொன்னார். 14

படரறிவுப் பண்டிதர்பாற் கற்கும் ஆர்வம்
பழுத்தெழலால் இங்குவந்து தெளியக் கற்றார்,
கடலலைகள் தாவிவரும் கொழும்பு 'றோயல்'
கல்லூரிப் பேராசான், பயில்வார் நெஞ்சைத்
தொட எழுதும் எழுத்தாளர், சமய நூல்கள்
தொன்மைமிகும் பிறநூல்கள் நினைத்தால் நெஞ்சில்
எடுபிடிகள் போலவரக் கற்றுத் தேர்ந்த
இலக்குமண ஐயருக்கும் இவரே ஆசான். 15

[2] செந்தமிழ்க்காவலர்.அ.சிதம்பர நாதச் செட்டியார்.

‘தோயுமுளக் கதிர்மணியும் கா.சு. பிள்ளை[1]
எனச்சொல்லுந் தூயவரும் கலைக ளெல்லாம்
ஆயுமுயர் கழகத்தின் இரண்டு கண்கள்;
யாம்பயிலும் அந்நாளில் அந்த மேலோர்
ஞாயிறெனத் திங்களெனத் திகழ்ந்து நிற்பர்;
நல்வர்பாற் பயிலஎழும் ஆர்வம் உந்தப்
பாயுமலைக் கடல்கடந்து சென்றோம்; அங்குப்
பலகற்றோம் எம்வாழ்வின் பயனும் பெற்றோம்’ 16

‘அகப் பொருளோ புறப்பொருளோ நீதி நூலோ
எதுவெனினும் அளவில்சுவை சொட்டச் சொட்டப்
புகட்டிடுவார் அச்சுவையிற் சொக்கி நிற்போம்;
பொழுதகலல் தெரியாது பாடஞ் சொன்னால்,
அகத்துறுவோர்[2] விரும்பியநூல் உரைப்ப தற்கும்
அகஞ்சலியார் அவருளமும் புலமுங் கண்டு
திகைப்புறுவோம்களிப்புறுவோம்;’ இவையனைத்தும்
தென்னிலங்கை இலக்குமண ஐயர் சொற்கள் 17

கலைமலிந்த கதிரேசர் செறிந்த கல்விச்
கடலாக அந்நகரில் விளங்குங் காலை,
[3]புலம் விழைந்து வந்ததனுட் படிந்து மூழ்கிப்
புனலுண்டு திசையெங்கும் படர்ந்து சென்று
நிலங்குளிர்ந்து செழுமையுற மழைபொ ழிந்து
நிலவிவரும் மாமுகில்கள் பலவாம்; மேலும்
நலம்மிகுந்த தமிழ்மொழியாம் பயிர்வ ளர்ந்து
நாட்டகத்து விளைபயனும் பலவாம் இங்கே. 18

மலர்விரிந்து கனிமிகுந்து நிழலும் நல்கி
மணம்பரப்பும் பூம்பொழிலே மணியார்; அங்கே
அலர்குடைந்து[1] மட்டுண்ட சுரும்பி னங்கள்
அங்கங்கே யாழிசையை வழங்கி நிற்கும்;

---

[1]பேராசிரியர் கா.சுப்பிரமணியபிள்ளை

[2] வீடுதேடிவருவோர் [3]அறிவு,

[1] தேன்,

நலமிகுந்த தீங்கனியின் சுவைநு கர்ந்து
நாடெங்கும் புள்ளினங்கள் பாடி நிற்கும்;
உலவிவருந் தென்றல்பல நன்ம ணத்தை
உடனேந்தித் திசையெங்கும் பரவி நிற்கும். 19

நலம்மிகுந்த சான்றோராய் இவர்பாற் கற்றோர்
நாவலராய் எண்ணிலராய் விளங்கு கின்றார்;
புலமையெனுங் கடலுக்குள் முழ்கி மூழ்கிப்
புதுப்புதுநன் முத்தெடுத்து மக்கட் கீந்து
குலவிவரும் துணைவேந்தர்,[2] ஒளியால் மேன்மை
கொண்டிலங்கும் மாணிக்கம் ஒருவர் ஆவார்
உலையிலவிழ் பதம்பார்க்கப் பானைச் சோற்றுக்
கொருசோறு போதாதோ? போதும் போதும். 20

வகுப்பிலே பாடஞ் சொல்லி
வந்தபின், இல்லை நோக்கி
உகப்புடன் வருவோர் வேண்டும்
உயரிய நூல்கள் சொல்லும்
மிகப்பெருந் தகைமை யாளர்;
மேம்பாடு தமிழுக் காக
வகுத்திடும் நேர மெல்லாம்
வாழ்பயன் என்றே கொண்டார். 21

தம்முழைப் பயில்வார் யாரும்
தாம்பெறு பிள்ளை யென்றே
அன்புற அணைத்துச் செல்வார்
[1]அப்பனென் றழைத்து நிற்பார்;
வம்மினோ நீவிர் இங்கு
வளர்புகழ் பெறுதல் வேண்டின்
நும்முளே பெற்ற இன்பம்
நுவல்தரப் பயில்க என்பார். 22

[2] டாக்டர் வ.சுப. மாணிக்கனார்

[1] மாணவரை அப்ப னென்றழைப்பது பண்டிதமணிக்கு வழக்கம்.

அரங்கினுக் கேற்ற பாடல்
அகமகிழ் விக்கும் பாடல்
உரங்கொளும் வாழ்வுக் காக
உயர்வழி நல்கும் பாடல்
தரங்களைப் பிரித்துக் காட்டித்
தகவுற மொழிந்து, பேசும்
திறங்களும் எடுத்துச் சொல்லித்
திருத்துவார் அவரை யெல்லாம். 23

ஆங்கிலங் கற்றோர் தாமே
அமர்வதற் குரிய ரென்ற
பாங்கினில் ஒழுகும் நாட்டில்
பைந்தமிழ் தேர்ந்த செம்மல்
ஓங்குபே ராசா னாகி
உயர்பெரும் பொறுப்பைத் தாங்கி
ஈங்கினி தாட்சி செய்தார்
இணையிலை என்னு மாறே. 24

நிறைதரு புலமை யாட்சி
நீடிய புகழின் மாட்சி
குறியுடன் பதவி யாளுங்
கூர்மதி யனைத்தும் நோக்கி
[1]அரசரும் வியந்து போற்றி
அன்பினைப் பொழிந்து நின்றார்;
அறிவுடை ஒருவன் தன்னை
அரசனும் விரும்பும் அன்றே! 25

பண்டுநற் புலவர் தம்மைப்
பாருல காண்ட வேந்தர்
கண்டுளத் தன்பு பூண்டு
காத்தனர் தமிழுக் காக;
பண்டித மணியை எங்கள்
பைந்தமிழ்ப் புலவர் தம்மைக்
கண்டுளத்[2] தரசர் தாமும்
காத்தனர் தமிழுக் காக. 26

[1]செட்டிநாட்டரசர், [2]கற்கண்டு போன்ற உள்ளம்

# 11
# பொதுப்பணிபுரி காதை

இயலுண்டாம் இசையுண்டாம் கூத்தும் உண்டாம்
இனியதமிழ் மொழியிடத்தே என்பர் மேலோர்
மயலுண்ட அறிவுடையார் கூடி யிங்கு
மறுப்புரைத்தார் இசையில்லை தமிழில் என்றே;
அயல்மொழிக்கே உரியவராய் அம்மொ ழிக்கே
அடிமைகளாய் இருப்பவர்தம் கூற்றே யாகும்;
செயல்மறந்து தமிழ்மாந்தர் உறங்கும் போது
திருடவரும் கயவருக்கு வேட்டை தானே. 1

தோற்கருவி துளைக்கருவி நரம்பு கட்டித்
தொடுகருவி வெண்கலத்துக் கருவி என்று
நாற்கருவி கண்டவர்நாம்; பாடு தற்கு
நன்மிடறும் ஒருகருவி யாகும் என்றோம்;
ஏற்கமதி யிலராகி வஞ்ச நெஞ்சர்
இசையிலையே தமிழ்மொழியில் என்று சொன்னார்;
வேற்கருவி எடுத்தெம்மைச் சாய்ப்ப தற்கு
விலாவிடையே பாய்ச்சுதல்போற் கேட்ட தம்மா. 2

இறைவாழுங் கோவிலுக்குள் உரிமை யில்லை
இசையரங்கில் திருமணத்தில் உரிமை யில்லை
துறைதோறும் தமிழ்மொழியின் உரிமை வேண்டித்
தொடருங்கால் மொழிவெறுப்பு, பசுமை என்று
பறைசாற்றும் புல்லுருவிக் கூட்ட மொன்று;
பழமரத்தில் அதுவளர விட்டு விட்டோம்;
நறைவாழும் மலரிருக்கக் கள்ளிப் பூவை
நாடியதால் நாம்பெற்ற பலனைப் பாரும். 3

தமிழ்மொழியில் வெறுப்புடையோர் அதனி டத்துத்
தணியாத பகையுடையோர் எவ்வி டத்தும்
அமுதனைய மொழிவளர மனமே யில்லோர்
அயன்மொழியில் வெறுப்பென்றும் பகைமை என்றும்
நமையெதிர்த்துப் பழியுரைத்துத் திரிய லுற்றார்
நன்றறிய மாட்டாரும் நம்பு கின்றார்
நமதன்னை நாட்டுக்கு வாழ்வு வேண்டின்
நண்ணுபிற நாட்டின்மேல் வெறுப்பா என்ன? 4

என்சமயம் வாழ்கவென ஒருவன் சொன்னால்
இருந்துவரும் பிறசமய வெறுப்பா என்ன?
என்மொழியிற் பாட்டிசைக்க வேண்டு மென்றால்
எதனிடத்தும் வெறுப்பில்லை; வேண்டு மென்றே
புன்மொழிகள் உரைக்கின்றார் தமிழை மீண்டும்
பூக்கவிடா தொழிப்பதுதான் அவர்தம் நோக்கம்;
வன்முறையில் வாதிடுவோர் எந்த நாட்டில்
வாழ்கின்றார்? தீமைசெய ஏன்நி னைத்தார்? 5

பாட்டரங்கம் தமிழ்நாட்டில்; அரங்க மேறிப்
பாடுபவன் தமிழன்தான்; அந்தப் பாட்டைக்
கேட்டிருக்கும் அவையினரும் தமிழ மாந்தர்;
கீர்த்தனையாம் கிருதிகளாம் இவையே கேட்கும்
நாட்டமொடு வந்தவர்க்கோ விளங்க வில்லை
நாமினியும் பொறுத்திருந்தாற் பயனே யில்லை
வேட்டெழுந்து தமிழ்வேண்டும் என்று சொன்னோம்
விளங்குகிற மொழிப்பாடல் வேண்டும் என்றோம். 6

இசைக்கிளியை மொழிக்கூண்டில் அடைக்க வேண்டி
எழுகின்றார் என்றுநமைப் பழித்துச் சொன்னார்[1]
இசைக்குயிலைத் தமிழ்வானில் பறக்கா வண்ணம்
இறகொடித்துப் பிறமொழிக்குள் அடைத்து விட்ட
வசைக்குரியார் யாவரெனத் தெரியா வண்ணம்
வழிமாற்றித் திசைதிருப்பிக் காட்டி விட்டுத்
தசைப்பிண்டத் தலையாட்டிப் பொம்மை முன்னர்த்
தமிழ்விடுத்துப் பிறமொழியே பாடி வந்தார். 7

[1] இசைக்கிளியை மொழிக்கூண்டில் அடைப்பது போலப் படம் போட்டுத் தமிழ் வார இதழொன்று விகடம் செய்தது

கொடுமையிது கொடுமையெனக் கொதித்தெ ழுந்து
கொடையண்ணா மலையரசர் ‘பத்துப் பாட்டில்
விடுகஇனித் தமிழ்பாட்டிற் காறி டங்கள்
வேற்றுமொழிப் பாட்டுக்கு நான்கி டங்கள்
தடைஎனவோ இதற்கு’ மெனத் தமிழர் சார்பில்
தமிழ்நாட்டில் தமிழரசர் பிச்சை கேட்டார்
கெடுமதிய ரதன்பின்னு மிரங்க வில்லை
கிளர்ச்சிசெய முனைந்தபினும் திருந்த வில்லை. 8

நம்முன்னோர் தேடிவைத்துத் தொன்று தொட்டு
நமக்குரிமை யாகிவரும் வீட்டில் வாழ
வம்பென்ன? வழக்கென்ன? அந்த வீட்டில்
வாடகைக்கோ ரிடங்கேட்டோம் எவனி டத்தோ!
அம்மொழியார் விரும்பவில்லை தடைக்கல் லானார்
அடஇனியும் பொறுப்பதுவோ? உரிமை காக்க
இம்மண்ணிற் சிறுபுழுவும் முயலு மன்றோ
இனிநமக்குத் தமிழரெனும் பெயர்தா னேனோ. 9

மாற்றிதற்குக் காண்பதற்கு நினைந்த அண்ணா
மலையரசர் இயக்கமொன்று தமிழி சைக்குத்
தோற்றுவித்தார்; நல்லவர்கள் ஒத்து ழைத்தார்;
துணைநின்று பணிபுரிந்த இதழும் உண்டு
சாற்றைநிகர் மொழிப்புலவர் துணிந்து வந்து
தகுமுறையால் தமிழிசைக்குத் தொண்டு செய்தார்;
வேற்றுமொழிப் புலமையிலும் வீறு பெற்று
விளங்குகதி ரேசருக்கும் சரிபங் குண்டு. 10

நாடுமுழு தெங்கணுமே தமிழ்மா நாடு
நடத்திவரும் அரங்குகளில் தலைமை யேற்றார்;
ஏடுகளில் விளக்கங்கள் பிறர்க ருத்துக்
கெதிர்ப்புரைகள் என்றெல்லாம் எழுதி வந்தார்;
“பாடுவது தமிழானால் என்ன தீமை
படர்ந்துவிடும்? ஏனச்சம்? யாருக் கென்ன
பாடுவரும்? தமிழாலே தமிழர் நாட்டில்
பாடுவது தவறென்றால் என்ன நீதி?” 11

"பண்ணமைத்த தேவாரப் பாடல் கேட்டால்
பரமனுக்கும் நெஞ்சுருகும்; செவிம டுத்தோர்
எண்ணத்தை நெக்குருக்கும்; இராம லிங்கர்
இயற்றியநல் லருட்பாடல் தேனும் கைக்கும்
வண்ணத்தை உருவாக்கும்; அயன்ம தத்தில்
வருவேத நாயகனார் வழங்கும் பாடல்
கண்ணொத்த சமரசத்தைப் படைத்துக் காட்டும்;
கனியிருக்கக் காய்கவர்தல் மடமை யன்றோ?" 12

"தாண்டவனார்[1] பதமிருக்கப் பிறபாட் டுக்குத்
தாளங்கள் இடல்முறையா? கையில் பையில்
வேண்டுபொருள் நிறைந்திருக்கக் கடனுக் காக
வேற்றவர்பின் தொழுதுசெலல் சரியா? பத்தி
வேண்டுமெனில் விளங்குமொழிப் பாடல் வேண்டும்;
விளங்காத மொழிகேட்டால் உணர்வா தோன்றும்?
நீண்டபுகழ் பாரதிகள் குஞ்ச ரங்கள்[2]
நிலைதமிழில் வீணுக்கா பாடிச் சென்றார்?" 13

இசைசுவைத்து மகிழ்வதற்கு மொழிவேண் டாவென்
றியம்புகின்றீர்; அறிவுடைய வாதம் அன்று;
வசைமிகுந்த பிடிவாதம்; நீவிர் பாடும்
வடமொழியும் தெலுங்கிசையும் மொழிகள் என்ற
இசைவுமக்கு வரவிலையோ? ஏனோ இந்த
இழிசெயலை மேற்கொண்டீர்? தமிழில் மட்டும்
நசைவிடுத்த காரணமென்? உங்கள் வாழ்வின்
நலிவுக்குத் தமிழ்செய்த தீமை என்ன? 14

"மொழிவேண்டா என்றுரைத்தீர்; வாதத் துக்கு
மொழிந்ததைநான் ஏற்கின்றேன்; இசைஎ ழுப்பக்
குழலிருக்க யாழிருக்க அவைவி டுத்துக்
குரலெழுப்பிப் பாடுவதேன்? பாடி வாழுந்
தொழிலுடைய பாகவதர் கூட்டந் தானேன்?
தொண்டைகிழித் தலறுவதேன்? அலறும் ஓசை
மொழியன்றோ? இசைக்கருவி யிருக்கும் போது
மொழிஎதற்கோ? அதுமட்டும் வேண்டும் போலும்" 15

[1] முத்துத்தாண்டவர். [2] பாரதிகள் குஞ்சரங்கள் - சி.சுப்பிரமணிய பாரதியார், கவிகுஞ்சர பாரதியார் போன்றோர்

எதிர்ப்பவரும் எடுத்துரைக்க இயலா வண்ணம்
இவ்வகையில் வாதங்கள் எடுத்து வைப்பார்;
கதிர்ப்பெருக்கம் கீழ்வானில் விரியும் போது
காரிருளுக் கங்கென்ன வேலை? நம்பால்
மதிப்பெருக்கம் குறைந்ததனால் புகுந்த வற்றை
மதித்துவர வேற்றதனால் வந்த கேடு;
சதிப்பெருக்கம் இருப்பதைநாம் உணர்ந்து கொண்டால்
தமிழ்நாட்டில் ஒருகுறையும் நேரா தன்றோ? 16

எரிஏய்ப்ப வருபகையை வெல்ல லாகும்
இனிதேய்க்கும் அகப்பகைதான் எளிதோ வெல்ல?
அரியேற்றை வலையிட்டுப் பிடிக்க லாகும்;
அடங்காத கொசுவுக்கும் அதனை யிட்டால்
குறிபார்த்து நுழைவழியைத் தெரிந்து கொண்டு
கொடுக்காத தொல்லையெலாம் கொடுத்தே நிற்கும்;
வருமாற்றை நன்கறிந்து தோன்றி டத்தில்
மருந்தடித்தால் மடிந்தொழியும் தொல்லை தீரும். 17

உண்பதும் ஓய்வதும் என்பயன்
தந்தன உற்றறிவால்
எண்ணுக நற்பணி செய்திட
நண்ணுக என்றிசைத்தே
வண்முகில் போலுளங் கொண்டவர்
வாழ்[1]பல வான்குடியில்
கண்மணி வாசகச் சங்கமென்
றொன்றனைக் கண்டனரே. 18

காட்டைத் திருத்திக் கலைகள்
பலதேர் கழகமென
நாட்டிற் றிகழ்தர அண்ணா
மலைகண்ட நன்னகரில்
வேட்டு மணிவா சகமன்றம்
கண்டு வியாழன்தொறும்
பாட்டின் நலத்தாற் பயனளித்
தார்மணிப் பண்டிதரே. 19

[1]பலவான்குடி - குன்றக்குடிக்கருகிலுள்ள ஊர்.

ஆங்கிலங் கற்றவர் ஆர்வலர்
  தீந்தமிழ் ஆய்ந்திடவே
ஓங்கிய தில்லையில் ஓர்கழ
  கங்கண் டுயர்வுபெறும்
பாங்கினில் ஞாயிறு தோறும்
  புகட்டினர் பாலமுது
தேங்கிய நற்சிலம் பாகிய
  தேனினைப் பண்டிதரே. 20

ஆசான் பணியிடை ஓய்வே
  பெறினும் அமைதியுடன்
பேசா திருந்திலர் பெற்றநல்
  லின்பம் பிறர்பெறவே
ஏசாச் சிறப்பின் எழில்[1] ராம
  சாமி எனுமவர்க்குக்
காசாற் பெறவிய லாத
  கலையெழில் காட்டினரே. 21

பெண்பாலர் கல்விபெறப் பேரறிவு
  பெற்றொளிரப் பெரிதும் எண்ணிக்
கண்போலும் அவர்தமக்குக் குருகுலமும்
  காணவழி கட்டு ரைத்தார்
பண்பாரும் கொப்பனா பட்டியெனும்
  பதிவளர்மெய் யப்பர் தம்மால்
நண்பாலே கலைமகள்கல் லூரியென
  நாட்டுவித்தார் மணியார் அங்கே. 22

ஒருநாள் மகிபாலன் பட்டிக்குள் ளுற்றார்
மறுநாளும் வந்துசெல மற்றும் மனம்விழையார்
கற்றாழை கள்ளி கருநாகம் புக்குவரும்
புற்றாலே எங்கும் பொலிந்திருக்கும்; வான்முகில் தான்
சற்றே பொழியின் சகதி நிறைந்திருக்கும்
பற்றாக் குறைக்கங்குப் பள்ளம் படுகுழிகள்;
ஆற்றில் புனலும் அடித்துத் திரண்டுவரும்

[1]பண்டிதமணியின் இல்லிற் கெதிரில் வாழ்ந்த தமிழன்பர் சி.இராமசாமிச் செட்டியார்.

சேற்று நிலமாய்அச் சிற்றூர் விளங்கும்;
பகடு தனைப்பூட்டிப் பண்டியில் ஊர்வோர்
சகடு தனையிழுக்கத் தாங்குதித்து நிற்பார்
சுடுகாடும் அங்கே சுடர்விட்டுக் கண்ணிற்
படுமாறு தோன்றிப் படர்வாரை அச்சுறுத்தும்;
கள்வர் சிலரும் கரந்து திரிந்திடுவர்;
உள்ளின் எவரும் உளம்நடுங்கி வேர்த்திருப்பர்;
பாதை கடக்கப் படும்பாடு கண்டவர்தாம்
வாதை மறந்து வருவாரோ அவ்வழியில்?
அஞ்சல் நிலையம் அமைந்த இடமதுதான்
அஞ்சாறு கல்லிருக்கும்; அந்தோ! எனத்தோன்றும்;
பிள்ளைப் பருவத்தார் பேணும் அறிவுபெறப்
பள்ளித் தலமொன்றும் பார்த்தறியார் அவ்வூரார்;
பேருந்து செல்லாப் பெருமை உடையதோர்
ஊரந்த ஊரேதான்; யாரங்குச் செல்வார்கள்?
கண்ட கதிரேசர் காட்டு வழிதிருத்துந்
தொண்டு செயநினைந்தார் தோலா முயற்சியினால்
அஞ்சலகம் கல்வி யறிவு தருஞ்சாலை,
அஞ்சலின்றிச் செல்ல அழகு தருஞ்சாலை,
உந்தூர்தி செல்ல உயர்பாலம் எல்லாமே
முந்திவரச் செய்தார் முனைந்து.

# 12
# விருதுபெறு காதை

செந்தமிழ் நூலிற் செறிதரு புலமையும்
வடமொழி நூலில் வன்மையும் தெளிவும்
சமய நூல்களிற் சார்பொருள் உணர்வும்
அமையும் செவ்விய ஆற்றல் கண்டோர்,
இயங்கும் நூலகம் எனுங்கதி ரேசர்க்கு
வியந்து நயந்து விருதுகள் வழங்கினர்;
பிறர்க்கு விருதுகள் தரற்குரி யார்க்குச்
சிறப்புறும் விருதுகள் சேர்த்தனர் ஆசையால்;
பலப்பல பட்டங் கிடைத்தன வாயினும்
நலத்தகு சபையார் நயப்புடன் நல்கிய
பண்டித மணியெனும் பட்டம் ஒன்றே
எண்டிசைப் பரவி ஏற்றம் தந்தது.
கவிமணி, பாரதி, கலைஞர் என்பன
அவரவர் பெயராய் அமைந்தன போல
இயற்பெயர் இதுதான் என்னும் வண்ணம்
இயக்கம்பெற்ற தெங்கணும் பரந்தே;
இருமொழி நூலுட் பெருகிய புலமும்
ஒருசபை வளர ஊக்கிய தொண்டும்
கருதிய சபையினர் களிப்பின் பெருக்கால்
தண்டமிழ்த் தாத்தா சாமி நாதப்
பண்டிதர் தலைமையில் தந்தனர் அதனை;
கரையிலாக் கல்விக் கடலிற் றோய்ந்து
விரிதரு புலமை முதிர்தரல் கண்டோர்
சென்னையில் நிகழ்ந்த சீர்சால் புலவர்
மாநா டதனில் மாண்புறு பெரியோர்

முதுபெரும் புலவர் எனும்பெயர் மொழிந்தனர்;
அதுவும் இவரால் அணிபெற் றதுவே;
சமயநூற் றெளிவும் சார்ந்ததன் நெறியில்
அமைவுறும் வாழ்வும் அசையாப் பற்றும்
செம்பொருள் உணர்வும் சித்தாந் தத்துள்
திளைத்துத் திளைத்துத் தெளிந்த நுகர்வும்
உளத்தாற் பொய்யா ஒழுக்கமும் கண்டு
குறைவறு குன்றக் குடியில் மேவிய
திருவண் ணாமலைத் திருமடம் உடையார்
இனிய சைவ சித்தாந்த வித்தகர்
எனுமொரு பெயரை அளித்தார் இவர்க்கே
திருந்திய இவர்க்குப் பொருந்திய பெயரைத்
தருந்தல மாகித் தனிச்சிறப் புற்றது;
ஆங்கில மன்னரெம் அன்னை நாட்டில்
ஓங்கிய செங்கோல் ஓச்சுங் காலை
திருமுடி தாங்கிய செவ்வியர் பிறந்தநாள்
வருகையிற் பற்பல விருதுகள் வழங்கிப்
பெருமைகள் செய்தல் பேணிய மரபாம்
அப்பெரு நாளில் ஆய்தமிழ் தோய்ந்த
இப்பெரும் புலவர்க்கு இராவ்சா கிப்பெனும்
விருதினை வழங்க விழைந்ததவ் வரசு
வருமவ் விருதை வாங்க மறுத்த
பெருமிதம் உடையார் பிறங்குநம் மணியார்;
அரசியற் சார்பின் அமைந்தார் தமக்கே
அனைய விருதுகள்[1] அளித்தல் இயல்பு;
கல்வித் துறையில் வல்லவர் தமக்கு
மகாமகோ பாத்தி யாயர் என்னும்
ஒருபெயர் வழங்கி உயர்த்திப் போற்றுவர்
எனினும் அதனை எல்லார்க்கும் வழங்கார்
தனியொரு வகுப்பார் தமக்கே உரிய

[1]இராவ்சாகிப்.இராவ்பகதூர், திவான் பகதூர்.

சொத்தெனக் கொண்டு துய்க்க லாயினர்;
அத்தகு விருதினை முத்தமிழ் வல்ல
பண்டித மணிக்குப் படைக்கமுன் வருங்கால்
தனிச்சொத் தாக்கியோர் தடைபல இழைத்தனர்
முனைத்தெழும் அரசரண் ணாமலை முயல
மணிக்கவ் விருது வழங்க லாயினர்;
அணிக்கு மற்றோர் அணிவந் தடைந்தது;
பெற்ற விருதினைப் பேணார் சிலருளர்
உற்றஅவ் விருதுக் குரியரும் ஆகார்
சொற்புகழ் விருதுகள் சுமந்தே திரிவர்
வருபுகழ் விலைக்கு வாங்குவோர் அவராம்;
ஒருதனி மணியோ உரியவர் ஆனார்
விருதுகள் இவர்க்கு மேன்மைகள் தந்தன
இவரால் விருதுகள் ஏற்றமும் பெற்றன;
தான்சிறி தாயினும் தக்கார்கைப் படுமேல்
வான்சிறி தாக வளர்ந்திடும் அன்றே.

# 13

# நூல்தரு காதை

நற்றமிழ்த் தாயை நாமே மறப்பின்
உற்று நமைநினை வுறுத்துவோர் எவரே?
எற்றே நம்நிலை? எனமன மிரங்கிச்
சொற்ற சுவைநூல் பெற்றனம் இவரால்;
பன்மொழிப் புலமைப் பயிற்சியர் சிலர்தாம்
நன்மொழி யிதனுள் நாணம் இலராய்ப்
பன்மொழிச் சொற்கள் பரவிடக் கலந்து
புன்மைச் செயலாற் பொருந்தா தெழுதி
மன்னர் அவரென மகிழும் நாளில்,
அன்னையை மறந்தே அயன்மொழி கற்றோர்
எண்ணிய வாறெலாம் எழுதிக் குவிக்கும்
திண்ணியர் பலராய்த் திரிதரும் நாளில்,
ஒருமொழி யேனும் சரிவரக் கல்லார்
சரிநிகர் எமக்கிலை எனப்பறை சாற்றிக்
கலப்பு மொழிதான் காதுக் கினிமை
பயக்கும் எனுமொழி பகர்ந்து தமிழைக்
கலக்கும் கொடுமை கடுகிய நாளில்,
எளிய நடைதான் ஏற்ற தெனச்சொலி
அளியர்[1] அவர்தாம் அளவில் வழுவுடன்
இலக்கண நெறியைத் தொலைத்தவர் எழுதித்
தலைக்கன மேறிய புலைக்குண மாக்கள்
விலைக்கெனத் தமையே விற்கும் நாளில்,
சாலி நெல்லினுட் சார்தரும் பதரெனப்
போலிப் புலவரும் சிற்சிலர் புகுந்து
பாடல் உலகிற் பழுதுகள் புரிந்தே

[1]இரங்கத்தக்கார்,

ஆடல் அயரும் அற்றை நாளில்,
வயங்கிய நம்தமிழ் வடமொழி யின்றி
இயங்குதல் இயலா தெனவுரை நாளில்,
வண்டமிழ், வடமொழி வயிற்றிற் பிறந்ததாம்
கண்டவர் போலிது கழறிய நாளில்
இருள்படர்ந் தோங்கிய இலக்கிய உலகில்
மருளறு புலமை நெறியெனும் வானில்
சிவந்து மணியெனும் செங்கதிர் தோன்றலால்
உவந்தனர் விழித்தனர் உறங்கிய மாந்தர்
வஞ்சிப் பார்சிலர் வளர்த்துப் போற்றிய
வெள்ளைச் செயலால் விளைந்த கலியெனும்[2]
ஆசிரியப்[3] பாவுரை[4] அளித்தனர் இவரே;
பன்மாண் கல்விப் பாற்கடல் கடைந்து
நுண்மாண் நுழைபுலந் தன்னால் வாரி
அமிழ்தெனத் தந்தனர் அரும்பெரும் நூல்கள்;
இருமொழி பயின்றும் ஒருமொழி தாய்மொழி
பெரிதும் வளரப் பேணிக் காத்தனர்
தெள்ளிய புலமும் ஒள்ளிய அறிவும்
உள்ளவர் ஆதலின் ஓம்பினர் தமிழை;
உண்மைத் தமிழன் உள்ளம் எதுவோ
கண்வைத் ததனைக் கட்டிக் காத்தனர்;
புகழ்ப்பே ராசையாற் பொருட்பே ராசையால்
நகத்தகும் தொழும்பர் ஆகின ரல்லர்;
தலைநாள் தொட்டுக் கடைநாள் வரையும்
கலைமா மகளின் கடைக்கண் ணருளால்
தமிழ்மகன் எனவே தாமுயிர்த் திருந்தார்;
தூய நெஞ்சினர் தொடுத்தநன் னூல்கள்
ஆய்தொறும் இன்ப அன்பினை வழங்கிடும்;
சமய நெறியிற் றணவா[1] ஒழுக்கும்
அமையுமந் நூலினுள் ஆழ்ந்த புலமும்
நுண்பொருள் ஓர்ந்து நுவலுந் திறமும்

[2]துயரம், [3] ஆசு + இரிய - குற்றம்நீங்க, [4]பாவும் உரையும். [1] நீங்காத

உண்மைப் பொருளின் உணர்வும் ஒருங்கே
கைவரப் பெறலான் காட்டும் சமய
மெய்வழி ஆய்ந்து விளக்கும் நூலினை
உரைநடைக் கோவையென் றொருபேர் தாங்க
வரைந்து தந்தனர் வாய்மையின் நின்றே;
ஐந்து கட்டுரை ஐந்தெழுத்[2] தாமெனப்
பைந்தமிழ் நடையிற் படைத்துத் தந்தனர்;
சான்றோர் யாத்த சங்கப் பாக்கள்
ஆன்றோர் சுவையுடன் ஆக்கிய காப்பியம்
மெய்யுணர் வாளர் செய்தருள் நூல்களுள்
வைகும் நறுங்கனி வளவிய எடுத்துச்
சாறு பிழிந்து சர்க்கரை தூவி
ஊறும் பாலும் ஒள்ளிய தேனும்
அளவுடன் கலந்து சுவையுற ஆக்கி
வளநடை யதனாற் கட்டுரை வடித்துக்
கோவை இரண்டெனக் கொடுத்தனர் அதன்சுவை
நாவின் உரையால் நவிலுதல் அரிதே;
வேழ முகத்தன் மீதிவர் பாடிய
சூழும் மாலை சொலும்அந் தாதி
பதிகம் என்பன பாவியல் மாலைகள்;
தனித்தனிப் பாடலும் இனித்திடும் வகையால்
அளித்தனர் ஆயினும் அளவிற் சிறியன;
பாவில் நனைந்தவர் பாவை மிகுத்திலர்
காவியந் திளைத்தவர் காப்பியம் விளைத்திலர்;
திருவுளம் அதனைச் செயநினைந் திருப்பின்
மற்றுமோர் இளங்கோ பெற்றுயர்ந் திருப்போம்
அப்பெரும் பேற்றை அடைந்தோம் அல்லோம்
எப்பொழு ததனை எய்துவம் யாமே?
அயன்மொழி கற்றோர் அரைகுறைப் புலத்தால்
மயல்மீக் கூர்ந்து வண்டமிழ் மொழியில்
ஒன்றும் இல்லை என்று வெறும்வாய்
மென்று திரிவார் மேவார் போல;

[2] பஞ்சாக்கரம்

நன்றெனக் கண்டதை நற்றமிழ் மொழியிற்
பெயர்ப்பான் வேண்டிப் பேரிடர்ப் படுவார்
உயிர்ப்பார் அவர்தாம் உயரிய தாய்மொழி
கல்லா ராகிக் கலங்கி நின்று
பொல்லா நடையாற் புனைகுவார் தமிழென;
எதையும் ஏற்கும் இளகிய தமிழகம்
அதையும் ஏற்கும் அமைதியின் நின்றே;
பண்டித மணியார் பைந்தமிழ்ப் பயிற்சியும்
பண்டை வடமொழிப் பயிற்சியும் ஒருங்கே
கொண்டவ ராதலின் கூர்ந்தநன் மதியால்
வளம்பெறு தமிழில் வடமொழி நூல்களைத்
திறம்படப் பெயர்த்துத். தென்மொழி வளர்த்தார்;
மொழிபெயர்த் துதவலும் முன்னையர் கண்ட
மொழிப்பணி யாகும் எனவே முனைந்து
தேர்ந்து சிலநூல் தெள்ளிய தமிழில்
ஓர்ந்து மொழிபெயர்த் துதவினர் இவரே;
தலைப்படு செல்வ வளத்தவன் ஆயினும்
இலக்கிய ஆர்வலன் மொழிச்சுவை தேர்ந்தவன்
நாத்திறம் பெற்றவன் நற்புகழ் உற்றவன்
சூத்திர கனெனச் சொலப்படும் அரசன்
யாத்ததோர் நாடக நூலினைப் பெயர்த்துப்
பண்ணுயர் தொழில்வலார் மண்ணியல் சிறுதேர்
எண்ணும் வகையால் இயற்றித் தந்தனர்
ஒவ்வோர் உறுப்பும் செவ்விதின் அமைந்து
கவ்வும் எழிலாற் காண்பவர் உளத்தை
ஈர்த்திங் குலவிய தத்தேர்
பார்த்தவர் வழங்கினர் பாராட் டுரையே;

'தச்சிட்டுச் சூத்திரகன் செய்த ளித்த
தனிநெடுந்தேர் நிலைபெயரா தங்கு நிற்க,
அச்சிட்டுப் பூணிறுவி[1] ஆர மெல்லாம்
அழகுறுத்துத் தமிழகத்தில் ஓட்டு வித்தான்

[1]பூணிறுவி - பூண் + நிறுவி

நச்சிட்ட[2] ஒருகுலத்தார்க் குரித்தே என்று
நவில்நாளில் அத்தொழிலில் வல்லா னாகி
மெச்சிட்ட புகழ்படைத்துச் சிறந்து நின்றான்
மேவுகதி ரேச'னென ஒருவர்[3] சொன்னார். 1

ஒன்பது சுவைக ளென்ன
உயர்ந்தவர் ஓதி வைத்த
ஒன்பது மணிகள் பூட்டி
ஓட்டினன் சிறுதே ரிங்கே
தென்வட மொழிக ளாய்ந்த
தெள்ளியன் கதிரே சப்பேர்
மன்னிய மணியே என்று
மற்றொரு துறவி[4] சொன்னார். 2

முதனூலின் பொருள்முற்றும் தெளியக் காட்டும்
முகம்பார்க்கும் நல்லாடி,[1] அந்நன் னூலின்
எதன்சுவையும் குன்றாமல் வடித்துக் காட்டும்
ஏதுமிலா நிழற்படமாம்; வடமொ ழிக்கண்
உதவுமொரு பெருநூலைத் தமிழில் ஆக்கி
உருட்டியமண் ணியல்சிறுதேர் என்னும் நூலே;
புதுமைசெயும் பண்டிதமா மணியை என்றும்
போற்றுதும்யாம் எனமொழிந்தார் தமிழ வேளே.[2] 3

எதுமுதனூல் எதுவழிநூல் என்று ரைக்க
இயலாது தடுமாறப் படைத்துத் தந்தான்
முதனூலிற் றெளிவின்றிக் கிடந்த வற்றை
மொழித்திறத்தால் முட்டறுத்துத் தெளிய வைத்தான்
அதனாலே அவன்பெருமை ஓங்கிற் றம்மா!
அவன்பெரிய பண்டிதன்தான் என்று ரைத்தார்
முதுமொழியாம் வடமொழிதேர் கல்லூ ரிக்கண்
முதன்மையர்சுப் பிரமணிய ஐயர் தாமே. 4

---

[2]விரும்பப்பட்ட, [3]வயிநாக.ராம. அ.இராமநாதச்செட்டியார்

[4]விபுலாநந்தஅடிகள்,

[1]கண்ணாடி, [2]த.வே.உமாமகேசுரர்

முதனூலிற் கண்டதனை முகந்து கொண்டு
மொழிதமிழிற் குறையாது கொடுத்து மேலும்
அதனோடும் அசையேனும் கூடா வண்ணம்
அளந்தெடுத்து வழங்குமிவர் சொல்லிற் செட்டும்
சிதையாத பொருள்நிறைவும் காணுங் காலை
சீர்தூக்கும் வணிகர்குல அழகைக் காட்டும்;
கதிரேச மணியாரின் மொழிபெ யர்ப்பைக்
கண்டதிரு பாரதியார்[3] உரைத்த தீர்ப்பு. 5

வல்லவர் போற்ற வடமொழி நூலை
நல்லியற் றமிழில் நயந்து தந்த
பண்டித மணியார் இன்னும் பலப்பல
தண்டமிழ் மொழியில் தருதல் மேவினர்;
சுக்கிர நீதி சுலோசனை மற்றும் 5
உதயண சரிதமும் உவந்து தந்தனர்;
மாலதி மாதவம் முதலன யாத்தும்
சால மகிழத் தந்தனர் நமக்கே.

ஆழ்ந்தகன்ற நுண்ணறிவு, நூலாசான்
அகக்கருத்தை உணரும் ஆற்றல்,
போழ்ந்துபுனல் எதிரேறும் ஓடம்போற்
புகுந்ததனுள் உண்மை தேறல்
வாழ்ந்தவுல கியலறிவு, மொழிப்பயிற்சி,
வளர்ந்தபல நூற்ப யிற்சி,
ஏய்ந்தவரே ஒருநூலுக் குரையெழுத
ஏற்புடைய ராவர் என்ப 1

உரையெழுதும் பண்புநலன் அத்தனையும்
ஒருங்குடைய மணியார் தேங்கிக்
கரைபுரளும் அருளாளர் கசிந்துருகிக்
கண்மல்கி வாத வூரர்

[3]நாவலர் ச.சோமசுந்தர பாரதியார் குறையாது கொடுத்தலும் கூடாதெடுத்தலும் நல்வணிகர் இயல்பு

தரைமகிழ அளித்ததிரு வாசகத்துள்
தனிநிலையிற் றோய்ந்து தோய்ந்து
நெறிமுறையில் உரைதந்தார் அவ்வுரையின்
நிலையுரைக்க எவரால் ஒல்லும்? 2

அணுவுக்குள் மறைந்திருக்கும் ஆற்றலினை
அளந்தறிய வல்லார் போலக்
கனுமிக்க கரும்புநிகர் சொல்லுக்குள்
கரந்திருக்கும் பொருளெ டுத்த
துணிவுக்கு வியந்துலகம் போற்றியது
சொலற்கரிய புலமை யுற்ற
திணிவுக்கு வாழ்த்தியது வாசகத்தின்
தெளிவுக்குள் திளைத்து நின்றே. 3

கண்டுநிகர் சொல்லுக்குள் கடைந்தெடுத்துக்
காணுகின்ற நயங்கள் சொல்லி
மண்டுமதன் சுவைசொல்லி முறைவைப்பில்
மருவிவரும் நோக்கம் சொல்லிக்
கண்டபிற ஒப்புமையும் உடன்சொல்லிக்
காட்டிவரும் புலமை யாலே
பண்டையுரை யாசிரியர் வரிசைபெறும்
பண்டிதராய் விளங்கி நின்றார். 4

# 14
# மணிவிழாக் காதை

தெருவிடை மணல்ப ரப்பித்
தெள்ளிய நீர்தெ ளித்தும்
அரிசியிற் றிரித்த மாவால்
அணிபெறக் கோல மிட்டும்
வருபவர் உள்ள மெல்லாம்
மகிழ்வினிற் குளிரும் வண்ணம்
அரிவையர் கோலஞ் செய்ய
அழகினாற் பொலிந்த தவ்வூர்.[1] 1

புதுக்கிய மனையின் வாயிற்
பூம்பொழிற் பந்த ரிட்டார்;
மதிற்புறங் கமுகு வாழை
மரங்களும் குலைகள் தொங்க
எதிர்ப்புறங் கட்டு வித்தார்;
இளந்தளிர்க் குருத்தெ டுத்துப்
புதுப்புது முறையாற் பின்னிப்
பொலிவுற நால[2] விட்டார். 2

மாவிலைத் தோர ணங்கள்
வயங்குறக் கட்டு வித்தார்;
பூவினிற் சரங்கள் கட்டிப்
புதுமணம் பரவ விட்டார்,
வாவியிற் பூத்து நிற்கும்
மலர்களும் கொணர்ந்து வைத்தார்;
காவெனக் குளிர்ந்து தோன்றக்
கடிநகர் கோலஞ் செய்தார். 3

[1] மகிபாலன்பட்டி, [2] தொங்க

இன்னியம் முழங்கும் ஓர்பால்
இசையுடன் மூவர் சொன்ன
நன்னயங் கெழுமு பாடல்
நலமுற ஒலிக்கும் ஓர்பால்
சின்னவர் ஓடி யாடுஞ்
சிரிப்பொலி கேட்கும் ஓர்பால்;
முன்னைய மறைகள் ஓதும்
முழக்கமுங் கேட்கும் ஓர்பால். 4

கண்களைக் கவருங் கோலம்
காதுகள் இனிக்கும் பாடல்
தண்ணெனும் பந்தர் யாவும்
சார்தரப் பொலிந்த தவ்வூர்;
பண்ணுயர் தமிழில் வல்ல
பண்டிதர்க் கறுபான் ஆண்டு
நண்ணிய தறிந்த மக்கள்
நகரினை அழகு செய்தார். 5

கொட்டிய முழவின் ஓசை,
குலவிய குழலின் ஓசை,
[1]பட்டியல் மடவார் பேச்சு,
பச்சிளங் குழந்தை பாடல்,
[2]அட்டிலில் முனைவார் கூவல்,
ஆடவர் அங்கு மிங்கும்
இட்டநற் பணியின் மேவி
அலைபவர் எழுப்பும் ஓசை, 6

வரவுரை கூறும் ஓசை
வருபவர் வழங்கும் ஓசை
மருவிய அன்பின் வந்தோர்
வழங்கிய வாழ்த்தின் ஓசை,
பரிசினைச் சுமந்து வந்தோர்
பரப்பிய ஓசை யெல்லாம்
செறிதரப் படர்ந்த தந்தச்
செந்தமிழ் மனையில் யாண்டும். 7

[1] பட்டுடுத்த, [2] சமையற்கூடம்.

அணிதிகழ் முத்துப் பந்தர்
அமைந்தநல் லரங்கில் ஏறி
மணிவிழாக் காணுஞ் செம்மல்
மனையொடும் இணைந்தி ருந்தார்;
அணுகியே கதிரி ரண்டும்
அருகொருங் கிருந்த தொத்தார்
துணைவியின் கழுத்திற் றாலி
தொடுத்தனர் வாழ்த்தின் ஊடே. 8

பழுத்தவர் அடியில் வீழ்ந்து
பற்பலர் வாழ்த்துப் பெற்றார்;
வழுத்துடன் பரிசில் நல்கி
வணங்கினர் மகிழ்வு பெற்றார்;
கழுத்தியல் மாலை தாங்கும்
கற்பினார் அருகில் நிற்கத்
தொழத்தகும் அம்மை யப்பர்
தோற்றத்தை நினைந்தி ருந்தார். 9

முற்பகல் நிகழ்ச்சி யெல்லாம்
முழுமையுஞ் சமயச் சார்பே;
பிற்பகல் நடந்த வெல்லாம்
பீடுயர் தமிழின் சார்பாம்;
முற்பகல் கண்ட தெல்லாம்
மூசபூ மாலை யாகும்;
பிற்பகல் கண்ட தெல்லாம்
பேசுபா மாலை யாகும். 10

மாநிதிக் கிழவ ரண்ணா
மலைமனர் தலைமை ஏற்கக்
கோநிதிக் கிழவர் கூட்டம்
குழுமியங் கினிதி ருக்கப்
பாநிதிக் கிழமை தாங்கும்
பண்பினர் வாழ்த்து ரைக்க
மாமதிக் கிழவர்க் கங்கே
மணிமலர்[1] ஒன்றைத் தந்தார். 11

[1] கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் படைத்த மணிவிழா மலர்.

கரந்தையிற் சங்கங் கண்டோர்
    கனிந்தநல் லன்பின் ஊறிச்
சுரந்ததோர் மலரைச் சூட்டிச்
    சொல்லரும் மகிழ்வு பெற்றார்;
பரந்தநம் நாட்டில் தோன்றும்
    பற்பல கழகச் சார்பில்
நிரந்துபா மலர்சொ ரிந்து
    நெஞ்சினைத் திறந்து வைத்தார்.

இறுதியில் மணியார் இயம்பினர் நன்றி;
'பாட்டினும் உரையினும் பகர்ந்தன யாவும்
கூட்டு மன்பைக் குறித்தன வேயாம்
பன்மொழிப் புலவர்[1] பாரதிச் செம்மல்[2]
என்னுயிர்த் தோழர்[3] இவர்முத லாகச்
சொற்றநற் பெரியோர், உற்றுழி யுதவும்
பற்றுள சபையார்[4] மற்றும் இவ்வுழை
இவ்விழா நிகழ்ச்சிகள் செவ்விதின் இயக்கிக்
கவ்விய அன்புடன் கடமை யாற்றியோர்
மலரும் அன்பின் விளைதரும் விலையிலா
மலரினை ஈந்து மனமகிழ் வூட்டியோர்
அனைவரும் என்றும் நினைதற் குரியார்;
அணிமையில் நிகழ்ந்த அண்ணா மலைமன்
மணிவிழா நாளில் மன்னர் மனையுள்
அளவிலாச் செவ்வியர் அடங்கி யிருந்தனர்;
அத்தகு மன்னர் அடியேன் சிற்றிலில்
அடங்கி யிருந்து தொடங்கின ராயின்
என்தவப் பேற்றை யாதென மொழிவேன்'
என்றுதம் நன்றியை எடுத்துரைத் தனரே.

[1] தெ.பொ.மீ [2] நாவலர் ச.சோ.பாரதியார் [3] கரந்தை நீ கந்தசாமிப் பிள்ளை. [4] சன்மார்க்கசபையார்.

# 15

# பிணியுறு காதை

பாப்புனையுந் திறனுடைய புலவர் என்பார்
படுவிரைவில் உணர்ச்சிகளுக் காளாய் நிற்பர்;
வாய்ப்பனவாம் இன்பதுன்பம் இரண்டி னுள்ளும்
வருகின்ற அவ்வுணர்வின் வடிவாய் நிற்பர்;
காப்பிட்டு மறைத்துவிட அறிய மாட்டார்
காட்டிடுவர் உணர்ச்சிகளை வெளிப்ப டுத்தே;
யாப்பவர்க்குத் தடையாக நிற்ப தில்லை
அவர்வழியில் அதுநிற்கும் பாடல் தோன்றும். 1

வடித்தெடுத்த சொல்லழகர், நீற ணிந்த
வடிவழகர், இருமொழியும் சொன்ன நூல்கள்
படித்தெடுத்த வாயழகர், சான்றோர் கூட்டம்
பழகவரும் நட்பழகர், முதுமை யுற்றார்;
துடுக்குடுத்த வாதநோய் அவரைப் பற்றித்
துன்புறுத்தத் துயர்க்கடலுள் வீழ்ந்து நொந்தார்.
வடுக்கெடுத்த மதியரைத்தான் தமிழ வானில்
வாதமுகில் ஒளிமறைக்க வந்த தம்மா! 2

அணிபெற்ற கவிக்கம்பன் பாட்டுக் கன்பர்
அரும்பொருளைத் தெரிந்துணர்ந்து விளக்கும் சொல்லர்
பிணியுற்ற சமுதாயக் கேட்டை யெல்லாம்
பேர்த்தெடுத்த போர்மறவர் அன்பு நண்பர்
துணிவுற்ற[1] முருகப்பர் செட்டி நாட்டுச்
சுயமரியா தைப்பணிக்குச் சொந்தக் காரர்,
பிணியுற்றார் பண்டிதமா மணியார் என்று
பெருந்துயரிற் புறப்பட்டார் [2]யாமும் சென்றோம். 3

[1]அமராவதிபுதூரில் மகளிரில்லங்கண்ட அறிஞர்.சொ.முருகப்பனார். [2]முடியரசன்

இவ்விருவர் தமக்குள்ளும் வேறு பட்ட
இருகருத்துக் கொண்டமையால் தனித்திருந்தார்!
ஒவ்வொருவர் மனத்திடத்தும் பிளவே யன்றி
ஒன்றுபடும் நிலையில்லை; எனினும் அந்தச்
செவ்வியநற் புலவருக்கோ நோயென் றாங்கே
செயல்மறந்து துணைவியுடன் ஓடி வந்தார்;
அவ்வியல்பை என்னென்போம் சான்றோர் சான்றோர்
பாலரென அன்றுரைத்த மொழிபொய் யாமோ? 4

அருகில்வரும் முருகப்பர் தம்மைக் கண்டார்
அப்புலவர் ஓவெனவே அலறி விட்டார்;
உருகிவரும் உணர்ச்சியினால் குழந்தை போல
ஒருநொடியில் மாறிவிட்டார் 'எனக்கு வந்த
பெருகுதுயர் தருநோயைப் பாரும் ஐயா
பிழைஎன்ன நான்செய்தேன் இறைவன் என்பால்
தருதுயரை யார்துடைப்பார் ஐயோ' என்று
தாளாமல் அழுதழுது புலம்பி விட்டார். 5

அருகிருந்த முருகப்பர் துணையை நோக்கி
'அம்மாஅம் மா' வென்று கூவி விட்டார்
கருவிருந்து பெற்றெடுத்த தாயை இன்று
காண்கின்றேன் உம்முருவில் அம்மா! அம்மா!
உருகுகிற தெனதுமனம்; என்னைக் காண
ஓடோடி வந்தீரே! அம்மை யப்பர்
அருகில்வரல் போலுணர்ந்தேன்' எனப்பு லம்பி
அழுதழுது கண்ணீரில் நனைந்தி ருந்தார். 6

பாட்டுக்குள் நயமுரைத்து மகிழ வைத்த
பண்பட்ட செந்நாவில், தமிழ்மு ழக்கம்
கேட்பிக்கும் மணிநாவில், புலம்பல் ஓசை
கேட்டதனால் மனமுருகிக் கண்ணீர் சிந்தி
நாட்டுங்கற் சிலையானோம் சிறிது நேரம்
நாவசைய விலைஎமக்குப் பின்னர்த் தேறி
ஏட்டுக்குள் ளடங்காத துயரம் மாற
இயன்றவரை முருகப்பர் எடுத்து ரைத்தார். 7

ஆறுதலை வைத்தானைப் பரவும் அன்பர்
ஆறுதலைப் பெற்றவராய்ப் பேச லுற்றார்,
"சீறுதலை உம்மிடத்துக் கொண்ட தாலே
சிலநேரம் உமைத்தாக்கிப் பேசி யுள்ளேன்
மாறுதலைப் பெரிதாக மனத்துட் கொண்டேன்
மனங்கொள்ளா ததையெல்லாம் மறந்து விட்டுத்
தேறுதலைக் கூறுதற்கு வந்தீர் உங்கள்
திருவுளத்துப் பெருமையினைத் தெரிந்தே னல்லேன்". 8

"நடந்ததைஏன் மீண்டுமினி நினைக்க வேண்டும்?
நானெதுவுங் கருதவில்லை; நம்மனத்துட்
கிடந்ததைநாம் வெளிப்படுத்த மேடை ஏறிக்
கிளக்குங்கால் வேறுபடும் நிலைகள் அங்குத்
தொடர்ந்துவரல் முறைதானே; அதனா லென்ன?
தொண்டுசெயும் பொதுவாழ்வில் இன்னோ ரன்ன
படர்ந்துவரும்" எனமொழிய அமைதி கண்டார்;
பண்பட்ட உள்ளத்திற் பகைமை ஏது? 9

"மலையத்து நாட்டிலுள இராம சாமி
மடலொன்று நலங்கேட்டு வரைந்தி ருந்தார்
நிலைபற்றி நானவர்க்கு மடல்வ ரைந்தேன்
நிலைத்திருந்து தருதுயரைக் கவிதை யாக்கி
அலைகடலுக் கப்பாலே உய்த்து வைத்தேன்
அவர்மகிழ்ந்தார்[1]" எனவுரைத்து மணிம கிழ்ந்தார்.
அலைவுறுத்தும் பிணியுழந்தும் கவிதை தந்தார்;
அக்கவிதை 'சீதநீர்' எனத்தொ டங்கும். 10

பாடலதைப் பாடுங்கால் அவர்மு கத்திற்
படர்ந்துவரும் ஒளிகண்டோம்; இதழில் முன்போல்
ஓடிநடம் பயில்கின்ற முறுவல் கண்டோம்;
உவகையொடு தெளிவினையும் விழியில் கண்டோம்;
வாடவரும் பிணிமறந்து தமைம றந்து
வாய்மலர்ந்த மணிமொழியைக் கேட்டு வந்தோம்;
பீடுபெறு பெருமிதமும் தோன்றக் கண்டோம்;
பிணிதவிர்த்து நலமளிக்கும் தமிழே வாழி. 11

[1] மகிபாலன்பட்டி.சி.ராம.இராமசாமிச்செட்டியார்.

பண்டிதமா மணிப்புலவர் நோயு ழந்து
　　பரிதவிக்கும் செய்திதனை ஒருநாள் கேட்டு,
மண்டிவரும் பெருந்துயரம் தாங்கா தாங்கண்
　　மலை[2] யுறையும் அடிகளவர் ஓடி வந்தார்
அண்டிவரும் இன்பதுன்ப உணர்வெ தற்கும்
　　ஆளாகா திருப்பதுவே துறவோர் கொள்கை;
கண்டுநிகர் தமிழ்ச்சான்றோர்க் குற்ற துன்பம்
　　கசிந்துருகச் செய்ததுகாண் துறவி நெஞ்சை. 12

பதறிவரும் நம்மடிகள் பூங்குன் றத்திற்
　　படுத்திருக்குந் தமிழ்வடிவைக் கண்டு நொந்தார்;
கதறியழ இயலாது செயல்ம றந்து
　　கசிந்துருகி நின்றிருந்தார்; அதனைக் கண்ட
கதிர்மணியார் பொறியொடுங்கிப் புலனொ டுங்கிக்
　　கண்கலங்கிக் கைதொழுது நலிந்து ழன்றார்;
முதலிலெவர் வாய்மலரும் மலர வில்லை
　　முத்துதிர்த்துச் சிவந்தனகாண் விழிகள் நான்கும். 13

உள்ளத்தால் உணர்ச்சியினால் ஒன்று பட்டால்
　　உதடுகளுக் கங்கென்ன வேலை? நெஞ்சம்
விள்ளத்தான் துடிதுடிக்கும், ஆனால் ஒன்றும்
　　விளம்பத்தான் இயலாது, விழிகள் மட்டும்
மெள்ளத்தான் உணர்த்திவிடும், அதனால் [1]குன்றின்
　　மீதுறைவார், [2]பூங்குன்றர் கூடும் அன்பு
வெள்ளத்தில் மூழ்கியதால் உளக்க ருத்தை
　　வெளிப்படுத்தி விளக்கினகாண் முகங்கள் மட்டும். 14

நெடிதுயிர்த்துச் சிறுநேரங் கழிந்த பின்னர்
　　நிறைதமிழின் சுவைகண்ட வாய்ம லர்ந்தார்;
'அடியவனைக் காண்பதற்கோ அடிகள் வந்தீர்?
　　அன்புளத்தால் எனக்கருளத் தேடி வந்தீர்
அடிகள்திரு வடிபடர எனது சிற்றில்
　　அஃதென்ன மாதவந்தான் செய்த தோ'வென்
றடிமனத்திற் பூத்துவரும் உணர்ச்சிப் பூவை
　　அன்பெனுநார் தொடுத்தெடுத்து முன்னர் வைத்தார். 15

[1]குன்றக்குடிமலை　[1]குன்றக்குடி அடிகளார். [2]பண்டிதமணியார்

எல்லாமாய் அல்லதுமாய் இருந்த பாங்கை
இருந்தபடி பொருள்விளங்க இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினைந்து வாழும்
தொழிலுடையார்,[1] உருக்குவதில் எடுப்பும் ஈடும்
இல்லாத வாசகத்தேன் மாந்தி மாந்தி
இளகுகிற மனமுடையார்,[2] மீண்டும் வாயாற்
சொல்லாமற் பொழிவிழியால் முகக்கு றிப்பால்
தொழுமிருவர் சொல்வதெலாம் சொல்லிக் கொண்டார். 16

1. அடிகளார், 2. பண்டிதமணியார், இருவருமே இரு தொழிற்கும் உரியவர்.

# 16
# கதிர்மறை காதை

தமிழக மெங்கணும் தண்டமிழ் பரப்பி
அமுதம் எனுந்தமிழ் அள்ளிய ள்ளிப்
பருகின ராதலின் பாரில் அமரர்தம்
பெருகிய சிறப்பினைப் பேணிக் கண்டவர்,
வாழும் முறையால் வையத் தகத்து
வாழும் உயரிய வாழ்வினைப் பெற்றவர்,
உரனெனுந் தோட்டியால் ஓரைந்துங் காத்து
வரன்முறை தெரிந்து வழுவிலா தமைந்தவர்,
பொய்ம்மை தவிர்ந்து மெய்ம்மை விழைந்து
செய்வன யாவும் செவ்விதிற் செய்தவர்,
இழுக்கல் அறியா ஒழுக்கக் குன்றில்
முழுக்க ஏறிய முதுபெரும் புலவர்
பண்டைத் தமிழும் படர்வட மொழியும்
கண்டத் துறையில் பண்டித மணியென
ஆனவர் ஒருநாள் அற்றைக் கடன்களை
ஆன முறையால் இயற்றி அயர்ந்தனர்,
காய்கதிர் வானிற் சாய்பொழு தானது
சாய்வுநாற் காலியிற் சாய்ந்தவர் இருந்துழி
வாங்கும் உயிர்ப்புத் தேங்கி வந்தது;
தேங்கும் உயிர்ப்புத் திணறல் காண்டலும்
பாயல் விரித்துப் படுத்தனர் தரையில்!
விரித்த பாயலிற் படுத்தவர் விழித்திலர்;
விரித்துரை நல்குவோர் விரித்திலர் ஒருசொல்;
உதடுகள் எதையோ ஓதி யசைந்தன;
அசைந்தன தாமும் அசைவற் றோய்ந்தன;

கதிரவன் இன்பக் கடலுள் மூழ்கினன்
அதன்பின் யாண்டும் அழுகுரல்
துயர இருளொடும் தொடர்ந்தது படர்ந்தே.

## தமிழன்னை புலம்பல்

‘தள்ளையின் நலத்தைத் தாங்கிப் புரக்கும்
பிள்ளையைப் பெற்றேன் பெருங்களிப் புற்றேன்,
இன்றவன் எங்கோ எனைவிட் டேகினன்
துன்றும் இடர்தனைத் துடைப்பவர் எவரோ?
வாழ்வெனும் ஏட்டில் வரவு வைத்தேன்
சூழ்துயர் படரச் செலவே தொடர்ந்தது;
புலவரும் அரசரும் புரவலர் பலரும்
குலமணி யிவற்கு நலமணி விழாவெனப்
போற்றினர் அவன்புகழ் சாற்றினர் கேட்டுளத்
தேற்றிய மகிழ்வால் இறும்பூ துற்றேன்;
விழாமணி மண்ணில் வீழ்ந்த தோவென’
அழாநின் றயர்ந்தனள் தமிழெனும் அன்னை;
கண்ணின் மணியைக் கையுறு கனியை
மண்ணிற் படுத்தவோ மகனெனப் பெற்றனள்?
அரும்பெறற் புதல்வனை ஆருயிர் மைந்தனைப்
பெருங்குலக் கொழுந்தைப் பிரிந்திடின் பெற்றவள்
அடைதுயர் களைதல் அரிதினும் அரிதே
உடைந்த உளத்தவள் உறுதுயர் பெரிதே!

## மக்கள் புலம்பல்

‘அன்னையை இழந்த எம்மை
ஐயநீ புரந்து நின்றாய்;
பின்னைநீ பிரிந்து விட்டாற்
பேதுறு வேமைக் காக்க
முன்னுவோர் எவரே உள்ளார்?
மூழ்கிய துயரை நீக்க
என்னயாம் செய்வோம் ’ என்று
மக்கள் தாம் இரங்கி நின்றார். 1

'முந்தையாம் செய்த வத்தால்
முதல்வநின் மக்க ளானோம்
தந்தையாய்த் தாயாய் எம்மைத்
தாங்கியே புரந்து நின்ற
எந்தையே எங்குச் சென்றாய்
இரங்கவைத் தேகி விட்டாய்!
எந்தவா றிதுபொ றுப்போம்?
எங்ஙனம் உய்யு மாறே?' 2

**புலவர் புலம்பல்**

'சிந்தித்துச் சிந்தித்து வாழ்நா ளெல்லாம்
செயலாற்றி வந்ததமிழ்ப் பெரியார் எங்கே?
சிந்தித்துக் கண்டவற்றை நிரல்ப டுத்துச்
செவிகுளிரத் தந்தபே ரறிஞர் எங்கே?
புந்திக்குள் இருளகற்றி ஒளியும் நல்கிப்
பொலிந்திருந்த கதிரெங்கே? எங்கே?' என்று
சந்தித்த புலவரெலாம் கண்ணீர் சிந்தித்
தாளாத துயரத்தில் மூழ்கி நின்றார். 3

**செல்வர் புலம்பல்**

'பெருநிதியாற் களிப்புற்றேம் ஆயினும்யாம்
பேதலித்தேம் அமைதி யின்றி,
பெருமதியால் நீகண்ட பாட்டின்பப்
பேறனைத்தும் யாமும் துய்க்கத்
தருமுறையால் தந்தனைநீ செல்வத்தைத்
தகுவழியிற் செலவு செய்ய
ஒருமதியால் உரைத்தனைநீ; என்செய்வேம்?
ஒன்றறியேம்' என்றார் செல்வர். 4

**திருமடங்கள் புலம்பல்**

'மணிமொழியை[1] மனம்வைத்தாய்
வளர்கலையை மதிவைத்தாய்
அணிமதியைத் தலைவைத்தான்
அடியிணையைத் தலைவைத்தாய்

[1]திருவாசகம்

பணிபுரியும் திருத்தொண்டர்
பழங்கதையும் மூவர்தரும்
கனிமொழியும் மொழிவதற்குக்
கதிர்மணியே நாவைத்தாய்.' 5

'உலகமெலாம் சிவமயமாய்
ஒளிபெறவே உளங்கொண்டாய்
அலகில்பிற சமயங்கள்
அடுத்துறினும் அகச்சமயம்
குலவிவருஞ் சித்தாந்தக்
குறிக்கோளைத் தெளிந்துணர்ந்தாய்
நலமருளும் சிவநெறியில்
நடந்தொழுகும் அருள்பெற்றாய்.' 6

'அறுபத்து மூவர்வர
லாறுதெளிந் தறிந்தனைநீ
ஒருபத்தும் தொகையெட்டும்
உளவாறு நுகர்ந்தனைநீ
இருபற்றும் உடைமையினால்
எழிற்றமிழும் சிவநெறியும்
பருவத்துப் பயிர்போலச்
செழித்துயரப் பரப்பினைநீ.' 7

'மறவாத சிவனடியும்
மருளாத தமிழுணர்வும்
திருவாத வூரடிகள்
வாசகமும் தெளிந்ததனால்
பிறவாத பேரியாக்கை
பெறுமாறு வேண்டுது'மென்
றொருவாத அன்புளத்தால்
திருமடங்கள் ஓதினவே. 8

**மாணவர்புலம்பல்**

'அழுக்கறுக்கும் நூல்களிலே பெரியனவாம்
அரியனவாம் என்ப வேனும்
பழுத்திருக்கும் நுண்மதியால் எளிதிலவை
படிப்பித்தாய், எங்கள் வாழ்வில்
முழுத்தகுதி பெறுவதற்கும் நல்வழிகள்
மொழிந்தாய்நீ மறப்ப தேயோ?
வழுத்துகிறோம் நின்னடியை' எனநினைந்து
மாணவர்தாம் வணங்கி நின்றார். 9

**சன்மார்க்க சபையார் புலம்பல்**

'தலைவிக்கோ தலைவனில்லை; மகனுக்கோ
தாயில்லை; பூத்தி ருக்கும்
மலருக்கோ மணமில்லை, வானுக்கோ
மதியில்லை, மறவர் கூட்டத்
தலைவற்கோ வாளில்லை; சன்மார்க்க
சபையினுக்கோ நீதான் இல்லை
நிலைமைக்கே என்செய்வோம்?' எனச்சபையார்
நெஞ்சுழன்று மயங்கி நின்றார். 10

**கவிமணி புலம்பல்**

'பத்தரெலாம் போற்றிவரும் பண்டிதமா
மணியேநீ வாத வூரர்
சித்தமெலாங் கசிந்துருகிச் சிவமாகிச்
செய்தருளும் வாச கத்தின்
புத்தமுதைக் கடைந்தெடுத்து வழங்கிவரும்
புண்ணியந்தான் [1]முற்றா முன்னர்
அத்தனடிக் காளாகி அதனிழலில்
அமர்ந்தனையே ஐயா ஐயா!' 11

'அடங்கொண்ட நோயதனால் அல்லலுக்கே
ஆளாய்நிற் கின்றேன், காலன்
வடங்கொண்டு வருங்காலம் வாராதோ
எனைநோக்கி என்று நொந்தேன்

[1]திருவாசக உரைமுடியுமுன்னே.

நடங்கண்ட அம்பலத்து நாதனடி
நண்ணினைநீ எனக்கும் ஆங்கோர்
இடங்கண்டு வை'யென்று கவிமணியார்
ஏங்கிமனம் பேத லித்தார். 12

**ஊரார் புலம்பல்**

'சாவதும் புதுவ தன்றே'
எனுமொழி சாற்றும் ஊரார்[2]
பாவமு தூட்டி வந்த
பண்டிதர் மறைவு கேட்டுக்
கோவென அலறிக் கைகள்
குவிந்திடத் தொழுது நின்றார்
நாவது வறண்டு போக
நல்லவர் விம்மி நின்றார். 13

'பள்ளியைத் திறந்து வைத்தாய்
பாதையைச் செப்ப னிட்டாய்
ஒள்ளிய பாலங் கண்டாய்
ஊர்திகள் வரவ ழைத்தாய்
தள்ளியே நின்ற அஞ்சல்
நிலையமும் தந்தாய்' என்று
விள்ளவும் இயலா ராகி
விம்மியே அழுது நின்றார். 14

'பேசிடும் வழக்கிற் சங்கப்
பாக்களின் பெருமை யெல்லாம்
பேசிட யாரைக் கண்டு
பெரும்பயன் பெறுவோம்? தென்றல்
வீசிய அரங்கம் எங்கே
விளைந்திடக் காண்போம்?' என்று
பேசிய நாட்டு மக்கள்
பேருயிர்ப் புயிர்த்து நின்றார். 15

[2] பூங்குன்ற நாட்டார்.

நமது தமிழ்த் திருக்கோவில் முன்பி ருந்து
    நாளெல்லாம் நாவசைத்த மணியின் ஓசை
அமைதியுற ஓய்ந்ததம்மா! தமிழ் மாந்தர்
    அகங்குளிர இலக்கியத்தேன் வழங்கி வந்த
கமழ்மணத்துக் கோற்குறிஞ்சி சாய்ந்த தம்மா!
    கையிருந்த கனியொன்று வீழ்ந்த தம்மா!
இமிழ்கடல்மா ஞாலத்தின் இருள கற்ற
    எழுகதிரும் கடனாற்றி மறைந்த தம்மா! 16

அன்றொலித்த மணியோசை செவியில் மோதி
    அமையாமல் எதிரொலியாய் என்றுங் கேட்கும்;
குன்றளித்த செழுந்தேனைக் குறிஞ்சி தந்த
    குளிர்தேனைக் குறையாமற் சேர்த்து வைப்போம்,
சென்றகதிர் நாளைக்கு விடியும் போது
    சிரித்தெழுந்து மிகப்பொலிந்து வந்து தோன்றும்
ஒன்றுபடும் உளத்தாலே வணங்கி நிற்போம்;
    ஓய்வின்றித் தமிழ்ப்பணியைத் தொடர்ந்து செய்வோம். 17

# 17
# சிலைகாண் காதை

ஊருக்குச் செய்தநலம் சமயச் சார்பின்
உயர்வுக்குச் செய்தநலம் தமிழ்வ ளர்த்துப்
பாருக்குச் செய்தநலம் சங்க நூலின்
பாட்டுக்குச் செய்தநலம் தமிழி னத்தின்
வேருக்குச் செய்தநலம் எனநி னைந்து
வெளிப்படுமோர் நன்றியினை வடித்துக் காட்டக்
காருக்கு நிகரான வணிகர் கூடிக்
கதிரேசர் சிலைவடிக்க முடிவு கொண்டார். 1

கலைகண்டார் திறங்கண்டார் தமிழ்மொ ழிக்குக்
கதியென்றார் அவருருவை வடித்துக் காட்டும்
சிலைகண்டார் ஊர்மக்கள் சிலைதி றக்கச்
செயல்கொண்டார் விழாவயரும் நாளுங் கண்டார்;
அலைகண்டாற் போலவரும் மக்கள் எங்கும்
அந்நகரில் திரண்டெழுந்தார்; உவமை யொன்றும்
இலைஎன்றார் அதுகண்டார் மகிழ்வு பொங்கி
ஈதன்றோ தமிழ்மொழிக்குத் திருநாள் என்றார். 2

தமிழ்நாடு தமிழ்மகனே உன்னை யீன்ற
தாய்நாடு; குருதியுடன் கலந்து நிற்கும்
தமிழ்நாடு,[1] பிறமொழிக்குத் தொழும்ப னாகித்
தலைகுனிய நாடாதே என்று ரைத்துத்
தமிழ்வாழத் துடிதுடித்த தமிழர் ஆட்சி
தமிழ்நாட்டில் தலைதூக்கி நின்ற நாளில்
தமிழ்வானிற் கதிரானோர் சிலைதி றக்கத்
தமிழரசு பேருதவி செய்த தங்கு. 3

[1] தமிழை விரும்பு

பறம்புமலை கொல்லிமலை ஒக்கூர் என்னும்
பழம்பெருமை கொண்டிலங்கும் ஊரில் எல்லாம்
கரும்புநிகர் தமிழ்மொழிக்குச் [1]சாறெ டுத்துக்
களிகொண்ட தமிழரசு பூங்குன் றத்து
வரும்புலவர் மாமணியைச் சிலையிற் கண்டு
வணங்கியது வாழ்த்தியது, மேலும் பண்டைப்
பெரும்புகழான் மேம்படுநல் லூர்கள் தேடிப்
பெருமைசெயும் ஆர்வத்தால் விளங்கிற் றிங்கே. 4

எத்துயரம் ஏற்றாலும் தமிழ்மொ ழிக்கே
என்வாழ்வு தாய்மொழியைக் காக்கும் போரில்
செத்தொழிய நேர்ந்தாலும் அந்த நாளே
திருநாளாம் எனமுழங்கும் அரிமா ஏறு;
பத்தியுடன் தமிழ்ச்சான்றோர் தாள்வ ணங்கும்
பண்புடையார்; [2]உயர்கலைஞர்; அவர்தாம் எங்கள்
முத்தமிழ்தேர் மு. க. வின்[3] சிலையை நாட்டின்
முதலமைச்ச ராயிருந்து திறந்து வைத்தார். 5

உலையாத உள்ளத்தால் முயன்று தாமே
உயர்நிலையில் முன்னேறி ஏறுங் காலை
அலையாக வருமிடர்கள் அனைத்துந் தாண்டி
அமுதமென இனிதாகப் பேசும் பேச்சுக்
கலையாலே மக்களுளங் கவர்ந்து நின்ற
கதிரிரண்டாம்; இலக்கியவான் நெறியில் [4]ஒன்று
தலையான அரசியல்வான் வழியில் [5]ஒன்று
தமிழ்க்கதிரை அக்கதிர்தான் வாழ்த்திற் றம்மா! 6

ஊன்றுகோல் கோண்டே யாண்டும்
உலவிநற் றமிழ்வ ளர்த்தார்
ஊன்றுகற் சிலையாய் நின்றார்;
ஆயினும் உய்வு காண

---

[1]விழா. [2]முதல்வர்.மு.கருணாநிதி. [3]மு.கதிரேசனார்.
[4]பண்டிதமணி, [5]கலைஞர்.மு.கருணாநிதி

[1]ஊன்றுகோள் நமது ளத்தில்
ஒவ்வொன்றும் மணிகளாகும்;
ஊன்றிநாம் எண்ணி யெண்ணி
உருப்பெற உழைத்தல் வேண்டும். 7

'அயன்மொழிப் பயிற்சி அன்னை
மொழியிடம் அன்பைக் கூட்டப்
பயன்படும் எனினும் இந்தி
பயின்றிட வற்பு றுத்தின்
இயல்பினிற் றமிழ்வ ளர்ச்சி
தடைப்படும் ஏற்றங் குன்றும்
மயலுளார் திணிப்ப ராயின்
வருபயன் இல்லை' என்றார். 8

'உரியதன் மொழியில் ஆக்கம்
உயர்ந்திட ஓம்பிக் காத்துத்
தெரிதருஞ் சுவையை மாந்தத்
தெரிகிலா நாடு தானும்
பெரியதே எனினும் யாவும்
பின்னடைந் தழியும்; உள்ள
பெருமையுந் தேயும்' என்றே
பேசினர் மதியா லாய்ந்து. 9

'தாய்மொழி என்று சொல்லும்
தனிமொழி எதுவோ அந்தத்
தூய்மொழி வாயி லாகத்
தொடங்கிடும் கல்வி தன்னைச்
சேய்களும் முதற்கண் கற்றுத்
தெளிந்திடல் வேண்டும் இன்றேல்
தேய்வுறும் அறி'வென் றெண்ணித்
தேர்ந்தவர் தெளிந்து சொன்னார். 10

[1]ஊன்றிய கொள்கை

‘பிறந்ததன் னாட்டிற் பேசும்
 மொழியினைப் புறக்க ணித்து
மறந்தயல் மொழிக்காட் பட்டு
 மனத்துறக் கற்றா ரேனும்
சிறந்தநன் மொழியாற் கொள்ளும்
 சீர்மையில் முற்றுப் பெற்ற
திறந்தனைக் கொண்டா ரென்று
 செப்பிடல் அரிதே’ யென்றார். 11

‘வருவன எவையும் சொல்லும்
 வல்லமை வாய்ந்த வேர்ச்சொல்
பெருகிய தமிழ்மொ ழிக்கட்
 பிறமொழிச் சொற்க லந்து
சிறுமைகள் செய்து வாழ்தல்
 செந்தமிழ்த் தாய்க்குச் செய்யும்
ஒருபெருந் தீங்கே யாகும்
 ஓதுக்குக’ எனப்ப ணித்தார். 12

‘வையகம் ஈன்ற மக்கள்
 முதன்முதல் வாய்தி றந்து
பையவே நாவ சைத்த
 பைந்தமிழ் மொழியை யிங்குப்
பொய்யினால் வடமொ ழிக்கட்
 பிறந்ததாப் புகல்வ ராயின்
மெய்யறி வில்லார் கூறும்
 வெற்றுரை யதுவாம்’ என்றார். 13

‘பிறமொழிச் சொற்க லந்து
 பீடுறும் இலக்க ணத்தின்
வரன்முறை யழித்து விட்டு
 வழுவுடன் எழுதி யிங்குத்
தருநடை எளிய தென்று
 தமிழனே சொல்வ னாயின்
அறிவது தெளியும் நாளை
 அவன்பெறல் வேண்டு’ மென்றார். 14

‘பூமியின் வாழ்க்கை யொன்றே
புலமையின் குறிக்கோ ளன்று;
தோமிலா[1] அறிவைக் கூட்டித்
துய்யநல் லொளிய தாக்கித்
தாமுனர்க் காணா இன்பந்
தருபொருள் ஒளியால் நோக்கி
ஏமுறல்[2] ஒன்றே கல்வி
எய்தியோர் குறிக்கோள்’ என்றார். 15

‘உயர்பெரும் நோக்கங் கொண்ட
ஒப்பிலாக் கல்வி தன்னை
மயர்வுற உடலை யோம்பும்
வாழ்க்கைக்கே வழியாக் கொண்டால்
வயல்தனில் வரகுக் காக
வளம்பெறும் பொன்னாற் செய்த
உயரிய கொழுவைப் பூட்டி
உழுவதற் கொப்பா’ மென்றார். 16

பண்படும் ஒழுக்கம் மிக்கோர்
பகர்தரும் வாய்ச்சொல் யாவும்
ஒண்டமிழ் மாந்தர்க் கென்றும்
ஊன்றுகோ லாகுங் கண்டீர்;
பண்டித மணியார் தந்த
பயன்தரும் ஊன்று கோலைக்
கொண்டுளந் தளரா வண்ணம்
கூடியே நடப்போம் வாரீர். 17

---

1. குற்றமில்லா, 2. இன்புறல்

# ஊன்றுகோல்

## செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| | | பக்கம் |
|---|---|---|
| அகப்பொருளோ புறப்பொருளோ | - | |
| அடங்கொண்ட நோயதனால் | - | |
| அடியவர்பால் அருந்தமிழை | - | |
| அடியவர்க்கு அருளும் ஆண்டவர் | - | |
| அணிதிகழ் முத்துப் | - | |
| அணிபெற்ற கவிக்கம்பன் | - | |
| அணுவுக்குள் மறைந்திருக்கும் | - | |
| அம்மொழி வல்லார் | - | |
| அமிழ்தனைய தமிழ்மொழியும் | - | |
| அமைச்சர்தரும் மதிப்புரைகள் | - | |
| அயன்மொழிப் பயிற்சி | - | |
| அயர்வின்றி விருந்தோம்பும் | - | |
| அரசன்சண் முகனார்தாம் | - | |
| அரங்கினுக் கேற்ற | - | |
| அரங்கேறும் அழைப்பேற்ற | - | |
| அரியக் குடி | | |
| அருகில்வரும் முருகப்பர் | - | |
| அருகிருந்த முருகப்பர் | - | |
| அரும்பிய புலமை | - | |
| அல்லதொன்றும் செயநினையார் | - | |

அவையறிந்து பேசுங்கால் -
அழுக்கறுக்கும் நூல்களிலே -
அறிவினை வளர்க்கவேண்டி -
அறுபத்து மூவர்வர -
அன்னையை இழந்த -
அன்றொலித்த மணியோசை -
அன்புக்கு மனமளித்தார் -
அன்புவளர் சமயத்தை -

ஆ

ஆங்கிலங் கற்றோர் -
ஆங்கிலங் கற்றவர் -
ஆசான் பணியிடை -
ஆண்டுபதின் மூன்றானால் -
ஆழ்ந்தகன்ற நுண்ணறிவு -
ஆறுதலை வைத்தானப் -
ஆன்றமைந்து தலைமைபெறும் -

இ

இசைக் கிளியை மொழிக்கூண்டில் -
இசை சுவைத்து மகிழ்வதற்கு -
இசையிலையாம் தமிழ்மொழியில் -
இசை வளர்க்கும் மாநாடு -
இயலுண்டாம் இசையுண்டாம் -
இருமொழி நூல்கள் -
இருமொழி வல்ல -
இருவருமே தமிழுணர்ந்தோர் -
இலக்கண நூல் பதிப்பித்தார் -
இலக்கண நூல் வல்லுரும் -
இலக்கணத்தை உலைக்களமென் -
இலக்கணத்தொல் காப்பியமும் -
இலக்கியப் பண்பாடு -

இலக்கியங்கள் பயிலாமல் -
இவரிடத்துக் கற்றவர்தாம் -
இவ்விருவர் தமக்குள்ளும் -
இழிகதைகள் புன்மொழிகள் -
இளஞ்சிறார் பயிலும் -
இறுதியில் மணியார் -
இறைவாழுங் கோவிலுக்குள் -
இன்னியம் முழங்கும் -
இனியநல் லார்வம் -

ஈ

ஈத்துவக்கும் இன்பத்தை -
ஈன்றவள் மனத்திற் -

உ

உண்பதும் ஓய்வதும் -
உயர்பெரும் நோக்கங் -
உரந்தழுவுந் தமிழ்மறவர் -
உரியதன் மொழியில் -
உரையின்றிக் கிடக்கின்ற -
உரையெழுதும் பண்பு நலன் -
உரைசால் மணியர் -
உருவினில் சிறிய -
உலகெலாம் சிவமயமாய் -
உலகியல் நன்கு -
உலகெலாம் உய்ய -
உலையாத உள்ளத்தால் -
உழுகலங் குழிகள் -
உள்ளத்தால் உணர்ச்சியினால் -
உள்ளத்தாற் பொய்யாது -
உள்ளத்துள் உணர்வூட்டி -
உறுபிணியாற் கால்தளர்ந்த -

ஊ

ஊருக்குச் செய்தநலம் -
ஊன்றுகோல் கொண்டே -

எ

எங்கெங்கே தமிழ்ச்சான்றோர் -
எத்துயரம் ஏற்றாலும் -
எதிர்ப்பவரும் எடுத்துரைக்க -
எதுமுதனூல் எதுவழிநூல் -
எதுவெனினும் இதுவரையில் -
எப்பொருளும் எடுத்துரைக்கும் -
எமக்கெல்லாந் தமிழமுதை -
எரிஏய்ப்ப வருபகையை -
எல்லாமாய் அல்லதுமாய் -
எழுத்தறி வித்த -
எளிதாகச் சென்றுவரும் -
எளியவர்க்குள் எளியரென -
என்கவியில் என்பேச்சில் -
என்சமயம் வாழ்கவென -
என்றுதம தடக்கத்தைப் -

ஒ

ஒருபாதி உமையவட்கு -
ஒருமையிற் கற்ற -
ஒருநாள் மகிபாலன் -
ஒருவாரத் திருநாள்போல் -
ஒன்பது சுவைகள் -

ஓ

ஓதிய ஆத்தி -

## க


கசடற மொழியில் -
கதிரேசர் எனும்பெயரைச் -
கதிரேசர் தலைவரெனுஞ் -
கதிரொளி தரும்பிள்ளை -
கதிர்மணி பாற் கற்றுணர்ந்த -
கடல்கடந்து நெடுந்தொலைவு -
கடையிரவு கழிந்தபினர் -
சணக்கிட்டுச் செட்டோடு -
கண்களைக் கவருங் -
கண்டுநிகர் சொல்லுக்குள் -
கண்முனம் படரா -
கரந்தையிற் சங்கங் -
கருத்து வேற்றுமை -
கல்வியுடன் ஒழுக்கங்கள் -
கலைகண்டார் திறங்கண்டார் -
கலைமகளின் அருள்பெற்ற -
கலைமகளின் திருவுளத்துக் -
கலைமலிந்த கதிரேசர் -
கலையறி வார்ந்த -
கலைவாழ்வின் விளக்க -
கல்லானும் செம்பானும் -
கல்விவளம் பரப்புவதாற் -
கவர்மணம் நுகர்ந்த -
கற்கோவில் வலம்வந்து -
கற்பனை படைத்துக் -
கற்பனைப் பித்தன் -
கற்றவர்கள் மெச்சுமரு -
கற்றார்க்குக் களிப்பருள -
கற்றுணர்ந்தார் நல்லுறவும் -

கனன்றெழுந்து தமையீன்ற -
கனிமொழியால் நாவசைத்து -

கா

காடாய வேட்களத்தைக் -
காட்டைத் திருத்திக் -
காலமறிந் திடனறிந்து -
காற்குறை யதனை -

கி

கிடைத்தது கம்ப -

கு

குலம்பார்ப்பர் குவிசெல்வ -
குலவிவருஞ் செல்வத்தைப் -
குலவுவார் நடந்து -
குலனுடையார் அருளுடையார் -
குளங்களில் நிறையும் -

கூ

கூடெடுத்த பயன்முழுதுந்

கே

கேட்டாரை வயப்படுத்தி -

கை

கைநிறைந்த பொருள்பார்ப்பர் -

கொ

கொடுமையிது கொடுமையெனக் -
கொட்டிய முழவின் -
கொண்டவன்பால் தன்னோடு -

கொண்டான்றன் குறிப்புணர்ந்து -
கொண்டொழுகும் பண்பாட்டில் -
கொலைகளவு பொய்யொடுகள் -

கோ

கோடையிலே இளைப்பாற்றிக் -

ச

சங்கங்கள் பலவைத்துப் -
சங்கத்துத் தமிழ்பரப்பிப் -
சங்கரனார் உமையவளைக் -
சமயத்துத்துறையிலவர் -
சமயத்தை நன்குணர்ந்து -
சமய நூற் பொய்கை -

சா

சாத்திரங் கற்றுத் -
சாவதும் புதுவ -

சி

சிந்தித்துச் சிந்தித்து -
சிரிப்பிருக்கும் அவர்வாயில் -
சிவநெறியும் பொதுநலமும் -
சிலவிதை தூவி -

செ

செஞ்சுடர்ப் பரிதி -
செந்தமிழ்மா மணிமொழிந்த -
செந்தமிழ் நூலிற் -
செல்வாக்குப் பரவிவரப் -
செவிமடுத்த மாமணியார் -

சே

சேதுசமத் தானத்துப் -

சொ

சொலக்கேட்டு விழியிமைகள் -
சொல்லுரைசே னாவரையம் -
சொல்லிய ஆசான் -
சொன்னவெலாம் உண்மையென -

த

தங்குதடை யின்றியவர் -
தச்சிட்டுச் சூத்திரகன் -
தந்தைதாம் பிரிந்தார் -
தமக்காகத் தமிழ்வளர்ப்பார் -
தமிழக மெங்கணும் -
தமிழ்மொழியில் வெறுப்புடையோர் -
தமிழ்நாடு தமிழ்மகனே -
தம்முழைப் பயில்வார் -
தலைமகன் இவனுக் -
தலைவிக்கோ தலைவனில்லை -
தனக்குரிய தளையின்றிப் -
தனியரசாய்த் தமிழரசாய் -
தன்மானங் கருதாமல் -
தன்னுணர் வுந்தித் -
தன்னுளே தங்கி -

தா

தாங்கற்ற வடமொழியில் -
தாண்டவனார் பதமிருக்கப் -
தாய்மொழி என்று -
தான்படுந் துயர் -

தி

திண்ணையிற் பள்ளி -
திண்ணையில் அமைந்த -
திரைவழி கடந்து -
திருக்கோயில் பலஎழுப்பச் -
திருமடத்திற் குள்ளிருந்து -
திருந்தமனங் கொள்ளாராய்ச் -

து

துணிகளைக் கைகள் -
துளிர்த்தெழும் ஆர்வம் ஒன்றே -
துறவுலகில் ஞானியார் -

தெ

தெங்கின்காய் உடைக்குமொலி -
தெருவிடை மணல் -
தென்மொழியும் வடமொழியும் -

தே

தேவாரம் ஓதுபவர்க் -

தொ

தொகைஎனும் நூல்சொல் -
தொடுவதெலாந் துலங்கவைக்கும் -
தொடுக்கின்ற சொற்போரில் -

தோ

தோயுமுளக் கதிர்மணியும் -
தோற்கருவி துளைக்கருவி -

ந

நடந்தன ஆண்டு -
நடந்ததைஏன் மீண்டுமினி -

நமதுதமிழ்த் திருக்கோவில் -
நம்முன்னோர் தேடிவைத்துத் -
நலம்மிகுந்த சான்றோராய் -
நலந்தந்த சங்கரரும் -
நல்லறத்தை விலைகொடுத்து -
நற்றமிழ்த் தாயை -
நற்றமிழில் வல்லவராய் -
நன்செய்நிலத் துறுகளைகள் -
நன்றாய்ந்து சீர்தூக்கி -

நா

நாடுமுழு தெங்கணுமே -
நாவசையும் மணியொலியைக் -
நாவிரிக்கும் புகழ்மணக்கும் -

நி

நிலத்தடியில் அமைந்திருக்கும் -
நிலைத்தபணி புரிந்திருக்கும் -
நிழல்களே சாயும் -
நிறைதரு புலமை -
நிறைபுலம் செழிக்கப் -

நூ

நூலறிவும் நுண்மதியும் -
நூலுக்குள் அவர் நுழைந்து -
நூ லொன்றும் பொருளுணர்ந்து -

நெ

நெடிதுயிர்த்துச் சிறுநேரங் -

ப

பகைமருள மேல்நோக்கித் -
படரறிவுப் பண்டிதர்பாற் -

படித்தனன் ஏழு -
படித்தநல் லிலக்க -
பண்டிதமா மணிமொழியைக் -
பண்டிதமா மணிப்புலவர் -
பண்டுநற் புலவர் -
பண்படும் ஒழுக்கம் -
பண்ணமைத்த தேவாரப் -
பதறிவரும் நம்மடிகள் -
பதினாறாம் ஆண்டுவிழா -
பத்தரெலாம் போற்றிவரும் -
பலசிறப்புப் பெரியவர்க்குத் -
பலமொழிகள் படருமலை -
பலர்புகழ் கல்வி -
பல்வரிசை யில்லாத -
பழமைக்கும் புதுமைக்கும் -
பழுதற எழுதக் -
பழுதற நூல் பயில்வார்பின் -
பழுத்தவர் அடியில் -
பழையதமிழ் நூலெனினும் -
பள்ளியில் ஆத்தி -
பள்ளியில் ஏழு -
பள்ளியைத் திறந்து -
பறம்புமலை கொல்லிமலை -

பா

பாச் சுவையிற் -
பாடலதைப் பாடுங்கால் -
பாட்டரங்கம் தமிழ்நாட்டில் -
பாட்டின்பஞ் சுவைப்பதிலே -
பாட்டுக்கு நயமுரைக்குந் -
பாட்டுக்குள் நயமுரைத்து -

பாப்புனையுந் திறனுடைய -
பாவமுதின் எண்சுவையும் -

பி

பிழைபடப் பாடல் -
பிறதுறை வல்லா -
பிறந்ததன் னாட்டிற் -
பிறமொழிச் சொற் -
பின்வந்த அவ்விளவல் -

பு

புதுக்கிய மனையின் -
புதுமுறையாற் றமிழாயும் -
புலமிக்க கதிரேசர் -
புலமிக்கார் மாசற்றார் -
புலமைக்கு வடிவமெனத் -
புலவர்தமை இகழ்ந்துரைப்பார் -
புறப்பொருளாச் சமயத்தை -
புனல்தரு மணிமுத் -

பூ

பூமியின் வாழ்க்கை -

பெ

பெண்ணணங்கின் பெருந்துணிவை -
பெண்பாலர் கல்விபெறப் -
பெண்மைக்கு மதிப்பளித்துப் -
பெருநிதியாற் களிப்புற்றேம் -
பெருமைசேர் பூங்குன் -
பெரும்புலமை மிகுநெஞ்சில் -
பெற்றதாய் மொழியிற் -
பெற்றவர் உள்ளம் -
பெற்றிடும் ஒன்றைக் -

பே

பேசிடும் வழக்கிற் -
பேராசர் நிகர்தோற்றம் -
பேருந்து முதலான -
பேணிய குழலில் -

பொ

பொருட்டுறையில் சபைதளரும் -
பொருள்பெற்று நலம்பெற்றுப் -
பொருளினால் மிகுந்த -
பொறியின்மை கண்டு -
பொன்விசிறி மடிப்பொன்று -

போ

போராடிச் செங்கதிரோன் -

ம

மகனுக்குத் திருமணநாள் -
மடைகாட்டும் வெள்ளமென -
மணியுடையார் உடற்குறையை -
மணிமொழியை மனம்வைத்தாய் -
மண்டியவர் மனம்மகிழ -
மலர்விரிந்து கனிமிகுந்து -
மலைத்திடுதல் கைவிடுக -
மலையத்து நாட்டிலுள -
மறவாத சிவனடியும் -

மா

மாணவன்போல் ஆசான்றன் -
மாநிதிக் கிழவர் -
மாவிலைத் தோர -
மாற்றிதற்குக் காண்பதற்கு -

மீ

மீதான உயர்குணமும் -
மீனாட்சி கல்லூரி -

மு

முதனூலின் பொருள் முற்றும் -
முதனூலிற் கண்டதனை -
முத்தமிழ் அளக்க -
முந்தையாம் செய்த -
முற்றாத கல்வி நலரம் -
முற்றிய வாதநோய் -
முற்றுறக் கல்லாம் -
முற்பகல் நிகழ்ச்சி -
முன்னவன்பேர் கலியாணி -

மூ

மூவிரண்டாண்டு -

மெ

மெய்ம்மைச் சமயம் -

மே

மேடைகளில் துணிந்தேறி -
மேற்கணக்காய்க் கீழ்க்கணக்காய் -
மேன்மாடத் தினிதிருந்த -

மொ

மொழிவேண்டா என்றுரைத்தீர் -

யா

யாதும்நம் ஊரே -

வ

வகுப்பிலே பாடஞ் -
வடமொழிப் பயிற்சி -
வடித்தெடுத்த சொல்லழகர் -
வணிகர்தம் குலத்து -
வண்டிசைக்கும் யாழோசை -
வரவுரை கூறும் -
வரும்பகை யனைத்துந் -
வருவன எவையும் -
வல்லவர் போற்ற -
வழங்குதலை வழக்காக்கி -
வளரிளங் காடு -

வா

வாய்மொழி கல்லா -
வான்கலந்த மாணிக்க -

வி

விசுபுரட் டாசித் -
விரிமனக் கொள்கை -

வீ

வீமகவி என்பாரைத் -

வை

வையகம் ஈன்ற -

# இளம்பெருவழுதி

# முன்னுரை

காப்பிய நாடகம் எழுதவேண்டுமென்பது என் நீண்ட நாள் ஆவல். பேராசிரியர் சிலர், காணுந்தொறும் என் ஆவலைத் தூண்டிக்கொண்டேயிருப்பர். எனினும், எதனாலோ யான் எழுத முனையாதிருந்துவிட்டேன். இப்பொழுது தான் அது நிறை வேறும் சூழ்நிலை ஏற்பட்டு. அச்சூழ்நிலையை, உரு வாக்கிய துணைவேந்தர் இராமச்சந்திரனார்க்கும் நூல் வெளிவரத் துணைநின்ற துணைவேந்தர் சீனி கிருட்டின சாமி அவர் களுக்கும் என் நன்றி.

இன்றுள்ள குமுகாயச் சீர்கேட்டை அடிப்படையாக வைத்து எழுதவேண்டுமென்பது என் பெருவிழைவாகினும் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தார் விருப்பிற் கிணங்கிப் பண்டை நிகழ்ச்சியைக் கருவாகக்கொண்டு இந்நாடகம் புனைந்துள்ளேன்.

உலகப் புகழுக்குரிய ‘உண்டா லம்ம இவ்வுலகம்’ என்ற பாடலைப் பாடிய கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியைப் பற்றி 1948 ஆம் ஆண்டு ஒரு சிறு கதையெழுதிப் ‘போர்வாள்’ என்னும் தாளிகையில் வெளியிட்டேன். அக்கதையையே சில மாற்றம் செய்து நாடகமாக்கியுள்ளேன்.

பண்டைத் தமிழர் பழக்கவழக்கம், இனம் மொழி நாடு இவற்றிற்பற்று, போர் மறுப்பு இம்மூன்றும் இந்நாடகத்தின் உட்கோளாக அமைய முயன்றுள்ளேன்.

மதுரையின் முன்னை நிலைகளையறிந்து கோடற்குப் பத்துப்பாட்டும் பரிபாடலும் பெரிதும் துணைநிற்கின்றன.

காப்பிய நாடகம் எழுதுவது என் கன்னி முயற்சியே. எனினும் விழிப்புணர்வுடன் செயற்பட்டுள்ளேன். என்னுட் கலந்துறையும்

தமிழன்னை ஆட்டுவிக்க ஆடியுள்ளேன். ஆட்டத் திற்குறைநிறை காணின் அஃது என்னைச் சாராது.

என்னையுங் கூட்டுவித்து, இதனை எழுதப் பணித்தவர், என் கெழுதகை நண்பரும் மதுரை, காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலை வரும் ஆய்வுச் செம்மலும் ஆகிய தமிழண்ணல் முனைவர் இராம.பெரிய கருப்பனாவார்.

இதனையெழுத, உரமான- ஆழமான அறிவுரைகள் கூறி, நன்னடை நல்கி, ஊக்கியுதவியவர், முன்னைத் துணை வேந்தரும் உழுவலன்பரும் தொல்காப்பியச் செம்மலும் ஆகிய முனைவர் வ.சுப.மாணிக்கனாராவார். இவ்விரு மணிகளும் என் தமிழ் நெஞ்சுள் அலை செல்வோராவர்.

காரைக்குடி, அன்பன்
29.10.85 முடியரசன்

## தமிழ் வாழ்த்து

ஆடகக் குழைகள் ஆட
அடியினிற் சிலம்பும் ஆடப்
பாடமை வளைகள் ஆடப்
பையமே கலையும் ஆடக்
கூடெழில் மணிகள் ஆடக்
குலவியே எனது நெஞ்சுள்
நாடகம் ஆடும் நங்காய்
நற்றமி ழன்னாய் வாழ்க

முதுமைவந் துற்ற போதும்
முழுவலி யற்ற போதும்
கதுவுபல் பிணிகள் பற்றக்
கலங்கியே நின்ற போதும்
எதுதுயர் நேர்ந்த போதும்
எவர்பழி செய்த போதும்
புதுமையோ டிளமை பூண்டு
பொலிவுடன் ஆடு கின்றேன்

உற்றுளே கலந்து நீயென்
உயிருடன் உறைத லாலே
கற்றவன் போல யானும்
களிநடம் ஆடு கின்றேன்
குற்றமென் றுறுமேல் நின்றன்
குறையலால் என்பா லில்லை
சற்று நீ விழித்து நிற்பின்
சாருமோ குற்ற மிங்கே?

-முடியரசன்

# கதைச் சுருக்கம்

பழங்கோட்டையுள் ஓரிளைஞனை அழைத்துச் சென்ற முதியவர் ஒருவர், ஆங்குள்ள ஓவியம், சிற்பம் முதலியவற்றைப் பற்றிய விளக்கங்களை அளித்துக் கொண்டு செல்கிறார். அவ்வமயம் ஆங்கு நின்ற சிலையொன்றின் விளக்கம் பற்றி இளைஞன் கேட்க, முதியவர், அது கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதியின் உருவச்சிலை யென்று கூறி, அவன் கடலுள்மாய்ந்த வரலாறு சொல்வதாகக் கதை தொடங்குகிறது.

வெண்டலைநாகனார் என்ற அவைக்களப் புலவர்பால் வலந்தரு பாண்டியன் மகன் வழுதியும் வெல்போர்க்கடம்பன் என்ற படைத்தலைவன் தங்கை சுரும்பார் குழலியும் ஐயந்திரி பறக் கற்று இளமையிலேயே பாடலியற்றும் ஆற்றலும் பெறுகின்றனர். கோட்புலி மறவன் என்னும் போர்ப்பயிற்சி ஆசானிடம் வழுதி போர்க் கலைகளுங் கற்றுத் தேறுகிறான்.

அவைக்களப்புலவர், படைத்தலைவன், அமைச்சர் செம்புலச் சிறையார், இவர்களிடம் வலந்தரு பாண்டியன் நாட்டின் நிலைபற்றி உசாவியறிகிறான். பின்னர்ப் புலவர், பாணர், விறலியர் முதலியோர்க்குப் பரிசில் நல்கி மகிழ்கிறான்.

பாண்டியன், தன் மகன்வழுதியின் கல்வித்திறன், போர்த்திறன் முதலியவற்றை நாகனாரிடமும் கோட்புலியிடமும் கேட்டறிந்து மகிழ்கிறான். மாறன் மாதேவியும் உடனிருந்து மகிழ்கிறாள்.

வழுதி ஒருநாள் சுரும்பார் குழலியின் இல்லத்திற்கு வருகிறான். அவள், இவன் மேற்கொண்ட காதற்குறிப்பறிந்து கொண்டு, முதலில் தான் காதல் கொள்ளாள்போல முரண் படப் பேசிப் பின்னர்த்தன் உளத்தையும் வெளிப்படுத்துகிறாள்.

வையையிற் புதுப்புனல் வர, வழுதியும் குழலியும் அவ்விழாக்கண்டு மகிழ்கின்றனர்.

செம்புலச் சிறையார், வெண்டலைநாகனார், வெல்போர்க் கடம்பன் மூவரும் பாண்டியன் வெள்ளணிவிழாவைச் சிறப்புறக் கொண்டாட ஏற்பாடு செய்கின்றனர். மகார் நோன்பும் ஒருசேர வருவதால் இரண்டும் இணைந்த விழாவாகக் கொண்டாட முயல்கின்றனர்.

வழுதியும் குழலியும் ஒருநாள் மாலையில் சோலைநலங் கண்டு மகிழ்கின்றனர்.

சேரமன்னன் மலைக்கோன் தன் அமைச்சன் அச்சுதன் தேவனிடம் பாண்டியமன்னன் ஆட்சிமுறை, நாட்டுவளம் கேட்டு, மனத்துக்குள் ஒரு முடிவு செய்கிறான். சுரும்பார் குழலி பற்றியும் அமைச்சன் சொல்லிவைக்கிறான்.

வலந்தரு பாண்டியன் பிறந்த நாளன்று, பன்னாட்டரசர் புடைசூழத் தன் பட்டத்தரசியுடன் அரியணையமர்ந்து, பாவலர் முதலியோர்க்குப் பரிசில் நல்கி மகிழ்கிறான். பாடற் போட்டியில் ‘மாலிருங்குன்றன்’ என்னும் புனைபெயரில் வெற்றி பெற்ற வழுதிக்கும், இரண்டாம் நிலைபெற்ற சுரும்பார் குழலிக்கும் பரிசில் வழங்கி உளங்களிக்கிறான். அவைக்களப்புலவர், இளமை யிலே அமைந்த இவன் பாடற்றிறத்தினைப் போற்றி, இளம்பெரு வழுதியென விருது வழங்குகிறார். சுரும்பார் குழலியின் புலமையும் எழிலும் மலைக்கோன் மனத்தில் இடம் பெறுகின்றன. அவ்வுணர் வுடன் நாடு திரும்புகிறான்.

நாடு திரும்பிய மலைக்கோன் பாண்டிநாட்டுடன் எல்லைப் போர் தொடுத்து, எல்லையில் படையமைக்கிறான். பாண்டியன் சினந்து, படையெடுக்கப் பணிக்கிறான். தலைமையேற்க வழுதி விழைகிறான். புரோகிதர் கணியன் நம்பி அதற்கு இசைகிறார். கடம்பன், தான் தலைமை ஏற்க விரும்புகிறான். இறுதியில் கடம்பனே படையெடுத்துச் செல்கிறான்.

பாண்டியன் படைமறவர்க்குப் பெருஞ்சோறளித்து, வீரவுரையாற்றிப் போருக்கு விடுக்கிறான். எல்லைப்போரில் ஈடுபட்ட மறவர்க்குப் பாசறையில் ஆறுதல் கூறுகிறான் மலைக்

கோன். கடம்பன், போரில் தோல்வியுற்ற செய்தியறிந்து வருந்திய பாண்டியன், அமைச்சரும் புலவரும் ஆறுதல் கூறத் தேறுகிறான். புலவர், கடம்பனை ஐயுறுகிறார். அமைச்சர் மறுக்கிறார். இறுதியில் வழுதி தலைமையில் படை புறப்படுகிறது.

கடம்பன் தங்கை சுரும்பார் குழலியும் அவனை ஐயுறுகிறாள். வஞ்சி நாட்டவர் பலமுறை வருவதும் கடம் பனுடன் தனித்து உரையாடுவதும் அவளுக்கு ஐயத்தை ஏற்படுத்தின. அவன் மறுத்துரைத்தும் அவள் நம்பவில்லை. இறுதியில் அவன் சென்று விடுகிறான்.

எல்லைப்போருக்குச் சென்ற வழுதி வெற்றிகொண்டு, வஞ்சிநாட்டுப் படைத்தலைவன் விறல்வேளைச் சிறை செய்து, பாண்டியன் முன் நிறுத்துகிறான். படையின் மறைகளைப் புரோகிதன் கணியன்நம்பிதான் காட்டிக்கொடுத்தான் என்பது விறல்வேள் வாயிலாக வெளிப்படுகிறது. கணியன் நாடு கடத்தப்படுகிறான். உண்மையறிந்த குழலி வருந்திப் பொறுத் தருள வேண்டுகிறான். குழலியை வழுதிக்கு மணம் முடிக்கக் கடம்பனிடம் பாண்டியன் ஒப்புதல் கேட்கிறான்.

இந்நிலையில் கடாரத்தரசன் சீயன், திறைகொடுக்க மறுத்துப் போருக்கு அணியமாகிறான் என்ற செய்தி பாண்டியனுக்கு எட்டுகிறது. சினந்தெழுந்த பாண்டியன், வழுதி கடம்பன் இருவரையும் கடாரத்தின்மீது படையெடுக்கப் பணிக்கிறான். சீயனொடு பொருதுவென்று மீளுங்காற் கடலிடைப் பெரும்புயலெழுந்து தாக்கக் கலங்கவிழ, இளம்பெருவழுதி கடலுள் மாய்ந்தான் என்ற செய்தி, பாண்டியனைக் கவலைக்கடலுள் வீழ்த்தியது: மாறன் மாதேவியை நலிய வைத்தது: குழலியின் உயிரைக் கவர்ந்தது. தங்கையின் பிரிவாற் கடம்பனும் நோயில் வீழ்ந்தான்.

கவலையில் ஆழ்ந்த பாண்டியனுக்கு நாகனார் நிலை யாமை கூறி ஆற்றுவித்துப் போரின் விளைவுகளை - கொடுமை களை விளக்கிப் போரொழிந்த புத்துலகு காண வழிகள் மொழிய, அவனும் இசைந்து, அதற்குரிய நெறிகளைப் புலவர்பாற் கேட்டறிந்து, போரையொழிக்க முயல்கிறான்.

# நாடகமாந்தர்

| | | |
|---|---|---|
| வலந்தரு பாண்டியன் | - | பாண்டிவேந்தன். |
| மாறன்மாதேவி | - | பாண்டியன் பட்டத்தரசி |
| வழுதி (இளம்பெருவழுதி) | - | பாண்டியன் மகன். |
| செம்புலச் சிறையார் | - | பாண்டிநாட்டமைச்சர். |
| வெண்டலை நாகனார் | - | பாண்டியன் அவைக்களப் புலவர். |
| வெல்போர்க்கடம்பன் | - | பாண்டிப்படைத்தலைவன். |
| கணியன் நம்பி | - | பாண்டியனின் புரோகிதர் |
| கோட்புலிமறவன் | - | போர்ப்பயிற்சி ஆசான். |
| சுரும்பார் குழலி | - | கடம்பன் தங்கை. |
| மலைக்கோன் | - | வஞ்சிநாட்டரசன். |
| அச்சுதன்தேவன் | - | வஞ்சிநாட்டமைச்சன். |
| விறல்வேள் | - | வஞ்சிநாட்டுப்படைத்தலைவன். |
| பெருந்திறற்சீயன் | - | கடாரத்தரசன். |
| நெல்லூர் வாணன் | - | கடாரத்தமைச்சன் |
| எழிலி | - | சீயன்மகள். |

**ஏவலர், காவலர், மற்றும் பலர்,**

# இளம்பெருவழுதி

## காட்சி –1

ஓவியஞ் சிற்பம் ஒருங்குட னமைந்த
காவியக் கோட்டையுட் கருத்துணர் வூட்ட
ஆவலில் முதியர் ஆர்வநல் லிளைஞனைக்
கூஉய் விளக்கங் கூறினர் அவற்கே.

..................

முதியவர் : பூமலர் பொய்கையுட் பூவையர் குழுமிக்
காமரு புனலிற் களிப்புடன் ஆடலும்
தையலர் முகமோ தாமரை மலரோ
ஐயுறும் வகையான் அமைந்ததுங் காண்நீ
விரும்பித் தேனுணச் சுரும்பினம் வருடித்
திரும்பித் திகைத்துச் சேறலும் நோக்குதி;

இளைஞன் : பழுதிலீர் நுந்தம் பகர்வா லன்றோ
எழுதிய ஓவியம் இதுவென வுணர்ந்தேன்.
ஓ ஓ! இவைதாம் உயிரோ வியமே!
காவா திருப்பிற் காண்பமோ இதன்றிறம்?

முதியவர் : இலைநிகர் எனுமா றேத்திப் புகழும்
கலைபல தேர்ந்த கைத்திறம் வல்லார்
முன்னையர் பன்னூற் றாண்டின் முன்னர்
அந்நல் லோவியம் எழுதினர் அறிகதில்;

இளைஞன் : நரைமு தாட்டி நகைமுகங் காட்ட
அரசன் முகத்தில் ஆர்வம் பொங்க
அவள்கை யகத்தொன் றளப்பாள் போலுள
சுவரின் ஓவியம் சொல்லுவ தென்ன?

முதியவர் : நிலவரை ஆட்சியிற் புலவரை யாட்சி
நிலைபெற விழைந்த நெடுமான் அஞ்சி
தன்வாழ் நாளினும் தமிழே பெரிதென
உன்னியோன் ஔவைக் குவந்தொரு நெல்லிக்
கனிதனை யளிக்குங் காட்சி யதுவாம்!
இனிய தரிய தெனினும் தானுணான்
நனிமுது புலமையள் வாழ நாடினன்!
உதுக்காண் மைந்த ஒப்பிலாச் சிற்பம்!
செதுக்கும் இவைதாஞ் சிற்பம் என்பது
தொட்டார்க் கன்றிப் பட்டாங் கறிதல்
கிட்டா தாகும்; . . . . . . . . . . . . . . . .

இளைஞன் : . . . . . . . . . . கிழமைப் பெரியீர்
படர்தரும் உயிரைப் படைக்கும் ஆற்றல்
உடலைப் படைத்தஅவ் வுளிக்கிலை போலும்;

முதியவர் : ஈங்கொரு சிலைகாண் எடுப்பும் மிடுக்கும்
வீங்கிய தோளும் விளங்குமோர் வீரன்;

இளைஞன் : மன்னனோ? . . . . . . . . . . . . . . .

முதியவர் : . . . ஆமாம் மணிமுடி யரசன்
மனையா ளன்றி மற்றவள் தோளிற்
குழையா தாகும் கொற்றவன் தாரே;

இளைஞன் : தயரதன் மைந்தனோ? . . . . . .

முதியவர் : . . . . . . . . . தடுமா றுளத்தினை:
அயலவர் தம்மை அறிந்தாங் குன்னினம்
பெருமை தெரிந்து பேணுதல் விடுத்தனை;
நெறிபிறழ் வுற்றது நின்பிழை யன்று;
தென்னவர் திறமெலாம் தெரிவுறா வண்ணம்

ஒன்னலர் மறைத்தனர்; உறங்கினர் தமிழர்.
மூவருள் ஒருவன்நின் முன்னோன் இவன்றான்
காவிரி நாட்டுக் கோநலங் கிள்ளி;

இளைஞன் : புனையா ஓவியப் பொற்புடைச் செல்வி
அனையாள் யாவள்? அரசி போல்வாள்
துறவி போலத் தோற்றமேன் கொண்டனள்?

முதியவர் : பெறலருஞ் செல்வப் பேற்றினள்; இவள்தான்
குறைவறு கற்பின் கோமகள்; தமிழ்மகள்
அறநெறி பிறழா நிறைமனச் செல்வி!

இளைஞன் : பாண்டவர் ஐவர்தம் பத்தினி யோஇவள்?
(முதியவர் தம்முள் நகைக்க)
ஈண்டென் வினாவிற் கேன்நகை செய்தீர்?

முதியவர் : நன்கு வினவினை; நகையெழா தென்செயும்?
தென்புலக் கற்பின் திறமொருங் குணர்த்த
வடபுலப் பெண்ணோ வாய்த்தனள்? எனநின்
மடமையை யெண்ணி மனத்துள் நகைத்தேன்;
கோதறி யாமகள் மாதவி இவள்பேர்!

இளைஞன் : மாதவி யாவிலை மகளவி ளன்றோ?

முதியவர் : கலைமகள் பிறப்பால் விலைமகள் எனினும்
விலையிலாக் கற்பின் குலமகள்; கொழுநன்
கோவலன் இறந்ததால் கோதை யவளோ
யாவுந் துறந்தனள்; அரும்பெறல் மகட்குந்
துறவு தந்துபார் தொழும்நிலை தந்தனள்;
அறநெறி வழுவா அன்னை யிவளும்
ஐவர் இருந்தும் ஆறாம் ஒருவனை
விழைந்த அவளும் வேறுவே றியல்பினர்;

இளைஞன் ; பற்பல உண்மைகள் பயனுள பெற்றேன்
கற்பன கற்பேன் காப்பன காப்பேன்;

முதியவர் : ஈங்கிவள் புலமையால் ஏற்றம் பெற்றவள்
ஓங்கிய வேந்தரும் உயர்த்தும் அரிவை
கற்றவர் மெச்சுங் காக்கை பாடினி
நச்செள்ளை எனப்பெயர் நவிலப் பெறுவள்

இளைஞன் : கற்றுத் தேறிய நற்புலங் கொண்டோர்
பொற்றொடி மகளிர் அற்றைநாள் உண்டுகொல்?

முதியவர் : அறத்துறு கல்வியில் ஆன்றவ ரன்றி
மறக்குடி மகளிரும் வாழ்ந்தனர் அந்நாள்;
பின்கொடா ஒருவனை *வெந்கொடுத் தானென
நன்கனம் அறியார் நவின்றன ராக,
'மண்டமர்க் குடைந்தான் மகனவன் ஆகின்
உண்ட' முலையறுத் தொழுகுவென் எனச்சினைஇ
அடுகளந் துழவுவோள் படுமகன் மார்பில்
விடுகணை துளைப்ப வீழ்ந்து சிதைந்து
கிடந்தது கண்டு கிளர்ந்தெழும் உணர்வால்
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தாடிய
நான்ற தசையினள் நரைமூ தாட்டி
சிலையிது காணுதி . . . . . . . . .
. . . . . . . . . . சிந்தனைப் பெரியீர்

இளைஞன் : மறக்குடிப் பிறந்த மகளிர்கொள் மானமும்
பிறக்கும் நாட்டிற் பேணிய மற்றும்
செவிப்புலம் புக்குச் சிந்தையுள் நின்றன;
தனிக்குமென் னாட்டின் தனிப்புக ழோங்க
நரம்பெலாம் உணர்ச்சி உரங்கொண்டேறின;

முதியவர் : நரம்புகள் உலறி நரைமுதிர் திரையுடல்
உடையே னாகினும் உணர்ச்சியுள் ளெழலாற்
படையேன் போலப் பாய்புலி நெஞ்சம்
பெற்றேன் எனில்நீ கட்டிளங் காளை
உற்ற வுணர்வினை உரைக்கவும் ஒல்லுமோ?
பெற்றஇவ் வுணர்வாற் பேணுக தாயகம்;

*வெந் - முதுகு

இளைஞன் : தாயகங் காப்பேன் தளரேன் உறுதி
ஏயுமென் னுயிரும் ஈகம் புரிவேன்;
செருக்களஞ் செல்லும் உருக்கொளும் இவர்யார்?
அருச்சுனன் மைந்தன் அபிமன் இவரோ?

முதியவர் : இல்லை அபிமன் இலனவன்; இளையோய்
நல்லைநீ; நினது நாட்டிற் குரியவர்
அறிவிலை நின்னின் அயலவர் தம்மைத்
தெரிந்துளை நன்குன் திருநா டிதனுள்
அவன்சிலை காணல் அறியாப் பேதைமை;

இளைஞன் : எவரெவர் சிலையோ ஈங்குள அவைதாம்
பேதைமைச் செயலோ? .... ....

முதியவர் : ... ..... பேதைமை யொன்றோ?
தீதும் நன்றுந் தெரியா தொழுகும்
அடிமை என்பதன் அறிகுறி யாகும்;
அடிபட அடிபட அரத்தம் சிந்திக்
கொடிவிடா துயிர்விடுங் கொள்கை மறவர்,
அடிமையும் மிடிமையும் அயலவர் ஆட்சியும்
பொடிபட உரிமை பூண்கலஞ் செலுத்திச்
செக்குடன் உழன்று சிறையுள் வாழ்ந்தோர்

இத்தகு செயலோர் எத்தனை மாந்தர்;
அனைத்தும் மறந்தோம் அயலோர்த் தொழுதோம்;

இளைஞன் : நன்றி பெரியீர் நாட்டுணர் வூட்டி
இன்று தமிழனென் றென்னை யுணர்த்தினீர்
அந்தநன் மறவன் யாரென விளம்புக;

முதியவர் : கன்னற் சாறெனக் கவிதை படைப்பவன்
கருதலர்க் காணிற் கடும்பகை உடைப்பவன்
தனித்துணான் வெறுப்புறான் தகாப்பழிக் கஞ்சுவான்
புகழ்வரும் எனிலோ போக்குவன் உயிரும்
இளைஞன் பெருமையன் இளம்பெரு வழுதி
கடலுள் மாய்ந்தான் காளை யிவனே;

இளைஞன் : இரக்கம் ஒன்றிலா தினக்கொலை செய்து
புரக்கும் கொடும்கோற் புன்சிங் களவன்
கொடுமை தாளாது குடிபெயர்ந் தோடும்
இலங்கைத் தமிழர் ஈன்றதம் சிறாரைக்
கலங்குங் கடலிடைக் கலத்தின் விடுக்க
அலைகவிழ் கலத்தால் அச்சிறார் மாய்ந்தெனக்
கொடுங்கோல் மன்னன் கொடுமைதாளாது
நடுங்கல் எய்திக் கடலின் நாப்பண்
மாய்ந்தனன் சொல்லோ? . . . . . .

முதியவர் : . . . . . . . . மாறாச் செங்கோல்
வேந்தன் மைந்தன் வெவ்விடர்ப் படுமோ?

இளைஞன் : காதற் றோல்வி கண்டனன் போலும்;

முதியர் : சாதற் கதுவும் காரணம் அல்ல;

இளைஞன் : வெஞ்சமர்க் களத்து வெந்நிட் டதனால்
துஞ்சாக் கடலுள் துஞ்சினள் கொல்லோ?

முதியவர் : அஞ்சாத் தறுகணன் அவனோ வெந்நிடும்?

இளைஞன் : தறுகணன் எதனால் தற்கொலை விழைந்தனன்?

முதியவர் : தற்கொலை எனநீ தவறாக் கருதினை;

இளைஞன் : கடலுள் மாய்ந்த காரணந் தான்என்?

முதியவர் : கத்து கடற்கண் காளை மாய்ந்த
அத்துயர் நினையின் அடிமனம் நடுக்குறூஉம்
மாயா திருப்பின் மற்றவன் நமக்கு
வீயாக் கவிபல ஈகுவன் மன்னோ;
நண்ணார்த் தேய்த்து நடுக்கடல் மீள்வோன்
என்னா நிலைமை எய்தினன்; பாழ்கடல்
வழுதி முதலாத் தொழுதகு செல்வம்
விழுங்கித் தொலைத்து விழுமம் தந்ததே;

இளைஞன் : கண்கள் கலங்கினீர் கற்றுள நீரே
புண்படின் என்மனம் பொறைகொளல் யாங்ஙனம்?
பருவரல் தவிர்க பைந்தமிழ் வீரன்
பெருவர லாறு பேசுக பெரியீர்

முதியவர் : நலம்பெற ஆண்ட வலந்தரு பாண்டியன்
குலமனை அரியணைக் கோமகள் எழில்மகள்
மாறன்மா தேவி மணிவயி றீன்ற
தேறிய கலைஞன் தென்மொழிப் பாவலன்
தொழுதகு நடையினன் துணிவுடை மறவன்
வழுதிப் பெயரோடு வளர்ந்தவன் அவன்றன்
அளக்கரின் மாய்ந்த அளப்பருந் துயரை
விளக்குவன் கேண்மோ விறலோன் கதையே.

# காட்சி 2

தண்டமி ழாசான் வெண்டலை நாகன்
பண்டைநல் லமுது படைத்தன ராகப்
பொங்குதேன் குழலி பொற்புடை வழுதி
செங்கதிர் எழுங்காற் செவிவா யாகப்
பருகிக் களித்தனர் பைந்தமி ழமுது
பெருமிதப் புலவர் திருமனை யமர்ந்தே

o o o o

வழுதி : அறந்தரு கல்வி வயங்கெழு போர்மறம்
சிறந்த தெதுவெனச் செப்புதிர் பெரியீர்

நாகனார் : இருவிழி யவற்றுள் எவ்விழி சிறந்தது?
பெருமை சிறுமை பேசுதல் யாங்ஙனம்?
இலக்கியம் இலக்கணம் எனுமிவ் விரண்டு
கலைக்குட் சிறந்தது காணல் முறையோ?
ஆண்மை பெண்மை ஆயிரு தன்மையுள்
மேன்மையென் றொன்றை விளம்பல் தகுமோ?
செறிதரும் அறிவு செங்கள வலிமை
விரிநீர் வைப்பிற் கிரண்டும் வேண்டும்;
மறுவறு கல்வி மனநலங் காக்கும்;
நிறைவுறு மறமோ நீள்விலங் காக்கும்;

(நகைத்துக் கொண்டே)

வழுதி : பேசிய கல்வி பெண்களுக் குரித்தோ?

குழலி : (வழுதியைக் குறும்பாகப் பார்த்து)
குறுமனங் கொண்டோர் கோதையர் உயர்வை
வெருவின ராகி விழைதல் செய்யார்;

வழுதி : வெருவுவா ரீங்கிலர் விழைவா ரீண்டுளர்;

நாகனார் : (இருவரையும் அமைதிப்படுத்தக் கையமர்த்தி)
தண்ணிய தென்றற்குப் பெண்டிர் விலக்கோ?
மண்ணும் ஒளியும் மழையும் பொதுமை
எண்ணும் எழுத்தும் இருபாற் பொதுமை;
கண்க ளிரண்டுள் காண்டற் குரித்தென
ஒன்றுவிட் டொன்றை உரைப்பா ருளரோ?
செவிக விரண்டுள் கேட்டற் குரிய
செவியீ தென்று செப்புநர் உண்டோ?
எவருங் கல்விக் குரிய ராவர்;
இவர்தாம் அவர்தாங் கற்றற் குரியரென்
றெவர்தாம் வரையறை இயற்றற் குரியர்?

குழலி : எளிதில் வாரா இலக்கணப் பயிற்சி
எளியம் எமக்கேன்? .... ....

நாகனார் : .... .... என்மொழி புகன்றனை?
பொருள்கள் காணக் கருவிழி சாலும்
இருபால் இமைகள் இருப்ப தெதற்கு?
பெருகிய வையைக் கிருபால் மேவும்
கரைகள் எதற்கு? காத்தற் கன்றோ?
வழுவொரீஇ, மொழியை வழாநிலை யாக்கி
எழிலுறக் காப்ப திலக்கண மாகும்;
முயலா திருப்பின் எளிதில் வருமோ?
முயலின் வாரா உறுதிகள் உளவோ?
அதுதான்
அரிதென் றசைஇ யிருப்பார்க் காணின்
மொழியெனும் நல்லாள் மூடரை நகுவள்;

வழுதி : தக்காங் குரைத்தீர் தாய்மொழி காக்கத்
தக்க நெறியும் தந்தருள் புரிக;

நாகனார் : புகுவ தடுத்தல் புதுவ படைத்தல்
தகுமிரு வகைத்தே தாய்மொழி காத்தல்;

குழலி : புகுவ தடுத்தலென் றொன்று புகன்றீர்
அஃதும் தெள்ளிதின் அறிய அவாவினம்;

நாகனார் : அயன்மொழிக் காட்பட் டம்மொழிச் சொற்கள்
நயந்து கலந்து நடையிற் புகவிடல்,
பிறமொழி விழைந்து பெறுமொழி மறந்து
வருமொழிக் காளுமை தருதல் எனுமிவை
புகாஅது காத்தல் புகுவ தடுத்தலாம்;

குழலி : தகாஅ அடிமைத் தனத்தர் செயலைச்
செகாஅது விடேஎம் செந்தமிழ் காப்போம்;

நாகனார் : தாய்க்குலம் விழித்தெழின் தாயகஞ் செழிக்கும்
தாய்மொழி ஆல்போல் தழைக்கும் கொழிக்கும்
உயர்மொழி தனிமொழி செம்மொழி நம்மொழி
அம்மொழி வளர்க்க அரிவையர் முந்துறின்
எம்மிற் சிறந்தோர் எவருளர் அம்ம;

குழலி : வருமொழிக் காளுமை தருதல் தகாதென்
றொருமொழி புகன்றீர் திருமகன் வழுதி
புகூஉம் யவனர் தரூஉம் இசையில்
மிகூஉம் ஆர்வம் மீதூர்ந் துளரால்;

வழுதி : பிறர்குறை தூற்றும் பெற்றியர் பெண்டிர்,
குறையெனக் கூறுங் குறியினள் இவளே;

குழலி : புகல்வாய் மொழிதான் புனைவுரை யாமெனிற்
புகல்வாய் ஆணை புலவர் திருமுன்;

நாகனார் : (வழுதியை நோக்கி நகைத்து)
அரவம் உறைகால் அரவே அறியும்
கரவு தவிர்த்துக் கழறுதி வாய்மை;

வழுதி : எளிய மெல்லொலி இன்னிசை நயத்தே
அளிய என்னுளம் அவாவிற் றைய;

நாகனார் : இனிய போலவும் எளிய போலவும்
அணுகு பவைதாம் அடிமை கொள்ளும்
நண்ணுவ எவையும் நமதாக் கோடல்
உள்ளவை மறத்தற் கொருவழி போலும்;

குழலி : வந்து புகூஉம் வம்பலர் இசையில்
உந்தவாக் கோடல் ஒருகுறை கொல்லோ?

நாகனார் : வேற்றவர் இசையை விழைவது தவறிலை
ஊற்றமும் ஏற்றமும் உவந்ததற் கீந்து
மனத்தை யிழந்து மயக்குறிற் பெரும்பிழை;
இனத்தை மொழியை எளிதில் மறந்து
வருவிருந் தோம்பும் வாழ்வினர் தமிழர்;
பின்னை வருவன பேணுங் காலைத்
தன்னை யிழவாத் தகைமை வேண்டும்;
புகூஉம் ஒன்றதுள் இரண்டறக் கலத்தல்
நகூஉம் நிலையொடு நலிவும் நல்கும்;

வழுதி : (வாடிய முகத்துடன்)
உரிய மறத்தல் வருவ புரத்தல்
இரிய மனத்துள் உறுதி கொள்ளுவென்;

நாகனார் : நன்று நன்று; நாளை ஆள்பவர்
நன்றுந் தீதும் நவையறத் தெளிதல்
உரிமை காத்தற் குறுதுணை யன்றோ?

எப்பொருள் கேட்பினும் எவர்வாய்க் கேட்பினும்
அப்பொருட் டன்மை எத்தக வாயினும்
எண்ணித் துணிக இளையோய்; அஃதே
பண்ணத் தகுநற் பகுத்தறி வென்ப;
(வழுதி தலையசைத்து ஓம்புதல் காட்ட)

குழலி : மொழிநலங் காக்கும் முந்தையர் இலக்கண
எழிலும் இயல்பும் இயம்புதிர் இனிதே;

நாகனார் : ஏதம் படாஅ தியங்கும் வாழ்வைக்
காதல், மறமெனக் கண்டிரு பாலர்
ஓதி யவற்றின் ஒண்பொரு லிலக்கணம்
அகமெனப் புறமென ஆன்றோர் வகுத்தனர்;
அணுகி வாழ்க்கை அமைப்பின் கூறு
நுணுகி ஆய்ந்து நுவன்றனர் மேலோர்;
நிலத்தியல் வளர்ந்த புலத்துறை யாளர்
இலக்கண நெறியான் உணர்த்தினர் நமக்கு;

வழுதி : நிலத்திய லனைத்தும் இலக்கண நெறியாற்
சொலப்படும் முறைகள் விளக்குக பெரும;

நாகனார் : மலைபடர் குறிஞ்சி, மலர்தரு முல்லை,
கலைவளர் மருதம், கடலின் நெய்தல்
எனநால் வகையா இயம்பி நானிலம்
எனஇவ் வுலகிற் கிட்டனர் பெயரும்!
முல்லை குறிஞ்சி முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்த புல்லிய பாலையும்
இணைத்தந் நிலத்தை ஐவகை யாக்கித்
திணையும் ஐந்தெனத் தெளிவுறக் காட்டினர்!

குழலி : பிரிவுரை பாலை பருவரல் நெய்தல்
மருவும் அகத்திணை வகையென வகுத்தோர்
உடனுயிர் துறக்கும் உயர்மூ தானந்தம்
படரெரிப் பாயும் பாலை நிலையிவை
முற்றிய அன்பின் முதிர்ச்சியே எனினும்
மற்றவை அகத்திணை வகையெனச் சொலாது
புறத்திணைப் படுத்துப் புகன்ற தென்னை?

நாகனார் : இன்ப நுகர்ச்சி அன்பின் வளர்ச்சி
தன்பாற் கொண்டது நன்பால் அகத்திணை;
மூதா னந்தம் முதலா வருபவை
நிலையாத் தன்மை நிகழ்த்துவ ஆகலின்
புறத்திணைப் படுத்துப் புகன்றனர் மேலோர்;

வழுதி : ஒருமை ஒற்றுமை ஆயிரு சொல்லின்
பொருண்மை யொன்றோ . . . .   . . . .

நாகனார் : . . .   . . . . புகலும் கேண்மின்
ஒன்றுடன் மற்றொன் றிணைவ தொற்றுமை;
ஒன்றினுள் ஒன்று பொன்றுவ தொருமை;
இணைந்தும் தனித்தும் இயங்குவ தொற்றுமை;
அணைத்தபின் ஒன்றா யமைவ தொருமை;
அடுக்குத் தொடர்போல் அமைவ தொற்றுமை;
இரட்டைக் கிளவியென் றிருத்தல் ஒருமை;

வழுதி : இரண்டும் ஒன்றென் றிருந்தோம் தெளிவுறத்
திருந்தும் பொருண்மை தேர்ந்தெமக் களித்தீர்;

நாகனார் : விந்தை மீதூர் வியன்பெறு செல்வம்
முந்தையர் நமக்குத் தந்தவை பலப்பல;
கூம்பாச் செல்வம் ஓம்பா நிலையிற்
சோம்பித் திரியிற் றொகுத்தவை பாழாம்;
போதும் அவையெனப் பொந்திகை பெறுதல்
தீதாம்; ஆதலின் தெள்ளிய புலத்திற்
கூரறி வுக்கலங் கொண்டுழு வோர்தாம்
ஊரினர் உணக்கரு வூலம் நிரப்பிப்
புரத்தல் வேண்டும் புதுவன விளைத்து;

குழலி : முந்தையர் முனைந்து தந்தவை யனைத்தும்
உந்தும் உணர்வின் ஓம்புதும் ஓம்புதும்;

வழுதி : ஈட்டுதுஞ் செல்வம் கூட்டுதும் மிகவே
நாட்டிற் பெரும்புகழ் நாட்டுதும் யாமே.

## காட்சி 3

நிறைமணற் பரப்பில் நெடும்புகழ்க் கோட்புலி
மறவன் பயிற்று வகைவகைப் போர்முறை
நறைபொழி சோலை *நாப்பண் வழுதி
மருளறப் பயின்றனன் மாலைப் பொழுதே.

**0 0 0 0**

கோட்புலி : வலத்தோர் நாண்தொட வளைவிற் பகழி
இலக்கிற் பிழையா தெய்யுந் திறனும்,
நண்ணார் *அகலத்து நாப்பண் தைக்கும்
வெண்மான் எஃகில் வேலெறி முறையும்,
வட்கார் நெருங்கா வாய்வாள் சுழற்றி
உட்குவர எறிந்தமர் உடற்றுங் கலையும்,
தொடுக்குங் களத்துத் தொடுபடை யனைத்தும்
தடுத்துக் கெடுத்துக் கடக்குங் கூறும்,
எளிதிற் கைவர இன்றுநீ பயின்றனை
உளபிற நாளை உணர்த்துவென் மைந்த;

வழுதி : எழுகடல் வரைப்பில் இணையில் வலியைநின்
பழுநிய திறனும் பயிற்றிய முறையும்
எளியேன் தெளிவுற ஏற்றுளேன் கொல்லோ?

கோட்புலி : இளையாய் போர்த்திறன் இயல்பா னமைந்தும்
அணியாய் போல அடங்கினை யன்ப
முற்றுக நின்புகழ் முந்நீ ருலகில்;

வழுதி : பொருளகத் தெவ்வெப் போர்முறை நிகழ்த்துவர்?

கோட்புலி : யானைப் போரொடு பரிப்போர் தேர்ப்போர்
மற்போர் முதலா விழவுமேம் பட்ட
நற்போர் பலவும் நடாத்தினர் அந்நாள்;
முன்னைப் பொராஅது முதன்முதற் பொருவது
கன்னிப் போரெனக் கழறப் படூஉம்;

வழுதி : நாற்போர் நிகழ்ச்சியுங் கேட்கும் வேட்கை
மேற்பட லாலவை விளம்புக ஐய;

### தேர்ப்படை

கோட்புலி : ***மண்ணாடர் வியந்தாட வலிவோடு சமராட***
***மறவீரர் மோது களமே***
***தென்னாடர் துணிவொடு தினவோடு முணர்வோடு***
***திறல்வேல்கள் வீசு களமே***
***பண்ணோடு மணிபாடப் படர்வானிற் கொடியாடப்***
***பரியோடு வந்து பொருதேர்***
***நண்ணாரின் உயிராட நடைவீரர் உடலாட***
***நடுவாகச் சென்று வருமே***

### யானைப்படை

***நெட்டுமதில் முற்றுகையில் நின்றபகை***
***கண்டவர்கள் நெஞ்ச மழிவார்***
***கட்டுமர மிட்டகத வைக்கடிதின்***
***மூடியொரு காத மகல்வார்***
***கொட்டுமத முற்றகளி றக்கதவை***
***மோதஅது கூறு படுமே***
***பட்டுநுனி கட்டுதொடி விட்டுவில***
***கிச்சிதறிக் கெட்டு விழுமே***

### குதிரைப் படை

***முறுகுசி னத்துடன் அடிகள்பெ யர்த்தொரு***
***முனைமுகம் முற்றிலுமே***
***முறுகுப ரிக்குலம் பகைமரு மத்திடை***
***வலியமி தித்திடவே***

*மறலியெ னத்தகும் மறவரு குத்திடும்*
*நிறைகுரு திப்புனலால்*
*உறைகுரு திக்கறை படிய மதர்த்தெழும்*
*ஒலியெழு போர்க்களமே.*

### காலாட்படை

வீறு படைத்தவர் வீரர் படைக்குலம் வெல்போரில்
கூறு படுத்தலின் வீழும் உடற்பிணங் கூத்தாடும்
மாறு கெடுத்தனம் மானம் மிகுத்தனம் என்றேதாம்
சாறு குடித்தலிற் சால மதர்த்துடல் தள்ளாடும்

மாரி போல வாளி பாய
மார்பில் ஏந்தும் வீரர்கள்
சோரி பாறு வேல்கள் பாயச்
சூழ நிற்குஞ் சூரர்கள்
கூரி தாய கோடு கொண்டு
குத்த யானை கூடினும்
போரில் மாயும் மான மொன்றே
பூண்டு நிற்பர் போகிலார்.

வீரர் நெஞ்சில் வேல்கள் பாய
மேவும் புண்ணின் வேதனை
வீர மாதர் செய்ய யாழில்
சேர்ந்து காஞ்சி பாடுவார்
ஊரில் எங்குந் தூமம் நாற
ஊதும் ஆம்பல் ஊதுவார்
நேரும் புண்ணில் மெல்ல மெல்ல
நெய்கள் பூசி ஆற்றுவார்

அலைதாவிடுங் கடல்மீதினில்
அணியாய்மரக் கலமே
அடலேறெனும் படைவீரராம்
அணியோடுடன் செலுமே

கொலைமேவிய பகையாளிகள்
குழுவாயவண் வருவார்
குலமோடிடப் புறமாகிடக்
குலையாதிவர் பொருவார்
வலியாலொரு சமமானவர்
வரினேசமர் புரிவார்
வருவோர்வலி குறைவாரெனில்
வயவாளினை எறியார்
மலைபோலெதிர் வருவாரொடு
மருளார்சிலை தொடுவார்
மரபோபிற இடமோஅதில்
மறையார்களை விடுவார்.

வழுதி : வெய்ய மறக்குலம் விளைத்த போர்நெறி
மெய்சிலிர்ப் பெய்தும் வியப்பிற் றாயினும்
வையம் நடுக்குற வழிசெயும் அவ்வெறி
அறத்தின் இரீஇய மறச்செய லன்றோ?
வெறுக்கும் உயிர்க்கொலை விழைதல் முறையோ?

கோட்புலி : தன்மகற் புரப்பாள் அன்னை;
தந்தையோ சான்றோன் ஆக்கும்;
மன்னவன் நடைகள் நல்கும்;
மறப்படை கொடுக்குங் கொல்லன்;
பின்னவன் கடமை யென்ன?
பெருஞ்சமர் முருக்கிக் காளை
தன்னுயர் நாடு காத்தல்
தலையறம் ஆகுங் கண்டாய்

வில்லெனும் ஏர்கள் பூட்டி
உழுபவர் வெங்க ளத்து
வல்லுடற் குருதி பாய்ச்சி
வளவிய வெற்றி யென்றும்
நல்விளை வடைவான் வேண்டி
நண்ணிய களைகள் கட்டல்
சொல்லமர் அறமே கண்டாய்
தொடுகழல் மறவர்க் கைய

போர்த்தொழில் புரிந்து நாடு
    பொலிவுற உயிர்கள் ஈவோர்
நாற்படை மறவ ரென்ன
    நானிலம் நவிலப் பெற்றோர்
வேற்படை துளைத்துக் கொல்லும்
    வெறித்தனம் படைத்தா ரேனும்
ஆர்த்தவர் தொடுக்கும் போர்கள்
    அறநெறி தொட்டே செல்லும்

இவ்வணம் மறவர் கூட்டம்
    இன்னுயிர் ஈந்தும் பெற்றும்
தெவ்வரை முருக்கித் தம்மைச்
    சிதைப்பதிற் களித்து வாழும்
செவ்விய நிலத்தி லன்றோ
    சீர்வளம் விளைந்து தோன்றும்
இவ்வியல் அறியா யாகின்
    எவ்வணம் நாடு காப்பாய்?

துஞ்சுதல் தவிர்க நாடு
    சுமக்கவன் றோள்கள் வேண்டும்;
அஞ்சுதல் விடுக நாளை
    அமரெனில் ஆர்த்தல் வேண்டும்;
பஞ்செனெ யெண்ணி நின்மேற்
    பகைவரின் பரிவா கொள்வை?
எஞ்சுத லின்றிப் போரில்
    இயல்புகள் யாவுங் கற்பாய்

வழுதி : அஞ்சுதல் அணுவு மில்லேன்
    ஐயநீர் அமைதல் வேண்டும்;
வெஞ்சமர்க் கழிதல் வேம்பு
    மிலைந்தவர் விழைந்த தில்லை;
துஞ்சுவோர்க் கிரங்க லன்றிக்
    துஞ்சுதல் துளியு மில்லேன்
எஞ்சிய அனைத்துங் கற்பேன்
    இனியவை இசைக்க நன்றே.

கோட்புலி : கடாஅம்பொழி கரியும் கடும்விசைப் பரியும்
கடாவல் தெள்ளிதிற் கைவரப் பெற்றனை;
அணிவகுத் தமைத்தல், ஆங்கட் பகையின்
அணியுடைத் துட்புகல், அவ்வுழைப் புகுந்து
பிணியுற வின்றித் துணிவொடு பெயர்தல்
நீள அனைத்தும் நெறியிற் றெரிந்தவை;
போரூர் முனையிற் றேரூர் திறனும்
பாரோர் போற்றப் பயின்றனை யாகின்
அளப்போ ரறியாக் களப்போர் நாப்பண்
வளைப்போர் நடுக்குற வயப்போ ராற்றும்
தகவு பெறுவை தலைமையும் அடைவை
இகலோர் படைகொடு எதிர்வர அஞ்சுவர்;

வழுதி : தண்டமி ழாசான் வெண்டலை நாகனார்
கொண்டருள் பயிற்றக் கோடா அறமும்
கண்டோ ருட்கக் களிற்றின் தோற்றங்
கொண்டோய் நின்னாற் குறையா மறமும்
தவலறப் பெற்றனென் தனிப்பெரும் பேறே;
அவரான் மனமும் நின்னாற் றோளும்
தெளிவொடு வலிவும் திண்மையும் பெற்றன;

கோட்புலி : அணியோய் அடக்கம் அமரருள் உய்க்கும்
நில்லா வுலகில் நிலைக்கும் நின்புகழ்
மல்லார் திண்டோள் மறக்குல வழுதி
மருளும் மாலை இருளொடு புக்கது
வருதி நாளை வளமனை சென்றே.

## காட்சி 4

வஞ்சி நாடனும் காழக மன்னனும்
வெஞ்சமர் புரிய விழைவது தெரிந்து
பாண்டிய மன்னன் பகர அவையில்
ஈண்டிய புலவர் இனியநல் லமைச்சர்
அருமறக் கணியர் பொருசமர்க் கடம்பன்
பொருள்நிறை மொழிகள் புகன்றனர் ஆங்கே

o . o . o .

நாகனார் : வாழிய வேந்தே வாழிய தாயகம்

பாண்டியன் : வாழிய தாயகம் எனும்நும் வாய்மொழி
ஏழிசை யாழின் இனித்தது புலவீர்
தாயகம் தாங்குநர் தாமுறு பருவரல்
தோயுநர்க் கன்றித் தோற்றா வாகும்;

நாகனார் : நினக்கொரு படரோ? நினைத்தலும் முறையோ?
மனக்கவல் தவிர்க . . . . . . . .

பாண்டியன் : . . . . . . . . மாசறு மனத்தீர்
வான்முகில் பொய்ப்பின் வளமிகக் குன்றும்
மீன்கொடி வாழ்நர் மெலிவரென் றச்சம்;

நாகனார் : நெறியிற் கோடா முறைநீ புரிதலின்
கருமுகில் என்றுங் கரப்பது காணேம்
நிழல்தருங் குடையோய் நின்நிழல் வாழ்நர்
வளமும் நலமும் வாடுத லறியார்;
உளமிக நோதல் ஒழிமதி பெரும;

பாண்டியன் : (கணியரை நோக்கி)
நலமுறை கணியீர் நாவசைத் திலீர்நும்
உளமெது கருதினும் உடன்வாய் மலர்க

கணியன் : பாண்டிய நாட்டில் வேண்டிய பெறுதலின்
ஈண்டொரு குறையிலை எனினும் . . . .

பாண்டியன் : . . . . . . . . . எனினும்
கருதிய துரையின் கணியர் நும்மொழி
விரைவில் நிறைவுறும் விளம்புக விளம்புக;

கணியன் : கலங்கேல் மன்னவ காவலன் நலமும்
நலங்கெழு கோவில் நலமுங் கருதினென்;

பாண்டியன் : ஓதுமின் ஓதுமின் வேதியர் பெரும
யாதுநும் முளமென அறியும் விழைவினம்;

கணியன் : முக்கட் செல்வன் முதுபெருங் கோவிலும்
தெற்கின் மேய செவ்வேள் குன்றும்
வடபால் மேய மாலிருஞ் சோலையும்
வடமொழி யோதி வழிபடின் நன்றாம்
இடமகல் நம்நா டேற்றமும் எய்துமால்;

நாகனார் : தென்மொழி யிசைப்பின் தீங்கு வருங்கொல்?

கணியன் : நன்மொழி புகன்றீர்; நானது கருதேன்
தேவ மொழியெனச் செப்பும் இதனைத்
தேவர் உவப்பர் . . . . . . .

நாகணார் : . . . . . . . . திருமறை வல்லீர்
ஒருமொழி தேவன் உவப்ப னாமெனில்
அறிவிற் சிறந்தோர் அச்சொல் ஏலார்;
பிறமொழி வெறுப்பன் இறைவன் என்ப
தறமும் அன்றே; அறிவும் அன்றே
சீனர் யவனர் சிங்களர் சாவகர்
சோனகர் முதலோர் கோநகர் ஈண்டு
வாணிகப் பொருட்டா வைகினர் ஈண்டி;

பேணி அவர்தொழூஉம் பெரும்பெயர்க் கடவுளர்
திருச்செவி மாந்தித் திளைப்ப தெம்மொழி?
திருத்தகும் அம்மொழி தேவ மொழியோ?
எந்நாட் டுறையும் இறைவர் அவரவர்
அந்நாட் டம்மொழி அகமுற உவப்பர்
தென்னா டுடையன் தென்மொழி வெறுப்பனோ?

கணியன் : மன்னன் வாழ்வில் மறுமைப் பயனும்
மன்னுதல் வேண்டி வடமொழி யதனை
ஓதுக என்றனென் உறுபிழை யுளதோ?
நோதகு மொழிகள் நுவலேல் புலவ;

நாகனார் : மறைபுகழ் மொழிகள் மறுவற வுணர்ந்த
நிறைமதி யுடையீர் நெடுமொழி கருதிலேன்;
செந்தமிழ் வளர்க்கும் சீர்சால் வேந்தன்
முந்தையர் சங்கம் மொய்ம்புறக் கண்டு
தாய்மொழி ஆய்ந்தனர் தமிழ்மொழி ஓதினர்
தீய நிரயத்துச் சென்றோ வீழ்ந்தனர்?
இம்மைச் செய்தன மறுமைக் காமென
இம்மைக் குரியன இழப்பது நன்றோ?
இருப்பது மறுத்தலும் வருவது புகுத்தலும்
வெறுப்புறு செயலாம்; விழைவதும் நன்றோ?

கணியன் : மடமைகள் அகற்றும் மாபெரும் புலவீர்
கடவுள் மறுப்பினை யாங்ஙனம் கற்றீர்?

நாகனார் : (நகைத்துக் கொண்டே)
நேர்மை, வாய்மை, நிறைகோ லன்ன
சீர்மை, உரிமை, செந்தமிழ்த் தூய்மை,
இவ்வெலாம் கடவுள் மறுப்பென நுங்கள்
செவ்விய மறைகள் செப்பின கொல்லோ?
தகாப்பழி கூறித் தாய்மொழிப் பற்றை
நகாஅ தொழிமின் நான்மறைப் பெரியீர்!
இடுதே ளிட்டென எம்மேற் பழியிடல்
வடுவாம் நுமக்கு; வாய்மை மொழிமின்;

பாண்டியன் : அமைமின் அமைமின் ஆன்றோர் தம்முள்
உமிநுனி யேனும் உறுபகை வேண்டா

நாகனார் : பகையிலை வேந்தே பைந்தமிழ்க் கீங்கோர்
இகல்வரு மாகில் எம்முளஞ் சிவக்கும்;

கணியன் : எமக்குந் தமிழ்க்கும் இடைவெளி காட்டேல்
நுமக்குள கடமை எமக்கும் உளவாம்;

நாகனார் : நன்று மறைவலீர் நயத்தகு கடமை
நின்று நிலவுக நெடிதே வளர்க
கடமை யுணர்வொடு காக்க தமிழைக்
கடவுட் பெயர்சொலிக் கடியேல் அதனை;

பாண்டியன் : அமைதி நிலவுக ஆன்றீர் அனைவரும்
இமையெனத் தமிழ்மொழி ஏத்திக் காக்குவம்;
கலைமலி தமிழைக் காக்குவம் இனிதே;
திசையிற் சென்றது சிந்தையும் பேச்சும்;

செம்புலக் : திருவுளம் யாதெனச் செப்புக பெரும;

பாண்டி : ஒருகுறை யிலாது வெருவுறல் தவிர்த்துக்
குடிபுறந் தோம்பினும் கொற்றவர் பிறர்தம்
கடிபகை வருமெனக் கருதினும் அச்சம்
ஓங்கு மாதலின் உளம்நலி வெய்தும்;

செம்புலக் : வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகாம்
தாங்கும் மறவர் தம்புகழ் கேட்டு
வெஞ்சமர் ஒன்றும் விழையா மன்னர்
தஞ்செய லன்றித் தலைநிமிர்ந் தறியார்;

பாண்டியன் : வெல்போர்க் கடம்பன் செல்போ ரனைத்தும்
வெல்லும் என்பது வியப்பிலை எனினும்
வஞ்சி நாடன் மலைக்கோல் முரளி
விஞ்சும் பகைகொடு விரகால் தென்புல
எல்லை கவர எண்ணின னாகி
ஒல்லையிற் படைகொட உறுதி பூண்டுளன்;
எனநம் ஒற்றர் இயம்பினர் நெருநல்;

| | | |
|---|---|---|
| கடம்பன் | : | கனவினும் அதுதான் கைவரப் பெறாது<br>தொல்லையிற் சிக்குவர் துணிந்தனர் போலும்; |
| பாண்டியன் | : | எள்ளுதல் தவிர்க முள்மரம் முளையிற்<br>கிள்ளுதல் நன்று . . . .        . . . . |
| கடம்பன் | : | . . . .    . . . . . .வெள்வே லுடையாய்<br>நிலைப்படை ஆங்காங் கெல்லையில் நின்றுள<br>தலைப்படின் அவன்றான் தப்புத லரிது; |
| பாண்டியன் | : | விழிப்புட னிருத்தல் வெல்போர்க் கடம்பன்<br>தொழிற்கது துணைசெயும் . . .    . . . . |
| கடம்பன் | : | . . . .    . . . . தொழுதுமேற் கொள்ளுவேன் |
| செம்புலச் | : | மற்றுமோர் செய்தி மனத்திற் கொள்ளுக<br>கத்து கடல்குழ் காழகன் சீயன்<br>இற்றை நாள்வரை இறைதரும் இயல்பினன்<br>உரிமை வேண்டி உருத்தெழு வான்போல்<br>திரிந்துளன் எனவும் செப்பக் கேட்டனம்; |
| நாகனார் | : | கார்முகில் சூழிற் கழனிகள் விளையும்<br>போர்முகில் சூழிற் பூவுல கழியும்; |
| கணியன் | : | எடுப்பதுங் கெடுப்பதும் இருமுகிற் குரிய; |
| நாகனார் | : | இடித்துரை கூறுதல் எம்மனோர்க் குரித்து; |
| பாண்டியன் | : | கூறுக யாமுந் தலைமேற் கொள்ளுதும்<br>மாறுகொண் டெழுதல் மற்றவர் தாமே; |
| கடம்பன் | : | போர்மேற் கொள்வோர் புறமிட் டோடத்<br>தார்தாங் கணியினர்நம் தாயகத் துள்ளனர்; |
| பாண்டியன் | : | நன்று நன்று மேவுக நலமே. |

## காட்சி 5

வாட்படை தாங்கும் வலந்தரு பாண்டியன்
மீப்படு புலமை விஞ்சிய புலவரொடு
அரண்மனை ஒருசார் அமர்ந்தன னாகி
ஒருமகன் வழுதியின் திருமணங் குறித்துக்
கலந்துரை யாடக் கயல்விழித் தேவியும்
மகிழ்ந்துரை யாடினள் மாலைப் பொழுதே.

o o o o

(புலவர் வருகிறார்)

பாண்டியன் : வண்டமிழ்ப் பெரியீர் வருக வருக
அண்டை யிருக்கையில் அமர்ந்தருள் புரிக

நாகனார் : (இருக்கையில் அமர்ந்து)
ஒப்பருந் தேவியோ டொருங்கினி திருந்த
வெப்பகல் மார்பநின் மெய்ப்புகழ் வாழ்க
எப்பொருட் டாக எனையிங் கழைத்தனை?

பாண்டியன் : நாளைய வேந்தன் நம்மகன் வழுதிக்
காளையின் தகவுகள் கலந்துரை யாடஇவ்
வேளை நுமது வருகை வேண்டினம்;

நாகனார் : வைய மாந்தர் மனத்துறு கருத்தைக்
கையாள் உரைசெயுங் காலம் இரியப்
பைய நாவை யசைத்த பழந்தமிழ்
ஐயன் கற்றுள ஆற்றல் பெரிதுமன்;

வெந்நிட லறியா வெல்போர்க் கடம்பன்
பின்னவள் சுரும்பார் குழலியும் இவனும்
ஒருவர்க் கொருவர் பொருவறு நிலையினர்
இருவருள் முதல்வர் இவனா அவளா
எவரெனத் தெளிதல் இயலாத் தகைத்தே;

மாதேவி : ஆமாம் அவளை அறிகுவென் யானும்
அம்மா மகளின் பொறையும் பொற்பும்
செறிந்தநல் லறிவும் செவ்விய பண்பும்
நிறைந்தவள் அவளென் நெஞ்சங் கவர்ந்தவள்;

நாகனார் : நின்னெஞ் சொன்றோ? நின்மகள் நெஞ்சும்
பொன்மகள் அவள்தான் புகுந்து கவர்ந்தனள்

நாகனார் : காதல் எனயான் கழறினே னல்லேன்;
ஓதுங் கல்வி உயரிய பண்பு
பேதை யவள்பாற் பெருகுதல் கண்டு
தீதிலான் அன்பைச் சிறியாட் கீந்தனன்
எனவே மொழிந்தனென்; ஈதொரு குறையோ?

மாதேவி : மனங்கொளும் ஒருத்தியை மணங்கொள விழைதல்
சினங்கொளற் குரித்தோ? .... ....

பாண்டியன் : .... ..... சினமே எமக்கிலை
அன்பா? காதலா? அறிய விழைந்தனம்;
இம்மா தேவிக் கிசைவெனில் எமக்கும்
மறுப்பிலை விரைவில் மணவினை தொடங்குதும்;
விரும்புவ தெனிலோ வேல்விழி மொழிக;

மாதேவி : மறுப்பும் விருப்பும் மகன்சொல லன்றோ
பொருத்தம்; ... ... ...

பாண்டியன் : ..... தேவி, பொங்கு கடல்சூழ்
காழக வேந்தன் கடுங்கட் சீயன்
ஏழிசைச் செல்வி எழிலியாம் மகளை
வழுதிக் கீயும் விழைவினன் என்பது
பழுதிலா அமைச்சர் பகரக் கேட்டுளேம்;

நாகனார் : (குறுக்கிட்டு)
எழிலி குழலி எவரே யாகினும்
வழுதியின் மனத்தைப் பழுதறத் தெரிந்து
செயல்மேற் கொளலே சீர்மைத் தாகும்;

பாண்டியன் : கயல்விழி குழலியைக் கடிமணங் கொள்ள
அயில்வேல் வழுதி ஆவலன் என்பது
செந்தமிழ்ப் புலவர் தெளிகுவர் போலும்;

நாகனார் : தந்தம் மனம்போல் தக்கோர் மணங்கொளல்
முந்தை மரபே . . . . . . . . . . . . . . .

பாண்டியன் : . . . . . . . . . . முரணிலை பெரும;
மரபு மீறான் வழுதி யென்பதும்
அறிகுவம்; அவன்றான் அரசு நடாத்தும்
திறனும் நன்கு தெரிந்துளன் கொல்லோ?

நாகனார் : அம்புவி காக்கும் அறிவன் இவனெனச்
செம்புலச் சிறையார் செப்பக் கேட்டுளேன்;

மாதேவி : நயத்தகு பலனின் நலங்கெழு விதையிடக்
கசக்கும் பாகற் கனியோ நல்கும்?
வயப்புலி பூனையைப் பயத்தலும் உண்டோ?

பாண்யடின் : கொடியனென் றெம்மைக் குறிப்பில் உணர்த்தக்
கடும்புலி யென்று கழறினை கொல்லோ?

மாதேவி : போர்புரி மறவர்க்குப் புலியோ அரியோ
நேரெனப் புகல்வர் நேரிழை அறியேன்;

பாண்டியன் : (மெல்லிய குரலில் அரசியை நோக்கி)
நன்று நன்று நரியெனச் சொலாது
நின்றனை வேந்தி, நின்மகள் பெருமை
கேட்டலும் உளத்துக் கிளர்ந்தெழும் உணர்ச்சி
காட்டினை முகத்தில்; கண்மலர் துளிர்த்தன;

மாதேவி : சிறுவன் பெரும்புகழ் தெரிந்துளேன் எனினும்
பிறர்சொலக் கேட்டலிற் பேருவப் பன்றோ?

பாண்டியன் : (புலவரை நோக்கி)
தன்மகன் தக்கான் எனப்பிறர் சாற்றில்
அன்னை மகிழ்விற் களவிலை; விழிப்புனல்
அருவியிற் பெரிதென அறிந்தனம் இன்று;

மாதேவி : (புலவரை நோக்கி)
மகள்புகழ் கேட்ட மன்னர் மனத்துள்
துன்னிய மகிழ்வு தோன்றுமா றிலதோ?
அரசுறு களிப்பில் அரைப்பங் கெனக்கு
முரசொலி முழக்கிலோ முழுப்பங் கவர்க்கு;

பாண்டியன் : (புலவரை நோக்கி)
செங்களம் வெறுக்கும் மங்கைய ருளத்தை
இங்கொரு குறிப்பால் இயம்புதல் காண்மின்;
பேதையர் கொழுநர்ப் பிரித லாற்றா
மாதர் ஆதலின் மகிழ்வவர்க் கேது?

மாதேவி : வெற்றி தோல்வி வேண்டும் நில்லா;
சுற்றிச் சுற்றிச் சுழலுந் தகைய;
மாளலும் மீளலும் மற்றோ ரன்ன;
மீளுங் காறுங் கேளிர்ப் பிரிந்தோர்
மகிழ்வுறல் யாங்ஙனம்? மனத்துட் பெருந்துயர்
ஆகும் ஆதலின் அவர்விழி புனல்தரூஉம்;

பாண்டியன் : மண்டமர் வேட்டு, மாளல் அஞ்சாது
புண்டாழ் குருதிப் புனலிற் றிளைத்தல்
திண்டோள் மன்னர்க்குத் தண்டா விருப்பாம்;

நாகனார் : மறப்போர் புரிதல் மன்னர்க் குகந்தது;
இறப்போர் தொகையோ எண்கள் இகந்தது;

பாண்டியன் : இறப்போர் தொகையை எண்ணுவ மாகிற்
சிறப்புஞ் சீரும் சேர்வ தியாங்ஙனம்?

நாகனார் : பொருள்பாழ் உயிர்பாழ் புகையும் பகையால்
அருள்பாழ் இந்நிலை யறிவார் யாரே?
பெண்மை யுளமேஅப் பெற்றிமை யுணரும்;

பாண்டியன் : போரின் நிகழ்வாற் பொருள்கள் பாழென
யாரும் அறிகுவர்; யாமும் அஃதே;
படையெனும் உறுப்புப் பார்நலங் காக்கும்
நடைமுறைக் குரியது; நண்ணார் படையெழிற்
செங்கள மன்றி எங்குள தொருவழி?

நாகனார் : மண்ணாள் வேந்தர் மற்றவர் தம்மை
நண்ணார் எனமனத் தெண்ணா ராகின்
நண்ணா தாகும் நடுக்கிடும் போரே;
போரிற் பாழ்படும் பொருளிற் பாதி
பாரில் வாழ்நர்க்குப் பயன்படு மாகில்
நல்குர வென்னும் சொல்லே யிலதாம்;

பாண்டியன் : பாட்டின் கற்பனை கேட்டற் கினியது
நாட்டின் காவல் நடைமுறைக் குரியது;

நாகனார் : பாடல் சொலும்பொருட் பற்றுதல் கொளாஅது
கூடலர் எனப்பகை கொளுமேல் யாண்டும்
நாடும் ஏடும் நனிவே றாகும்;
நாடிய அன்பே நலந்தரும் வாழியாம்;
மறப்போர் மறப்போர் மாநிலங் காக்குந்
திறத்தோர் அல்லர் செந்தமிழ் வல்லீர்

பாண்டியன் : மெல்லில் மனத்தைச் சொல்லினம் நும்முழை
பல்கிய அறவுரை பகருதிர் நீவிர்;

நாகனார் : பொலந்தார் மார்ப புகழ்ச்சி வேண்டிக்
கலந்தோர்க் குறுதி கழறுதல் தவிர்த்து
மெய்ம்மை விடுத்துப் பொய்ம்மை கிளத்தல்
எய்யா தாகின் றெம்சிறு செந்நா;

பாண்டியன் : எம்செவி கைப்பினும் நும்செவி யறிவுறூஉ
நெஞ்சிற் கொடூஉம் நீர்மையேம் அறிகுவிர்;

நனைமொழி நும்பால் நவின்றனம் அவைதாம்
தகவில எனின்அவை தவிர்க பெரியீர்

நாகனார் : மாந்தர் உயர்வும் மானமும் மனத்துள்
ஏத்திப் பொதுநலம் எண்ணி முயலுநர்,
இகழ்ச்சி புகழ்ச்சியென் றிரண்டுங் கொள்ளார்;

பாண்டியன் : நன்றி புலவீர் நம்மகன் வழுதி
மன்றல் குறித்து வரையறை செயாது
பிறபிற பேசினம்; எழிலி குழலி
இருவருள் எவரைத் திருமண மகளாக்
கொள்ளுதும் அதனைக் கூறுக . . . .

நாகனார் : . . . . . . . . . . . . . . . வேந்தே
மருமகள் யாரென மாறன் தேவி
திருவுள மன்றோ தெளிதல் வேண்டும்;

மாதேவி : எழிலி குழலி எவரே யாகினும்
வழுதியின் மனத்தைத் தெளிவுறத் தெரிந்து
செயல்மேற் கொளலே சீர்மைத் தாகும்;
அயலவர் கருத்தை அறிந்து பயனென்?

பாண்டி : கயல்விழித் தேவி கழறிய துண்மை
அவன்றன் கருத்தை அறிய வேண்டின்
புலவர் தாமே பொருத்தம் உடையர்;

நாகனார் : தலைமகன் உளத்தின் தன்மை யறிந்து
நாளை வருதும் நலமே பொலிக

(புலவர்க்குப் பின் அரசனும் அரசியும் தொடர)

ஊழியல் வழுவா ஒண்டொடி யாரொடும்
ஏழடி எம்பின் வந்தனிர் இனிநீர்
ஈண்டிவண் நிற்க ஏகுதும் யாமே.

# காட்சி 6

கன்னி குழலி காதல் மனத்தின்
பன்னிய மொழிக்கெலாம் பகற்பொழு தவள்மனை
வரூஉம் வழுதி தன்மனங் கரந்து
முரணிப் பின்னர் மொழிந்தனன் மெய்யே

O O O O O

குழலி : (தன்மனைக்கு வழுதி வருதல் கண்டு)
வருக வருக வலந்தரு பாண்டியன்
ஒருமக னாகிய உரகுவாய் வருக
மன்னவன் மைந்த என்னகம் புக்கலை
என்ன மாதவஞ் செய்ததெஞ் சிறுகுடில்;

வழுதி : அன்பும் பண்பும் அறிவுந் திறனும்
பன்னரும் நலனும் கெழுமிய பாவாய்
என்னகம் நின்னகம் எனவே றில்லை
அன்பகம் பண்பகம் ஆங்கென் னுளம்புகும்;

குழலி : ஈரகம் ஓரகம் ஆகிய தெனுஞ்சொற்
கூறினை பெரும; குலமகள் யான்பெறும்
பெறுமற் றிங்குப் பிறிதொன் றிலையால்;
(உள்ளே சென்று குவளையிற் குளிர்நீர் கொணர்ந்து)
தண்புனல் பருகுக தணியா வேட்கை
மண்புனை பாண்டத்து வார்த்த நீரிது

வழுதி : (நீரைப் பருகியபின்)
தணியும் நோக்கொடு தந்தனை தண்புனல்

தணியா வேட்கை தாங்கவேற் கினுமோர்
குவளைப் புனலாற் குளிர்தரச் செய்க
(மீண்டும் அவள் கொணர்ந்த நீரைப் பருகிவிட்டு)
நவையிலா அன்பின் நல்லாய் நன்றி;

குழலி : பல்கனிச் சாறு பருகும் நினக்குப்
புல்லிய தண்புனல் நல்கினென் அதற்கு
நன்றி நவிலல் நயத்தகு செயலோ?
என்றூழ் பொழுதென எண்ணித் தந்தனென்;

வழுதி : சாற்றிற் சுவைதரும் தண்புனல் நின்குளத்
தூற்றெழும் அன்புடன் ஒருங்கு தருதலின்
சாற்றினென் நன்றி தவறெனில் விடுக;

குழலி : (புன்னகைத்து)
பன்னரும் எழில்நலம் கெழுமிய பாவை
என்ன முன்னர் இசைத்தவை யன்றோ?
யாவை? என நீ இயம்புதி அன்ப

வழுதி : இனியாய் நின்னெழில் எடுத்துயான் மொழியக்
கனியும் புலமை கைவரப் பெற்றிலேன்;

குழலி : அடக்க வுரைகள் ஆன்றோர் அவைமுன்
படித்தல் நன்றாம்; பாவைமுன் எதற்கோ?
சீர்பிழைப் பறியாச் சிலம்புடைச் சீறடி,
பார்மகள் வருந்தாது பாவிய நன்னடை
உடையாய் நீயே உம்பர் அமிழ்தம்;
நடையால் நீயொரு நற்றமிழ் அன்றி
மற்றோர் உவமைச் சொற்காண் கிலெனே;

குழலி : (தனக்குள்)
கொற்ற இவன்மொழி தூயநற் காதற்
பற்றை யுணர்த்தப் பற்றா வாகும்;
(வழுதியை நோக்கி)
மற்போர் மறவ சொற்போர் புரியினும்
நிற்போர் உளரோ நின்முன், அம்ம;

எந்தம் மனையகத் தெழுந்தருள் நினக்குச்
செந்தமிழ் சுவைத்துச் சில்பொழு திருக்க
வாய்ப்புள தாமோ? வையைத் தலைவ;

வழுதி : தாய்ப்பா லருந்தத் தயங்குமோ குழவி?
தமிழே இனிமை; நின்னிதழ் தருமது
அமிழ்தே; அமிழ்தே; ஆய்குவங் கூடி

குழலி : (தனக்குள்)
அரும்புங் காதல் விரும்புங் கொல்? இவன்
தருங்குறிப் புரையாற் றடுமா றுளத்தேன்;
உண்மை யுளத்தை உசாவி யுசாவிப்
பெண்மை விழையும் பெற்றிமை யறிகுவென்;
(வழுதியை நோக்கி)
புறப்பொருள் தேறிய திறத்தினை எனினும்
அகப்பொருள் பயிலும் ஆர்வம் அற்றனை;

வழுதி : பருவத் தன்றிப் பழுப்பது பயனிலை
வருமொர் காலம் வழிசெயும் அதற்கு;

குழலி : வளர்கலை பெரிது வாழ்நாள் அதற்கு;
தளருடற் பிணிகள் தாம்பல வாதலில்
வல்லே முனைக; எல்லையில் இன்பம்
நல்கும்; புதுப்புது நயங்களும் தோன்றும்;

வழுதி : ஆமாம் உண்மை; அடுத்தடுத் ததனை
ஆமா றறிய ஆசாற் சார்குவென்;

குழலி : காலை அரும்பாம் பகலிற் போதாம்
மாலை மலராம் மற்றதன் பொருளென்?

வழுதி : மொழிந்தஇப் பாடல் முரண்டொடை யாகும்;

குழலி : தெளிந்த அறிவினை திசைமா றாது
பொதிந்துள நயத்தைப் புகலாய் கொல்லோ?

வழுதி : அறிந்த துரைத்தேன் அறியா ஒன்றை
விழைந்தனை யாகின் விடைசொல இயலேன்;

குழலி : அறியாய் போல ஆண்மையன் நீஎன்
பொருகயல் காணாது புலம்புதி பெரும;

வழுதி : பொருவரும் எங்கொடி மருவிய கயலை
அறிகுவென் பேதாய் அறியா துரைத்தனை;

குழலி : வேம்பின் தொடையல் விழையகல் மார்பரின்
கூம்பவிழ் இதழ்மொழி வேம்பினுங் கைக்கும்;

வழுதி : என்மொழி வேம்பெனின் நின்மொழி கரும்பு;

குழலி : பொன்மொழி புகன்றனை பூவலர் தாரோய்;
கரும்பென என்மொழி கருதினை யாகின்
விரும்புதி கொல்லோ? இரும்புளம் இனிஏன்?

வழுதி : சுரும்பார் குழலி தூயநின் புலமை
விரும்பார் எவரோ? விளைதேன் விழையாச்
சுரும்பும் உளதோ? . . . . . . . . .

குழலி : . . . . . . . . . சொற்போர் வல்லோய்
புலமை விரும்பினை போற்றுமத் தேன்றரும்
மலர்வெறுத் தொதுக்குதல் மாண்புறு செயலோ?
(அருகிலுள முல்லைக்கொடியைச் சுட்டி)
பைங்கொடி முல்லை பைதல் உறல்காண்;

வழுதி : தும்பைச் செடியைக் கொம்பெனக் கருதி
வம்பப் பூங்கொடி வாடுதல் அறிக;

குழலி : குறிஞ்சி யிசைக்கக் கோட்டியா ழெடுத்தேன்
நெருஞ்சி யாமென நீயதை வெறுத்தி;

வழுதி : கவவுயாழ் மீட்டுங் காந்தள் மெல்லிரல்
தவறிப் பகைநரம்பு தடவுதல் காண்நீ,

குழலி : பெட்பும் பாங்கிற் கட்புல னாகிஎன்
உட்புகுந் துயிரொடும் ஒன்றினை அன்று
நட்பிற் பிழைசெய நாடினை இன்று;

வழுதி : செய்யுளில் வேட்கை எனுஞ்சொன் முன்னர்க்
கைகெடும் அவாவரின் செய்கை மானக்

காமங் கதுவக் கையும் நாணும்
போமெனும் உண்மை புலப்படப் புகன்றனை;
அறிவுங் கெடுமோ அவாமுன் வரினே?
செறிதொடி நல்லாய் நெறிதடு மாறேல்
நட்பிற் பிழைசெய நானறி கில்லேன்
கட்கத் தின்மேற் கழறினென் ஆணை;

குழலி : நாணம் இலியென நவின்றனை என்னை
ஆவினம் ஓரா தறைவது முறையோ?
நாணம் பேணல் நங்கையர்க் கியல்பு
பேணுந் தமிழொடு பெண்மைமே லாணை;

வழுதி : வாழிய தமிழொடு வாழ்கநின் நாணம்
ஏழிசை மொழியாய் ஏணிச் சீற்றம்?
காதற் குறிப்பைக் கன்னியர் தாமே
ஓதல் பெண்மைக் குயரற மாமோ?

வழுதி : வஞ்சியர் தம்மை வஞ்சித் தொழுகல்
நெஞ்சிலா ஆடவர்க்கு நிலைத்ததோ ரியற்கை;
பழகுநாள் தொட்டுப் பற்றும் அன்பும்
ஒழுகுதல் போல ஊர்மொழிந் திருந்தனை;
நின்செய லனைத்தும் நீடிய காதற்
றன்மையை யுணர்த்தும் தகைமைய எனயான்
நம்பி நின்றேன்; நலிவுற மெலிவுற
வெம்பி யழிய வெறுப்பினைக் காட்டுதி;
என்னகம் நின்னகம் எனவே றில்லை
என்னநீ மொழிந்ததை இமைப்பினில் மறந்து
பெண்மை யறமோ பேசுதி பெரும;
மண்ணாள் வேந்தர் மரபினில் வந்தோர்க்
குண்மையும் பொய்ம்மையும் ஒருபடித் தன்றோ
பெண்மையை எண்மையாப் பேசினை; பெரும.

வழுதி : அறியா துரைத்தனன் அரியநூற் பாவினுட்
செறிபொருள் உணர்ந்து செப்புந் திறத்தாய்

தெரியா திதனைத் திரிபுற வுணர்ந்தனை
உரிமை யுடையேன் உரைநகை மொழியைப்
பிறழ வுணர்ந்து பிதற்றுதி சினமொழி;
என்னகம் நின்னகம் இருவே றியற்கைய
என்ன நினைந்தநீ இங்ஙனம் மாறினை;
நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே
வஞ்சி யதனை வஞ்சம் என்றனை;
மன்னர் மரபில் வந்ததோர் குறையோ?
பெண்மையைப் பழிக்கும் பெற்றிமை ஈங்கிலை
கண்ணிற் புண்செயக் கருதுமோ என்னுளம்?
(அவள் கண்ணில் நீர்ததும்பல் கண்டு)
இனையன கூறியும் எனைநீ புலந்து
புனல்வழி விழியொடு பொருமுதல் முறையோ?

குழலி : அன்புப் பெருக்கின் ஆழங் காணாத்
திகைப்பிற் களிப்பிற் சிந்தும் நீரிது;
(இருவரும் நகைக்கின்றனர்)

வழுதி : மதுரை மூதூர் மாந்தரொடு வையைப்
புதுநீ ராடப் போதுவம் நாளை;

குழலி : நின்னிழல் வாழ நினைத்துளேன் ஆதலில்
என்மொழி இயம்பினும் இசைகுவென் யானே.

## காட்சி 7

பொங்கும் வையைப் புதுப்புனல் விழவில்
மங்கை குழலியும் மைந்தன் வழுதியும்
ஆங்காங் குறீஇ இவ்வன தீது கண்டு
தேங்கும் மகிழ்விற் றிளைத்தனர் பகலே.

o o o o

வழுதி : நீரணி விழவில் நிமிர்த்த வேட்கையர்
போரணி வகுத்த பொருநர் மானச்
சேறல் காணுதி சேயிழாய் ஆங்கன்;

குழலி : ஏதம் அறியா இனிய வாழ்க்கையர்
ஓதும் வாழ்த்தொலி ஓங்குதல் கேள்நீ

வழுதி ; நிறைகடற் புகுந்து பொறையொடு பெயர்ந்து
குருநிற வானிற் றிரிதரு கொண்டு
தன்சுமை பொறாஅது தலைமலைப் பொழிய
ஒருவழிக் கலந்தவை பெருகித் திரண்டு
வருவது காணுதி வையை யாற்றில்;

குழலி : புதுப்புனல் வையையிற் புகுந்துநீ ராட
மதுக்குழல் மாதர் நெருக்கின ராகி,
புகைக்கும் அழலும் பூசனை பொருளும்
வகைப்பட ஏந்தி வழிவழி ஊர்ந்த
நடையின ராகிக் குடைவதற் கேற்ற
உடையணி பூண்டு மிடைவது காண்க;

வழுதி : நரையர் மெலியர் நடுங்குநர் சிறியர்
துறைதுறை நின்று தூநீ ரயர்ந்தும்
வலியர் இளையர் வணங்காக் காளையர்
கலிபுனற் பாய்ந்து கண்சிவந் தாடியும்
பருவப் பண்பினைப் பாங்குற வுணர்த்தும்
இருபெரு நிலையும் இவ்வழி நோக்குதி;

விண்டோய் முகட்டின் விளிம்பின் இழிதரும்
தண்டா அருவி தண்டிப் பெயர்த்த

குழலி : வேயும் அகிலும் விளைந்த தேக்கும்
காயுங் கனியும் கடிமணச் சாந்தம்
வேருந் தூறும் விளைவுறு கிழங்குடன்
நனைவிரி மலர்கள் நறவு கெழீஇய
இனையன பலவும் ஏந்தி வையை
திருமண வரிசைப் பொருளொடு பெயரும்
ஒருமகள்போல ஒழுகுதல் நோக்குக;

வழுதி : வேண்டி மணங்கெழும் பாண்டி மைந்தற்
தீண்டும் வரிசை யாது கொணர்வை?

குழலி : என்னை விரும்புதி எனயான் நினைந்துளேன்
பொன்னை விழையும் நின்னுள மாகின்
என்னிற் சிறந்த தெதுவென இயம்புக
முன்னவள் அதனை முந்தித் தருகுவல்;

வழுதி : பொன்னே நின்னிற் சிறந்தது புகல
என்னே ஈங்குள தென்னுயிர் நினக்கே;

குழலி : நின்னுயி ரொன்றோ? பொன்னுட லிஃதும்
என்னரிப் பொருளென இயம்புதி தலைவ;

வழுதி : உயிரோ உடலோ உரிமை எனக்கிலை
அயில்வேல் விழிநின் அடைக்கலம் அவைதாம்;
பேதாய்,
நிலையா, உயிருடல் நிலைப்பவை என நினைந்
தலைவார் உலகில்! அவர்நிலை அளிதே!

குழலி : மெய்ப்பொருள் உணர்ந்த மேலோய் நின்போற்
கைப்பொருள் இழக்கக் கருதிலேன் பேதை

வழுதி : மெல்லியல் நவின்றதும் மெய்யுணர் வாகும்
சொல்லுமென் மொழியும் மெய்யுணர் வாகும்

குழலி : என்னகம் நின்னகம் இருவே றிலையாற்
சொன்னவை ஒன்றே சுட்டுதல் இயற்கை;
(இருவரும் நகைத்து மகிழ்கின்றனர்)

வழுதி : உதுக்காண்
அடைகரை நின்றோர் அடங்கா தோடிப்
படுதிரை பிதிரத் துடுமெனப் பாய்ந்துளம்
எஞ்சா மகிழ்ச்சியின் எக்களித் தெழூஉம்
அஞ்சாக் காளையர் அணிகொளுங் காட்சி
விழிக்கு விருந்தொடு வியப்பா மெனினும்
குழிக்குட் படாஅது பிழைத்தவர் எழுக;

குழலி : ஆஅ! ஆங்கவன் ஆற்றினுட் பாய்ந்தோன்
ஓஒவென் றலறி உயர்த்திய கையொடு
போதல் உற்றனன் புனலொடும் ஐயஓ!
ஆத லறியான் அளியன் அவனே!

வழுதி : வரம்பின் இகந்தோர் வாழ்விற் பெறுபயன்
திறம்பட வுணர்த்திச் சென்றனன் அவன்றான்;

குழலி : காதலர் தம்முள் ஏதிலர் போலப்
போதரு புனலும் புகுபுகு தோறும்
ஆடியும் ஓடியும் ஆவென் றலறியும்
கூடியுந் தணந்தும் கூக்குர லிட்டும்
அயலார் ஆங்குக் காணா வகையில்

வழுதி : மயல்விழி பேசி மயங்குதல் காணுதி
அயலார் நம்மை அறியும் வகையில்
மயல்விழி பேசி மயங்கினை நீதான்

குழலி : ஏதிலர் நாமோ? தீதில் மணத்துக்
காதல் உறவினர்; கணவன் மனைவி;

வழுதி : மங்கல இன்னிசை மணநாட் பந்தர்
இங்கொன் றிலாமுன் இல்லறந் தொடங்குமோ?

குழலி : வையைப் புதுப்புனல் மங்கல இன்னிசை,
வெய்யில் காணா வியன்மரச் சோலை
மணநாட் பந்தர்; மற்றென் வேண்டும்

வழுதி : பறையொலி முழங்கப் பாயும் புதுப்புனல்,
நிறையழி மாதர் நெஞ்சம் போலவும்
பாடல் அறியாப் பாவலன் போலவும்
கூடுஞ் சிறையழித் தோடுதல் காணுதி;

குழலி : புக்ககம் புகூஉம் புதுமணப் பெண்ணுளம்
மிக்க காதலின் விரைந்த தப்புனல்;

வழுதி : காதற் புனலும் கரைகடந் தேகின்
ஏதம் நிகழும்; எல்லையுட் படுமேல்

யாதுங் குறைவிலை; எழுபயன் விளையும்;

குழலி : காமர் கடும்புனல் கலந்துட னாடப்
போமலர் தம்மைப் பொறுப்பொடு தடுத்த
முதியோர்த் தப்பி முன்னு ரை நண்ணிய
சிறியோர்த் தேடும் பெரியோர்க் காணுதி;

வழுதி : நாணந் தடுப்ப நடுநிலை நிலாது
பேணுங் காதல் பிடர்பிடித் துந்தத்
தலைமகன் பின்செலும் தணியா மனத்தை
அலைந்து தேடும் தலைமகள் மாணும்;

குழலி : நான்கத வாக நன்கனம் காத்தும்
ஆண்மகன் கள்வன் அவள்மனங் கவர்ந்து
செலுமேல் தெரிவை தேடா தென்செயும்?

வழுதி : கவர்ந்த தெவர்மனம் கவர்ந்தவர் எவரென
உவந்தெழு காதலில் உளம்மயங் கினைகொல்?

குழலி : கூறும் பல்பொருள் கோற்றொடி மாதர்
தேறும் பொழுதிற் சிறுமகார் நழுவக்
காணா தலமந்து கண்ணீர் பொழிந்து
நாணா தலறும் நங்கையர் காணுதி;

வழுதி : அயர்வில் மூழ்கியோர் அரும்பொரு ளிழந்து
துயரில் வீழ்ந்து துடிப்ப தியல்பே

குழலி : குளிர்புனற் கரையிற் குழுமியோர் மொழிமொழி
ஒன்றா துடனெழுந் தொலிக்கும் அவைதாம்
கொன்றா வேள்விக் கொழுந்தழல் வளர்த்து
மறையவர் ஓதும் மந்திரம் போலத்
தெரியா வகையிற் றிகைப்புறச் செய்தன;

வழுதி : நாடிய கல்வி நன்கனம் கற்றோர்
கல்லா மாக்கள் கணவர் மனைவியர்
எல்லா மாந்தரும் ஈண்டின் புறல்காண்

குழலி : இன்பம் காதல் எனுமிவ் வுணர்வு
கற்றவர், மற்றவர், காளையர், கன்னியர்,
உற்றவ ரெவர்க்கும் உரிய பொதுமை;

வழுதி : மாந்தளிர் பிறதளிர் போந்தவை மிதந்து
தேங்கமழ் மலராற் தீம்புனல் மறைப்ப
நாணுறு மடந்தை நன்மா மேனி
பேணி மறைந்துறூஉம் பெற்றிமை மான
வையைக் குலக்கொடி வழிவழி நடந்து
செய்யவர் மகிழ்ந்து சீர்பெற வந்தனர்;
ஐயை அவள்வரூஉம் அழகினைக் காணுதி;

குழலி : உடலை மறைத்தவள் உளத்தை மறைத்திலள்
நடவுசெய் வோர்க்கு நலம்பல தந்து
விளைத்தன ளின்பம் உழைத்தவர் தமக்கே.

வழுதி : முல்லைச் சிரிப்பில் முகைப்பரு வத்தர்
நல்லியல் மலரவிழ் பருவ நங்கையர்

வெய்மை கருமை விரவிய நரையினர்
வெண்மை ஒன்றே மேவிய நரையினர்
அனைவரும் மகிழ்ந்துநீ ராடல் காணுதி

குழலி : வண்டலர் குறிஞ்சி மலர்தரு நறவம்
கண்டு மகிழ்ந்தபின் உண்டு மகிழ்தல்
நனிபே ருவகை நல்கு மன்றோ?
பனிமிகு புதுப்புனல் பார்த்து மகிழ்நாம்
குடைந்தெழுந் தின்புறக் கூடிச் செல்லுதும்;

வழுதி : அடைந்த புதுப்புன லாடும் ஆவல்
உடையை யாதலின் உறுபுன லிறங்க
பொருமலை நீராற் பூந்துணர் ஒதுங்கும்
மருத முன்றுறை மருங்கிற் செல்லுதும்

குழலி : காமரு கடும்புனல் கலந்துட னாட
யாமுறு மின்பம் எல்லை யிகந்தது;

வழுதி : எல்லை யிகவேல்; ஈர்க்கும் கடும்புனல்;

குழலி : நல்லைநீ! புனற்கோ நடுங்குதி யிங்ஙனம்?
(ஆடிக் கொண்டிருக்கும் அவள்புனலொடு செல்ல, தாவி
யணைத்துக் கரைசேர்த்து)

வழுதி : சொன்மொழி கேட்டிலை! சுழலிற் சிக்கினை!
பொன்மணி மார்பம் பொருந்தப் புல்லி
நின்னுடல் சுமந்து நீரிற் கொணர்ந்தேன்
நின்னுடை நனைந்தது; என்னுடல் குளிர்ந்தது;

குழலி : (நாணிநின்று)
ஐயநீ முன்னர் என்பால் அறைந்த
மெய்யுணர் வதனால் மேனி குளிர்ந்ததோ?

வழுதி : நயமொழி போதும் நாவை யடக்கு
பெயலரும் புதுப்புனல் பேணா தாடிச்
சுழலிற் பட்டுச் சோர்ந்த பின்னரும்
நயமொழி நகைமொழி நவிலுதி கொல்லோ?
வாவா வளமனை ஏகுவம் யாமே.

## காட்சி 8

காழக வேந்தன் கடிமனை யமர்ந்தவன்
ஏழிசை எழிலியை எழில்மலைக் கோனுக்குத்
தரநினைந் தமைக்கொடுந் தனித்துரை யாடி
ஒருதலை யாகி உய்த்தனன் தூதே.

o o o o o

வாணன் : இலங்கிலை நெடுவேல் ஏந்தும் வேந்தே
கலங்குளக் குறிப்பைக் காட்டும் நும்முகம்
கலக்கம் உறற்குக் காரணம் யாதென
விளக்கின் அதற்கொரு விடிவு தோன்றும்;

சீயன் : முந்தையர் அயர்ந்த முன்னொரு நாளிற்
செந்தமிழ் வேந்தன் நந்தம் நாட்டை
அடிமை செய்தனன்; அன்று முதலா
அடிபணிந் தேத்தி ஆண்டு வருதும்;

வாணன் : புலிவில் கயலெனப் புகலும் கொடியுள்
வலிய தெதுவோ அதுநமை வணக்கும்;
தலைமுறை பலவாத் தனிநம் ஆட்சி
இலையே! இதுநம் தலைவிதி போலும்!

சீயன் : தலைவிதி யோஇது? தகுவலி யின்மையால்
வலைவிழு மானென வதங்கி நின்றனம்;
இலையின் அடிமை எனநாம் எழுதல்
தொலைவில் இலையால் துணைவரும் அமைச்சே
அல்லார் ஆகும் அவலம் அகல
நெல்லூர் வாண நினைத்தொரு வழிபுகல்;

வாணன் : திரைசூழ் காழகந் திறைசெலுத் தாதென
வரைக ஓலை வருவது வருக;

சீயன் : வேம்பன் படைகொடு விரைகுவ னாகின்
தாங்கும் நிலையினைத் தகுதுணை வேண்டும்;

வாணி : படைவலி துணைவலி பற்றாக் குறையெனில்
நடைமுறை மாற்றி நட்பைப் பெருக்குக;

சீயன் : நட்பைப் பெருக்கி நயந்து திரிதல்
வெட்கம்! வெட்கம்! விடுதலை ஏது?

வாணன் : நயத்தல் எனிலது நடுங்குதேலன்று;
உயத்தகும் வழியால் உறவினன் ஆக்குக;
உரிமை பெற்றுநம் நாடும் உய்யும்
இருவீர் தாமும் சரிநிக ராவீர்;

சீயன் : வெளிப்படை யாக விளம்புக வாண;

வாணன் : களிப்புடைச் செயலே கழறினென் வேந்தே;

சீயன் : சுற்றிச் சுற்றிச் செல்லுதல் விடுத்துத்
தெற்றென உளத்தைத் திறந்து காட்டுக;

வாணன் : பொதியின் இன்று புதியன் நினக்கு
மதிகொடு நினையின் மைத்துனன் நாளை;

சீயன் : புலம்பும் நிலையேன் புகுந்தது நினக்கு?

வாணன் : அலங்கல் மார்ப அமைதியிற் கேண்மோ;
மலர்த்தார் வேம்பன் மைந்தன் என்றும்
நிலைத்த மருகன் நினக்கென ஆகின்
வலந்தரு பாண்டியன் மைத்துனன் அன்றோ?

சீயன் : நவிலும் நின்மொழி நகையே நல்கும்!

வாணன் : புவியில் நிகரிலை எனப்புகழ் பெற்றவன்
வாள்வலி கற்றவள் தோள்வலி யுற்றவள்
ஆள்வினை பெற்றவள் அருங்கலை முற்றவும்
பழுதற வுணர்ந்தவள் பாவை யவள்தான்

எழிலி எனும்பெயர்க் கேற்ற வுருவினள்
தொழுதகும் அவட்குத் தோண்மலர் சூட்டும்
கொழுநன் எனும்நிலை வழுதி பெறுமேல்
அடிமை ஈங்கிலை அடங்கித் திறைதருங்
கொடுமை ஈங்கிலை கொற்றவ நினைக;

சீயன் : நகுதகு மொழிகள் நவின்றனை; என்மகள்
இகலோன் மகற்கோ இன்றுணை யாவது?
மகளைத் திறைதந்து மானங் காக்கவோ?

வாணன் : மாறெனக் கருதின் மற்றொரு வழியுண்டு;
ஆறாப் பகைமை அகத்துட் புகைய
வஞ்சி வேந்தனும் வலந்தரு மாறனும்
வெஞ்சம ராற்ற வேளை நோக்கினர்;
மலைக்கோன் துணையொடு மாறனைத் தாக்கின்
நிலைத்த வெற்றி நேருவ துறுதி;

சீயன் : இஃதொரு நல்வழி! இதுநமக் குவப்பே!
வெஃகும் நமதுளம் விரைந்தவன் அறிய
வஞ்சி நாடற்கு . . . . . . .
(இடையில் எழிலி வருகிறாள்)

எழிலி : . . . . . . . . . வஞ்சி நாடெனும்
செஞ்சொல் என்னிரு செவியிற் கேட்டேன்;
ஆங்கெழும் நினைவெனில் யானும் வருவேன்;
ஓங்கிய மலைவளங் கெழுமிய நாடாம்
இயற்கை எழில்சூழ் இனிய நாடாம்
மயிற்குலம் முதலா மனங்கவர் பறவை
வகைவகை விலங்கினம் தொகைதொகை யாக
மிகுதருங் காடு செறிதரு நாடாம்;
யானவை காணும் அவாவினேன் எந்தாய்;

சீயன் : மீனவன் நமக்கு மேவலன்; வஞ்சிக்
கோனவன் துணையொடு கூடலன் நாட்டில்
வெஞ்சமர் மேற்கொள விழைந்தே மாகி
வஞ்சி நாடற்கு வரைக என்றனென்;

எழிலி : நல்லர் மறவர் செல்போர் வெல்லும்
வல்லர் வனப்பர் வாயிதழ் நகையர்
இவண்வரு காலை இனியர்க் கண்டுளேன்
(எழிலி சென்றபின் அமைச்சரை நோக்கி)

சீயன் : பொருள்பொதி மொழிகள் புகன்றனள் எழிலி
தருமொழிக் குறிப்பைத் தெளிந்தெனை கொல்லோ?

வாணர் : அம்மகள் குறிப்பும் நும்முளக் குறிப்பும்
செம்மையில் உணர்ந்தனன். ..... ....

சீயன் : ..... ...... செப்புக செப்புக

வாணன் : வஞ்சி நாடனை வஞ்சி விழைந்தமை
நெஞ்சக மொழியால் நிழல்போல் தெரிந்தது;
மலைக்கோன் அவற்கு மகட்கொடை நல்கி
நிலைக்கும் தொடர்பை வளர்க்க நினைந்துளீர்;

சீயன் : முற்றும் உண்மை; முயற்சிமேற் கொள்க
சற்றுத் தாழ்த்தேல் சடுதியில் முயல்க;

வாணன் : உன்னி விரைவில் ஆவன உஞற்றுவென்;
கன்னித் திங்கள் காருவா நாளின்
பின்னை வருநாட் பிறந்த வேம்பன்
வெள்ளணித் திருநாள் விழவு மேம்பட
உள்ளிநம் வருகைக் குய்த்துளன் அழைப்பு;
பிறந்த நாளுடன் பெருமகார் நோன்பும்
சிறந்து விளங்கச் சிந்தை கொண்டுளேன்;
அவ்விடை வருமலைக் கோனுடன் அளாவிச்
செவ்விதின் நம்முளஞ் செப்புதும் நன்கு;

சீயன் : மகாஅர் நோன்பா? மற்றஃ தென்ன?

வாணன் : அஃ்தா தமிழர் அயருந் திருவிழா;
கும்பியுங் கோலுங் கொட்டியும் ஆடியும்
இம்மென் மொழியால் இன்னிசை பாடியும்
மைவிழிச் சிறுமியர் மாண்புற பாவை

கைபுனைந் தியற்றிக் களித்து மகிழ்நாள்
எண்ணும் எழுத்தும் இளஞ்சிறார் பயிலப்
பண்ணுந் திருநாள் பைந்தமிழ்ப் பெருநாள்
வில்லும் வாளும் விளையாட் டுணர்வொடு
சொல்லிப் பயிற்றத் தொல்குவார் தருநாள்
மடங்கொல் கல்வியும் மறமும் பயிலத்
தொடங்கும் நாளெனச் சொல்லுவர் அவர்தாம்;

சீயன் : வெள்ளணி விழாவும் நல்லதோர் வாய்ப்பாம்
உள்ளியது முடிக்க உற்றதோர் துணையாம்;
வில்லோன் அவனை விழலிற் கண்டு
சொல்லுமுன் திருமணத் தூது விடுத்து
மலைநா டுடையன் மனத்தை யறிக;

வாணன் : சிலையான் உளத்தைச் செவ்விதின் அறிய
வாயில் வேண்டா; வாணன் யானே
போயுரை யாடிப் போதர நினைத்தனென்
சேரன் பொதியற்குச் சேரான் ஆகிய
நேரம் ஈது . . . . . . .

சீயன் : . . . . . . . . நின்னுரை சரியே
அன்னவன் உளமறிந் தாய்ந்துரை யாடி
நன்மொழி கொணர்ந்து நவிலுக நீயே

## காட்சி 9

நாண்மகி ழிருக்கை நலமுற அமர்ந்து
பூணணி மார்பிற் பொலியும் மலைத்தோள்
வேம்பன் நாட்டில் வெள்ளணி காணப்
போந்து மறைகள் தேர்ந்து வருவமென்
றச்சுதன் தேவற் கறைந்தனன் அவனே.

o o o o o

மலைக்கோன்: (அமைச்சரை நோக்கி)
அச்சுதன் தேவநம் அவையில் ஆன்றோர்
மெச்சும் புலமை விஞ்சின ராகித்
தத்தம் துறையிற் றனித்தனி சிறந்துளர்
அத்தகு நிலைகண் டகமிக மகிழ்ந்தனம்:
பாண்டியன் ஓலை பரிவுடன் உய்த்துளன்
வேண்டி யழைத்துளன் வெள்ளணி காண;
யாமும் செல்ல அவாவினம் அமைச்ச;

அச்சுதன் : ஆமாம் யாமும் அழைப்பினை மதிப்போம்;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
என்னும் உணர்வோ டியங்குவர் மக்கள்;
மிக்க வளம்பல மேவினும் வாழும்
மக்கள் உயிரென மதிக்கும் மன்னன்;
அரசனைக் குடிகள் அன்பால் விரும்ப
அரசன் குடியை அருளால் ஓம்பும்;

மலைக்கோன்: அருளோ அன்போ அவன்பா லில்லை
வெறியன் கொடியன் பிறர்நிலம் விழைவோன்;

அச்சுதன் : மன்னர் திருவுளம் என்னென அறிகிலேன்

மலைக்கோன்: முந்தையர் சிலர்தாம் மொய்ம்பில ராகித்
தந்தங் கடமையிற் றாழ்ந்தும் மறந்தும்
நாடும் எல்லையும் நயவா ராகி
ஆடல் நயந்தும் பாடல் ஓர்ந்தும்
சோர்ந்துள பொழுது சூழ்ந்தன ராகிச்
சேர்ந்தநம் எல்லையைச் சிறுமீன் பாண்டியர்
தமதென் றாக்கித் தருக்கினர்; இன்றோ
நமதென உரிமை நாடிப் புகுந்துளோம்;
பொறாது கயலோன் புழுங்குவ னாகின்
வெறாது செறாது விடுவதோ? . . . .

அச்சுதன் : …………….. …………. வேந்தே
சீற்றமும் வெறுப்பும் ஆற்றல் குறைக்கும்;
ஏற்றநல் லறிவும் ஏற்றங் கொளாது;
பொறுமையிற் சூழ்ந்து புகுதல் வேண்டும்;

மலைக்கோன்: பொறுமை பொறுமை இன்னுமோ பொறுமை?
பொறையெனப் புழுவெனப் பொறையனோ வாழ்வது?
மழவர் காலில் வளைந்து கிடப்பது
கழலோ? அன்றிக் கைவினைச் சிலம்போ?
கார்நிறத் துகிலிற் கட்டிய கச்சு
மார்பிலோ? அன்றி மருங்கில் இடையிலோ?
அஞ்சில் பீலி அணிந்த தலையிற்
குஞ்சியோ? அன்றிக் கூந்தலோ? சொல்வீர்!

அச்சுதன் : சேரர் மரபைச் செப்பலும் வேண்டுமோ?
வீரர் உணர்த்தும் வேளை வரும்வரை
பதுங்கி யிருத்தல் பயன்தரும்; மேலும்
வானநூல் வல்லர் வடநூல் முற்றுந்
தேனென மாந்தித் தெளிந்த மதியர்
தாக்குந் தரியலர் எனினுந் தணிந்து
தூக்கிச் சொல்லுஞ் சொல்லினர் மனத்துட்

காக்கும் மறையைக் கரக்குங் கண்ணர்
கற்றவர் மெச்சும் கணியன் நம்பியென்
கற்ற பெயரினர் நாள்கோள் உரைப்பர்
நலவழி மொழிவர் நாடாள் மன்னன்
குலவழி வணங்குங் குலத்தினர்; அவர்மொழி
கடவான் காவலன் . . . . . . .

மலைக்கோள்: (குறுக்கிட்டு)
. . . . . . . . . கணியன் மொழியைக்
கடவான் கொல்லோ காவலன்? . . . .

அச்சுதன் : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ஆமாம்
அவரால் எல்லையை அடைதல் கூடும்;

மலைக்கோள்: படையில் தலைவன் பண்புகள் எப்படி?

அச்சுதன் : நடையில் நல்லன் நாட்டின் அன்பன்
விழுப்புண் வேட்டு வெஞ்சமம் புக்கு
வழுத்தும் புகழ்பெறூஉம் வாய்வாட் சமரன்
ஏற்புடை வகையில் நாற்படை நடாத்தித்
தார்ப்படை தாங்குந் தலைமகன் ஆவன்
எழிலும் அறிவும் பழுநிய சுரும்பார்
குழவி உடன்பிறப் பாகிப் புரக்கும்
விழுமியன் அவன்றான் வெல்போர்க் கடம்பன்;

மலைக்கோன்: அவற்கோர் உடன்பிற் பாட்டி யுண்டுகொல்?
அவட்குக் கொழுநன் ஆகியோன் யாவன்?

அச்சுதன் : கொழுகொம் பறியாக் குலக்கொடி யம்மகள்
அழகிற் பண்பில் அவட்கோர் இணையிலை;

மலைக்கோன்: சுரும்பார் குழலி தோகையின் பெயர்கொல்?
விரும்பும் பெயர்தான்! வெல்போர்க் கடம்பற்குப்
பின்னவன் கொல்லோ? . . . . . . . . .

அச்சுதன் : . . . . . . . . . ஆமாம் பின்னவள்
சின்னவள் அரியணைச் சீர்பெறுந் தகுதியள்

மன்னவன் கருதின் மங்கையின் மாலை
மருவும்நும் தோளில்; திருவுளம் யாதோ?

மலைக்கோன்: தன்மகள் எழிலியை என்மனை யாக்க
மன்னன் சீயன் மனத்துட் கொண்டுளன்;
நீயோ
கொள்ளற் கேற்றவள் குழலி யென்றனை;
உள்ளம் இருவர்க் குறைவிடம் ஆமோ?

அச்சுதன் : பலரை மணத்தல் பார்புரந் தோம்பும்
குலவழி யோர்க்குக் கொள்மர பாகும்;

மலைக்கோன்: செல்வச் செருக்கிற் செய்பிழை யாவும்
நல்லவர் கோடல் நயத்தகு செயலோ?

அச்சுதன் : குழலியை மணப்பிற் கூர்வேற் கடம்பன்
பழகும் உறவாற் பணித்து நடப்பன்
பாண்டி மன்னன் பகையும் ஒழியும்;
ஆண்டுள சீயன் அரும்பெறன் மகளும்
ஈண்டு வருமேல் இருபெரு நாடும்
உறவாற் பிணையும்; ஒருபகை ஈங்கிலை;
உரிய எல்லையும் உளதாம் நமக்கே;

மலைக்கோன்: இழந்தநம் எல்லையை உழந்து பெறவே
விழைந்த தெம்முளம்; வேறு கருதேல்.

அச்சுதன் : வேறு கருதிலேன் வேலை வருங்கால்
மாறுகொண் டெழுந்து மண்ணை மீட்குதும்;

மலைக்கோன்: முரணிய சீயன் பொருகயற் கொடியனைச்
செருவிற் காணும் ஒருபெரும் நினைவொடு
வேண்டினன் நம்துணை வேளை வாய்ந்தது;
பாண்டியன் செருக்கும் பஞ்செனப் பறக்கும்;
கூண்டுக் கிளியெனக் கொட்டமும் அடங்கும்;

அச்சுதன் : பகைகொடு போர்செயல் பலபல பாழ்படும்
நனைமுக உறவால் நலம்பல விளையும்;

போர்தான் முடிவெனின் புகலேன் மறுப்பு;
கூர்வேல் விழியன் குழலியைச் சேரர்
பார்தாங் கரசியாப் பார்க்க விழைந்தனென்;

மலைக்கோன்: ஏக்கப் பெருமூச் செறிதரு சொற்கள்
ஊக்கின எம்மை உறுதுயர் விடுக;
சீயன் ஒருபாற் சிறந்து தாக்கப்
பாயும் புலியென யாமொரு பாலெழில்
இடுக்கித் தாக்குதல் ஏலா னாகி
மிடுக்கழிந் தொழியும் மீனவன் ஆங்கே;
குலமகள் குழலியைக் கொணர்குவம் ஈண்டு;

நலவழி மீதென நயந்துளேன் . . . . . . . . .

அச்சுதன் : . . . . . . . . . . . . நன்று
மணவினை காண மகிழுமென் னுளமே;

மலைக்கோன்: வேம்பன் வெள்ளணி விழவு காண
யாம்செல விழைதலின் ஆவன செய்க
சின்னாள் உளவாற் செய்வன செய்தே
அந்நாள் ஆங்கண் அறிவன அறிகுவம்
ஒன்னார் நாட்டின் உட்புகுந் திருந்தே.

## காட்சி 10

கரும்பார் குழலியும் தொல்குடி வழுதியும்
கரும்பின் மொழியாற் கலந்துரை யாடி
மாலைப் பொழுதின் மணங்கமழ் மலர்நிறை
சோலைக் காட்சியைச் சூழ்ந்துநோக் கினரே.

o o o o o

வழுதி : (சோலையில் தனிமையில் அமர்ந்து தனக்குள்)
அரண்மனை துறந்தனன் அருமனை துறந்தனன்
அரசு துறந்தனன் அரசில் அமர்ந்தனன்
மழலை பேசும் மதலை துறந்தனன்
பழகும் உறவினர் பற்றுந் துறந்தனன்
அடிபணிந் தேத்த அரியணை யமரும்
குடைநிழல் மறந்தனன் குடிநலம் நினைந்தனன்
மணிமுடி கடிந்தனன் மயிர்முடி முடிந்தனன்
தன்னலம் விட்டனன் பொதுநலம் வேட்டனன்
என்னே! என்னே! அவன்றன் ஈகம்!
மன்னன் வாழ்வினும் மக்கள் வாழ்வை
உன்னியோன் உயர்வழி உலகுக் குய்த்தனன்;

குழவி : (சோலையுட் புக்கு, அங்குத் தனித்திருக்கும் வழுதியைக் கண்டு)
தனிமை நாடினை தண்ணளி யுடையோய்
இனிமைப் பொழுதில் ஏன்முக வாட்டம்?
எண்ணக் கடலுள் ஆழ்ந்த தென்கொல்?

நண்ணுந் தனிமை நனிபடர் தருமே!
மலர்க்கா புகுவோர் மனத்துயர் தணிவார்
நலத்துட னமைதி நண்ணுவர்; நீயோ
கலக்கம் குழப்பம் கையறு மயக்கம்
புலப்பட இருத்தி; புக்க தென்கொல்?

வழுதி : கனிமொழி நீயேன் கலங்கினை? எனக்குத்
தனிமை இனிமை; தருபடர் காண்கிலேன்;
மயங்கிக் குழம்பி மனமுங் கலங்கி
இயங்கும் நிலையும் யானறி கில்லேன்;
ஆழ்ந்த சிந்தையான் அந்நிலை பெற்றேன்;
வாழ்ந்த மன்னன் வையகத் துயரம்
களைவான் வேண்டிக் காதல் மனையும்
வளைமதில் மனையும் தளையென ஒரீஇ
அரசடி யமர்ந்தோன் ஆய்ந்து கண்டு
பரசுங் கொள்கை பாருக் கீந்தனன்;
பற்றால் வருவது முற்றிய துன்பம்
அற்றால் வருவதோ ஆரா இன்பமென்
றுலகம் உய்யக் கலகம் அகல
நலவழி கண்ட நன்மா மகனைப்
புலனுயர் புத்தனைப் பொதுநலப் பித்தனை
உள்ளினென்; அதன்றலை உலக மாந்தர்
உள்ளமும் நினைந்தனென்; உலவா இன்பப்
புதுமை உலகுட் புகுந்தனென் அன்றி
மதிமயக் குறலோ மற்றோ ஒன்றிலை;

குழலி : உலவா இன்ப வுலகுட் புகுந்து
தலைவா தகுபொருள் யாது கண்டனை?

வழுதி : உலக மென்ப தலகிலாப் பெருங்கடல்;
அலைகடல் மிதக்கும் கலமே வாழ்க்கை;
முயற்சி துடுப்பா முந்நீர் ஊர்வோன்
அயர்ச்சியோ டளவிலா அவாக்கொளின் அவைதாம்
பெருவலி யாகிப் பேதுறச் செய்யும்;

கரைசெல விடாது கலத்தைக் கவிழ்க்கும்.
அவாஅ வறுக்கும் ஆற்ற லுற்றோர்
தவாஅத் துயரம் தவிர்ப்போர் ஆவர்
இன்ப வுலகில் இஃதே கண்டேன்

குழலி : உரவோய் இளையை உலகின் நீங்கிய
துறவோர் போல . . . .    . . . . .

வழுதி : (இடை மறித்து)
. . . . . .    . . . . . . தோகைநின் சாயல்,
குவளை நிகர்வழி, கூரிய நன்மதி
தவலில் மூரல், தண்டமிழ்ப் புலமை,
நவையது பேரெழில், நல்லியற் பண்பு
துறவைத் தடுத்துத் துணையொடு வாழும்
உறவை வளர்க்கும் உயர்பெருங் கருவிகள்;
என்முன் நின்னுரு வெழில்நலங் காட்டி
மின்னுங் காலை மேவுமோ துறவு?

குழவி : அறிவுத் தெளிவின் ஆன்றோய் போலவும்
செறியும் ஆண்மைத் திண்ணியோய் போலவும்
அரும்பெறற் சால்பின் அமைந்தோய் போலவும்
நிறைதரும் அமைதியில் உறைவோய் போலவும்
முகத்தெழில் காட்டும் . . .    . . . . .

வழுதி : (குறுக்கிட்டு)
. . . . . .    . . . . . . முகமன் வேண்டா
அகத்தில் மாசகல் அழகே அழகு;

குழலி : முகத்தின் பொலிவே மொய்ம்பநின் தூய
அகத்தின் பொலிவை ஆடிபோற் காட்டும்;

வழுதி : எற்புகழ்ந் தேத்தல் எப்பொருட் டோஉயிர்ப்
பொற்சிலை யனையாய் புகழ்ச்சி வேண்டா;
மன்னவர் நாளும் மகாஅர் நோன்பும்
பின்வரு திங்களிற் பெருவிழா வாதலிற்
பாவரங் கமைத்தது பைந்தமிழ்க் கழகம்;

ஆவல்மீக் கூர அடியனும் அகவற்
பாவொன் றாங்கண் பரிவுடன் உய்த்தனென்;
பாவாய் நீயும் பனுவல் யாத்துக்
கழகப் பாவலர் குழுவிற் சேர்த்தி;

குழலி : உழுவ லன்ப உய்த்துவென் யானும்
காவலன் மைந்தனின் கற்பனைப் பாடல்
தேர்வுறும் உறுதி . . . . . . . .

வழுதி : . . . . . . . . . . தேர்வு செய்குநர்
யார்புனை பாடல் எனவறி யாவணம்
ஓர்புனை பெயராற் பேர்புனைந் ததன்கீழ்
எழுதி யுய்த்துளென் ஏடறி குழுவிற்கு;
பழுது நிகழ வழியொன் றிலையால்;

குழலி : பேரை யென்மொழி பிறழ வுணர்ந்தனை;
புலமைப் பெருக்கால் பொருள்செறி சிறப்பால்
தலைமை பெறும்நின் தண்டமிழ்ப் பாடலென்
றியம்பிய தன்றி விளம்பிய தொன்றில்;

வழுதி : நயம்பட மொழியும் நல்லாய் நின்பா
புலமும் அணியுடன் பொருளும் பிறவும்
இலம்பா டுடைத்தோ? இனிமைத் தன்றோ?
நம்மிற் சிறந்ததா நற்றமிழ்ப் பாவலர்
தம்புலப் பெருக்காற் றருமுயர் பாட்டும்
செம்புலக் கழகஞ் சேர்தல் கடுமால்
தகுதி மிகுதி தலைமை கூறல்
நகைதரு செயலே நாமது தவிர்கம்;
நிழலும் மணமும் நிறைதரு சோலை
எழில்நலங் காண்குதும் எழுந்துடன் வருக;
(குழலி அவனைத் தொடர்கிறாள்)

குழலி : பாடல் வல்லான் பாட்டிசைக் கேற்ப
ஆடரங் கேறும் அணங்கின் இடையென
வளிநடன் ஆட்ட வளரிளம் பூங்கொடி
நெளியும் ஓசியும் நிமிரும் நுடங்கும்;

வழுதி : நங்காய் ஆங்கண் நறுமுக விரிமலர்
கொங்கு வழியும் கொழுவிய இதழுடன்
மென்கால் மோத மெல்லென நுடங்கி
நன்பூச் செடியில் நகைப்பது காணுதி;

குழலி : அன்னைநற் றோளில் அணைக்குங் காலை
நில்லாக் கழுத்தொடு நிமிருங் குழவியின்
தலையென அம்மலர் தளர்ந்தசைந் தாடிக்
கலையெழில் காட்டும் . . . . . . . . .

வழுதி : . . . . . . . . . கனிமொழிப் பாவாய்
போதுமென் றமையாப் புல்லியர் மனம்போற்
போது தோறும் போய்ப்புகுந் தலமரும்
வண்டினம் நோக்குதி . . . . . . . .

குழலி : . . . . . . . . வாய்மை வாய்மை
பெண்டிரை மலரெனப் பேசும் ஆடவர்
உளத்தில் பாங்கை உணர்த்தும் அவைதாம்;

வழுதி : கிளைக்குக் கிளைபாய் கிழமைக் கடுவன்
மந்தியொ டாடி மகிழ்தல் காண்க;

குழலி : இருக்கை மாறினும் இன்றுனை மாறாப்
பொறுப்பை அதுதான் பொருந்த உணர்த்தும்;

வழுதி : கிளையிற் றத்தங் கிளையுடன் பேசும்
இளமைக் கிளிகள் எத்தனை! எத்தனை!

குழலி : உலகை மறந்தன உறவை நினைந்தன
இலவு காவா இளமைக் கிளிகள்;

வழுதி : (நகைத்துக் கொண்டே)
ஆவணத் தெருவில் அவரவர் பொருளைக்
கூவும் ஒலியும் கொள்வோர் ஒலியும்
பொருளறி யாவணம் ஒருகுர லாகி
வருவது போல வகைவகைப் புள்ளினம்
ஒருங்குடன் கூடி ஒலிக்கும் பழுமரம்
மருங்கில் நிற்கும் மாட்சிமை காணுதி;

குழலி : புலமைப் பெரியர் புகல்பாச் சொற்கள்
பலபல பொருள்தரூஉம் பான்மை போல
இடுவிதை சிறிதே எனினும் அதுதான்
படரிய கிளையொடு படுமர மாகி
விழுதுகால் ஊன்ற விரிந்தும் உயர்ந்தும்
நிழல்தரும் இடன்தரும் நெடுநாள் நிலைபெறும்;

வழுதி : நல்கி நல்கி நல்குர வெய்தி
அல்குங் காலையும், அரும்பொருள் பெறுவான்
உள்ளி வாழுநர்க் குளமுவந் தீயும்
வள்ளியோர் தம்மை வழங்கு மாபோல்
காய்கனி வருபோர் களிப்புற வழங்கிச்
சாய்நிலை பெற்றும் தழையுதிர் வுற்றும்
நுடங்கு பூங்கொடி படர்ந்து வளர
உடம்பை நல்கும் உயர்மரங் காணுதி;

குழலி : தழுவிய மனைக்குத் தன்னை ஈயும்
கொழுநன் தன்மை கூறும் அதுதான்;
(ஆடும் மயிலைக் காட்டி)
மேடெனப் பசும்புல் மேவிய அரங்கில்
பாடினி யிசைக்கும் பாலைப் பண்ணின்
நீடிய பாடலின் நிறைகுறை போல
ஆடும் மஞ்ஞை அகவும் ஆங்கண்;
(வழுதி வேறுதிசையில் நோக்குவது கண்டு
சற்றே புலந்தவளாய்)
என்மொழி கொளாஅது யாங்கோ நோக்குதி
என்னை எள்ளினை; என்னுளம் வருத்தினை;

வழுதி : ஆய்தொடி நின்னிசை ஆங்கிருந் தெழுதல்
என்னே எனவியந் தென்னுளஞ் செலுத்திக்
கொன்னே தளர்ந்தேன்; கூவுங் குயிலது;
கூவிப் பன்முறை குடியில்தான் முயலினும்
மேவிப் பெறுங்கொல் மெல்லியல் நின் குரல்?
அளிய தக்குயில்

குழலி : . . . .   . . . . ஆஆ! கொற்றவ
குளிர்மொழி நின்போற் கூறுநர்க் காண்கிலேன்;

வழுதி : இயல்பே மொழிந்தனென்; என்மொழி யதனை
மயலோய் குளிர்மொழி எனநீ மதித்தனை;
பெண்மையால் உண்மையின் பெற்றிமை தேறாது
தண்மை வெம்மை என்றெலாம் சாற்றுதி;

குழலி : சினவேல் மன்னன் சேயென வந்தோய்
சினவேல்; விழியிற் செம்மை தவிர்க;

வழுதி : செம்மை தவிரும் சிறுவிழி எனக்கிலை;
நம்மை அதுதான் நன்னெறிப் படுத்தும்;

குழலி : புலமை விஞ்சிய தலைமகன் ஆகினை!
பலபொருள் படநீ பகர்தலின் அதனைத்
தெளிய வுணர்ந்தனென்; . . . .   . . . . . .

வழுதி : . . . . .   . . . . . . செந்தமிழ் மொழியிற்
கழிமிகு புலமை கற்ற தலைமகள்
ஆகினை யாதலின் அவ்வவர் புலமை
வாகை தேர்ந்து வழங்குதி சான்று;

குழலி : இயல்பே மொழிந்தனென்; என்மொழி யதனை
மயலாற் பிழைபட மதித்தனை நீபெறும்
ஆண்மையா னுண்மை அறியா துரைத்தனை
வாய்மை யுடையோர் வாய்மை மறைப்பர்

வழுதி : பிள்ளை மொழிபுகல் பேதாய் கூண்டுக்
கிள்ளை யெனநீ கிளத்துதல் அறிகுவென்;

குழலி : மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி;
என்னகம் நின்னகம் எனவே றில்லை;
சொன்னது சொற்றனென்; பின்னது பிழையோ?

வழுதி : சுருள்படு சூழலி சொல்லுக சொல்லுக;
மருள்தரு மாலை வருவது காண்க;

வழுதி : உட்குவரத் தோன்றும் ஒருபெரு வேந்தன்
கட்கம் ஏந்துங் கடுங்கண் மறவர்
படையோடு புகூஉம் பருவம் நோக்கி,
நடையெழில் மாதர் நடவாப் பிணியர்
கருவுறு மாதர் கன்றின் ஆவினம்
**பிறருங்** காப்பரண் பேணிப் புகல்போற்
புறவும் பூவையும் பிறபிற புள்ளும்
**சிறகர்** ஒடுக்கிச் சிற்றில் புகல்காண்;

குழலி : ஆடித் திரிந்த அங்கட் சிறாரைப்
பாடித் துயிற்றப் பரிந்தெழு தாயர்
பண்கொடு பாடப் பைந்துகிற் றொட்டிலுட்
கண்படை கொளாஅது கையுங் காலும்
நீட்டியும் ஆட்டியும் நெளியு மாபோற்
காட்டிற் றிரிந்துன வீட்டிய புள்ளினம்
கூட்டுட் புகுந்து குறுகுறுத் திருந்தன;

வழுதி : காலை மன்னன் கவர்ந்தனன் ஏக
மாலை மன்னன் மறித்து மீட்டென
ஈண்டிய ஆனிரை இல்லம் வேட்டு
மீண்டன மறுகிடை மேற்றிசை நோக்குதி;

குழலி : மருத முன்றுறை வருபுன லாடிப்
பெறுமக வுள்ளி விரையுந் தாயென
நின்னுந் திரிந்தும் நெடிய மேய்ந்துபின்
கன்று நினைந்து கறவைகள் மீண்டன;

வழுதி : காமர் மலர்க்கா கண்டு களித்தனம்
யாமும் மீள்வோம் எம்முடைய மனைக்கு;

குழலி : நில்லாக் கழுத்தொடு நிமிருங் குழலி;
தொட்டிற் கிடந்து துள்ளும் இளஞ்சிறார்,
மருத முன்னுறை வருபுன லாடிப்
பெறுமக வுள்ளி பெயருந் தாய், என
முன்னர் உரைத்த மொழிக்குறிப் பெல்லாம்
நின்செவிப் புகாது நீங்கின கொல்லோ?

வழுதி : கேளாச் செவியன் எனவோ கிளத்தி?
தேறாக் குறிப்பைத் தெரிய வுரைத்தி;

குழலி : ஆய்புல முடையோய் அறிந்தும் மறைத்தி
தாய்மை பெறயான் தவிப்ப தறியாய்?

வழுதி : நெருநல் நினைவு நிறைவுறா வுலகில்
வருநாட் கணக்கு வரைந்தனை மனத்துள்
பேரவாக் கொள்ளிற் பெருவலி யாகிப்
போரவாக் கொண்டது பொருங்காற் கலமே
கவிழ்தல் கூடும்; கற்பனை யுலகில்
அவிழும் ஆவலை அடக்கப் பயில்நீ;

குழலி : திருமணம் வேட்டல் தெரிவைக் கியல்பே
பெருகிய அவாவெனப் பேசுதல் முறையோ?

வழுதி : நடப்பது நடக்கும்; நாளைக் கனவு
நடக்குமோ இன்று? நங்காய் அவியை!
சரிசரி வாவா சாருதும் விரைந்தே

# காட்சி 11

மாண்பமை மாறன் மாதேவி தன்னுடன்
நாண்மங் கலத்தன் நாளவை யமர்ந்து
நாடறி புலவர் நாடாள் வேந்தர்
ஏடறி யமைச்சர் இனிதிற் சூழப்
பாடல் வாகை சூடியோர் தமக்கு
நாடும் பரிசில் நல்கினன் மகிழ்ந்தே.

செம்புலச் : துதியாப் பகைஞர் மிதியா மாமலைப்
பொதியிற் குரியோன் புகழொடு வாழ்க

அவையோர் : வாழ்க வாழ்க ...... .......

செம்புலச் : ...... ...... வற்றா வளந்தரச்
சூழ்புன லோடும் தூயநற் பொருநை
நாட்டின் வேந்தன் நல்லோன் வாழ்க

அவையோர் : வாழ்க வாழ்க ...... .......

செம்புலச் : ...... ..... வையப் பாவலர்
வாழ்வுடன் கலந்த வையைக் கோமான்
சூழ்கழல் மன்னன் தோள்கள் வாழ்க

அவையோர் : வாழ்க வாழ்க ...... .......

நாகனார் : ....... ...... வண்டமிழ் மூன்றும்
வாழ்வென விழைந்து வளர்ப்போன் வாழிய!

அவையோர் : வாழிய வாழிய ..... ......

கனியன் : ...... வண்குடி யோம்பும்
குடையுங் கோலும் கொற்றமும் வாழ்க

செம்புலச் : நடையறா தொழுகும் நாளவைப் பெரியீர்
நடையுடை வேந்தர் பலராய் வந்துளீர்
தெருவிடைப் புதுமணல் தெள்ளிதிற் பரப்பி
நிழல்தரு பந்தர் நீளிடை யியற்றி

எழில்பெறு தோரணம் எங்கணும் நாற்றிச்
சுவரெலாம் வான்சுதை கண்ணந் தீற்றிக்
கவரும் வகையாற் கைத்திறங் காட்டப்
பழம்பெரும் மூதூர் அழகுறு வனப்பால்
புத்தூ ராகிப் பொலிவது கண்டீர்;
முத்தமிழ் நிகழ்ச்சி எத்திசை நோக்கினும்
பத்தி பத்தியாப் பார்த்து மகிழ்ந்தீர்;
கோட்டச் சிறையகங் குறுகியோ ரின்மையிற்
பூட்டாக் கதவொடு பொலிவதும் நோக்கினிர்;
துறைதொறும் வல்லார்த் துருவி யவர்தம்
நிறைவுறு திறமை நிறுத்து நோக்கி
குறைவறப் போற்றுதுங் கூர்ந்தது காண்மின்;
பாவலர் திறமை பாருல கறியும்
ஆவலின் அரங்கொன் றமைத்தனம்; ஆங்குப்
பாடல் தாங்கிய பலப்பல ஏடுகள்
நாடி வந்தன நடுவர் ஆய்ந்து
முதன்மை காண முயன்றனர் அவற்றுள்
எதனைத் தேர்வ தெனத்தடு மாறிச்
சிறந்தன இரண்டு தேர்ந்தனர் ஏடுகள்
திறந்தவை காண்குநர் திறமை யுணர்வர்;
ஆடவர் மகளிர் ஆயிரு பாலர்
பாடற் குரியர் பரிசிற் குரியர்
அவர்தாம்
மாலிருங் குன்றன் மலர்சூழ் சுரும்பு
கோலுங் குழலி கூறும் பெயரினர்;
(அவையோர் கையொலியெழுப்புதல்)
இருவீர் தாமும் ஈங்கிவண் வருக

பெறுவீர் வேந்தன் பீடுறு பரிசில்
மாலிருங் குன்றன் வருக வருக
(ஒருவரும் வாராமையால் மீண்டும்)
மாலிருங் குன்றன் யாண்டுளன் வருக!
(வழுதி வருகிறான். அனைவரும் வியப்பில்
ஆழ்கின்றனர். பாண்டியன், தேவியை நோக்க)

மாதேவி : என்முகம் நோக்குதல் ஏனோ? பெரும;

பாண்டியன் : நின்கடைக் கண்ணால் என்முகம் நோக்கினை
ஆதலின் யானுன் அருள்முகம் நோக்கினென்;

மாதேவி : ஐய போதும் அவையோர் நம்முகம்
பைய நோக்கினர் பார்மின் அவையை;

நாகனார் : (வழுதியை நோக்கி)
மாவிருங் குன்றன் வருக என்றனம்
வாலறி வுடையாய் வழுதிஏன் வந்தனை?

வழுதி : யார்புனை பாடல் எனவறி யாவணம்
பேர்புனைந் தொருபா பேரவைக் குய்த்தனென்
பழுதுரை நிகழா வழியிஃ தெனநினைந்
தெழுதத் துணிந்தனென் ...... ......

நாகனார் : ....... ..... எனின்அப் பாடல்
அவையோர் முன்னர் அறைகுவை கொல்லோ?

வழுதி : நவையறு பெரியீர் நவிலுவன் கேண்மின்;
"உண்டா லம்மஇவ் வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும்கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்

பிறர்க்கென முயலுநர் உண்மை யானே."
(அவையோர் ஆர்ப்பொலியெழுப்ப)

நாகனார் : கருவிற் றிருவினை; கழறிய பாடல்
பொருண்மொழிக் காஞ்சி புகல்வ துணர்ந்தனம்;
பாவலர் பெரும பரிசில் பெறுக
காவலன் நல்குவன் கடிதிற் பெறுக
(பரிசில் பெற வழுதிவர)

பாண்டியன் : (மெலிய குரலில் தேவியை நோக்கி)
காலவன் மைந்தன் பாவலன் ஆகினன்;
பாவலற் பயந்த தாய்நீ யாகினை;

வழுதி : (பாண்டியன் நல்கிய முத்துமாலையைப் பெற்று)
தண்டலை சூழ்ந்து தண்ணிழ லளிக்கும்
வெண்டலை யுறையும் விறன்மிகு புலவீர்
என்சிறு பாடல் ஏற்றம் பெறுதல்
நும்மருட் கொடையே; நுண்பல நாவால்
புன்மனச் செய்யிற் புலர்பொழு துழுது
நன்செய் நிலமென நற்பயன் விளைத்தீர்
ஒருபெரும் பரிசில்நும் திருவடி வைத்துப்
பெருமிதங் கொள்ளுவேன் பெரியீர் நும்மடி
தொழுமெனை வாழ்த்துக தொண்டனை வாழ்த்துக;

நாகனார் : எழுக எழுக என்னுயிர் மைந்த
வாழ்நாள் நினக்கு வளர்க; என்விழி
சூழ்புனல் மல்கித் **துவித்தது;** புலனம்
அளக்கற் பாற்றோ? அளித்தஇப் பாடல்
அளக்கர் சூழுல கறிந்தறி தேத்த
நிலைத்துத் திகழும்; நின்பெயர் வாழும்;
நிலையா வுலகத்து நிலைத்தது நின்பா;
(அவையை நோக்கி)
அவையீர் யானொன் றறைகுவென் கேண்மின்
இவனோர் இளைஞர் எனினும் சான்றோர்

மெச்சும் புலமை மேலுயர் பண்புடன்
அச்சமில் ஆண்மை **அடக்கம்** முதலன
உளனிவன் பெருமைக் குரியன் ஆதலின்
இளம்பெரு வழுதி எனும்பெயர் வழங்கி
உளங்கனி கொள்ளுவென் உலகும் அப்பெயர்
வழங்கி யழைக்கும் வாழ்த்துக அவையே;
(அவையோர் வாழ்த்த)
சுரும்பார் குழலி தோன்றுக அவையில்
(குழலி அவை முன்வர)
நறும்பா கெனநீ நாட்டவர்க் குவந்து
தரும்பா நவில்க தையால் கேட்குதும்;

குழலி : **மரக்கலம் நடுக்குற அலைக்கும் மாகடல்**
**புரக்கும் எனினும் பொங்குங் காலை**
**அழிப்பன பலவே; அகல்வான் மிசையெழில்**
**கொழிக்கும் பாலொலி அளிக்கும் வெண்மதி**
**புணர்ந்தார்க் கின்பம் புரியும் அதுதான்**
**தணந்தார்க் குறுதுயர் தரூஉம் மறுநாள்;**
**நல்லன யாவும் நல்லன வல்ல**
**அல்லன யாவும் அல்லன வல்ல;**
**ஒருகால் இனிதென உணரும் ஒன்றே**
**மறுநாள் துனிதரும் அறிகதில் மனனே;**
(அவையோர் ஆர்ப்பொலியெழுப்ப)

நாகனார் : ஞாலத் தியற்கை நவில்பா வழங்கு
கோலக் குழலி குடைநிழ லமர்ந்த
மாறன் தேவி மனத்தொடு நல்கும்
ஆரக் கோவை அவையிற் பெறுக

குழலி : (பரிசில் பெற்று வந்து)
ஐய நும்மடி ஆரம் வைத்துத்
தையல் என்றலை தாழ்த்தி வணங்குவேன்

நாகனார் : வாழிய மகளே வாழிய வாழிய
ஆழ்கட லுலகின் அமைதரும் இயல்பைச்

சூழ்மதி கொண்டு சொற்றனின் பாவும்
பொருண்மொழிக் காஞ்சி புகன்றமை கேட்டனம்;
இருவீர் உளமும் ஒரு பொருண் மேலன;
இன்பம் தருபொருள் துன்பமுந் தருமென
மன்பதைக் குறுதி வாய்மொழி தந்தனை
நன்கது தேர்ந்து நடைமுறை யாக்குக;
வழுதியும் நீயும் வாகையிற் பெற்ற
கோவை யிரண்டுங் கொற்றவன் பரிசில்;
பாவை நினக்கே பயன்படுங் கொள்க;
(குழலி மீண்டும் வணங்கிச் செல்ல)

பாண்டியன் : (தேவியை நோக்கி)
தெரிவை குழலியின் திறலறி காலை
விரியகல் மார்பன் வெல்போர்க் கடம்பன்
ஒருமுகத் துறூஉம் உணர்வுகள் காண்நீ;

மாதேவி : திருமக ளவட்கு மருவுதாய் தந்தை
உருவில் உளத்தில் உணர்வில் அவனே;
பின்னவள் உயிராப் பேசி வளர்ப்போன்
அன்னை நிலையில் அகம்மகிழ் வுற்றனன்;
பெண்மை நலங்கனி பெண்மகள் அவள்தான்
பெண்மை உயர்ந்து பிறங்கச் செய்தனள்;
அழகாற் கல்வி யறிவாற் பண்பால்
வழுதிக் கிணையென வாய்த்தன ளன்றோ?

பாண்டியன் : (புன்னகை பூத்து)
குழலி வாழ்வைக் கூர்ந்து நோக்கிக்
கழறுவ அனைத்துங் கருத்துடை மொழிகொல்?
தொடங்குறின் னுளக்குறிப் படங்கும் அதனுள்;
நடந்து முடியும் நாளை யெண்ணுக;

மலைக்கோ : (அச்சுதன் தேவனை நோக்கி)
கடம்பன் உடன்பிறப் பெனநீர் கழறிய
மடந்தை யிவள்கொலோ? மயிலின் சாயல்

இளமை புலமை எழிலோடு பெண்மை
உளபிற வனைத்தும் ஒன்றினொன் றுயர்ந்த;
அரியணைச் சீர்பெறற் குரியள் எனஅன்
புறுமொழி தந்தீர் உண்மை; உண்மை;

அச்சுதன் : இவண்நம் முளங்கள் இரண்டும் ஒன்றின;
அவருளம் ஒன்ற ஆவன ஆற்றுவென்;

மலைக்கோ : ஆற்றுக ஆற்றுக அதன்முன் ஈங்கு
வீற்றமர்ந் திருக்கும் வேந்தர் தம்மைக்
கணியனைக் கடம்பனைக் கடுங்கட் சீயனை
மணிமுடிச் சோழனை மற்றுள அரசரைப்
பாண்டி மன்னற்கு வேண்டுங் குழுவைக்
காண்டல் வேண்டும் கடிதின் முயல்க;
மன்னன் பாண்டி மண்டலங் காணச்
சின்னாட் டங்கிச் செல்லுதும் யாமே.

## காட்சி 12

எல்லை கடந்தனன் மலைக்கோன் என்னுஞ்
சொல்லது நெஞ்சிற் சுடுதலின் வெகுண்டு
நாளவை யிருந்த வாள்வலி மீனவன்
கேளெனுங் குழுவோடு சூழுரை யாடிப்
படை தொடக் கடம்பனைப் பணித்தனன் அவனே.

காவலன் : (நாளவை யமர்ந்த பாண்டியனை வணங்கி)
தென்னா டுடையா திருமா வலியோய்
பன்னூ றாண்டு பார்புரந் தோம்பி
மன்னி வாழ்க மழைவளஞ் சுரக்கும்
நாஞ்சில் ஒற்றன் நம்மலை வந்துளன்;

பாண்டியன் : தீஞ்சொல் தருவன் தென்பா லொற்றன்
உள்வர விடுக ..... .....

ஒற்றன் : ..... ..... ஒருகுடை நிழலமர்
ஒள்வேல் மன்ன ஓங்குக கொற்றம்
தென்றிசை மருங்கின் நின்னுள நிலைப்படைக்
கொன்றிய தலைவன் ஓலை தந்துளன்;
(ஓலையை வாங்கிப் படித்துக் கொண்டே
பாண்டியன் கனன்று நகைசெய்ய)

ஏவலன் 1 : காவலன் நகைத்தனன் கார்பொரும் இடியெனப்
பாவும் அவ்வொலி பன்மணி மண்டபம்
யாவும் எதிரொலி யெழுப்புதல் கேள்நீ
நிகழ்வ தியாதோ? நெஞ்சதிர் கின்றது;

ஏவலன் 2 : நகைதவழ் முகத்திற் பகைகொளுஞ் சீற்றம்;
அடர்தரு புருவம் அகல்நுதல் ஏறின
நிமிர்ந்தெழு மீசை தொடர்ந்து துடித்தன
அருள்விழி யிரண்டும் அழன்றன பார்நீ;

ஏவலன் 1 : விரிநுதற் புருவம் வியர்த்தது காண்நீ
வியனகல் மார்பம் விம்மிப் புடைப்பக்
கயலுயர் வெல்கொடிக் காவலன் தோள்கள்
வீங்க ஆங்கண் விடுநெட் டுயிர்ப்பொலி
இங்குநம் செவியுள் இடிப்பது கேள்நீ;
பொறுமைக் குரியர் புலவர் முகமும்
கருமை மருவிக் கலக்கம் உறல்காண்;

ஏவலன் 2 : உறுசினந் தோன்ற ஒற்றன் ஓலை
தருபொருள் யாதோ? வருவது போரோ?

ஏவலன் 1 : செம்புலச் சிறையார் சிந்தையும் முகமும்
வெம்பித் தவித்தனர் விளக்கங் காணாது;

ஏவலன் 2 : இடைவாட் கையன் படைஞர் தலைவன்
குடையோன் முகத்தைக் கூர்ந்து நோக்கினன்;

ஏவலன் 1 : கணியன் நம்பி கடுகள வுணர்வும்
அணிகொள் முகத்தில் அரும்பா திருந்தனர்;

ஏவலன் 2 : முற்றும் உணர்ந்த நற்றவத் தவரைப்
பற்றுமோ உணர்வு? ...... ......

ஏவலன் 1 : ..... ...... பார்பார் அங்கே
இளம்பெரு வழுதியின் உளங்கொள் உணர்வு
விளம்பும் முகமும் விழியுஞ் சிவந்தன;

பாண்டியன் : அமைச்சர் பெரும அருந்திறற் கடம்ப
நமைச்சிறு தூசெனப் பகைத்தனம் மலைக்கோன்;
நாஞ்சிற் றலைவன் நம்முழை உய்ந்தது
தீஞ்சொல் லன்று தீச்சொல் லாகும்;
தென்றிசை யெல்லை மண்தினும் ஆவல்

துன்றிய மனத்தோடு தொடுத்துளன் நெடும்போர்;
எல்லைப் படையை இரியச் செய்தவன்
அல்லிற் புகுதந் தமைத்துளன் பாசறை;
நெஞ்சுட் கரவு நிறைந்தவ னாகி
வஞ்சியான் வெள்ளணி காண வந்தனன்;
ஒழுகுதே னுதட்டில் உரைபல வடித்துப்
பழகினன் நம்பினம்; பகைபுகை மனத்தன்
வஞ்சனை செய்தனன்; வஞ்சியான் எனுஞ்சொல்
வஞ்சனை யுடையாற்கு வாய்புடைத் தாமோ?
மாற்றார் காலடி மண்படாப் பொதியிற்
காற்றோ நுகரக் கருதினன்? கயவ.!
கூற்றொடு பொருதக் குறித்தனன் போலும்!
ஏற்ற நட்பின் இழுக்கில னாகிற்
போற்றுவம்; தென்றற் புதுமணம் பெறலாம்;
இகலொடு வருமேல் இருப்புள உயிர்ப்பும்
பகல்முன் பனியெனப் பரந்துகெட் டொழிவன்;
முழுமுதல் தடிய விழுமரம் போல
அழியும் அவன்றான் அரசொடுஞ் சாய்ந்து;

நாகனார் : தகைசால் வேந்தே தணியா தோங்கும்
வெகுளி தவிர்க வேண்டுவ செய்க;

பாண்டியன் : இகன்மை யறியா இன்றமிழ்ப் புலவீர்
வெகுளி தவிரும் வேளையோ ஈது?
தரியலர் தாமே உரியநம் எல்லையுட்
செறிவது கண்டுஞ் சினவா தென்செய?
இனப்போர் எனினோ சினப்பீர் இவன்நம்
இனத்தான் எனவும் இயம்புவீர் ஐய'
மனத்தான் நினைமின்; வஞ்சகர் நம்மண்
தினத்தான் விடவோ? திருடர் புகவோ
வாளுந் தோளும் வட்டவெண் குடையும்
கோலும் பெற்றுளேன்? ..... ......

நாகனார் : ..... ..... கொற்றவ கேண்மதி;
வெகுளி தவிர்த்து வேண்டுவ செய்கெனப்
பகர்ந்ததை மறைக்கும் பதற்றம் உற்றனை;
பதறா தறிவாற் பகுத்துணர்; நன்மை
சிதறா தாய்ந்து செயற்படு வல்லே;
படையெடுத் தாற்றும் பகைப்போர் வெறுப்பேன்
படைதடுத் துஞற்றும் நடைதடுத் தறியேன்;
தடுத்துத் தாங்குந் தானைகொண் டெழுக
தொடுத்த போரைத் துணிவுடன் எதிர்க;

பாண்டியன் : மானம் ஓம்பும் மறத்தமிழ்ப் புலவர்
மீனும் வேம்பும்மேம்பட மொழிந்தனர்
'வருபொரு ளுணர்த்தும் பெருமதி அமைச்சர்
தருமொழி யறியத் தவிக்கும் நம்முளம்;

செம்புலச் : பொருவ தென்ப தொருமுடி பாகும்
இருவே றில்லை; எண்ணித் துணிந்து
மறுநாள் மொழிகுவேன் ..... ......

பாண்டியன் : ..... ..... மண்டமர்க் கடந்து
வாகை சூடும் வாளுடைக் கடம்ப .....

கடம்பன் : தோகை மகிழுந் தொடர்முகில் ஆர்ப்பின்
ஓகையென் மனத்தெழும் ஒருமுர சார்ப்பின்;

பாண்டியன் : நன்று நன்று நண்ணார் தொலைந்தனர்
வென்று மீள்குவம்; விரகறி கலியீர்
நாளுங் கோளும் நல்லன வாகச்
சூழும் மதியாற் சொல்லுக .....

கணியன் : ..... ...... ..... சொல்லுதும்;

பாண்டியன் : பகைஞர் புகாவனம் பாண்டி யெல்லையில்
அகநிலைப் படையோன் றமைத்தனம்; மந்தணம்
அதனை மலைக்கோன் எவ்வணம் அறிந்தனன்?
மதனுடைப் படையை மடக்கிய தெவ்வணம்?

வெள்ளணி காண விழைந்தான் போல
மெள்ள நுழைந்து மேவிய மறையறிந்
தெள்ளிப் பகைத்தனன்; எலியோ புலியை
வெல்ல விழைவது? வெறுங்கன வன்றோ?
துஞ்சுபுலி இடறிய சிதடன் அவனைப்

பஞ்செனப் போரிற் பறந்திடச் செய்குவேன்;
ஆழம் அறியா ஆழியுள் ளிறங்க
வீழ்மதி யுடையோன் விடுத்தனன் காலை;
குன்று முட்டிய குரீஇ யாகிச்
சென்று தொலையச் சிந்தை கொண்டனன்;
சையத் தருவியிற் சார்தரு சருகெனக்
கையற் றேங்கிக் கடிதின் ஓடும்;

வழுதி : அரணும் அரண்சூழ் அகப்படை நிலையும்
முரணியோர் யாங்ஙனம் முற்றுந் தெரிந்தனர்?
மறையந் தெரிந்து மாற்றலர்க் குரைக்குநர்
மறைய நின்றுளர் மன்னவைக் களத்தே;

கடம்பன் : ஆமாம் யானும் அஃதே நினைந்தனென்
தீமா றுளத்தரைத் தெரிந்து கடிகுதும்;

செம்புலச் : அற்றம் உரைக்குநர் ஈண்டில ராகிலும்
ஒற்றான் ஒற்றி ஓர்ந்தது காண்குவம்;

வழுதி : வேந்தே விடைதரின் வெருவலர் செருக்கிப்
பூந்தே னிறைக்கும் பொழில்சூழ் எல்லையிற்
றாமே புகுந்தவர் தருக்கினை யடக்கிப்
போமா றவரைப் புறமிடச் செய்குவேன்;
என்னாட் டெல்லையை இகக்கக் கருதும்
ஒன்னார்த் தெரூஉம் உரமிலே னாகின்
ஓங்குயர் தமிழின் உரிமை காவாத்
தீங்குள் நினையும் சிறிய னாகுக;
பிறர்நலம் பேணாப் பேதைமை விஞ்சுங்
கரவுளங் கொளூஉம் கடைய னாகுக;

பேணிய நட்பிற் பிறழ்ந்து வஞ்சங்
காணிய விழையுங் கயவ னாகுக;

கணியன் : மலைவளங் கெழுமிய மலைக்கோன் அவனோடு
மலைதற் கேற்ற வலியன் வழுதி;
காளை நிகழ்த்துங் கன்னிப் போர்க்கு
வேளை யிதுவே விரைந்திது செய்க;

கடம்பன் : இளையார் சமர்செய எனினுங் களஞ்செலா
இளையர் ஆகலின் இளம்பெரு வழுதி
போர்வேட் டெழுதல் பொருந்துவ தன்று;
தார்தாங் கமரில் தானை நடாத்திப்
பாண்டி நாட்டின் பழம்பெரும் மானம்
ஈண்டுக் காத்தல் என்பெருங் கடனாம்;

வழுதி : வழுதியின் வலியிற் கடம்பர் கையம்
எழுவ தென்கொல்? என்வலி நம்பிலர்;

கடம்பன் : ஐய நின்னுழை ஐயங் கொண்டிலேன்
செய்யெனச் செய்யும் செயலேன் தாய்நா
டோம்பும் பணியேன் ஒருவர்ப் பனியேன்
வீம்பும் அறியேன் விரகும் அறியேன்
நாளை மன்னர் நலிவுறா தோம்பும்
தோளும் எனதே ஆதலிற் சொன்னேன்

நாகனார் : தடந்தோட் கடம்பன் தவறாக் கணியர்
தொடர்ந்துள மொழிகள் தூயன வெனினும்
கடமை பிழையாக் கடம்பன் உரைத்தாங்
கடுபோர் நடாத்த அவனே செல்க;

கணியன் : என்னுடன் முரணி இயம்புத லொன்றே
தென்மொழிப் புலவர் தந்தொழி லாகும்;

நாகனார் : ஆய்ந்து நல்லன அறைகுவ தெந்தொழில்
காய்ந்த மொழியெனக் கழறுவ திவர்தொழில்;

செம்புலச் : பூசல் தவிர்க போர்மேற் கொண்டுழிப்
பேசல் பலவகை; பிழைபடா வொன்றை
வேந்தர் தேர்க வினைமேற் கொள்ளுதும்;
புலவர் நாவிற் பொருந்தும் மொழிகள்
நலமே தருமென நம்புதும் யாமும்;

பாண்டியன் : இடும்பை தரவரூஉம் ஏதிலர் தம்மேற்
கடம்பன் படையொடு கடிதிற் செல்க;
நன்னாட் குறித்து நவில்வர் கணியர்;
ஒன்னார்த் தேய்க்கும் உரவோர் தாம்பெறப்
பிண்டம் மேய பெருஞ்சோ றளிக்குதும்
மண்டமர் குறித்த மறுநாள் அதனைத்
தண்டு மகிழத் தகுமா றியற்றுக

செம்புலச் : நறைகமழ் தொடையோய் முறைமுறை யாகக்
குறைவற நிறைவுறுந் திருவுளக் குறிப்பே;

# காட்சி 13

கணியன் கடம்பன் இருவர்க் குறித்தும்
தனிமையில் அமர்ந்து தண்டமிழ்ப் பாண்டியன்
அமைச்சர் புலவரோ டாய்ந்துரை யாடிப்
பகைப்புலம் அழிக்கப் பணித்தனன் அவனே.

பாண்டியன் : நூலறி கணியர் மேலுள குறையை
நாளவை வினவுதல் நன்றிலை யாதலின்
தனித்துச் சிலசொல் தந்துரை யாட
நினைத்தீண் டுமைவர வழைத்தனம் பெரும
கற்றறி புலவீர் கணியன் றன்னுழை
உற்ற குறையென்? உரைக்கும் மொழிக்கெலாம்
மறுப்புரை நல்க மனங்கொளல் என்கொல்?

நாகனார் : கருத்துண ராது கலங்குதி வேந்தே
மறைக்குரி யார்மேல் மனக்கசப் பறியேன்
வெறுப்புள மிருப்பின் வேதிய ரவரைத்
தவறாக் கணியர் எனவோ சாற்றுவேன்?
தவறாக் கருதேல்; தானை நடாத்த
வழுதி செலுமேல் வட்கார் களத்து
வழுநிகழ் வுறுமென வருமோ ரையம்
எழலால் மறுப்புரை எடுத்து மொழிந்தனென்;

பாண்டியன் : வழுநிகழ் ஐயம் வருமா றென்கொல்?
தெளிவின் விளம்புக ..... .....

நாகனார் : ..... ..... தெரிந்தன கூறுவென்;
வஞ்சி நாட்டு வம்ப மாக்கள்

அஞ்சாக் கடம்பன் அணிமனை நோக்கிப்
பல்கால் வரலும் பல்பொழு தாங்கண்
அல்கிச் செல்லும் அவிழா ஒலியொடு.
மொழிதலும் உண்டென மொழிந்துளன் குழலி;
அழிசெயல் சூழ்ந்திவன் ஆற்றவுங் கூடும்
எனுமோர் ஐயம் எழுந்ததென் மனத்துள்;
இளவல் வழுதிக் கிகலோர் நாப்பண்
பிழைகள் வருமெனப் பேதுற் றெண்ணி
வெல்போர்க் கடம்பன் செல்கவென் றுரைத்தேன்;
செல்வோன் ஆங்கட் சிறுமை புரியின்
பெரும்பழி வருமெனப் பெரிதும் அஞ்சுவன்
வருபகை முருக்கி வாகை கொள்ளுவன்
எனயான் நினைந்தே இளவலைத் தடுத்தேன்;
முனமுணர்த் தொருசொல் முந்துற வெண்ணிக்
கடமை பிழையாக் கடம்பனென் றவற்கோர்
அடைமொழி தந்ததும் அப்பொருட் டாகும்;

செம்புலச் : புலவர் பெரும பொறுத்தருள் புரிக
சலமிகு செயலனென் றையுறல் தவறு;
கடம்பன் அத்தகு கயவனென் றுள்ள
உடம்படா தென்மனம்; ஒள்வேல் மன்னர்க்கா
இடும்பை வரினும் ஏற்கும் இயல்பினன்;
தாயகப் பற்றிற் றளராப் பிடியன்;
தீய நினைவிற் பாயுமோ அவனுளம்?

நாகனார் : நல்லவர் பண்பர் நடுவர் என்போர்
பொல்லா ராகும் பொழுதும் உண்டு;
பேரவாப் பேயின் பேழ்வாய்ப் பட்டோர்
நேரவாம் மனத்தின் நீப்பர் வேர்ப்பர்;
கரைப்பார் உரைப்பிற் பொருப்பு உருகும்;
ஆட்டு வித்தால் ஆடா ருளரோ
கேட்டு மனத்தர் கூட்டாற் கடம்பன்
விரிமனம் அதுவுந் திரிதரும் அன்றோ?
பிரையுறு தீம்பால் திரிதல் இயல்பே;

செம்புலச் : ஒற்றர் தருஞ்சொல் உண்மை யாகலின்
மற்றவர் செயலினில் மாசிலை ஐய;

நாகனார் : ஐயம் எனயான் அறைகுவ தன்றி
மெய்யென நிறுவ விழைந்திலேன் அமைச்ச;
மாசிலல் எனிலென் மனமகிழ் வுறூஉம்;
ஆசில னாகுக அஃதென் னாவல்;

செம்புலச் : உளவு பகைஞர்க் குரைப்போ னொருவன்
உளனெனல் முற்றும் உண்மை எனினும்
கடம்பன் அவனலன்; கடமை புரிய
உடம்படு வோனை ஒற்றின் ஆய்ந்து
விரைவிற் கூறுவென் விலங்குடைக் கையனாய்ச்
சிறையுட் படுவன் சின்னாட் பொறுமின்;
மெல்லியற் குழலி சொல்லிய பாடலில்
நல்லன யாவும் நல்லன வல்ல
என்னுந் தொடரில் மன்னும் பொருடான்
உன்னி யுன்னி உணரற் பாற்று;

பாண்டியன் : யாவரே யாகினும் ஆகுக; இனிநம்
பாவலர் ஐயம் படரா திருக்கச்
செல்செல் லிடந்தொறும் செவியுங் கண்ணும்
பல்பல் வகையாற் பயன்படல் வேண்டும்;
கல்லோடு மண்ணும் கட்டிய சுவரும்
புல்லுக புல்லுக புரையறு செவியே.

செம்புலச் : வேற்றவர் அறியா வேறுவே றுருவில்
மாற்றமுஞ் சூழ்ச்சியும் மறைந்தறி ஒற்றர்
ஒவ்வார் மனத்துள் உன்னுங் குறிப்பும்
நன்னர் அறிவாரை நாற்புறத் தமைத்துளென்;
கால்புகா விடத்தும் அவர்தங் கால்புகும்
வேல்புகா விடத்தும் அவர்தம் விழிபுகும்;
கடிமனை யகத்துக் கரந்துரை யாடினும்
கடிதிற் சென்றவர் காதுட் புகூஉம்;
மாற்றலர் தேஎத்து மறையும் அறிவான்
மாற்றுருக் கொளுமேல் மனையும் அறியாள்;

பாண்டியன் : வஞ்சியான் எனநாம் மனத்துள் நினைந்தனம்
வஞ்சியான் அவனோ வஞ்சம் செய்தனன்;
மலையான் எனநாம் மகிழ்ந்தனம் மேலை
மலையான் நம்மொடு மலைய வந்துளன்;
சிலையான் நம்கைச் சிலைவலி யறியாச்
சிலையனோ நம்மொடு சினங்கொண் டெழுவது?
சிலம்பாறு கொள்ளச் சிலம்பன் எழுமேல்
இலம்பா டுடைத்தோ எம்தோள் வலிமை?

செம்புலச் : அடுபோ றின்றி நெடுநாள் உறையும்
கொடுவாள் உரைகழித் தோச்சும் ஒருநாள்
தொடுத லிலாது தூசுறும் வேல்கள்
கொடுநுனி சிதையுங் கோலத் திருநாள்
வாங்குதல் அறியாது தூங்கும் வில்லும்
ஏங்கு தூ ணியும் இணையும் நன்னாள்
வந்தது வேந்தே ..... .....

பாண்டியன் : ..... ...... வருக வருக

நாகனார் : முழங்கால், புறவடி மழுங்கித் தேயக்
குழந்தைப் பருவத்துக் குலவிய திம்மண்;
அன்னை யூட்டும் அமிழ்தினும் மேலெனத்
தின்ன விழைந்த திருமண் ஈது;
நடந்துந் திரிந்தும் ஆடியும் ஓடியும்
படர்ந்து வளர்ந்து பழகிய மண்ணிது;
வாழ்வின் கூறுகள் வகைவகை நுகர்ந்து
மாள்வதும் இம்மண் மாற்றார் கொளவோ?

பாண்டியன் : கொளவிடோம் கொளவிடோம் உளமுடை யாதீர்
தாய்க்கொரு பழிவரத் தரியோம் தரியோம்
வேய்க்குலம் எம்முளத்துச் சினத்தீ மூட்டியோர்
தீக்கிரை யாதல் திண்ணம் திண்ணம்;
பூழி நாடெனப் புகலும் அதற்குப்
பூழிக் காடெனப் பொருத்துவம் பெயரே.

## காட்சி 14

நள்ளென் யாமத்தும் நண்ணி பாசறை
மன்னர்க் கண்டு மனம்நெகிழ் கனிமொழி
பலபடக் கூறிப் பரிசிலும் நல்கி
மலையன் வீறுரை வழங்கினன் வெகுண்டு
தலைவன் விறல்வேள் தன்னொடுஞ் சூழ்ந்தே.

காவலன் 1 : (மலைக்கோன் பாசறைதொறும் புகுந்துவரல் கண்டு)
கண்படை கொள்ளாக் காவல ஆங்கண்
வெண்படாம் விசித்த வியனகல் பாசறை.
மதநீர் பொழிந்து மதர்த்துத் தறிப்படாக்
கதமிகு களிறு பிளிறும் பாசறை,
விழுப்புண் ஏற்றோர் செய்துயிர்த் திருக்கும்
புகுக்கல் நாறும் புலவுப் பாசறை,
விளக்கந் தாங்கி வீரன் முன்செலத்
துளக்கம் அறியார் துணிவினர் தொடரப்
படையின் முன்னோன் பணிவொடு செல்லத்
தொடையற் பணையணி தோளுயர் வேந்தன்
புகுந்து புகுந்து போதல் காண்நீ;

காவலன் 2 : புகுந்தோன் ஆங்கட் புண்படு மறவர்
தோளில் அமைந்த தொடிப்பூண் கையன்
வாள்வாய் முனைஞர் வகைவகை யறிந்து
முகனமர்ந்த தினிய மொழிந்து பலபொருள்
அகனமர்ந் துருகி அருவி அவரைத்
தேற்றும் பாங்கும் திண்டோள் மென்றுகில்

காற்றின் நெகிழக் கையிற் றழுவி
நள்ளிராப் பொழுதினும் பள்ளி கொள்ளான்
மள்ளர் சிலரொடும் திரிதரும் மாட்சியும்
உள்ளியோர் சமரில் ஊறெது நேரினும்
உள்ளா ரதனை உயிரும் ஈகுவர்;

காவலன் 1 : நமது பாசறை நண்ணினன் பேசா
தமைக ..... ...... ......
(அரசன் அருகில் வர)

இருவரும் : ..... அரசே அடியோம் வணக்கம்
(மன்னன் புன்னகை செய்துவிட்டு)
மற்றொரு பாசறையுட் புக)

விறல்வேள் : கைவேல் களிற்றொடு போக்கக் களிறு
மெய்ம்மேற் சாய்தலின் மீளி யிவன்றன்
கால்கள் நைந்தன; காளை யிவனோ
வேல்பட மார்பில் விழுப்புண் பட்டனன்;
பகழி நுனியாற் பழுதுற் றொருவிழி
மிகுபுண் ணீரொடு மேவினன் இவனே;
கொய்யுளைப் புரவிக் குளம்புகள் படலாற்
பெய்யுங் குருதிப் பெரும்புண் பட்டு
மெய்யெலாஞ் சிதைந்து வீழ்ந்தனன் இவன்றான்;
குழுவோடு வந்த கொடும்படைப் புகுந்தோன்
அழுவத் துற்ற அடையலர்த் தொலைத்து
வாள்வாய் படலாற் றோள்க ளிழந்து
மீள்வோன் மயங்கி வீழ்ந்தனன் இவனே;
தலையுந் தோளும் தாரணி மார்பும்
பலபல காயம் பட்டோ ரிலரே;

மலைக்கோன் : (படைத்தலைவனை நோக்கி)
வெற்றித் திருமகள் விழைந்தோ ராதாலின்
உற்ற விலைதந் துரிமை பெற்றனர்;
அத்தகு மறவர் அகமகிழ் வுறுமா

றெத்தனைப் பொன்னும் இல்லிற் குய்க்க;
(சிதைந்த படைக்கலங்களை நோக்கி)
கருவிகள் பலவும் உருவழிந் தனகொல்?

விறல்வேள் : உருவழி கருவிகள் பெருகின மன்னா
உரைகழி நெடுவாள் உடன்றவர்ப் பொருங்கால்
மருமம் பாய்ந்து குருதி தோய்ந்து
கதுவாய் போகிக் கைப்பிடி யிழந்தன;
தகவேல் அவ்வழிக் கடந்தரன் முற்றிக்
கதவம் உடைத்துக் கடும்போர் நிகழ்த்த
நுதிகள் மழுங்கிச் சுரைகள் கழன்று
காம்பும் ஆணியுங் கலங்கிக் கெட்டன;
விடுகணை இடைவெளி விடாது தொடலாற்
கொடுவிற் பூட்டிக் குழையா திறுக்கிய
நெடுநாள் தேய்புரி யாகி நின்றன;

மலைக்கோ : கருவிகள் புதியன விரைவின் இவண்வரும்;
பொருசமர் புரிவீர் ஒருசொற் கேண்மின்;
கடலான் இன்று கடல னாகிப்
பேடென நம்மைப் பிறழ வுணர்ந்து
பூமி நாடு பூழி யாகுமென்
றூழுறு பூவென உதிர்த்துளன் சிலசொல்;
மிதியற் செருப்பை மேவலன் அவன்றான்
மிதிக்குஞ் செருப்பென மதித்தனன்; முன்னோர்
போற்றிக் காத்த புகழ்பெறும் அயிரை
ஆற்றுக் குறுமணல் அயிரையென் றெண்ணிப்
போற்றல னாகிப் போர்மேற் கொண்டுளன்;
ஆயிரை பற்ற ஆற்றுட் செல்லான்
அயிரை மலையை அணுகினன் மீனவன்;
உரிமை அடிமை இரண்டுள் ஒன்று
தெரிதல் அவ்வழிச் செயற்படல் நுங்கடன்;
சுவர்வாழ் பல்லி உவரிவாழ் முதலையைக்
கவர நினைப்பிற் கனவினுங் கூடுமோ?

விறல்வேற் : (படைஞரை நோக்கி)

உடையா நெடுவே லுடையீர்! எதிர்க்கும்
படையா ரறியாது பதுங்கித் தாக்கும்
நடையும் சிலகால் நயத்தல் வேண்டும்;
எப்படை யெத்திசை என்றறி யாவணம்
அப்படை மயங்க ஆங்காங் கமைக;
பிறரறி யாவணம் விரைவொடு சென்று
நிலைப்படை மறைந்துள நெடுவிலை யரணை
வளைத்து நின்று தொலைத்தல் வேண்டும்;
குன்றின் பாங்கர்க் கொடும்படை யொன்று
நின்றுள தென்றும் நெடுமரஞ் செறிந்த
காட்டில் ஒருபடை கரந்துள தென்றும்
வேட்டம் போகும் மிளைசூழ் காட்டின்
கோட்டில் வேற்படை குவிந்துள தென்றும்
எல்லைக் கோட்டில் இருபெரும் படைகள்
வில்வாள் மறப்படை விரைந்துள தென்றும்
செவியிற் புக்கன சிந்தையிற் கொள்க;
அவையவை நன்கறிந் தாங்காங் குறைவோர்
புறத்துறா வண்ணம் புடைபடை முற்றி
மறத்துறை காட்டுக மாற்றார் களத்தே.

## காட்சி 15

தோல்வியிற் கவன்ற தொடித்தோட் பாண்டியன்
மேலெழு செங்கதிர் விரிபொழு தத்துக்
கடிமனை யிருக்கக் கன்னி குழலியைக்
கடத்தினர் என்னுங் கடுமொழி கேட்டுக்
காவலன் றன்மகன் காளை வழுதியை
மேவலர் மேற்செலப் பணித்தனன் சினந்தே.

நாகனார் : நிலந்தொழ வந்த வலந்தரு பாண்டிய
இலங்கொளி வீசி எழில்தவழ் நின்முகம்
கலங்கிய மனத்தைக் காட்டுவ தென்கொல்?
அஞ்சுத லறியா ஆண்மை யுணர்த்தும்
செஞ்சுடர் விழிகள் சிறுத்தன எதனால்?
புன்னகை மாறா நின்னிதழ் உலர
என்னோ நிகழ்ந்தது? மன்னா உரைமதி;

பாண்டியன் : தென்றிசை மருங்கிற் சென்ற நம்படை
வென்றி காணாது வெந்நிட் டோடக்
குன்றும் மிளையும் நின்ற படையும்
பொன்றின எஞ்சொற் புகுந்தநாள் முதலாக்
கன்றி யென்றுங் கசிந்துநெக் குருகும்;
என்றும் என்குலம் ஏலாப் பெரும்பழி
ஒன்றித் தாழ்ந்து குன்றிய தென்னால்;

செம்புலச் : களம்பல கண்ட காவல கலங்கேல்
உளங்கொள வேண்டுவல் யாதுரை ஒருமொழி;
புதைகணை பாய்ந்து புண்படப் பெருமை

சிதையா தூன்றும் மதகரி போலச்
சிதைவு வருங்காற் சிறிதும் ஒல்கார்
மதனழி யாது மானங் காப்போர்;

பொருசமர்க் களத்துப் புகுவோர் தாமும்
இருவ ரன்றோ? இருவரும் ஒன்றே
பெறுதல் உண்டோ? ஒருவர் தோற்பதும்
ஒருவர் வெல்வதும் உலகத் தியற்கை;
எழுமதிற் பூனை எப்பாற் றாவும்?
பழுதற வுரைப்போர் பாரில் இல்லை;
தோல்விக் குழன்று துவளா மனத்தர்
மேல்வரும் வெற்றி மிலைவோர் ஆவர்;

பாண்டியன் : இகலியோர் நம்முன் அந்நாள் வரையும்
புகலிடந் தேடிப் போதுவ ரன்றி
வென்றா னெனுஞ்சொல் விளைந்த துண்டோ?
கொன்றா பன்ன கொடுஞ்சொல் கேட்டேன்
குனற்றா வன்மை குன்றிய தென்கொல்?
பின்றாழ் கூந்தற் பேதைய ராகி
நின்றார் கொல்லோ நெடுவேல் மறவர்?

நாகலார் : இடர்வருங் காலை இன்னா தெனக்கொளிற்
றொடருந் துயரந் துளிர்த்துப் படறும்;
வாளாற் பகையை வணக்குதல் போலத்
தாளால் ஊழையுந் தடுத்தல் ஆகும்;
சூழ்ந்தொரு முடிவு துணிந்து செய்க;
தாழ்ந்த தோல்விக்குத் தளரா மனத்தொடு
துன்பம் அகற்றி இன்பந் தருவினை
இன்னே ஆற்ற எழுக வேந்தே;

பாண்டியன் : தோலாக் கடம்பன் தொடுத்த போரில்
ஏலாப் பழியோ எய்துவ தெமக்கு?

செம்புலச் : படையின் மறைகள் பகைவர்க் குய்ப்போர்
இடையுள ரெனவறிந் தினிநட வாது

தடைகள் அமைத்தனம்; தரியலர் போரில்
உடைபடல் உறுதி உருத்தெதிர் எழுக;

நாகனார் : அன்றே உரைத்தனம் அடுபோர்க் கடம்பன்
நன்றே செய்வான் போல நடித்துளன்;
ஐயம் உளதென அவன்மேல் உரைத்தவெனன்
பொய்யென மறுப்புரை புகன்றனர் அமைச்சர்
மெய்யெனச் செய்து மீண்டுளன் அவன்றான்;

செம்புலச் : கடுகின் அளவும் கடம்பன் பிழைத்திலன்
விடுக ஐயம் வெண்டலைப் புலவீர்;

நாகனார் : அன்றும் மறுத்தீர் அவன்செயல் கண்டபின்
இன்றும் மறுப்பில் எவ்வணம் ஏற்பது?

செம்புலச் : வாகை நமக்கு வாய்த்தில தால்அத்
தீமைக் கவனெனச் செப்புதல் நன்றோ?
பழிப்புக் குரியன் படைமுன் னோனலன்;
இழித்தற் குரியோன் இனுஞ்சின் னாளில்
வெளிப்பட லுறுதி; வேண்டுவ சூழ்குவம்;

பாண்டியன் : அமர்க்கு மீண்டும் அணிவகுத் தெழுதல்
அமைச்சர் குறிப்போ? .... .....

செம்புலச் : (இடைமறித்து)

..... ...... ஆமாம் காலங்
கடவா தெழுதல்நம் கடமை யாகும்;
குடமலைக் கோனவன் கொண்ட வெற்றிக்
களிப்பில் மூழ்கினன் கரையிலாச் செருக்கிற்
குளித்துத் திளைத்துப் பழிக்கும் அவனைக்
களத்துப் புனலில் விழச்செய் வேளையீ
துளத்திது கொண்டு விழித்துடன் றெழுக;

பாண்டியன் : குலப்பழி துடைத்துக் கொடிதவழ் மீனுடன்
மலர்த்துணர் வேம்பின் மானங் காத்தல்
முதற்பணி யாகும்; முனைப்படை கூட்டி

| | | |
|---|---|---|
| | | மதர்த்தெழச் செய்க மருவலர் நாட்டே<br>கதப்படை கொண்டுயான் களம்புக நினைந்துளேன்; |
| வழுதி | : | வளம்பல நல்கும் வையை வேந்தே<br>இளம்பெரு வழுதியென் னிருசெவி கேட்க<br>உம்மிகச் சினந்து களம்புகு வேனென<br>விளம்பும் அச்சொல் வேலெனத் தைத்தது;<br>களம்புகும் தகுதி காளை யென்பால்<br>இலையென வேந்தர் என்னினீர் போலும்;<br>கொலைவே லேந்தும் கோட்புலி புகட்டிய<br>கலையெலாம் பொய்யோ? கையிற் கொள்வது<br>சிலையோ? அழகுக் கலையோ? என்னை<br>அன்று தடுத்தீர் அமைந்தனென் யானும்<br>இன்றுந் தடைசெயின் என்வலி நம்பிலீர்; |
| பாண்டியன் | : | மகிழ்ந்ததெம் முளமே மைந்துறு மைந்த<br>இகழ்ந்திலம் நின்வலி ..... ..... |
| வழுதி | : | .... .... எமையாள் பெரும<br>வேந்தர் மைந்தன் என்பது விடுத்து<br>மாந்தருள் ஒருவனா மதித்து நாட்டின்<br>பீடு காக்கப் பேருளங் கொள்க<br>நாடாள் மைந்தன் நானெனுஞ் சொல்லின்<br>நாடுவாழ் மைந்தன் எனலே நலத்தது; |
| செம்புலச் | : | வாய்த்துள தலைமை வழுதிக் களித்தல்<br>ஏற்புடைத் தாகும் .... .... |
| நாகனார் | : | .... .... இனியது செய்க; |
| பாண்டியன் | : | அமைச்சர் புலவர் ஆமென இசைந்தனர்<br>உனைச்சுமந் தீன்றாள் உடன்படல் வேண்டும்;<br>(இடையில் மாறன்மாதேவி வர)<br>தக்க வேளையிற் புக்கனை தேவி<br>புக்கம ராற்றப் புகன்று நின்மகன்<br>தக்கன கூறித் தாழ்ந்து வேண்டினன்; |

இவ்விரு புலத்தரும் இசைந்தனர், போர்நின்
செவ்விய உளத்துக் கொவ்வா தென்பை;

மாதேவி : (இடையிற் குறுக்கிட்டு)
வலித்து செல்போர் மறுப்ப துண்மை
வலிந்து வருபோர்க்கு வாள்தொட மறுப்பின்
பேடியர் என்று பேசுமிவ் வுலகு;
சாடித் தகர்ப்பதே சால்புடைத் தாகும்;
அருஞ்சமம் முருக்கி ஆடவர்க் கடந்து
பெருங்களி றெறிந்து பெயர்ந்தனம் காளை
எனுமொழி கேட்பின் ஈன்றாட் கதனின்
இனியதொன் றுளதோ? .... ....

பாண்டியன் : .... ... இனிய மொழிந்தனை;
மறக்குடி மகளிர் மனத்தின் பாங்கைத்
திறப்பட வுணர்த்தினை தீந்தமிழ் மொழியாய்;
(அமைச்சரை நோக்கி)
நன்னாள் குறிக்க நான்மறைக் கணியர்
இந்நாள் ஈங்கிலர் யாது செய்குவம்?

வழுதி : தோகும் வாகும் துணிவும் உடையோர்
நாளும் கோளும் நாடார் வேந்தே;
வெலும்நாள் முன்னர் வேதியர் குறித்துச்
சொலினர் எனினும் தோல்விவந் துற்றது;
நன்மையும் தீமையும் நாளில் இல்லை
நன்மதி வலிமை நடுங்கா முயற்சி
மிகினுங் குறையினும் மேவும் அவைதாம்;
பெற்றதும் ஆணையாற் பேரமர் உழக்கி
வெற்றி கொண்டு மீள்குவென் உறுதி
தோனிற் கொண்ட தூய வாகைநின்
தாளிற் சூடத் தருகுவேன் நாளை;

காவலன் : (இடையே ஓடிவந்து)
செல்வி குழலியைச் சிறைசெய் தேகினர்
புல்லிய பகைவர் எனுஞ்சொற் புக்கது;

பாண்டியன் : யாண்டுளன் கடம்பன்? .... ....

காவலன் : .... .... யாரும் அறியார்;

மாதேவி : பாண்டிநன் னாட்டிலோ பாவையர்க் கிந்நிலை?

பாண்டியன் : வில்லன் அவன்றன் வினையிது போலும்;
கொல்ல னுலையிற் குதித்துளன் கொடியன்
மண்ணைக் கவர்ந்தவன் பெண்ணையும் கவர்ந்துளன்
உண்ணிறை மானத்திற் கோரறை கூவல்
விடுத்துளன் வெம்போர் தொடுத்துளன் அவனைத்
தடுத்துத் தொலைத்துத் தலையைக் கொணர

பாண்டியன் : எழுக எழுக இன்னே எழுக
வழுதி தலைமையில் வயவர் எழுக
பாண்டியர் குடிக்குப் பழியோ என்று
கூண்டு திறந்த கொடுவரிப் புலிபோல்
ஈண்டி யெழுக எதிர்க போரே.

# காட்சி 16

மீண்டு வந்த மேலவன் குழலியைக்
காண்டலும் உளமிகக் களித்தன ராகிப்
பாண்டியன் அவனுடன் பட்டத் தரசியும்
வேண்டிய கூறி விளம்பினர் வாழ்த்தே.

.....

பாண்டியன் : வந்தாய் கொல்லோ? வாஎன் மகளே!
என் தாய் நினக்கோர் இடரும் இலையோ?

குழலி : வெந்துய ரொன்றும் விளைந்திட வில்லை
வந்தவர் தமக்கே வளவிய நல்லடி.

பாண்டியன் : எந்துயர் களைந்தனை! யாது நிகழ்ந்தது?
வந்தோர் யாவர்? மலைநாட் டவரோ?

குழலி : எந்நாட் டவரோ ஏந்திழை யறியேன்;
என்னாட் டோலர் என்பது தெரியும்;

மாதேவி : ஏனுனைக் கடத்தினர்? எங்குனை நடத்தினர்?
தேன்மொழி யுடையாய் திருடரோ அவர்தாம்?
(நாணி நிற்க)
நாணம் எதற்கு? நடுக்கம் எதற்கு?
பேணும் எம்முழைப் பேசுக துணிந்து;

குழலி : வம்பலர் ஆகினும் வழிப்பறி செய்யும்
வன்பவர் பாலிலை; வாள்வாய் கையர்
மன்னர் அழைத்தனர் என்ன மொழிய
நன்னுதல் யானும் நம்பித் தொடர்ந்தேன்;

வழியிற் றமக்குள் வாயுட் பேசிய
மொழியென் செவியில் முழுதும் விழவிலை;
செவ்வேள் குன்றத் திசையிற் செல்ல
இவ்வழிச் செலல்ஏன்? எனயான் வினவ,
'வாய்திற வாது வருக' எனலும்;
ஓய்த லின்றி உளந்துடிப் பேறப்
போயொரு நெறியிற் புகுங்கால் அவ்வழிக்
காவலர் வருதல் கண்டுவாய் திறந்துயான்
ஓவென் றலற .... ....

மாதேவி : .... .... ஊர்காப் பாளனோ
ஆங்கு வந்தவன்? .... ....

குழலி : .... .... அறியேன்; கைவேல்
தாங்கி வந்தவர் தடுக்க வம்பலர்
வாள்கொடு மோத வாரும் மேலும்
நீள்பொழு துராய்ந்து வாள்கீழ் வீழ்ந்தது
வீழ்ந்த வாளை விரைந்தெடுத் தியானும்
சூழ்ந்து தாக்க, .... .....

பாண்டியன் : .... ..... சொல்சொல் மகளே

குழலி : அவ்வுழைப் பரிமிசை அண்ணன் வரலும்

பாண்டியன் : எவ்வணம் கடம்பன் அவ்வுழை வந்தனன்?

கடம்பன் : இல்லினும் புகலும் ஏவலர் கூற
வில்லிற் கணையென விரைபரி யேறித்
திருநகர் யாண்டுந் தேடி வருங்கால்
முருகன் குன்றின் அருகிற் கண்டேன்;

குழலி : அண்ணன் வருதல் அறிந்ததும் வம்பலர்
கண்ணிமை மூடுமுன் கடுகி ஓடினர்;

பாண்டியன் : (கடம்பனை நோக்கி)
கன்னி யிவட்குக் கடிமணங் காணா
தின்னும் இருத்தி இயற்றுதி விரைவில்;

கடம்பன் : பொருசமர் மூண்டுள பொழுதிஃ தாதலின்
திருமணங் குறித்துச் சிந்தை செய்திலேன்;
அவட்கும் அஃதே அமைந்த கருத்து
தவமகள் கருத்தைத் தாண்டி யறிவேன்;

பாண்டியன் : அஞ்சா வழுதி அமர்மேற் கொண்டு
வஞ்சி சூடி வஞ்சிமேற் சென்றுளன்;

மாதேவி : இச்சமர் முடிந்ததும் இனிவரும் தையில்
மெச்சுந் திருமணம் மேவுக இவட்கே;

கடம்பன் : அரசியின் வாழ்த்தால் அவ்வணம் ஆகுக;

மாதேவி : உரியான் மணமகன் ஊரெது கடம்ப?

கடம்பன் : (நகைத்துக்கொண்டே)
அறியேன் தாயே அவள்மனம் விழையும்
ஒருவனை மணக்க உரிமை தந்துளேன்;

மாதேவி : இனியன், இளைஞன்; வழுதிபோ லெழிலன்
தனிமக ளிவட்குத் தலைவன் ஆகுக;

கடம்பன் : உள்ளுணர் வுந்த உரைமொழி மெய்யாய்க்
கள்ளவிழ் மலர்க்குழற் கன்னியைக் காக்க;

மாதேவி : அன்பும் அறிவும் ஆன்ற கல்வியும்
பண்பும் அழகும் பாவை பெற்றவள்
அனையளை மணக்க அரசனே வருவன்
முனமே அவட்கு மொழிகுவென் வாழ்த்தே.

## காட்சி 17

மொய்ம்பன் கடம்பன் முரணியோர்ச் சார்ந்து
பொய்ம்மலி வஞ்சம் புரிந்தான் மன்னர்க்கென்
றையுறு குழலி அவனோடு சினந்து
வெய்ய உரைத்தனள் வெயில்சாய் பொழுதில்
பைய உலவும் படர்மனைப் புறத்தே.

.....

(கவலைதோய்ந்த முகத்துடன் வெல்போர்க் கடம்பன் அங்குமிங்கும் உலவ)

குழலி : கரிய முகமுங் கவலை விழியும்
உரியை யாகி உலவுதி யென்கொல்?

கடம்பன் : மேல்வரு நாளெலாம் மிடல்மிகு போரில்
தோல்வி யறியாத் தோள்கள் இன்று
சோர்ந்தன; பகைஞர் சூடினர் வாகை;
ஈர்ந்தண் வையைக் கிழக்கு நேர்ந்தது;

குழலி : மெய்காப் பாளர் மேவல ராகின்
உய்வழி ஏது? செய்வன செய்தபின்
கவன்றாற் போமோ களங்கம்? செய்த
தவறுகள் புனலாற் றவிர்தலும் உண்டோ?

கடம்பன் : தொடர்பிலா மொழிகள் தொடுத்தனை நின்மனம்
படர்துயர் யாதெனப் பகருதி இன்னே;

குழலி : ஒன்றும் அறியாய் போல உரைத்தி
நன்றோ நின்செயல்? நாடே தூற்றும்;

கடம்பன் : நாடு தூற்ற நானென் செய்தேன்?
கேடு நினையுங் கீழ்மையென் கண்டனை?

குழலி : கேடிது போலக் கேட்டிலேன் முன்னர்
நாடழி வுறலால் விளைபயன் நமக்கென்?

கடம்பன் : நாடழி வுறுசெயல் யானோ நயந்தனன்?

குழலி : உயிர்உயிர் என்றெனை உவந்துவந் தழைத்தனை
செயிர்கொள யானிவண் செய்பிழை யாது,

கடம்பன் : பிழைசெய் தனையெனப் பேசவோ செய்தேன்?
மழையெனப் புனல்விழி பொழிவதும் என்னோ?

குழலி : கண்ணே மணியே கார்குழற் பாவாய்
பெண்ணே உயிரே பின்பிறந் தாளே
அன்னாய் என்றெலாம் அழைத்தனை களித்தனை
என்னோ நீதான் இப்பிழை செய்தனை?

கடம்பன் : கண்ணே மணியெனக் கருதுவ தென்றும்
உண்மை யம்மா ஒருபிழை கருதேன்;
பிழைபிழை யென்று பேசுதி யென்கொல்?
விளைந்தது யாதென விளம்புதி இன்னே;

குழலி : தூசு படிந்தென் துணைவிழி கலங்கின்
வீசு வெயிலின் விழுமென் புழுப்போல்
துடிதுடித் தெழுவை துவள்வை; அவ்விழி
கொடிபிடித் தெனநீர் கொட்டுமா றியற்றினை;
ஒருமுடி கலையின் ஒதுக்கிநின் கைகொடு
வருடி வருடி வருந்துவை திருத்துவை;
இன்றோ
கலைந்த கூத்தலும் கம்பலைக் குரலும்
உலர்ந்த இதழும் ஒழுகிய விழியும்
யான்பெறச் செய்தனை; அளியோய் இனியே
வான்வழிப் படர்குவென் வாழ்வினி வேண்டேன்;

கடம்பன் : உணர்ச்சித் துடிப்பின் உதிர்த்தனை சுடுமொழி
துணர்ப்பூங் கோதாய் துடிதுடித் துரைத்த
நின்மொழி என்னை நெடுவே லாகிப்
புண்படச் செய்தன; புலம்புதி யென்கொல்?

குழலி : பின்னவள் வாழ்வைப் பேணா நின்றன்
புன்செயல் கண்டபின் புலம்பா தென்செய?

குழலி : மணமலர் அணியுமென் மலர்முகங் காணாது
பிணமலர் சூட்டும் பெருந்தீங் கிழைத்தனை;
உயிரிலா உடலை ஒளியெரி கொழுவ
அயலில் நின்றழு; அன்னையின் அன்பை
நின்பாற் கண்டு நேரிழை வாழ்ந்தேன்
என்பால் எரிகுணம் ஏன்கொண் டனைநீ
உடன்பிறந் தேகொலும் உறுபிணி யென்பர்
உடன்பிறந் தெனக்குநீ ஓர்பிணி யாகினை!

கடம்பன் : பேதைநின் வாழ்வைப் பேணுதற் கென்றே
மேதினி மிசையுயிர், மெல்லுடல் சுமந்துளேள்;
பெண்ணெ நின்னை என்னே னாகி
ஆண்மகற் குரிய அரும்கடைப் பயிற்சி
அளித்து வளர்த்தேன் அதற்கோ இம்மொழி?
தக்கோன் நினைக்குத் தாரணி திருநாள்
எக்கால் வருமென ஏங்கித் துடிக்கும்
எனையோ உறுபிணி என்றெலாம் ஏசுதி?
மனம்நீ பிறழ்ந்து மயங்கினை கொல்லோ?

குழலி : அன்னை தந்தை அண்ணன் என்றெலாம்
நின்னை யுளத்துள் நினைந்துளே னாதலின்
உள்ளத் துள்ளது தெள்ளத் தெளிய
விள்ளுவ துடையேன் வெறாஅ திதுகேள்;
அன்னை தந்தை அற்றவ ளென்னை
மன்னன் மைந்தன் மாபெரும் வழுதி
மன்றல் கொள்ள மனத்துள் நினைந்துளன்;
நின்னொடுஞ் சூழாது நேரிழை யானும்
என்மனக் கதவம் இசைந்து திறந்தனென்;

கடம்பன் : (குழலியின் கண்ணீரைத் துடைத்து)
இதற்கோ சுற்றினை இத்துணை நேரம்?
மதர்த்தெழும் இளங்கொடி வளர்மரந் தாவிப்
பற்றுத லியல்பே; பாவை நீயும்
கற்றவள் பகுத்தறி வுற்றவளை நின்னைப்
பெற்றவர் மானம் பேணிக் காப்பவள்
என்னோடும் உற்றவள் இழையாய் பிழையே;
சின்னவள் நின்னுளம் செய்யோன் அவனுளம்
பின்னுதல் குறிப்பாற் பிழையா தறிவேன்;
தென்னன் அவைக்களத் தீந்தமிழ்ப் புலவர்
மன்னர்க் குரைக்க மாபெருந் தேவியும்
நின்னைக் கொளற்கு நேர்ந்த செய்தியும்
செம்புலச் சிறையார் செப்பக் கேட்டுளேன்;
அம்பலப் புலவர், அரசர், அரசி
இசைந்தன ராதலின் யானுந் தடாது
நசைந்துளம் மகிழ்ந்தனென்; நடுக்கந் தவிர்க;

குழலி : நடந்தன தெரிந்துமோ நாடாள் மன்னற்கு
நடலை புரிந்தனை? நகைதரும் நின்செயல்!

கடம்பன் : நடலையா? நானா? நாடாள் மன்னற்கா?

குழலி : உடன்பிறப் பாகி உயர்ந்தோய் ஆம்ஆம்;
கூடார் தம்மொடுங் கூடிப் பாண்டி
நாடாள் வேந்தர்க்கு நடலை புரிந்தனை;

கடம்பன் : என்மொழி புகன்றனை இளையோய்? பிறரிப்
புன்மொழி யுரைப்பிற் றம்முயி ரிழப்பர்;
பின்னவ ளாதலிற் பிழைத்தனை போபோ'

குழலி : என்னோடு சீறி யென்பயன்? நாட்டின்
மன்னர் இதனை மனத்துட் கொண்டே
பின்னைப் போர்க்கு நின்னை உய்த்திலர்;

கடம்பன் : அடாமொழி என்செவிப் படாமுனம் துடித்து
விடாதுயிர் கொண்டுளேன் வீணன் ஆகினேன்;

அம்மா இவ்வணம் அடாப்பழி கூற
நின்வாய் துணிந்ததோ? நினைப்பினும் நடுங்கும்;

குழலி : என்வா யென்ன! இவ்வுல கனைத்தும்
வஞ்சகர்க் காலில் வாய்திற வாவோ?

கடம்பன் : தடந்தோள் மார்பு தாங்கிய புண்ணும்
படர்ந்த நெற்றியிற் பட்டுள காயமும்
கடம்பன் கடந்த கடும்போர் தந்த
வெற்றிப் பரிசில் விழுப்புண் காண்நீ
மற்றிவை கண்டும் வஞ்சகன் என்றோ
சொற்றனை மடவை? சூழ்பகை நாப்பண்
கொற்றவற் காக்க உற்றென் னுயிரும்
பொருளாக் கருதாது பொருது மீட்டுளேன்;
மருளால் அறிவு மயங்கினை போலும்;
தாயக மண்ணுந் தாயும் ஒன்றே
தாய்க்கோ தீமை தன்மகன் நினைவன்?

குழலி : சீற்றம் விடுக; தென்றிசைப் போரில்
தோற்ற தெதனால்? .... ....

கடம்பன் : ..... ..... மாற்றலர் நம்படை
மறைகள் பலவும் நிறையத் தெரிந்துளர்;

குழலி : (இடை மறித்து)
மறையம் அனைத்தும் மாற்றலர் அறிய
நிறைய வுரைத்தோன் நீயே யன்றோ?
வீரர் தலைவன் வெல்போர்க் கடம்பன்
சேரற் கொற்றுரை சிறிய னாகினன்
அவன்றன் உடன்பிறப் பாட்டியைக் கொள்ள
எவர்மனம் இசையும்? இளம்பெரு வழுதி
உடன்படும் என்னும் ஒண்ணுதற் றேவியும்
தடந்தோள் மன்னரும் தடுப்ப ரன்றோ?
உடன்பிறந் தாட்கே உறுதுயர் தந்தனை!

கடம்பன் : மட்படு மொழியாய் மூடுநின் வாயை
கடம்பனோ மறையங் கழறுவன் சீசீ!

குழலி : என்வாய் மூடுவென் இவ்வூர் வாயை
என்கொடு மூடுவை? இகல்நாட் டுள்ளோர்
நம்மில் புக்கும் நயந்துரை யாடியும்
தம்மில் போலத் தங்கியுஞ் செல்வோர்
தம்முடன் தனித்துத் தனித்துரை யாடி
மகிழ்ந்த தென்கொல்? மறையம் அன்றோ?

கடம்பன் : (வாய் விட்டுச் சிரித்து)
பேதாய் தனித்துப் பேசிய துண்மை
நீதான் அதனை வேறா நினைந்தனை;
நின்செவிப் படாது நின்றுரை யாடிய
உண்மை யாதனைப் பிறழ வுணர்ந்தவை;

குழலி : பொய்யா மொழியன் என்றுனைப் போற்றி
எய்யா மகிழ்வில் இருந்தேன் என்பாற்
பொய்ம்மொழி துணிந்து புகல முயலுதி
செய்வினை மறைக்கச் சிரித்துங் காட்டுதி;

கடம்பன் : ஐயோ நின்மனத் தையம் அகலச்
செய்வழி யறியாது திகைத்துளேன் அம்மே;

குழலி : பின்னவள் மறியாது பேசிய மொழிகள்
சொன்னபின் ஐயம் தொடரா தன்றோ?

கடம்பன் : பின்னவள் அறியாது பேசிய மொழிகள்
என்னநீ மொழிந்தனை இஃதே சாலும்;
முன்னர் மொழிபழி முற்றும் மறப்பேன்;

குழலி : (குறுக்கிட்டு)
எனையே மாற்ற எண்ணித் திசைதிருப்
பினையேல் தோல்வி பெறுவை நீயே
அன்றவர் தம்முடன் தனித்துரை யாடிய
மாற்றம் அனைத்தும் மாற்ற மின்றிச்
சாற்றுக இன்றேல் தூற்றுமிவ் வுலகு;

கடம்பன் : நின்னைக் குறித்து நிகழ்த்திய மொழியை
மன்னர்க் கென்று மாறுற வுயர்ந்தனை
பின்னற் குழலி பின்னிப் பின்னி
என்னை ஐயுற் றிகழேல் இனியே;

குழலி : தையலெற் குறித்துத் தனித்துரை யாடினிர்
மெய்யெனில் அதனை வெளிப்பட விளம்ப
அஞ்சுவ தென்கொல்? ...... ......

கடம்பன் : ..... ...... அச்சமொன் றில்லை;
வஞ்சி நின்னுழை வாய்விட் டுரைத்தல்
ஒவ்வா தென்றே உனைமறைத் திருந்தேன்;

குழலி : பேசப் படுபொருள் பேதை யானெனிற்
பேசிய கூறக் கூசுதல் எதற்கு?
மாசிலை யெனிலவை மறைத்தல் ஏனோ?

கடம்பன் : ஏசுதல் ஒழிக இனிமறை யில்லை
பேசின அனைத்தும் பிறழா துரைப்பென்;
பன்னருஞ் சிறப்பிற் பாண்டியன் மைந்தனை
நின்னுளத் திருத்தி நினைகுவை நாளும்
மன்னன் மைந்தனுற் மனத்துணை விழைந்தனன்;
இருவர் மனமும் ஒருமன மாதலை
அரசரும் அரசியும் அறிந்துடம் பட்டனர்
எனநம் அமைச்சர் இயம்பினர் என்பால்
ஆதலிற் சேரர் அணுகிய செய்தி
பேதை நின்பால் ஓத விழைந்திலேன்;

குழலி : பேதையென் றெள்ளிப் பேசிய மறையை
ஓதுத லின்றி உறழ்ந்துறழ்ந் துரைத்த;
ஒன்றுடன் மற்றொன் றுறாமொழி பேசுதி;
ஒன்றுபொய் மறைக்க ஓரா யிரம்பொய்
பன்னுதல் வேண்டும் ..... ......

கடம்பன் : ...... ...... பாவாய் உண்மை
பன்னுமுன் ஏன்நீ பதறுதி? .....

காவலன் : (அங்கு வந்து)
..... ...... ..... ஐய!

கடம்பன் : யாங்கு வந்தனை? ..... ......

காவலன் : ..... ...... அரசர் செலுத்த
ஈங்கு வந்துளன் ஏவலன் ஒருவன்;

கடம்பன் : வரவிடு ..... ..... ......

ஏவலன் : ..... வணக்கம்; மன்னர் நும்மை
விரைவில் வருகென விடுத்தனர் செய்தி;

கடம்பன் : மன்னர்க் கண்டு மற்றிவண் மீண்டு
பின்னர்க் கூறுவேன் பேசிய மொழியே.

## காட்சி 18

மறையம் உரைத்தோன் மறையோன் எனக்கண்
டவளை ஒறுத்தபின், அணிபடைத் தலைவன்
கடம்பன் பிழையிலன் எனவறி காவலன்
தடவிழிக் குழலியைத் தன்மகள் வழுதிக்
குடன்பட லறிய உசாவினன் இசைவே.

........

செம்புலச் : தொடுக்கும் வேம்பின் தொடையல் அணிந்து
குடைக்கீ ழமர்ந்தோய் கொற்றம் வாழ்க
அடுத்துள எல்லையில் அழிசெயல் புரிந்தோன்
தொடுத்தமர்க் களத்துத் தோற்றனன் மலைக்கோன்;
கன்னிப் போரிற் கடுஞ்சமர் புரிந்து
ஒன்னலர் வெந்நிட உறுபுகழ் நண்ணிட
வென்று மீண்டனன் வீறுகொள் வழுதி;
நின்ற முனையில் வென்றி காணாத்
தானை முதலி தறுகண் விறல்வேள்
மோனை யெதுகை முதலன இழந்த
புன்மொழிப் பாட்டெனப் பொலிவில னாகி
வன்மை யிழந்து வந்துளன் ஈண்டு;

பாண்டியன் : வென்றனன் வழுதி வெஞ்சமர்க் களத்தே
என்ற நன்மொழி எஞ்செவிப் படலும்
கூடல்மா நகர்க்குக் கோலஞ் செய்து
பாடல் வென்றி படைத்த நம் வழுதியை
எல்லையிற் கூடி எதிர்கொண் டழைக்க

வெல்போர்க் கடம்பனை விடுத்தனம்; அவன்றான்
வென்றான் போல வீறுறு களிப்பிற்
சென்றான் செய்தான் குன்றா வகையில்;
அருகமர் தேவி, அரும்பெறற் செல்வன்
செருவில் வென்ற செய்தி கேட்டலும்
அன்றலர் நறுமலர் அழகினை வென்று
நின்று திகழ்ந்து நிவந்த திவள்முகம்;

நாகனார் : பண்டமர்க் களத்துப் பயின்றறி யாகிவன்
கொண்டனன் வென்றி எனுமொழி கூறலும்
வெண்டலை யறைவேன் வீறுற் றெழுந்தேன்
முதுமை மறந்தேன் முத்தமிழ்ப் பாடினேன்;

பாண்டியன் : கன்னிப் போரில் கண்டனன் வெற்றி
என்னலுங் கடம்பன் பின்னவள் கொவ்வை
இதழில் நகையும் இருவிழிப் புனலும்
பொதுளக் காண்கினும் பூவெழில் முகத்தில்
தவழும் ஒளியிலை; தனிமையள் போலக்
கவலை தோயக் கரணியம் என்கொல்?

செம்புலச் : சிறியோள் அவள்தான் செய்வகை தெரியாது
வறிதே கலங்கினன் அறியா துளத்துள்;
நிவந்தெழு திருமண நினைவினற் போலும்;
அவரவர் மனத்தை அளந்து விளம்பினிர்
நும்முளக் களிப்பை நுவல்வோர் யாருளர்?
செம்புலப் புலவர்தாம் செப்புதல் வேண்டும்;

பாண்டியன் : அனைவரும் மகிழ அதன்பின் எஞ்சியது
தினையள வெனினும் பனையள வாக்கிக்
கொள்ளும் எமதுளம்;கூரியீர் நும்முகம்
உள்ளோர் ஈங்குக் கொள்ளும் மகிழ்வின்
வேறாக் காணல் வியப்புடைத் தாகும்;
நேரா வொன்று நேர்ந்தது போலவும்
புதுமை கண்டாற் போலவும் மகிழ்வீர்
எதுகண் டிவ்வணம் எக்களிப் புற்றீர்?

செம்புலச் : நேரா வொன்று நேர்ந்த தன்றி
போரான் ஈண்டுப் புதுமையும் நேர்ந்தது;
ஆண்டுக் காண்மின் ...... .......
(விறல்வேள், கணியன் விலங்குடன் வர)

பாண்டியன் : ...... ..... ஆஆ! ஈதென்?
பூண்ட விலங்கொடு புகுவோன் பின்னர்ப்
பிணிப்புறு கையொடு கணிப்பர் வரலேன்?

நாகனார் : கணிக்குங் கைகள் பிணிப்புறல் நன்றோ?
அகற்றுக வேந்தே அகற்றுக இன்னே;

கடம்பன் : புகற்கரும் போரிற் புதுமை காட்டும்
விறல்வேள் கையும் விலங்கி அகலத்
திறலோய் ஆணை தேர்ந்தருள் செய்க;

பாண்டியன் : ஆம்ஆம் அவனோர் அரும்படைத் தலைவன்;
நான்மா மறைதெரி நல்லோர் இவர்தாம்
ஆமாறு செய்க அகற்றுக பிணிப்பு;
(விலங்கு அவிழ்க்கப்பட்டபின்)

விறல்வேள் : வணக்கம் வேந்தே ..... ......

கலியன் : ...... ...... வாழ்க மன்னா;

பாண்டியன் : பிணக்குற் றெழுந்த பேணாப் பகைஞனை
வணக்குற விலங்கிட் டழைத்து வந்தனிர்
குணக்குன் றிவர்க்கேன் கொடுமை யிழைத்தீர்?

செம்புலச் : பொறுத்தருள் புரிக பூசுரர் இவர்தம்
நரித்தனம் அனைத்தும் புலப்படும் காண்மின்;
(விறல்வேளை நோக்கி)
தார்ப்படைத் தலைவ தண்டமிழ்ப் பாண்டியன்
போர்ப்படை கொண்டு புகுதர நினைந்ததென்?

விறல்வேள் : எமக்குரித் தாய எல்லைப் பகுதி
நுமதெனக் கோடலின் நோனா தெழுந்தனம்;

செம்புலச் : யார்க்குரித் தென்பது நோக்குதும் பின்னர்;
தேக்கிய படையைத் தாக்குதற் கேற்ப
உளவறிந் தனைத்தும் உமக்குரை செய்த
களவன் யாவன்? கரவா துரைசெய்;

வில்வேள் : நும்முறை யிருப்போர் ஒருவர் நுவன்றனர்

செம்புலச் : எம்முழை யிருப்போன் இயம்பினன் என்பது
யாமும் அறிகுவம்; யாவனக் கயவன்?
(விறல்வேள் கடம்பனை நோக்க)

பாண்டியன் : வெல்போர்க் கடம்பனோ? ...... .....

விறல்வேள் : ..... ..... வீண்பழி! வீண்பழி!

நாகனார் : இல்லெனிற் கடம்பன் இல்லில் நும்மவர்
செல்லுதல், சின்னாள் அல்குதல், ஆண்டு
மற்றையோர்த் தவிர்த்து மறைமொழி பேசுதல்
ஒற்றறி செயலலால் பிறிதொன் றுளதோ?

விறல்வேள் : படைமுன் மனையிற் பன்னாட் புக்கதும்
இடையிடை ஆய்கண் இருந்ததும் உண்மை;
படைநிலை குறித்துப் பழுதிலாக் கடம்பன்
விளம்பினன் என்பது வீண்பழி யாகும்;

செம்புலச் : விளம்பில னாகின் வெல்போர்க் கடம்பன்
வியன்மனை யதனுள் நுமக்கென் வேலை?

விறல்வேள் : நறும்பா நல்கும் கரும்பார் குழலியை
விரும்பினன் மணங்கொள வில்லவன் ஆதலின்
மகட்கொடை வேண்டி மனையுட் புகுந்தனம்
அதற்கவன் மறுத்தனன் அன்றிமற் றொன்றிலை;

செம்புலச் : மகட்கொடை வேண்டின் மறைத்துறை யாடலேன்?

விறல்வேள் : நகத்தகும் நும்வினா! நல்லோன் ஒருவனை
மிகைப்படு பழிக்குள் வீழ்த்த முயலுதிர்;

செம்புலச் : மந்தணம் நுமக்குத் தந்தவ னாதலின்
நந்துயர் காணாய் நல்லோன் என்றனை

விறல்வேள் : (சற்றே சினந்து)
இடைமறித் தும்மிடை இயம்புதல் பொறுக்க
படையில் தலைவன் பகையெமக் கெனினும்
நல்லோன் அவன்றான் நாட்டுணர் வுடையோன்
பொல்லா மொழிகள் புகுத்தேல் அவன்பால்;

செம்புலச் : நன்று நன்று! நம்மவன் தொழிலும்
கொண்டநின் றொழிலும் ஒன்றே யாகலின்
இழுக்கவற் கணுகா தியம்புதி தலைவ;

விறல்வேள் : வழுக்கியும் அம்மொழி வாயாற் புகலேல்
மணப்பேச் சன்றி மற்றொன் றறியான்
குணத்தின் உயர்ந்தான் கூறிய இவைதாம்;
'அன்னை யில்லாள் அத்தன் இல்லாள்
என்னுயி ரனையாள் பின்னவ ளாதலின்
அவள்விழை வெதுவோ அஃதென் விழைவு
திவலையும் மாறுறச் செய்யேன் உறுதி;
நெஞ்சுள் ஒருவனை நினைந்தன ளாதலின்
வஞ்சி யறியா வகையிற் பேசுதும்
பிஞ்சு மனத்தள் பேதுறும் அறியின்'
என்றவன் தனிமையில் இயம்பிய தன்றி
ஒன்றும் அறியான் உயர்மதி யமைச்சே
பன்முறை முயன்றோம் பல்வகை முயன்றோம்
தன்பிடி விடாது தடுத்தே மொழிந்தனன்;

செம்புலச் : தந்தவன் அவனலன்; சாற்றுதல் வாய்மையேல்
மந்தணம் எவ்வணம் வந்ததும் நும்பால்?

விறல்வேள் : அந்தணர் தந்தனர் ..... .....

பாண்டியன் : ..... ..... ஆஆ! அவரா?

விறல்வேள் : அம்மறை முழுதும் அவரே தந்தனர்
நம்பிய கணியன் நம்பியே தந்தனர்;

செம்புலச் : அணிதிகழ் வயல்சூழ் கணிய மங்கலம்
அண்மையில் நும்நாட் டரும்பிய தென்கொல்?

விறல்வேள் : தெளிவுற அனைத்துந் தெரிநதுளீர் சிறுகடு
களவும் அறியார் போலெனை வினவுதிர்!
உளவறிந் துரைக்க உடன்படா இவர்க்குக்
கழனிசூழ் சிற்றூர் கணியர் பெயரால்
வழங்குக எனயாம் வழங்கினம் அதனை;
துளங்கிய மனத்தர் துவிந்து மொழிந்தனர்;

பாண்டியன் : நல்வழி காட்டும் நான்மறை யாளரோ
அல்வழிப் புக்கனர் அடுக்குமோ இச்செயல்?
மறைநவில் நாவோ மறையம் புகல்வது?
முறைதெரி நெஞ்சுட் கறையோ படிவது?
விண்வழி நமக்கு விளம்பும் இவரோ
மண்விழைந் திழிசெயல் மனத்தாற் றுணிவது?
நம்ப இயலா நயவஞ் சகச்செயல்
நம்பியோ செய்தனர்? வெம்பும் எம்முளம்!

நாகனார் : (தமக்குள்)
கற்றவர் செயலோ காட்டிக் கொடுத்தல்?
மற்றவர் செய்யின் மடிவ துறுதி;

பாண்டியன் : பொருந்தா இச்செயல் புரிந்தனம் அனைத்தும்
அருந்திற லமைச்ச யாங்ஙனம் அறிந்தனை?

செம்புலச் : தோலாக் கடம்பன் தோற்றனன் எனலும்
நூலார் இவர்பால் நுண்ணிய ஐயம்
என்னுள் எழலான் இவரறி யாவணம்
மன்னிய ஒற்று வளைவுற அமைத்து
வழுதி போர்க்கு நன்னாள் வகுக்க
வழுவுடை யாரிவர் வாரா வண்ணம்
தடையும் செய்து தக்காங் கிருந்தனென்;
படைமறை யனைத்தும் பகர்ந்த பிழைக்குக்
காவல இவர்க்குக் கைவிலங் கிடாது
பூவது கொண்டு போற்றவோ? புகல்க;
தென்னவர் அரசுக்குத் தீங்குசெய் தார்க்கு
மன்னவர் ஒறுக்க மனங்கொளல் வேண்டும்;
யாது செய்குவம்? ...... .......

விறல்வேள் : ..... ..... ஓதுநல் லமைச்சே
தீது செய்தோர்த் தெரிந்தும் கடம்பனைப்
பழிசெய் தானெனப் பகர்ந்த தென்கொல்?

செம்புலச் : அழிசெய லாளரை அறிகுவம் எனினும்
பொன்வாட் கடம்பன் புரையிலன் என்பது
நின்வாய் மொழியான் நிறுவுதல் வேண்டி
நின்பால் வினவி நேர்மை யுணர்த்தினம்;
மன்னர்க் குண்மை மறுவறத் தெரிந்தபின்
என்செயக் கருதினும் அன்னது செய்க;

பாண்டியன் : கலங்கிய மனத்தேன் கழற வாயிலேன்
புலங்கொள் நீரே பொருந்துவ செய்க;

செம்புலச் : ஏழிரன் டாண்டுகள் இருஞ்சிறைக் கொட்டில்
வாழும் ஆணை வழங்குக இவர்க்கே;

கணியன் : என்னடி தொழுதனை இந்நாள் வரைஇனி
நின்னடி தொழுதேன் என்பிழை பொறுக்க;
திருவுளக் குறிப்பிற் சிறைதான் முடிவெனின்
மறுமொழி புகலேன் மகிழ்வுடன் புகுவேன்.

நாகனார் : வேந்தே ஒரு மொழி விளம்புவென் கேண்மதி
ஈர்ந்தண் வேம்பு கைக்கும் எனினும்
உடற்பிணி யகற்றி உறுதி நல்கும்;
தொடுத்த வேம்பின் தொடையல் உடையாய்
நீயும் நன்றே நிகழ்த்துதல் வேண்டும்
காயும் மனத்தைக் கடிதின் விடுக;
நல்லர் பண்பர் நடுவர் என்போர்
பொல்லா ராகும் பொழுதும் உண்டு;
பேரவாப் பேயின் பேழ்வாய்ப் பட்டோர்
நேரவாம் மனத்தின் நீப்பர் வேர்ப்பர்

கரைப்பார் கரைப்பிற் கல்லுங் கரையும்
உரைப்பார் உரைப்பிற் குன்றும் உருகும்
ஆட்டு வித்தால் ஆடா ருளரோ?
கேட்டு மனத்தர் கூட்டாற் கணியன்
விரிமனம் அதுவும் திரிந்துள தைய
பிரையுறு தீம்பால் திரிதல் இயல்பே;
மறைதோய் மனத்துள் மாசு நினைந்தது
குறைதான் எனினும் குற்றம் உணர்ந்தனர்
நிறைவாழ் வவர்தம் சிறப்புக் குரித்தோ?

செம்புலச் : சால்பின் உயர்ந்த தண்டமிழ்ப் புலவீர்
நூல்தெரி மனத்தர் நோய்தான் எனினும்
மருந்துவேண் டாவென மனங்கொண் டீர்கொல்?

நாகனார் : திருந்துநன் மதியீர் மருந்து தருக
அளவறிந் ததனை ஆய்ந்து தருக

செம்புலச் : உளப்படு குறிப்பை வெளிப்படை யாக்கின்
களத்திடைக் காவலன் கருத்திற் கொள்ளும்;

நாகனார் : அணிமையிற் றோன்று கணிய மங்கலம்
கணியர் வாழுங் கணியூர் ஆகுக
நம்நாட் டெல்லையுள் நயந்து புகாவணம்
அந்நாட் டாங்கண் உறைவோ ராகுக;

செம்புலச் : நாடு கடத்த நயந்தனிர் போலும்;

நாகனார் : கேடு குறித்துக் கிளந்தே னல்லேன்;

பாண்டியர் : அஃதே சாலும் அவ்வணம் செய்க
(கணியனைக் காவலர் அழைத்துச் செல்ல)

பாண்டியன் : திருந்துவேற் கடம்ப தீங்கிழைத் திலைநீ
எனினும் ஐயம் எழுந்தது நின்மேல்

ஆதலின் ஒறுக்க அகத்துள் நினைந்தனம்;
(அனைவரும் வியந்து நோக்க)

கடம்பன் : யாதுரை கூறினும் ஏற்பதென் கடமை

பாண்டியன் : தீதிலாய் எங்களை திருமா மகற்குநீ
மைத்துனக் கேண்மை மருவுதல் வேண்டும்
மைத்தடங் கண்ணி மாபெருந் தேவிக்கு
மருகிநின் தங்கை; தருதிநின் னிசைவு;

கடம்பன் : பெருமநும் ஆணை பிறழ்ந்துயான் அறியேன்
உரியாள் அவள்தன் உடன்பா டறிந்து
மறுநாள் நுமக்குத் தருகுவென் இசைவே;

## காட்சி 19

•••••••

எதிர்வருங் காழகன் எழுசமர் முருக்கிப்
புதுமண மாலை புனைகென வழுதி
கதிரெழு பொழுதிற் கடம்பன் மனையில்
முதிர்புல நாகர்க்கு மொழிந்தான் விடையே.

.............

நாகனார் : வெல்வோர் இலாத வெல்போர்க் கடம்ப,
அல்லல் தருமோர்த் தொல்லை யொழிந்தது
நல்லன் இங்கினி நடைபெறல் வேண்டும்;
இளம்பெரு வழுதியின் உளங்கொள் குழலியின்
நலங்கொள் வதுவை, நடைபெறல் வேண்டும்;

கடம்பன் : தங்கை மனத்துள் தங்கியோன் யாவன்
அங்கவன் தோளுக் கவள்மலர் சூட்டும்;

நாகனார் : குழலி நின்னுளக் குறிப்பு மொழிமதி;
வழுதி மணங்கொள விழைதி கொல்லோ?

குழலி : (நாணி நின்று)
பின்னவள் எனக்கெனப் பிறிதோ ருளமோ?
அண்ணன் உளமே என்னுள மாகும்;

கடம்பன் : கூடலர் தம்மொடுங் கூடிப் பாண்டி
நாடாள் வேந்தர்க்கு நடலை புரிந்தேன்;
தீய விழையுந் தீயேன் உளந்தான்
மேய இவள்தன் மெல்லுள மாமோ?

குழலி : சின்னவள் அறியாது செப்பிய புன்மொழி
நின்னகங் கொளாஅ தென்பிழை பொறுத்தருள்
அண்ணா நின்னை அடாப்பழி கூறிப்
பெண்மதி யாலுனைப் பெரிதும் இகழ்ந்தேன்
(காலில் வீழ்ந்து வணங்க)

கடம்பன் : நாட்டுப் பற்றால் நவின்ற நின்மொழி
கேட்டு நெஞ்சம் கிளர்ந்தெழ லன்றி
வருந்திலேன் கண்ணே வாழ்க நின்னுளம்
வருந்தேல் அன்னாய் வழிபுனல் இனிஏன்?

நாகனார் : ஆண்மதி பெண்மதி ஆயிரு மதியும்
காண்மதி ஐயம் கதுவுத லியல்பே;
தோள்வலிக் கடம்ப தூயநின் னுணர்வைச்
சூழ்நிலை ஐயுறத் தூண்டிற் றறய
ஐயம் எனையும் ஆட்டிப படைத்தது.

கடம்பன் : ஐயந் திரிபற ஆய்ந்துயர் புலவீர்
ஐயந் தெளிந்ததே அஃதே சாலும்;
நல்லா ருளமெலாம் நடுவிற் பிறழவும்
அல்லது நினையவும் அமைந்ததே என்செயல்

கடம்பன் : சூழ்நிலை உண்மையைச் சூழ்ந்து மறைக்கும்
ஆழ்மதி யுடையரும் அதற்கடிமை யாவர்;
ஐயம் எழினும் மெய்யை மறைக்கும்
பொய்யை நம்பிப் புலம்ப வைக்கும்;

வழுதி : (எதிர்பாராவகையில் உள்ளே வருகிறான்)

அனைவரும் : வருக ஐய வருக வருக

நாகனார் : சிலம்படி ஒன்றோ வலங்கொள் கழலும்
புலம்புத லுண்டுஅப் பொய்யை நம்பி;
குழலியின் வதுவை குறித்துரை யாடினேம்
பொழுதுணர்ந் தீங்குப் புகுந்துளை நீயும்.

வழுதி : மலைக்கோன் றனக்கு மகட்கொடை நல்கச்
சிலைக்கோன் கடம்பன் செப்பினர் போலும்!

கடம்பன் : சிலம்படி ஒன்றோ வலங்கொள் கழலும்
புலம்புதல் உண்டுஅப் பொய்யை நம்பி;

வழுதி : பொய்யோ மெய்யோ புகன்றனர் சிலர்தாம்
ஐயை குழலி அவள்மனம் யாதோ?

குழலி : என்னகம் நின்னகம் இருவே றில்லை

நாகனார் : சொன்ன குறிப்பு நின்னகம் அறியும்
மன்னர் பால்நின் மணஞ்சொல விழைந்தேன்
உன்னுளம் அறிந்தே உரைசெயல் வேண்டும்;

வழுதி : எண்ணிய யாவும் இயலுமோ நிகழ?

குழலி : திண்ணிய ராகின் எண்ணிய எய்துவர்;
உண்ணிறை ஆவற் கோரள வின்று
நண்ணிய போர்தான் ...... ......

நாகனார் : ..... ..... போர்தான் ஒழிந்ததே!

வழுதி : கன்னிப் போர்தான் கழிந்தது; காழகன்
முன்னிப் போர்செய முயன்றுளன்; மலைக்கோன்
தன்துணை யாகத் தருக்கி எழுந்துளன்;
வருசம ராற்றி வாகை சூடி
வருவேன் எனிற்பின் திருமண மாலை;
இம்மொழி புகல இவ்வுழை வந்தேன்

நாகனார் : அம்ம நின்னுளம் யாதோ? .....

குழலி : ..... ..... ..... ஐய
என்னகம் மன்னகம் இருவே றில்லை;
அன்னை நாட்டிற் கல்லல் வருங்கால்
என்ன திருமணம்? எழுக சமர்செய;
அவர்நிலை யாதோ அஃதே என்னிலை;

நாகனார் : எவர்நிலை எதுவென எவர்தாம் அறிவர்?
திருமண மாலை இருவிருஞ் சூடி
ஒருமன மாகும் பெருநாள் கண்டு
வாழ்த்த விழைந்தேன் வாய்ப்பெமக் கிலையே
தாழ்த்த லின்றித் தாங்குக போரே.

## காட்சி 20

......

கடம்பனும் வழுதியும் காழகப் போர்க்குக்
கடிதிற் செல்கெனக் கழறினன் வேந்தே.

காவலன் : வாழிய வேந்தே வாழ்கநும் கொற்றம்
காழக ஒற்றர் கடுகி வந்துளர்;

பாண்டியன் : விரைவில் வரவிடு ...... ......

ஒற்றன் : ..... ...... வேந்தே வாழ்க
திரைகடற் கப்பாற் செங்கோ லோச்சும்
காழக வேந்தன் கடுங்கட் சீயன்
தோழமை மறந்து தொன்று முதலாச்
செலுத்துந் திறையுஞ் செலுத்த மறுத்து
வலுத்த படையும் வகுக்க முயன்றுளன்;

பாண்டியன் : ஓஓ! அவனோ உறுபகை கொண்டனன்?
காவா நிலையனோ கடும்போர் நினைந்தனன்?
ஈங்கொரு போரில் ஈடுபட் டோமென
ஆங்கவன் அறிந்தே ஆர்ப்பரித் துளனால்

ஒற்றன் : மலைக்கோன் துணையால் மனச்செருக் குற்றுஇந்
நிலைக்கவன் துணிந்து நேர்ந்துளன் வேந்தே

பாண்டியன் : வலியறி யாற்கு வலிமை காட்டுதும்
புலிநிகர் கடம்ப புறப்படு வல்லே
முளையிற் கிள்ளுக முண்மரம் அதனை
வழுதியும் துணையா வருவன் செல்க;
(கடம்பன் மலைத்து நிற்க)
மலைத்தனை முகமும் மாறினை என்கொல்?

கடம்பன் : கொலைக்களம் வேட்ட கொங்கட் சீயன்
பொருதிரைக் கடாரம் புகுத நினைவோர்
விரிகடல் இறத்தல் வேண்டும் பெரும
இவரோ இளைஞர்;, இருநீர்க் குட்டத்துச்
சுவர்போல் அலையெழும்; துணிந்ததை எதிர்த்துக்
கலத்திற் செல்லக் கலங்குவர் எனஎன்
உளத்தெழும் உணர்ச்சி உறுத்தலால் வெருவி
மலைத்தனென் முகமும் மாறினேன் அரசே;

பாண்டியன் : மலைக்கோன் நம்மொடு மாறுகொண் டெழுந்து
முற்றிய பகையை முருக்கிநம் வழுதி
வெற்றி கொண்டான் மீண்டும் வெல்வன்
தானை கொண்டெழு தயங்கேல் துணைக்கொள்;

கடம்பன் : ஆணை மன்னவ ஆம்வகை செய்குவென்;

நாகனார் : (மனத்துக்குள்)
ஒருபோர் தொடங்கி ஓய்ந்தது மீண்டும்
மறு போர் எனினோ மனம்நடுக் குறூஉம்;

பாண்டியன் : புலவர் மனத்துட் பொங்கும் உணர்வைப்
புலர்முகம் நமக்குப் புலப்படச் செய்தது
நாமோ விழைந்தனம்? நள்ளார் பொரவரின்
ஆமா றியற்றல் அரசர்தங் கடனே.

நாகனார் : கடமை அதுதான்; கடும்போர் எனின்என்
மடமனம் நடுங்கும்; மன்னநீ செயற்படு;

பாண்டியன் : பெளவம் பிளந்து பரந்து விரையும்
நெளவொடு திமிலொடு நாவாய் செல்க
வங்கம் அம்பி மதலை என்பன
எங்குங் கடலலை எதிர்ந்து செல்க
பாது பஃறி தோணி தொள்ளை
கூறு கூறாக் கூடிச் செல்க
பாதை முதலாப் பாய்மரக் கலங்கள்
போதம் பலவும் புணையொடு புகுக;
கருதலன் காழகன் வெருவுறப் பொருது
தருக மாய்ந்தனன் எனுமொரு சொல்லே.

## காட்சி 21

காழகம் வென்று மீள்வோர் தம்மைச்
சூழும் நெடும்புயல் சுழன்று தாக்க
ஆற்றா ராகி ஆழிவீழ்ந் தோருடன்
தோற்றான் உயிரைச் சூழ்கழல் வழுதியென்
றாற்றா மொழியை அறைந்தனர் மறவர்
மாற்றங் கேட்டலும் மயங்கினன் வேந்தே.

படைஞர் : வாழ்க வேந்தே வாழ்க கொற்றம்!
சூழ்கடற் காழகன் தொடுத்த போரில்
வழுதி வென்று வாகை சூடினர்
தொழுதகு வெற்றி சொலமுன் வந்தனம்;
விரைவில் நம்படை மீளும் ....

பாண்டியன் : ...... ...... ..... வாழ்க!
வெற்றிச் செய்தி விளம்பினீர் வாழ்க!
மற்றங் கியற்றிய மறச்செயல் கூறுக;

பாடைஞன் 1 : கோலஞ் செய்து குறுமணல் பரவும்
ஓலஞ் செய்கடல் சூழுங் காழக
அக்கரை வைகும் அருந்திறற் பாண்டி
நற்குடி மறவர் நல்வர வுரைக்க,
இருபெரும் படையும் இணைந்து சீயன்
பொருபடை மோதப் புகுந்தனம்; அவனும்
அச்சம் விடுத்தோன் அடிமை வெறுத்தோன்
மெச்சும் தோள்வலி மிக்கோன் மானம்
உந்தும் ஊர்வால் உருத்தெழு வேந்தன்
முந்த வந்து மோதினன் களத்தில்

படைஞன் 2 : செங்கட் சீயன் சினந்தெழு படையும்
வங்கம் ஊர்ந்த நம்மவர் படையும்
கரியெனப் புலியென அரியெனப் பொருதன
வெருவுறு பொருகளம் குருதியின் நிறைந்தது;

படைஞன் 1 : கணிக்க இயலாக் கடும்போர்க் களத்தில்
அணிக்கணி மோதின அனற்பொறி வீசின;
வழுதி சீயன் வாள்கள் மோதின
புழுதி யெழுந்துவான் பூசி மறைத்தது
பொழியுங் குருதி பூமியை மறைத்தது;

படைஞன் 2 : வெங்கட் சீயன் வியனகல் மார்பிற்
செங்கணை வழுதிவாள் சீறிப் பாய்ந்தது
காழகன் கூர்வாள் காளை வழுதியின்
தோளிற் பாய்ந்து தொட்டது ....

பாண்டியன் : ...... ...... ...... ஆ! ஆ!

படைஞன் 1 : சாய்ந்தனன் சீயன் ஓய்ந்தனன் வழுதி
பாய்ந்து சிதறின காழகப் படைகள்;

மாதேவி : பொல்லாக் களவாற் புழுவெனத் துடித்து
நில்லா தொருநிலை நெஞ்சம் அழுங்கினென்
சுமந்த வயிற்றிற் சுவைப்பால் வார்த்தீர்
தவந்தான் செய்துளேன் தாய்மனங் குளிர்ந்தது;

பாண்டியன் : அடாது செய்தவன் அழிந்தனன் போபோ;
(இடையில் மறவர் சிலர்வர)
மறக்குடிப் பிறந்தீர் வருக வருக
புறத்துறை முற்றும் புலிகாள் வருக
பகைவற் பணித்த பாங்கினை மொழிக;

மறவன் 1 : கடாரப் படையைக் கடந்தது போல
விடாது வீசும் வியனலை கடந்து
கடலின் நாப்பண் கலத்தொடு மீண்டனம்;
சீயன் படைகள் சீறிப் பாய்ந்தெனக்

காயுங் கடுங்கால் கனன்றுடன் தாக்கப்
பாயுறு கலங்கள் பதறின சிதறின;
இருளிடை விழியிலார் இயங்குதல் போல
மருளோ டாங்கண் மரக்கலஞ் செலுத்தினம்;
ஆடல் முற்ற ஆடிய பெருவளி
சாடித் தொலைத்துச் சற்றே ஓய்ந்தது;

பாண்டியன் : கலத்திடை ஊர்ந்தீர் கடுங்கால் தப்பி
நிலத்திடை யாங்ஙனம் நெடுங்கரை யேறினிர்?

மறவன் 2 : கல்பொரு துராயக் கைகா லிழந்தோர்
பல்பொழு துணவிலோர் பசித்தோர் கடலிடை
மிதந்தனர் வதைந்தனர் மீளாத் துயரினர்;
சிதைந்த கலத்திற் சிதறி வீழ்ந்தோர்
இரைகடல் மூழ்கித் திரிதரு பெருமீன்
இரையென ஆகியோர் எண்ணிலர்; ஆங்கண்
உடைமரம் பற்றி உய்ந்தோர் அலையால்
அடைகரை யேறி அயர்ந்தோர் சிலர்சிலர்;

பாண்டியன் : அம்மஓ! அம்மஓ! ஆழ்துயர்க் கடலுள்
நம்மையும் வீழ்த்தி நடுக்கிய திதுவே;
மானங் காத்தஎன் மைந்தன் எங்கே?
(எவரும் வாய்திறாவாதது கண்டு)
ஏனிங் கெவரும் எழுசிலை யானீர்?
எங்கே வழுதி? ...... .....

மறவன் 1 : ..... ..... யாங்ஙனம் மொழிகுவம்,
கடலுண் மாய்ந்தார்! ..... .....

நாகனார் : ...... ..... கடிய திம்மொழி!
வாரியிற் கலவா வையை மைந்தன்
ஆருயிர் தன்னை வாரி கவர்ந்ததோ;
(பாண்டியன் மயங்கிவிழ)
மன்னன் ஓ! ஓ! மயங்கினன்; வருக,

பாண்டியன் : (மயக்கந் தெளிந்தெழுந்து)

**வென்றாளுந் திறனுடையாய்**
**வீறுகொளுந் திருநாட்டை**
**நின்றாளும் நிலைபெறுவாய்**
**எனவன்றோ நினைந்திருந்தோம்;**
**வென்றாயோ எமைவிட்டுச்**
**சிறுவளிக்கோ தோற்றனைநீ?**
**ஒன்றாலும் இனித்தெளியோம்**
**உளமழிந்தே வதங்குகிறோம்!**

**முத்தெடுத்த காரணத்தால்**
**முரணியெங்கள் நல்வயிரச்**
**சொத்தெடுத்துப் போயினையோ?**
**சூழ்ந்தெமது முத்தமிழின்**
**வித்தெடுத்துப் போயினையோ?**
**வெறுப்பேறி எமதுயிரின்**
**கொத்தெடுத்துப் போயினையோ?**
**கூறாயோ? பாழ்கடலே;**

**காவலன்றன் மைந்தனெனக்**
**கண்குளிர வந்தவனே**
**பாவலனாய் வளர்ந்துவரல்**
**பாரத்துமனம் பூத்ததடா;**
**பூவரும்பு தானுதிரப்**
**புயல்வலிந்து வீசியதால்**
**நாவுலர நெஞ்சுலர**
**நலிவுழந்து புலம்புகிறோம்;**

மாதேவி : **வயிறுனையே சுமந்ததடா**
**மாகடலுள் நீமாய்ந்த**
**துயரைமனம் சுமந்ததடா;**
**தொடர்திங்கள் ஈரைந்தில்**
**வயிறுசுமை குறைந்ததடா;**
**மகனேஎன் மனச்சுமைதான்**
**உயிருளநாள் வரைகுறைய**
**ஒருவழிதான் உளதோடா;**

கருவகத்தே உருவாகிக்
காரிருளை அகற்றஎழும்
ஒருவிளக்காய் வந்தவனே
ஒளிபரவும் வேளையிலே
பெருவளிக்கோ அணைந்தாய்நீ
பேரிருளில் தடுமாறி
ஒருவழியுந் தெரியாமல்
உழல்கின்றோம்! உழல்கின்றோம்!

நெய்தல்நிலக் கருங்கடலே
நீடுநினைந் திரங்களமைச்
செய்தலன்றிப் பிறிதொன்றும்
தெரிந்திலையோ? இளமலரைக்
கொய்தலுக்கு நினதுளந்தான்
கூசாது துணிந்ததுவோ?
பைதலுனைப் பற்றாதோ?
பழியுனைத்தான் தொடராதோ;

## காட்சி 22

வழுதி குழலி மாய்விற் கிரங்கி
அழுது புலம்பும் அவைக்களப் புலவர்பால்
மகவிழந் துழலும் மன்னன் சார
மிகுபுல நாகர் வேண்டுவ கூறி
மனப்புண் ணாற்றி இனிப்போர் வேண்டா
எனப்பல விளம்பி இசைவித் தனரே.

நாகனார் : (வழுதியும் சூழலியும் மாய்ந்ததை எண்ணித் தமதில்லில் தனித்திருந்து புலம்புகிறார்)

*(1) பாண்டியனார் குலக்கொழுத்தே பாடல் சான்ற*
*பைந்தமிழின் தவக்கொழுந்தே பண்ப னைத்தும்*
*ஈண்டியவோர் செயலகமே எடுக்கும் போரில்*
*இணையில்லாப் புறப்பொருளே எழிலின் தோற்றம்*
*பூண்டிருந்த நல்லுருவே எனது நெஞ்சட்*
*பூத்திருந்த பொன்மலரே புலம்ப விட்டு*
*மாண்டனையோ நன்மகனே கொடுமை தாளா*
*மனங்கலங்கிப் புலங்கலங்கி மாள்கின் றேனே;*

*(2) மனமுடைந்தேன் முன்னொருநாள் மாளாத் துன்பம்*
*மனத்துறினும் நிலையாமை உணர்ந்த என்றன்*
*அகமுடைந்து போகாமல் ஆற்றி நின்றேன்;*
*அரியதமிழ்ப் பாநல்கும் ஆற்றல் சான்ற*
*தகவுடையோய் நினையிழந்த இன்றோ துன்பந்*
*தாளாமற் புலம்புகின்றேன் கலங்கு கின்றேன்*
*அகவுதமிழ் அன்னையடா வாடு கின்றாள்*
*அழகுமிகு பாமகனை யிழந்த தாலே;*

***(3) கொழுநனென மனங்கொண்டு மணங்கா ணாது***
***கோமகனை யிழந்தவளே! குழலி! நானிங்***
***கழுதிடவோ நின்னுயிரை அழித்துக் கொண்டாய்?***
***அம்மாநீ பொருண்மொழியுங் காஞ்சி பாட***
***வழுதியுமப் பொருண்மொழியே பாடி நின்றான்;***
***வாழ்க்கையிது காஞ்சியென முன்னு ணர்ந்தோ***
***மொழிபுகன்றீர்? ஒருபொருள்மேல் ஒன்றி நின்றீர்?***
***முடிவிலுமோ இருவீரும் ஒன்றல் வேண்டும்?***

***(4) ஒன்றுமுளங் கொண்டவளே! உவமை யின்றி***
***உயர்ந்தவளே! நல்லவளே! உன்னை மாலை***
***மன்றவிடைப் பெருவழுதி சூட்டும் நாளில்***
***மணவாழ்த்துப் பாடுதற்குக் கனவு கண்டு***
***நின்றஎனைப் புலம்பவிட்டுச் சென்றா யம்மா!***
***நெஞ்சமெலாம் எரிகிறதே! யாது செய்வேன்?***
***கொன்றனைய கொடுமையிது தாங்கா திங்குக்***
***குழம்புகிறேன் வெதும்புகிறேன் தேம்பு கின்றேன்!***
(தேம்பும் ஒலிகேட்டுத் திரும்புகிறார் புலவர்.
அரசன் அழுத கண்ணொடு அருகில் நிற்க)

நாகனார் : கயல்தவழ் கொடியோய் களமர் உழக்கும்
வயல்கெழு நாட்டின் வளங்கொளும் வேந்தே
மயல்தரு நிலையில் வடிநீர் விழியோடும்
துயர்படர் முகத்தொடும் தோன்றுவ தென்கொல்,

பாண்டியன் : ஆறாத் துயரில் அழுந்தும் புலவீர்
தேறா மனத்தொடு திருமுன் வந்தேன்
மறக்குல மைந்தன் மாய்ந்த துயரம்
மறக்க லாற்றேன் மனந்திறந் துரைத்தேன்
வேதனை யகற்ற விழைந்திவண் வந்தேன்
நோதலும் புலம்பலும் நும்முழை நோக்கி
வேதனை கூர்ந்து விம்முத லுற்றேன்
ஒருவர்க் கொருவர் உறுதுணை யிலேமாய்
இருவரும் கலங்கின் தேற்றுவ தெவரோ?

நாகனார் : மன்னவ கலங்கேல்; மனமென ஒன்று
துன்னுதல் உளதால் இந்நிலை பெற்றோம்;
பிறப்பும் இறப்பும் பேரா இயற்கை;
இறப்பின் வரூஉம் இப்படர் களைய
மறப்பெனும் ஒன்றே மாமருந் தாகும்;

பாண்டியன் : ஒருமகற் பிரிவான் உழல்வேன், துயரின்
ஒருவுதல் யாங்ஙனம்? உளமொன் றிலனேல்
மறதி பெறுவன் ..... ......

நாகனார் : ...... ...... மன்னவ! மைந்தர்
ஒருவர் பலரென் றோருமோ இறப்பு?
நெருநல் இருந்தார் இன்றிலை யென்னும்
பெருமை யுணராது பேசுதல் நன்றோ?
மகற்பிரி துயரம் மாற்றுத லென்பது
பகற்கன வெனயான் பட்டறிந் துளென்முன்
மகனை நினையேல் மக்களை நினைநீ
அகலும் அத்துயர் அணுஅணு வாக;

பாண்டியன் : நிலையா வுலகம் இதுவென நினைப்பினும்
இளையான் இவற்கோ இறப்பிங் குறுவது?

நாகனார் : இளமை முதுமை ஆண்மை பெண்மை
வளமை வறுமை அறிவறி யாமை
வரைப்பறி யாது வாரும்அக் கூற்றம்;
இறப்பின் திருமுன் எல்லாம் சமமே;
பூப்பன யாவும் காய்ப்பன வல்ல
காய்ப்பன யாவும் கனிவன வல்ல;
பூவும் பிஞ்சும் பொலிவுறு காயும்
மேவுங் கனியும் வீசும் வளியால்
உதிர்தல் உண்டுநீ உணராய் கொல்லோ?

பாண்டியன் : காவலன் மைந்தன் பாவலன் ஆகினன்
பாவலன் அவனோ சாவுல கேகினன்?

நாகனார் : பூவுல கேத்தும் புகழவன் பெறினும்
சாவுல குய்த்தது சமரே யன்றோ?
பயில்நாள் முதலாப் பழகிய வழுதியைக்
கயல்விழிக் குழலி கருத்திற் கொண்டனள்
மணங்கொளும் நன்னாள் வரும்வரம் என்றே
அணங்கு நினைந்தனள் ஐயஓ அவளும்
பிணமென ஆகினள்; பேதையும் அவனும்
பொருள்நிறை பாடல் பொருண்மொழிக் காஞ்சி
அருளினர் உலகுக் கவைதாம் எச்சம்;
பிரிந்த துயரான் வருந்தி வருந்திக்
கருங்களி றனையான் கடம்பனும் பிணியில்
வீழ்ந்து நொந்தனன் விளைவிவை எதனால்?
ஆழ்ந்து நினைமதி; அரசமா தேவி
விழிநீர்க் கடலுள் வீழ்ந்தவ ளின்னும்
எழவே யில்லை எழாது கிடந்தனன்;
நீயும் இழப்பை நினைந்து நினைந்து
தேயும் நிலையினை; தீமை யிவைதாம்
தீய போரான் ஆயவை யன்றோ?
சாயும் போர்தான் ஓயும் நாளெது?
போர்தான் நின்போற் பூவுல காள்பவர்க்
கோர்விளை யாட்டு; பொன்றிய மாந்தரின்
வீடுறை வோர்க்கா விழிப்புன லாட்டு;
நாடுறை வோர்க்கு நாளுங் கவலை
கூடுவ தன்றிக் கொள்பயன் யாது?

பாண்டியன் : குடிபுரந் தோம்புங் கொற்றவர் தமக்குக்
கடிபகை யோட்டுதல் கடமை யன்றோ?

நாகனார் : கடமை யெனச்சொலிக் காவலர் ஆற்றும்
மடமையின் நேருங் கொடுமைகள் கேள்நீ
மகளிர் புலம்பல் மகவின் அகவல்
முகமும் மார்பும் விழுப்புண் முகத்தல்
உறுப்பறை யுறுதல் ஓலம் அனைத்தும்

செருப்புலந் தந்த சீர்முறை யன்றோ?
நேரார் எனச்சொலி நின்றிகல் புரியும்
போரான் விளைவது தீராத் துயரே;

பாண்டியன் : வெந்த புண்ணில் வேலென நும்மொழி
வந்து பாய்ந்தது; வருமோ அமைதி?

நாகனார் : வரும் வரும்; விரும்பின் வாரா தெங்குறும்?

பாண்டியன் : ஒருவழி கூறி உய்வகை செய்க;

நாகனார் : குவியும் மனத்தை விரியத் திறநீ
செவியும் அதனொடு சேரத் திறந்து
செஞ்சொல் செப்புந செவியான் உண்டு
நெஞ்சு களனா நிறைத்துப் பயன்பெறு;
தொடுபகை முருக்கித் தொலைக்கத் தொலைந்தோர்
நடுகல் எத்தனை நாட்டிற் காண்குதும்;
நகையோடு மங்கல நாண்மலர் களைந்து
புகையும் மனத்துப் பூவையர் எத்தனை!
எந்தை யாண்டுளன் எனுஞ்சிறு மகார்க்கு
நொந்தழல் அன்னையர் நுவல வாயிலர்
கண்ணீர் காட்டக் கண்டழும் மதலை
எண்ணில் அம்மஓ! எத்தனை எத்தனை!
கையொடு காலும் கண்ணொடு தோளும்
நையச் சிதைந்து நலிந்தோர் எத்தனை!
கொழுநர் இழந்த கொடிநிகர் மாதர்
அழுகுரல் விடுபுனல் அளவிடற் பாற்றோ?
ஒருமக னல்ல தில்லாத் தாயர்
பொருமுகத் திழந்து புலம்பிப் புலம்பி
விடுமூச் சனைத்தும் அடுபுய லன்றோ?
இறந்தோர் உடலிற் பிறந்ததே வெற்றி
பரந்தடு போரிற் பிறந்ததே கொற்றம்
மற்றவர் அழிவிற் பெற்றஇக் கொற்றமும்
வெற்றியும் புகழும் வேண்டுந கொல்லோ?

பாண்டியன் : வேண்டேன் ஐய விழித்ததென் னுணர்வு
தாண்டேன் நும்சொல் தலைமேற் கொள்ளுவேன்;

நாகனார் : நின்மகற் பிரிந்து நிலைகுலை வுறல்போற்
நம்மகற் பிரிந்த தந்தையர் நிலைநினை;

பாண்டியன் : இழப்பின் துயரம் இனைத்தென உணர்ந்தேன்
பிழைக்கும் நல்வழி பேணுவென் உரையின்;

நாகனார் : முடிகெழு வேந்தர் மூவரும் ஓரினம்
அடிதொழு தாரும் அரசரும் ஓரினம்
ஒருவர்க் கொருவர் முரணுவி ராயின்
பொருசமர்க் களத்துப் பொன்றுவ தெவ்வினம்?
நும்முடி பகைகொளின் வம்பலர் புகுந்து
தும்பை சூடத் துணிகுவர் எளிதே;
இனத்தின் ஒற்றுமை மனத்திற் கொள்க
முனைப்பினை விடுக முரணுதல் தவிர்க;
அமராக் கிப்பகைத் தவர்நிலங் கொளாது
மதராக் கிப்பிணித் தவர்மனங் கொள்க;
நாட்டை யாரும் நன்மகன் ஒருவனை
வீட்டிய கொடும்போர் விடுவிடு இனியே;

பாண்டியன் : அழிவுகள் தொலைக அமைதி நிலவுக
பழிசெயும் போரினிப் பரவா தொழிக
நேரிலாப் புலவீர் நிகழ்த்துநும் மொழியாற்
போரிலா வுலகம் பூத்துக் குலுங்க
ஆவல்மீக் கூர்ந்தனென் ஆவன புகல்க;
சாவினை நல்கும் சமரினி யொழிய
மேவும் நல்வழி மேம்பட மொழிக;

நாகனார் : திருந்துநன் னெறியிற் பொருந்துளம் உற்றோய்
வருந்துதல் தவிர்க வாழ்கநின் னுள்ளம்;
அனைத்து வேந்தரும் வருகவென் றழைத்து
நினைத்தது மொழிக தினைத்துணை யளவும்
நடுவிற் பிறழாது நயந்து கெடுபோர்

முடிவை விளைவை முற்றுங் கிளத்துக;
அவ்வவர் நிலங்கள் அவ்வவர்க் குரிய
கவ்வும் பேரவாக் கடிதில் ஒழிக;
ஒருவர் மண்கொள ஒருவர் அவாக்கொளுஞ்
சிறுமை தவிர்க சிந்தை விரிக;
கொற்றவர் உரிமையில் மற்றவர் புக்குப்
பற்றக் கருதும் பாழ்மனந் தவிர்க
செற்றமுங் கலாமுஞ் செயநினை யாது
பற்றுதல் கொள்ளும் பான்மை வளர்க;

பாண்டியன் : ஈண்டுநம் அழைப்பின் ஈண்டியோர் தாமும்
வேண்டுகோட் கிணங்கி விழைத்திசை வளிப்பினும்
கலைந்தபின் அவ்வவர் கருத்திற் கிணங்க
மலைத்தும் பிரிந்தும் மாறுவ ராகின்
அருஞ்சம ரன்றி அமைதி காணுதல்
அரிதே யன்றோ? அதற்கென் செய்குவம்?

நாகனார் : அவ்வந் நாட்டுள் ஆன்றவிந் தடங்கிய
செவ்வியர் சிலருள் ஒவ்வொரு நல்லோர்த்
தேர்ந்தொரு குழுவாச் செய்தல் வேண்டும்;
ஓர்ந்தவர் வழங்கும் ஒவ்வொரு சொல்லும்
ஆணையாக் கொண்டு பேணுதல் வேண்டும்;
தொல்லை முதலாத் தொல்லை தரூஉம்
எல்லைச் சிக்கல் எழுமேல் நீவிர்
விற்கொடு பொருந விழையாதவர்தம்
சொற்கொடு தீர்வு சூழ்ந்து காண்க;
சிற்றர செனவும் மற்றர செனவும்
சொற்றல் அறிவே தொலைதல் வேண்டும்;
அரசர் தம்முள் ஒருநிக ராகி
ஒருவர்க் கொருவர் உதவுத லன்றித்
திறையெனக் கோடல் தீர்தல் வேண்டும்;
நினைவில் தூய்மை நேர்மை யுண்மை
வினையிலும் அவைதாம் வேர்கொளல் வேண்டும்;

உடன்பிறப் புணர்ச்சி ஒவ்வொ ருளத்தும்
இடம்பெறின் அழிபோர்எழுதல் உண்டோ?
மக்கட் பற்றும் மக்கட் பண்பும்
மிக்க மனத்தில் மேவும்நல் லமைதி;
இனையன கூறி முனைகுவை யாகின்
கனவினும் அரும்பாது கடும்போ ருணர்வு;
போரழி வொழிந்த, புன்மைகள் அழிந்த
ஒருல கிங்கே தோன்றுத லுறுதி;

பாண்டியன் : போர்மறுப் புரைப்பின் யார்மறுப் புரைப்பர்?
ஊர்புரப் போர்க்கெலாம் உய்க்குதும் ஓலை;
நலந்தரும் அனைத்தும் நயம்பட வுரைத்துக்
கலந்துரை யாடிக் காண்குறுந் தீர்வு;
அழிவெலாந் தொலைக அமைதி நிலவுக
ஒழிக போரே ஒழிக போரே.

## காட்சி 23

வழுதியின் கதையை வழங்கிய முதியர்
இளைஞனோ டாங்கண் ஏகினர் புறத்தே.

இளைஞன் : அம்மஓ அம்மஓ ஆழ்துயர்க் கடலுள்
நம்மை வீழ்த்தி நடுக்குங் கதையிது!
இரங்குங் கடல்தான் இரங்கா வுளத்தால்
இரங்கச் செய்தது இளையேம் எம்மை!

முதியர் : இளைஞர் எனாது முதியர் எனாது
வளைகடல் விளைத்த துயர்க்கதை பலப்பல
இலக்கிய இலக்கண ஏடுகள் எத்தனை
தொலைத்த திக்கடல் தொன்மை நாளில்
நிலத்தின் பகுதியை நெடுங்கடல் இதுதான்
தொலைத்தும் சிதைத்தும் கொண்டதும் எத்தனை!

இளைஞர் : கண்ணும் மனமுங் கலங்கேல் பெரியீர்
எண்ணும் இளைஞர்க் கிஃதொரு பாடம்;

முதியர் : எழிலார் வடிவன் இளம்பெரு வழுதியின்
அழியாச் சிலையை அகத்துள் நிறுத்தி
நாடும் மொழியும் நலம்பெறச் செய்க
கூடும் பண்பும் குலவிடச் செய்க;

இளைஞர் : பற்பல உண்மைகள் பயனுள பெற்றேன்
கற்பன கற்றேன் காப்பவை காப்பேன்;

முதியர் : காதல் உலகம் கண்ணீர் வடித்தது;
ஓதும் இலக்கிய உலகும் அஃதே!
மறவர் உலகம் மாழ்கி நின்றது!
மருகுது மாலை இருளுடன் வந்தது
கருநிலக் காவலன் கதவம் பூட்ட
விரைந்தனன் வாவா ஏகுதும் வெளியே.

முற்றும்.

# கவியரசர் முடியரசன் நூற்தொகுப்புக்கள் கவிதைகள்

| | |
|---|---|
| முடியரசன் கவிதைகள் | 1954 |
| நெஞ்சிற் பூத்தவை | 1999 |
| காவியப்பாவை | 1955 |
| பாடுங்குயில் | 1983 |
| கவியரங்கில் முடியரசன் | 1960 |
| தமிழ் முழக்கம் | 1999 |
| நெஞ்சு பொறுக்கவில்லையே | 1985 |
| மனிதனைத் தேடுகிறேன் | 1986 |
| மனிதரைக் கண்டுகொண்டேன் | 2005 |
| தாய்மொழி காப்போம் | 2001 |
| புதியதொரு விதிசெய்வோம் | 1999 |
| வள்ளுவர் கோட்டம் | 1999 |
| ஞாயிறும் திங்களும் | 1999 |
| பூங்கொடி | 1964 |
| வீரகாவியம் | 1970 |
| ஊன்றுகோல் | 1983 |
| இளம்பெருவழுதி | புதிய நூல் 2008 |
| அன்புள்ள பாண்டியனுக்கு | 1999 |
| அன்புள்ள இளவரசனுக்கு | 1999 |
| எப்படி வளரும் தமிழ்? | 2001 |
| எக்கோவின் காதல் | 1999 |
| சீர்திருத்தச் செம்மல் வை.சு. சண்முகனார் | 1990 |
| பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் (தன் வரலாறு) | புதிய நூல் |

# கவியரசர் முடியரசன் படைப்புகள்

## கவிதைகள்


*தொகுப்பு 1*

| | |
|---|---|
| முடியரசன் கவிதைகள் | 1954 |
| நெஞ்சிற் பூத்தவை | 1999 |

*தொகுப்பு 2*

| | |
|---|---|
| காவியப்பாவை | 1955 |
| பாடுங்குயில் | 1983 |

*தொகுப்பு 3*

| | |
|---|---|
| கவியரங்கில் முடியரசன் | 1960 |
| தமிழ் முழக்கம் | 1999 |

*தொகுப்பு 4*

| | |
|---|---|
| நெஞ்சு பொறுக்கவில்லையே | 1985 |
| மனிதனைத் தேடுகிறேன் | 1986 |
| மனிதரைக் கண்டுகொண்டேன் | 2005 |

*தொகுப்பு 5*

| | |
|---|---|
| தாய்மொழி காப்போம் | 2001 |
| புதியதொரு விதிசெய்வோம் | 1999 |

*தொகுப்பு 6*

| | |
|---|---|
| வள்ளுவர் கோட்டம் | 1999 |
| ஞாயிறும் திங்களும் | 1999 |

## காவியம்

*தொகுப்பு 7*

*பூங்கொடி 1964*
*வீரகாவியம் 1970*

*தொகுப்பு 8*

*ஊன்றுகோல் 1983*
*இளம்பெருவழுதி புதிய நூல் 2008*

## இலக்கணம்

*தொகுப்பு 9*

*தமிழ் இலக்கணம் 1967*
*பாடுங்குயில் 1975*

*தொகுப்பு 10*

*பாட்டுப் பறவையின்*
*வாழ்க்கைப் பயணம் (தன் வரலாறு) புதிய நூல்*

## கடித இலக்கியம்

*தொகுப்பு 11*

*அன்புள்ள பாண்டியனுக்கு 1999*
*அன்புள்ள இளவரசனுக்கு 1999*

## சிறுகதை + கட்டுரை

*தொகுப்பு 12*

*எப்படி வளரும் தமிழ்? 2001*
*எக்கோவின் காதல் 1999*

*தொகுப்பு 13*

*சீர்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார் 1990*

## குறிப்புகள்